# அலைமொழி

# 6



கலாசாரப் பேரவை,
தீவகம் வடக்கு பிரதேச செயலகம்,
ஊர்காவற்றுறை.
2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

G. Soundararajan
PILLAIAR KOVILADY
ANALAITIVU

[illegible]

2023/03/31.

[illegible]

G. Soundararajan
PILLAIAR KOVILADY
ANALAITIVU

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலைமொழி - 6

வெளியீடு

தீவகம் வடக்கு பிரதேச கலாசாரப் பேரவை,

பிரதேச செயலகம், தீவகம் வடக்கு,

ஊர்காவற்றுறை.

2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஞ்சிகை விபரம்


| | | |
|---|---|---|
| நூல் | : | அலைமொழி - 6 |
| நூலின் வகை | : | ஆண்டிதழ் |
| வெளியீடு | : | தீவகம் வடக்கு பிரதேச கலாசாரப் பேரவை, பிரதேச செயலகம், தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை. |
| பதிப்புரிமை | : | மலர்க்குழு |
| தொகுப்பாசிரியர் | : | திருமதி தக்சாயினி செல்வகுமார் (கலாசார உத்தியோகத்தர்) |
| தொகுப்பு உதவி | : | திரு. கணேசஐயர் சௌந்தரராஜசர்மா (ஓய்வுநிலை நூலகர் - அனலைதீவு) |
| நிதி அனுசரணை | : | வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் |
| பதிப்பு | : | 2022 |
| முன் அட்டை வடிவமைப்பு | : | திரு. தவயோகராசா மயூரதன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்) |
| அளவு | : | B5 |
| தாள் வகை | : | 80 gsm |
| பக்கங்கள் | : | XX + 117 |
| பிரதிகள் | : | 130 |
| அச்சுப்பதிப்பு | : | குரு பிறிண்டேர்ஸ், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. 0212228266 |


இம் மலரில் தாங்கிவந்துள்ள ஆக்கங்களுக்கு அவற்றின் படைப்பாளிகளே பொறுப்பாவர். மலர்க்குழு இதன் உள்ளடக்கங்களுக்கு பொறுப்பாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவகம் வடக்கு கலாசாரப் பேரவை

ஊர்காவற்றுறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்
உன்னுதரத் தேயுதித்தே ஒன்றுபல வாகிடினும்
ஆரியம்போல் உலகவழக்கழிந் தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!

**மனோன்மணீயம் பெ. சுந்தரம்பிள்ளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே!

மகாகவி சுப்பிரமணிய பாரதியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்காவற்றுறை பிரதேச கீதம்

காவலூர் அம்மா நின் அடி பணிந்தோம் – ஊர்
காவலூர் அம்மா நின் அடி பணிந்தோம் (காவலூர்)

கைப்பணி கருப்பணியும் கடல்வளமும் – மக்கள்
செய்பணி திறம்படவே திகழ்வளமும்
செப்பெரும் கல்வி வளம் கலை வளமும் – இங்கு
ஓப்பெரும் புகழுடைய தனவளமும் – கொண்ட
(காவலூர்)

எத்தனை இன்னல் கண்டும் எழுந்தவளே – எங்கள்
சொத்தென மானிலத்தில் திகழ்பவளே!
இத்தனை  சிறப்பெல்லாம் கொண்டவளே – நீ
எங்களின் உயிரம்மா உனையணிந்தோம் –நெஞ்சில்
(காவலூர்)

புரட்டினோம் வரலாற்றுப் பதிவேட்டை – அதில்
உட்கார்ந் திருக்கிறதே கடற்கோட்டை!
கரம்பொன் தம்பாட்டி சுருவிலொடு – அன்னை
அருளைப் பொழிகின்ற சின்னமடு!
புளியங்கூடலொடு மெலிஞ்சி முனை – நெல்
கழனி தனுவிலொடு நாரந்தனை!
அனலை எழுவைதனை அணைத்த படி – பழம்
பெருமை துறைமுகத்தை சுமந்தபடி – செல்லும்
(காவலூர்)

ஆக்கம் : வடிவேல் வடிவழகையன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச கலாசாரப் பேரவையின் நிர்வாகச் செயற்குழு விபரம்

| | | |
|---|---|---|
| தலைவர் | : | **திருமதி மஞ்சுளாதேவி சதீஷன்,**<br>*பிரதேச செயலாளர்,*<br>*பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை.* |
| உபதலைவர் | : | **திரு. கிருத்தோ லக்ஷ்மன்,**<br>*ஊர்காவற்றுறை.* |
| செயலாளர் | : | **திருமதி. தக்சாயினி செல்வகுமார்**<br>*கலாசார உத்தியோகத்தர்,*<br>*பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை.* |
| உபசெயலாளர் | : | **திரு. பாலசிங்கம் பரமேஸ்வரன்,**<br>*தம்பாட்டி.* |
| பொருளாளர் | : | **திரு. அன்ரனி ஜோசெப் யொானிற்றன் ஜோசெப்,**<br>*எழுவைதீவு.* |

**செயற்குழு உறுப்பினர்கள் :**

**திரு. செல்லன் சௌந்தரராஜன்**
**திரு. யோண்பிள்ளை லோறன்ஸ் சாள்ஸ் குயின்சன்**
**திரு. சேவியர் அனுரதன்**
**திரு. செபஸ்ரியாம்பிள்ளை யேசுதாசன்**
**திரு. இராயப்பு லூயிஸ்**
**திரு. சிறில் லோரன்ஸ்**
**திரு. கஸ்பார் ஸ்ரனிஸ்லாஸ்**
**திரு. சின்னத்தம்பி இராமச்சந்திரன்**
**திரு. கமலநாதன் யதூர்ஷன்**
**திரு. குமாரவேலு டக்ளஸ்**
**திரு. குணநாதன் சுபோதன்**
**திரு. தேவராசா ரகிதரன்**
**திரு. யாகோப்பு நவரத்தினம்**
**திரு. சபாபதி புவனேந்திரன்**
**திருமதி கந்தசாமி தையல்யானகி**
**செல்வி பாலசுப்பிரமணியம் யமுனா**
**செல்வி திருநிலன் வால்டர் கமன்சியா**
**திருமதி ஜெயந்திரகுமார் உதயகலா**
**திரு. பொன்னுத்துரை சந்திரவேல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழு

## ஆலோசனையும் வழிகாட்டலும்

**திருமதி மஞ்சுளாதேவி சதீஷன்**
பிரதேச செயலாளரும் தீவகம் வடக்கு கலாசாரப் பேரவைத் தலைவரும்

**திருமதி பிரணவசொரூபி சிவகரன்**
உதவிப் பிரதேச செயலாளர்.

**திரு. பாலசிங்கம் நாகேஸ்வரபாலா**
கணக்காளர்

**திருமதி இலக்கியா ஜெயகரன்**
உதவித் திட்டமிடல் பணிப்பாளர்

**திரு. குகஞானலிங்கம் சுதர்சன்**
நிர்வாக உத்தியோகத்தர்

## தொகுப்பாசிரியர்

**திருமதி. தக்சாயினி செல்வகுமார்**
கலாசார உத்தியோகத்தர்
செயலாளர். தீவகம் வடக்கு கலாசாரப் பேரவை

**தொகுப்பு உதவி**

**திரு. கணேசஐயர் சௌந்தரராஜசர்மா**
(ஓய்வுநிலை நூலகர் - அனலைதீவு)

**திரு. யோ. லோ. சா. குயின்ரன்** (எழுவைதீவு)
**திரு. செ. சௌந்தரராஜன்** (அனலைதீவு)
**திரு. அ. பீற்றர்** (மெலிஞ்சிமுனை)
**திருமதி. க. தையல்ஜானகி** (சின்னமடு)
**திரு. பா. பரமேஸ்வரன்** (தம்பாட்டி)
**திரு. சி. இராமச்சந்திரன்** (தம்பாட்டி)
**திரு. யா. நவரத்தினம்** (நாரந்தனை)
**திரு. அ. சா. பஸ்தியன்** - கிராம உத்தியோகத்தர்
**திரு. சி. வினேஸ்** - கிராம உத்தியோகத்தர்
**திரு. க. வசந்தகோகுலன்** - பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர்
**திருமதி ஜெ. உதயகலா** - அபிவிருத்தி உத்தியோகத்தர் (இந்து கலாசாரம்)
**திரு. பொ. சந்திரவேல்** - கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்
**திரு. இ. லொ. அன்சிலின் பெகின்** - அபிவிருத்தி உத்தியோகத்தர்
**திரு. இ. யோகேந்திரன்** - அபிவிருத்தி உத்தியோகத்தர்
**செல்வி எஸ். மல்லிகாதேவி** - அபிவிருத்தி உத்தியோகத்தர்
**செல்வி அ. டில்லிபவீனா** - அபிவிருத்தி உத்தியோகத்தர்
**திருமதி. வ. ஸ்ரீதேவி** - அபிவிருத்தி உத்தியோகத்தர்
**திருமதி. தி. கவிதா** - அபிவிருத்தி உத்தியோகத்தர்
**திருமதி. மு. தாட்சாயினி** - அபிவிருத்தி உத்தியோகத்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாசாரப் பேரவை செயற்குழு உறுப்பினர்கள் விபரம் 2022



**நிற்பவர்கள் இ.வ:** திருமதி.ஜெ.உதயகலா-அபிவிருத்தி உத்தியோகத்தர் (இந்து கலாசாரம்), திருமதி.பா.யமுனா-அபிவிருத்தி உத்தியோகத்தர், திருமதி.க.தையல்யானகி-சின்னமடு, திரு.சி.இராமச்சந்திரன்-தம்பாட்டி, திரு.கு.டக்ளஸ்-தம்பாட்டி, திரு.அ.பீற்றர் - மெலிஞ்சிமுனை, திரு.ச.புவனேந்தின்-சின்னமடு, திரு.செ.யேசுதாசன்-மெனிஞ்சிமுனை, திரு. யா.நவரட்ணம்-நாரந்தனை, திருமதி வால்டர் கமன்சியா -சின்னமடு, திரு.பா.பரமேஸ்வரன்-உப செயலாளர்-தம்பாட்டி திரு.செ.சௌந்தரராஜன் - அனலைதீவு, திரு.சிறில் லோரண்ஸ்-மெனிஞ்சிமுனை, திரு.இ.லூயிஸ்-மெனிஞ்சிமுனை

**இருப்பவர்கள் :** திரு.கிருத்தோ லக்ஸ்மன்-உபதலைவர் -மெருஞ்சிமுனை, திருமதி இலக்கியா ஜெயகரன்-உதவித்திட்டமிடற் பணிப்பாளர், திரு.பாலசிங்கம்-நாகேஸ்வரபாலா கணக்காளர், திருமதி பிரணவசொரூபி-சிவகரன் உதவிப் பிரதேச செயலாளர், திருமதி மஞ்சுளாதேவி சதீஷன்-பிரதேச செயலாளரும் கலாசார பேரவைத் தலைவரும், திருமதி ராகினி யோகராஜா -சமுர்த்தி முகாமையாளர் (தலைமைப் பீடம்), திரு. குகஞானலிங்கம் சுதர்சன்-நிர்வாக உத்தியோகத்தர், திரு.பொ.சந்திரவேல்-கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர், திருமதி செ.தக்சாயினி-கலாசார உத்தியோகத்தர்-செயலாளர் கலாசாரப் பேரவை

**வருகைதராதோர் :** திரு.அன்ரனி ஜோசெப் யொனிற்றன் ஜோசெப் -பொருளாளர், திரு.கஸ்பர் ஸ்ரனிஸ்லாஸ் -நாரந்தனை, திரு.க.யதுர்ஷன்-தம்பாட்டி, திரு.கு.சுபோதன் - மெனிஞ்சிமுனை, திரு.சே.அனுரதன்-சின்னமடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழு உறுப்பினர்கள் - 2022



**நிற்பவர்கள் இ.வ:** திரு.பா.பரமேஸ்வரன் - தம்பாட்டி, திருமதி.ஜெ.உதயகலா - அபிவிருத்தி உத்தியோகத்தர் (இந்து கலாசாரம்), திருமதி.க.தையல்யானகி - சின்னமடு, திருமதி.மு.தாட்சாயினி - அபிவிருத்தி உத்தியோகத்தர், செல்வி. எஸ்.மல்லிகாதேவி - அபிவிருத்தி உத்தியோகத்தர், திரு.யா. நவரத்தினம் - நாரந்தனை, திரு. சி. .இராமச்சந்திரன், திரு.க.வசந்தகோகுலன் - பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர், திரு.அ. சா. பஸ்தியன் - கிராம உத்தியோகத்தர், திரு.சி.வினேஸ் - கிராம உத்தியோகத்தர், திரு.இ.லொ அன்சிலின் பெகின் - அபிவிருத்தி உத்தியோகத்தர், திரு. இ. யோகேந்திரன் - அபிவிருத்தி உத்தியோகத்தர், திருமதி.தி.கவிதா - அபிவிருத்தி உத்தியோகத்தர், திருமதி. ம.ஸ்ரீதேவி- அபிவிருத்தி உத்தியோகத்தர், திரு.செ. சௌந்தரராஜன் - அனலைதீவு

**இருப்பவர்கள் :** திரு.அ.பீற்றர் - மெலிஞ்சிமுனை, திரு.க.சௌந்தரராஜசர்மா - (ஓய்வுநிலை நூலகர்) அனலைதீவு, திருமதி. இலக்கியா ஜெயகரன்- உதவித்திட்டமிடற் பணிப்பாளர், திருமதி.பிரணவசொரூபி சிவகரன் - உதவிப் பிரதேச செயலாளர், திருமதி. மஞ்சுளாதேவி சதீஷன் - பிரதேச செயலாளரும் கலாசார பேரவைத் தலைவரும்,திருமதி. செ.தக்சாயினி- கலாசார உத்தியோகத்தரும் கலாசாரப் பேரவைச் செயலாளரும், திரு.பாலசிங்கம் நாகேஸ்வரபாலா - கணக்காளர், திரு.குகஞானலிங்கம் சுதர்சன் - நிர்வாக உத்தியோகத்தர், திரு.பொ.சந்திரவேல் - கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்.

**வருகைதராதவர்கள் :** திரு.யோ.லோ.சாள்ஸ் குயின்ரன் - எழுவைதீவு, செல்வி.அ.டில்லிபவீனா - அபிவிருத்தி உத்தியோகத்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் முற்றம்...


ஆசிச் செய்திகள் xi - xii

வாழ்த்துச் செய்திகள் xiii - xviii

மலர் குழுவின் மனப்பதிவு xix

01. ஒற்றுமை 01

02. திருவள்ளுவர் சிந்தனைத் தளத்தில் மனிதநேயம் 02

03. ஆரோக்கிய வாழ்வளிக்கும் யோகாக் கலை 06

04. உள நெருக்கீடும், நெருக்கீட்டு முகாமைத்துவமும் 11

05. கெடுதி எனும் எண்ணக்கரு எந்தவகையில் .......... 14

06. அழிந்து போகும் பாரம்பரியம் 18

07. போர்ச்சூழலுக்குப் பின்னர் இந்துசமய வாழ்வியலில் ஏற்பட்ட மாற்றங்கள் 19

08. சிறுவர் உரிமை சமவாயம் 24

09. கட்டிளமைப் பருவத்தினரின் எழுச்சியும் அழுத்தமும் 31

10. ஈழத்தில் அழிந்து போகும் நடனக்கலை 34

11. பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் எதிர்நோக்கும் ....... 36

12. ஊர்காவற்றுறை பிரதேசத்தின் வறுமை ஒழிப்பில் சமுர்த்தி ........ 41

13. இலங்கை பொருளாதார நெருக்கடியும் நடுத்தர வருமான............ 50

14. ஆரம்பக்கல்வி, மாணவர்களின் மொழிவிருத்தியின் பங்குதாரர்கள்! 55

15. காலப் பயணம் 59

16. அனலைதீவு பொதுநூலகம் : வளர்ச்சிப்போக்கு பற்றிய ஒரு பதிவு 62

17. தொழில் முயற்சியாண்மை மூலம் பொருளாதாரத்தை வெல்லுதல் 65

18. காந்திஜீ மன்றச் சிறப்பு 68

19. கவிதைகள் 69




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. கட்டுண்டு போன கனவுகள் 70
21. இன்பத்தமிழ் 71
22. சாமுராய்கள் 72
23. கவிதைகள் 73
24. யாழ்ப்பாணத்தில் தோன்றிய சிற்றிலக்கியங்களில் தீவகம் வடக்கு ...... 74
25. வாழ்க்கைக்கான பொன்மொழிகளின் தொகுப்பு 81
26. கேதார கௌரி விரதம் 83
27. மெலிஞ்சிமுனை அண்ணாவியார் அந்தோனி யேசுதாசன் 85
28. கடுகதியில் தடம்புரளும் யாழ்தேவி 86
29. எழுவைதீவு 93
30. ஆதலினால் விரதமிருப்பீர் 97
31. அழகிய தீவகமே 100
32. அவளதிகாரம்! 104
33. தமிழ் சிங்கள பண்பாட்டிடைத் தொடர்புகளில் ..... 108
34. காவலூர் அன்னையின் அழகு 113
35. தென்மோடி நாட்டுக்கூத்து ...... 114
36. 2022 இல் விருது பெற்றவர்கள் விபரம் 115
37. தொகுப்பாசிரியரின் நன்றிகளுடன்..... 116
38. நூலுக்குரிய அட்டைப் பட விளக்கம் 117



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள் அவர்களின்

# ஆசிச் செய்தி

"அலைமொழி ஆறாய் பெருகுக"

உலகின் பஞ்சபூதங்களும் எமது வாழ்வுடன் கலந்துவளம் தருகிறது. அவைகளின், அழகும், ஆற்றலும், அவசியமும், இறைவனின் படைப்பாகும். அவற்றின் அசைவுகளை நாம் அனுபவிக்கும் போது, இயற்கைதரும் நடனமாக, இசையாக, மொழியாக போற்றி மகிழ்வோம். இந்தச் சிறப்பு, **குரைகடல் அரவம்** என தேவாரத்திலும், **வளையொலி** என மரங்களின் அசைவையும், இரசனையுடன், கூறுவதை, காண்கிறோம். அந்தவகையில் ஊர்காவற்றுறை பிரதேச அலுவலகம், அதன் கௌரவ செயலர் அலுவலகர்கள் பெருமுயற்சியால், "அலைமொழி" என்னும் புத்தக இதழ் ஆறாவது ஆண்டாக வெளியிட இருப்பது மிக மகிழ்ச்சி தருவதாகும். இப்பெரும் பணி வாசிப்புதிறன், சமூக சிந்தனை, பிரதேசத்தின் தொன்மைகள், அதன் சிறப்புகள் எதிர்கால சந்ததியினர் அறிய ஆவணப்படுத்தல் ஆகிய பல நன்மைகளைத் தருவதாகும். அலைமொழி தரும், அறிவாக்கம், அனைவருக்கும் பயன்பெற வாழ்த்தி, இதில் பங்காற்றும் அனைவருக்கும், பாராட்டும், நன்றியும் கூறி வெளியீட்டு விழா சிறப்புற வாழ்த்தி நல்லாசி தெரிவிக்கிறோம்.

**ஆதீன குரு**

கதிர்வேலாயுத சுவாமி கோயில்,

புளியங்கூடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பங்குத்தந்தை அவர்களின்

# ஆசிச் செய்தி

"எமக்கும் பனையின் குணம் உண்டு"

பேனா தலை குனியும் ஒவ்வொரு தடவையும் மானிடம் தலை நிமிர்ந்து கொள்கிறது. வெற்றுக் காகிதங்களில் விதைக்கப்படும் எழுத்துக்கள் பல தேசங்களின் தலையெழுத்துக்களை மாற்றியிருப்பது வரலாறு. ஒரு படைப்பு ஒரு சமூகத்தின் இதயத் துடிப்பின் சத்தங்களில் இருந்து அவர்களின் பெருமூச்சுகள் கண்ணீர்கள், வியர்வைகள், கனவுகளிலிருந்து எழுகிறபோது அது காலத்தின் காற்றுக்களால் அழிக்க முடியாத நிரந்தரத் தன்மை பெற்றுவிடுகிறது.

அலைமொழி என்னும் இந்தச் சஞ்சிகை தீவின் வாசம் சுமந்து வருகிறது. எங்களது கதைகளின் நீட்சியாய் விரிகிறது. எத்தனை முறை விழுந்து உடைந்தாலும் அலைகளின் துள்ளல்களும் துடிப்புக்களும் அதன் முயற்சிகளும் ஓய்ந்து விடுவதே இல்லை. கடல் இன்னமும் உயிரோடு இருக்கிறது என்பதை உலகிற்குச் சொல்லிக் கொண்டிருப்பது அலைகள்தானே. வரட்சியான தேசம் இது என்றாலும் நாம் வாழ்வோம். எமக்கும் பனையின் குணம் உண்டு.

உலகப் பெரும் சிந்தனையாளன் கார்ள்மாக்ஸ் இறந்த போது அவரது நண்பன் எங்கள் மக்களுக்கு அறிவித்தான்: "என் நண்பன் கார்ள்மாக்ஸ் இன்று காலை சிந்திப்பதை நிறுத்திக் கொண்டான்" எப்போது ஒரு தலைமுறை சிந்திப்பதை நிறுத்திக் கொள்கிறதோ அப்போது அது இறந்து விடுகிறது. "படிப்பில்லார் நிறைந்த குடித்தனம் நரம்பில் துடிப்பில்லார் நிறைந்த சுடுகாடு" இந்த நல்ல முயற்சி தொடர இறையாசிகளோடு வாழ்த்துகிறேன். விதைத்துக் கொண்டே இருங்கள் முளைத்தால் மரம்! இல்லையேல் உரம்!!

**அருட்பணி சி. அஜந்தன்**
பங்குத்தந்தை.
நாரந்தனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தினால் வெளியீடு செய்யப்படும் "அலைமொழி 6" எனும் பிரதேச மலருக்கான வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடை கின்றேன். வருடாந்தம் ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தினால் மலர் வெளியீடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அந்த வகையில் தீவகப் பிரதேசத்தின் கலை, மொழி, சமயம், பொருளாதாரம், மரபுரிமைகள் போன்ற பல்வேறு அம்சங்களை பறைசாற்றும் முகமாக இவ்வருடம் "அலைமொழி 6" எனும் மலர் வெளியீடு செய்யப்படுவது பாராட்டத்தக்கதாகும்.

இந்நூல் தொன்மைக்காலத்து கலை, கலாசாரத்துடன் இணைந்த மொழி வழக்குகள், மரபுரிமைகள், சமயம் போன்ற விடயங்களை இன்றைய தலைமுறையினரும் இலகு நடையில் அறிந்து கொள்ளக்கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. அத்தோடு பண்பாட்டு விழுமியங்கள், இசை, இலக்கியம், வாழ்க்கை முறை, உணவு, ஓவியம், சிற்பம், நாடகம் போன்ற மனிதர்களுடைய கலைத்திறன்களையும் அவர்தம் செயற்பாடுகளையும் வெளிப்படுத்துகின்றது. அந்த வகையில் சமயமும் பிற நம்பிக்கை முறைமைகளும் பண்பாட்டுடன் ஒன்றிணைந்தவையாக உள்ளன. ஆரம்ப காலங்களிலே இத்தகைய கலை கலாசாரத்துடன் இணைந்த வகையில் மரபுரிமைகள், சமயம் போன்றன கடுமையாக கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளதுடன் பண்பாட்டினை வெளிப்படுத்தும் நிகழ்வுகள், விழாக்கள், பண்டிகைகள் என்பன சிறப்பாக அரங்கேற்றப்பட்டு வந்தன. இருப்பினும் காலப்போக்கில் பல துறைகளிலும் ஏற்பட்ட வளர்ச்சியின் முகமாக பல்வேறு பண்பாடுகளை கொண்ட மக்களின் தொடர்புகள் அதிகரிக்கத் தொடங்கின. இதன் விளைவாக மேலைநாட்டு நாகரிகங்கள் தமிழர் தம் பண்பாடுகளில் _பாரிய மாற்றத்தினை ஏற்படுத்தின. இவ்வாறு மாற்றமடைந்து செல்கின்ற தமிழர் தம் பண்பாடுகளை இளைய தலை முறையினரும் அறிந்து பண்பாட்டினைப் பேணிப்பாதுகாப்பதற்கு இத்தகைய மலர் வெளியீடுகள் துணைபுரியும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

விழாவினை ஒழுங்கமைப்பு செய்யும் விழாக் குழுவினர் மற்றும் மலர் வெளியீட்டு பணியினை ஆற்றும் குழுவினர் அனைவரையும் பாராட்டுவதுடன் நிகழ்வுகள் சிறப்பாக நடைபெறவும் இறையாசியை வேண்டிப் பாராட்டி, மனதார வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. இ. வரதீஸ்வரன்**
செயலாளர்,
கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டு
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அரசாங்க அதிபரின்

# வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஓரங்கமாகத் தீவகத்தில் அமைந்துள்ள பேரூரே ஊர்காவற்றுறையாகும். இலங்கைத் தீவின் வடபால் அமைந்த தீவகப் பிரதேசமான ஊர்காவற்றுறைப் பிரதேசமானது கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இயற்கைத் துறைமுகத்தைக் கொண்டமைத்து நெடுந்தீவு துறைமுகத்தின் தோற்றத் திற்கு முன்னர் நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு போன்ற தீவுகளுக்கும், யாழ் குடாநாட்டுக்கும் இடையேயான கடற்போக்குவரத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்துள்ளமை வரலாற்றுச் சான்று. இதனைவிடவும் "பறவைகளின் சரணாலயத்தீவு" எனச் சிறப்பிக்கப்படும் பருத்தித்தீவு கண்களுக்கு விருந்தளிக்கும் இயற்கை அருட்காட்சியாகும். காலத்துக்குக் காலம் அறிஞர்களையும் கலைஞர்களையும் ஈன்றெடுத்த பெருமையையும் கொண்ட இப்பிரதேசத்தின் தொன்மைமிகு பண்பாட்டு அம்சங்கள், சமூகப் பொருளாதாரக் கட்டமைப்புக்கள், வழக்காறுகள் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியவை.

அவ்வகையில் எமது வரலாற்றையும், வழக்காற்றையும், அழியவிடாது பேணிக்காத்து பிறழ்வும் திரிபுமின்றி எம் எதிர்காலச் சந்ததிக்கு நேர்த்தியாகக் கையளிக்கும் முயற்சியில் எழுத்து மூலமான ஆவணப்படுத்தலின் அவசியம் கருதி வடக்கு மாகாணப் பண்டபாட்டலுவல்கள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும் கலாசார அபிவிருத்திச் செயற்றிட்டங்களுள் ஒன்றான நூல் வெளியீட்டுச் செயற்றிட்டத்திற்கு அமைவாக பிரதேசம் சார் ஆக்கங்களைத் தாங்கி அலைமொழி மலர் வெளிவருவது பாராட்டுதற்குரியது. ஊர்காவற்றுறை பிரதேச செயலகமும், பிரதேச கலாசாரப் பேரவையும் இணைந்து வெளியீடு செய்யும் அலைமொழி மலரின் 6வது மலரான அலைமொழி 6 கலை, மொழி, ஆன்மீகம், பொருளாதாரம், மரபுரிமைகள் போன்ற பல்வேறு விடயங்களை உள்ளடக்கியதாக வெளிவர ஆக்கங்களை வழங்கிய எழுத்தாளர்கள், இலக்கிய கர்த்தாக்களைப் பாராட்டுவதோடு இம்மலர் சிறந்த முறையில் நூலுருப்பெற அயராதுழைத்த அனைவருக்கும் எனது உள மார்ந்த வாழ்த்துகளையும், நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. கணபதிப்பிள்ளை மகேசன்**

அரசாங்க அதிபர்,

மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பிரதிப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை பிரதேச செயலகம் பிரதேச கலாசாரப் பேரவை ஆகியவற்றின் ஒருங்கிணைவில் வெளியிடப்படும் "அலைமொழி" இதழ் - 06 மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

"இந்து சமுத்திரத்தின் நித்திலம்" எனப் புகழப்படும் இலங்கையின் வடபால் அமைந்துள்ள தீவுக்கூட்டங்களில் ஒன்றாக விளங்கும் ஊர்காவற்றுறை கடலொடு கடல் சார்ந்த நெய்தல் நிலத்தையும், வயலோடு வயல் சார்ந்த மருத நிலத்தையும் ஒருங்கே கொண்ட தரைப்பகுதியில் கடல் அன்னையின் என்றும் ஓயாத அலைகள் தாலாட்டும் வேளையில், அலைமொழி இதழின் ஆறாவது மலர் வெளிவருவதையிட்டு அகமகிழ்வடைகின்றேன்.

மொழி, பண்பாடு, பாரம்பரியங்கள் மிகத் தொன்மையான வரலாற்று ரீதியான பெறுமதிமிக்க பெரும் செல்வங்கள் எனலாம். அந்த வகையில் அலைமொழி இப்பிரதேச மக்களின் வாழ்வியலையும், கலைவடிவங்களையும், வரலாற்று ஆவணங்களையும், மொழி, பண்பாட்டுச் சிறப்புக்களையும் தகவல்களாக உள்ளடக்கி மக்களின் மனங்குளிரும் வண்ணம் மண்ணிற்கு பெருமை சேர்க்கும் வகையில் வெளிவருகின்றமை சிறப்புக்குரியதாகும்.

தொடர்ந்து இவ்வாறான மலர்கள் மலர்ந்து நறுமணம் வீசப் பாராட்டுவதுடன் எமது பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஒத்துழைப்பும் அனுசரணையும் என்றும் கிடைக்கும் எனக் கூறிக் கொண்டு நூல் வெளிவர அயராது உழைத்த ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர், கலாசார உத்தியோகத்தர்கள், கலை பண்பாட்டுப் பேரவையினர் ஆகியோருக்கு எனது மனம் நிறைந்த பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி ராஜமல்லிகை சிவசுந்தரசர்மா**

பிரதிப் பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டு
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,
வடக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஊர்காவற்றுறைப் பிரதேசச் செயலாளரின்
# வாழ்த்துச் செய்தி

இலங்கைத் தீபகற்பத்தின் சிரசாக விளங்கும் யாழ் குடாவினை அணிசெய்கின்ற தீவுகளின் வடக்கே அமைந்து, அனலை எழுவை எனும் பெரிய தீவுகளையும் தன்னகத்தே கொண்டு, காவலூர் எனும் சிறப்பு பெயருடன் விளங்கும் எமது பிரதேசமானது ஆரம்ப காலத்தில் பாரிய வர்த்தகத்தின் முக்கிய நகரமாக கப்பல் துறைமுகத்தினையும் கொண்டு விளங்கியது. அதன் பிற்பட்ட காலச் சூழ்நிலைகளாலும் நாட்டில் நிலவிய உள்நாட்டு யுத்த சூழ்நிலையாலும் வர்த்தகத் துறையில் வீழ்ச்சிப்போக்கினைக் கண்டிருந்தாலும், இயற்கையின் கொடையான கடல் வளத்தினை நம்பிய கடற்றொழிலும் மண்வளத்துடன் பருவமழையினை துணையாகக்க கொண்ட விவசாயத்தினையும் மக்களின் பிரதான வாழ்வாதாரமாக்கி கலாசார பண்பாட்டு விழுமியங்களையும் பேணிக் காத்தவாறு இன்றும் சிறப்பான ஒரு பிரதேசமாக விளங்குகின்றது.

இப்பிரதேச மக்கள் கல்வி, விளையாட்டு, கலை கலாசாரங்களுடன் தமக்கே உரித்தான வாழ்வியல் நெறிமுறைகளையும் இப்பிரதேசத்தில் மட்டுமல்லாமல் கடல் கடந்து தாம் வாழுகின்ற பிற தேசங்களிலும் மிகச் சிறப்பாகப் பேணி வருகின்றமையினை அவதானிக்க முடிகின்றது. அத்துடன் இம்மண்ணின் தற்போதைய அபிவிருத்தி பணிகளுக்காகவும் கலை வளர்ச்சிக்காகவும் சமய சமூக மேம்பாட்டிற்காகவும் தேசம் கடந்திருந்தும் ஆற்றிவரும் பங்களிப்பும் அவற்றின்மீது காட்டிவரும் ஈடுபாடும் மண்ணின் மீது ஒவ்வொருவருக்கும் உள்ள தனித்துவமான பற்றினை வெளிப்படுத்தி நிற்கின்றது. இவற்றையெல்லாம் ஆவணக்கோப்புக்களாக உருவாக்கவேண்டியது வாழும் கலைஞர்கள் மற்றும் புத்திஜீவிகள் அனைவரதும் ஒரு சமூகப் பொறுப்பாக இருக்கின்றது.

எனவே இம்மண்ணில் காலத்திற்கு காலம் ஏற்படுகின்ற மாற்றங்களையும் படைப்பாளிகளின் அற்புதமான படைப்புக்களையும் பிரதேசத்தின் வரலாற்று பழைமையான விடயங்களையும் எதிர்கால சந்ததியினருக்கும் பிரதேசத்திற்கு வெளியேயுள்ள மக்களுக்கும் கொண்டு செல்கின்ற ஒரு ஆவண நூலாகப் புதிய புதிய மாற்றங்களுடன் வருடம் தோறும் வெளியிடப்படுகின்ற பிரதேச மலரானது இவ்வாண்டும் அலைமொழி எனும் நாமத்துடன் காவலூர் அன்னையின் ஆறாவது பிரசவமாக வெளிவருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இம்மலர் வெளியீடானது அனைவரது கூட்டு முயற்சியின் வெளிப்பாடாக தொடர்ந்து வெளிவர எல்லாம் வல்ல பரம்பொருளின் ஆசிவேண்டி இம்மலரது பிரசவிப்புக் காகத் தம்மை முழுமையாக ஈடுபடுத்திச் செயற்பட்ட அனைவரையும் பாராட்டி, வெளியீட்டு விழா சிறப்புற அமைய எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திருமதி மஞ்சுளாதேவி சதீஷன்**
பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவைத் தலைவரும்,
பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உதவி பிரதேச செயலாளரின்

# வாழ்த்துச் செய்தி

கலையை, இலக்கியத்தைப் போற்றாத எந்த சமூகமும் உயர்வடைந்ததில்லை, பெருமையடைந்ததில்லை. கலை என்பது ஒரு சமூகத்தின் பேராற்றல். ஒரு இனத்தின் இருப்பை பேணிக்காப்பதும், தக்கவைப்பதும் அவ்வினத்தின் பண்பாட்டுக் கோலங்களேயாகும். மனிதர்கள் ஒரு சமூகத்தில் பிறந்து அதன் பண்பாட்டு விழுமியங்களைப் பின்பற்றி வாழ்ந்து விடைபெற்றுச் சென்றாலும்கூட, அப்பண்பாடானது தொடர்ந்தும் புதிய தலைமுறையை வழிநடத்தி செல்லுவதை காண முடிகின்றது என்றால் அப்பண்பாடு ஒரு வாழும் அதிஉயிரி. அத்தகைய பண்பாட்டைப் பேணிப்பாதுகாத்து, ஆவணப்படுத்தி, பயின்று, கொண்டாடி, புதிய தலைமுறைக்குக் கையளிப்பதற்காக எடுக்கப்படும் இத்தகைய முயற்சி பாராட்டுக்கு உரியது.

வரலாற்று நீட்சியையும் பல தொன்மை அடையாளங்களையும் தன்னகத்தே கொண்டுள்ள ஊர்காவற்றுறை பிரதேசமானது பேசு பொருளுக்குரியதே. அத்தகைய பெருமைக்குரிய ஊர்காவற்றுறை பிரதேச கலாசார மலரானது தனது அட்டைப்படத்தி லேயே அப்பிரதேசத்தின் பதிவுசெய்யப்படாத தொன்மை வரலாற்று நிகழ்வுகளை ஆவணப்படுத்தி வருவது அதன் உள்ளடக்கங்களின் கனதியினைக் கட்டியம் கூறுவதாக அமைகின்றது. இத்தகைய வரலாற்று புதினங்களை ஆய்வுக் கட்டுரைகளாக ஆவணப்படுத்துவதுடன் இப்பிரதேசக் கலைஞர்களின் கலைத் திறன்களான கதைகள், கவிதைகள், கட்டுரைகள் போன்ற ஆக்கங்கள் இப்புத்தகத்தில் வெளிவந்துள்ளது என்பது மேலதிக பாராட்டுதலுக்குரியது. அந்த வகையில் இம்முயற்சி மென்மேலும் தொடர இறை ஆசி வேண்டுகின்றேன்.

**திருமதி பிரணவசொரூபி சிவகரன்**
உதவி பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்,
தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ் மாவட்ட சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தரின் வாழ்த்துச் செய்தி

இலங்கை வரலாற்றில் தொன்மையான இடமாக விளங்கும் ஊர்காவற்றுறை தீவுக்கூட்டங்களில் ஏனைய தீவுகளைவிடச் செல்வாக்குப் பெற்றதாகக் காணப்படுகின்றது. தீவுகளையும் பல ஊர்களையும் காவல் செய்யும் துறைமுகமாக விளங்கியதால் இப்பிரதேசம் ஊர்காவற்றுறை எனப் பெயர் பெற்றதென்பது வரலாற்றுச் சான்று. அத்துடன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததும் தொல்லியற் சான்றுகளைக் கொண்டதும் நாகர்கள், திராவிடர்களின் வாழ்விடமாக ஆதிமுதற்கொண்டு அறியப்பட்ட பிரதேசமாகவும் இப் பிரதேசம் விளங்குவதுடன் புனித காணிக்கை மாதா ஆலயம், புனித அந்தோனியார் ஆலயம் என வரலாற்றுப் பிரசித்தி பெற்ற ஆலயங்களைத் தன்னகத்தே கொண்டதோர் பிரதேசமாகவும் விளங்குகின்றது.

இத்தகைய வரலாற்றுச் சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டமைந்த இப் பிரதேசத்தின் பண்பாட்டு அம்சங்களை ஆவணப்படுத்தும் முயற்சியாக வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் முன்னெடுக்கப்படும் கலாசார அபிவிருத்திச் செயற்றிட்டங்களில் ஒன்றான நூல் வெளியீட்டு நிகழ்ச்சித்திட்டத்திற்கு அமைவாக ஊர்காவற்றுறைப் பிரதேசப் பண்பாட்டுப் பேரவையால் வெளியீடு செய்யப்படும் "அலைமொழி" மலர் தொடர்ச்சியாக வெளிவருவது சிறப்பானது.

கலை, மொழி, பொருளாதாரம், வாழ்வியல், மரபுரிமைகள், வழக்காறுகள் போன்ற பல்வேறு விடயங்களைத் தாங்கியதாக "அலைமொழி-6" வெளிவருவது பாராட்டுக்குரியது. இம்மலருக்கான ஆக்கங்களை வழங்கியோரும், மலர் வெளியீட்டுக்காக அயராது பாடுபட்டு ஒத்துழைத்தவர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள். பன்முகத் தன்மை வாய்ந்த ஆக்கங்களைத் தன்னகத்தே தாங்கி வெளிவரும் இம்மலர், இப்பிரதேசம் பற்றி ஆய்வு செய்பவர்களுக்கு உறுதுணையாக இருக்கும் என்பதுடன் எதிர்காலத்தில் இப்பிரதேசம் பற்றிய வரலாறுகள், வழக்காறுகள் பற்றி இப்பிரதேச மக்களும் ஏனையோரும் அறிந்து கொள்வதற்கான ஆவணமாகத் திகழும் என்பதில் ஐயமில்லை. தொடர்ந்து "அலைமொழி" மலர் வெளிவர வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**திருமதி சு. விஜயரத்தினம்,**
சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க் குழுவின் மனப்பதிவு

*அலைகள் புரண்டு - நடனமிடும்*
*அழகும் திருவும் நடை பயிலும்*
*கலையின் கோலக் காட்சியெலாம்*
*கண்கள்கவரும் தீவகமே*

எனக் கவிவாழ்த்தை நிரம்பவே கொண்டுள்ள தீவகம் வடக்கு பிரதேசத்தின் வரலாற்று முக்கியத்துவத்தைக் காட்டும் தொன்மைச் சான்றுகளும் இலக்கியச் சான்றுகளும் வெகுவாக இப்பிரதேசத்தில் பரந்து கிடக்கின்றன. ஆய்வுக்குட்படுத்த வேண்டிய பல ஆதாரங்கள், சான்றுகள், போர்ச் சூழலாலும் மக்களின் இடப்பெயர்வுகளாலும் அழிவடையும் நிலையில் இருப்பதைப் பலரும் உணரத் தலைப்பட்டுள்ளனர் எனக் குறிப்பிடலாம். வாழ்வியலின் பதிவுகள் சமூக மாற்றங்களால் திரிவடைவதும் மாற்றமுறுவதும் நியதி என்ற நிலையில், வளர்ச்சி என்ற கருத்து நிலையில் பழமைசார் விடயங்கள் அழிவடையும், அழிக்கப்படும் நிலைமைகள் உணரப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

நிலவளம், நீர்வளம் இவற்றில் சாதகமான பாதகமான சூழ்நிலைகள் நிலவுவதால் மண் சார்ந்த வாழ்வியல் முறைகளை, கடல்சார் பொருளாதார வாழ்வாதாரங்களை கொண்டவர்களான இப்பிரதேச மக்கள் இதனால் கடின உழைப்பாளிகளாகவும் குறைவருமானப் பொருண்மிய கலாசாரம் கொண்டவர்களாகவும் உள்ளனர். இதனோடு வாழ்வியலின் பல்வேறு பண்பாட்டுக் கூறுகளையும் தனித்துவமான மரபுகளையும் வெளிக் காட்டுபவர்களாகவும் விளங்குகின்றார்கள். சமய புரிந்துணர்வு இவர்களிடையே நிலவுவதற்கும் நிலைபேறாகியுள்ளமைக்கும் இவர்களின் சமூக, கலை, கலாசார செழுமையும் பற்றுறுதியும் காரணங்களாகலாம். இப்பிரதேசத்தின் மக்களின் மன வளத்தைப் பெருக்கிடும் மகத்துவமிக்க ஆலயங்கள், கல்விப் பாரம்பரியம் மிக்க கல்விச்சாலைகள் பலவுள்ளன. மக்கள் வாழ்வியலை இலக்கியங்களாகத் தந்த புலமையாளர்கள், சரித்திர ஆராய்ச்சியாளர்கள், தமிழியல் ஆய்வாளர்கள், மாண்புமிகு சமயக்குருமார்கள், கப்பல்துறை வல்லுனர்கள், கடலோடிகள், பத்திரிகை, வானொலி ஊடகத்துறை வித்தகர்கள், நாட்டுக் கூத்து கலைஞர்கள், கவிஞர்கள். சுதேச வைத்தியச் செம்மல்கள், விவசாய மன்னர்கள், கூட்டுறவாளர்கள், அரச நிர்வாக அதிகாரிகள், கல்வி அதிகாரிகள், அரசியல் ஆளுமைகள் என மாண்புறு மனிதர்கள் பலரின் தாய்கப் பூமி இப்பிரதேசம்.

நவீன தொழில்நுட்ப வசதிகளின் ஊடாக இத்தகவல்களை மண் சார்ந்த தகவல்களைத் தேவைப்படுவோர் தேடும் போது கிடைப்பதென்னவோ குறைவான தகவல்களே. இந்நிலையில் கால வெள்ளத்தில் இருப்பவையும் அள்ளுப்பட்டுப் போய் விடாமல் பாதுகாக்க வேண்டியது நிகழ்காலச் சமுதாயத்திற்கான கடமையும் பொறுப்பும் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வகையில் ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் தீவகம் வடக்கு பிரதேசத்திற்கான கலாசார பேரவை பிரதேச செயலாளர் தலைமையில் இயங்கி வருகின்றது. இப் பிரதேசத்தைச் சேர்ந்த கலைஞர்கள், அறிஞர்கள், எழுத்தாளர்கள், அலுவலர்கள் என பலரும் சங்கமிக்கும் அமைப்பான இக் கலாசாரப் பேரவை மேலே கூறப்பட்ட படி, பிரதேசத்தின் கலை, கலாசார பணிகளை கிராம அலுவலர் பிரிவுகள் தோறும் மேற்கொண்டு வருகின்றது. இதன் செயற்பாடுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் மாகாணம் மற்றும் மத்திய அரசு மட்டத்திலும் இருந்து கிடைக்கப் பெறுகின்றன.

இப் பிரதேசத்துக்கான குறிகாட்டியாக அலைமொழியை உருவாக்கும் பணியில் கலாசார பேரவையுடன் இணைந்து செயற்படும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு அலைமொழி மலர்க்குழுவின் நன்றிகளை தெரிவிக்கின்றோம்.

மலர் வெளியீட்டைச் சாத்தியமாக்கத் தேவையான நிதியை வழங்கிய வட மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்திற்கும் மலருக்கு ஆசிச்செய்தி வாழ்த்துச் செய்திகளை வழங்கிய மதிப்பிற்குரிய மதத்தலைவர்கள், திணைக்கள செயலாளர்கள், மாவட்ட செயலாளர், மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோருக்கும் இதயப்பூர்வமான நன்றிகளை மலர்க்குழு தெரிவித்துக் கொள்கின்றது.

மலருக்கு மணம் சேர்க்கும் விதத்திலும் அணி என இலங்கும் விதத்திலும், பல்வேறு படைப்பாளிகளின் ஆக்கங்கள் அழகூட்டுகின்றன. அவர்களின் கருத்துப் பகிர்வுக்கு நன்றிகளைக் கூறிக் கொள்கின்றோம்.

சென்ற வருடம் போல் இவ்வருடமும் அலை மொழி அட்டைக்கு தன்னுடைய ஓவியத் திறமையால் எழிலூட்டிய திரு. தவயோகராஜா மயூரதன் அவர்களுக்கு மலர்க்குழு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளது. குறுகிய கால அவகாசத்தில் உயரிய தரத்தில் அச்சிட்டுப் பணிகளை நிறைவேற்றி தந்த திருநெல்வேலி குரு பிரிண்டேர்ஸ் நிறுவன உரிமையாளர் மற்றும் பணியாளர்களுக்கு மலர்க்குழுவில் நன்றிகள் என்றும் உரியவை.

மலர்க்குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமை

திருமதி வ. ஸ்ரீதேவி
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
(வெளிநாட்டு வேலைவாய்ப்பு)
பிரதேச செயலகம், ஊர்காற்றுறை.

சூரியனும் சந்திரனும்
ஒரு நாளைக்கு லீவு போட்டா
உலகம் தான் விடிந்திடுமா
இரவு பகல் வந்திடுமா
உண்மையை உணர்ந்திடுவீர்
மாண்புமிகு மானிடரே

கண்ணை இமை காக்காவிடின்
சீரான பார்வை கிடைத்திடுமா
மேலுதடும் கீழுதடும் சேர்ந்து பிரியலன்னா
உரையாடல் நிகழ்ந்திடுமா
உணராமல் உள்ளீரே
மாண்புமிகு மானிடரே

கைவிரல்கள் ஒவ்வொன்றும்
ஒன்றோடொன்று பிரிந்து நின்றால்
காரியம் தான் நடந்திடுமா
கை வேலைகள் எல்லாம் முடிந்திடுமா
கண்டு உணருவீரே – உலகம் போற்றும்
மாண்புமிகு மானிடரே

வலக்காலும் இடக்காலும்
வழும் மாறிப் பயணித்தால்
செல்லும் வழி வந்திடுமோ
பயணம் தான் முடிந்திடுமா
மனமுணர்ந்து கொள்வீரே
மாண்புமிகு மானிடரே

மூளை முறையாக இயங்காவிடின்
ஐம்பொறியும் உணர்ந்திடுமா ஐம்புலனை
முடியாத காரியமொன்றை
முயன்றால் முடித்திடலாம்
ஒற்றுமையே பலம் என்று உணர்ந்திடுவீர்
மாண்புமிகு மானிடரே

உள்மூச்சும் வெளிமூச்சும்
ஒத்து இயங்கலைன்னா
உடலிருக்கும் உயிர்போகும்
உணராமல் உள்ளீரே
மாண்புமிகு மானிடரே
ஒற்றுமையின் பலம் பற்றி
ஒன்றொன்றாய் சொல்லப்போனால்
ஒருவருடம் போதாது
ஒற்றுமை தான் தோற்காது

இனம் மொழிகள் பாராமல்
சாதிமத பேதமின்றி
ஒன்றுபட்டு வாழ்ந்து விட்டால்
ஒருவரிடமும் வேண்டிநிற்கத் தேவையில்லை
ஓங்கிடுமே உயர்ந்திடுமே
நாடு வளம் பெற்றிடுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவள்ளுவர் சிந்தனைத் தளத்தில் மனிதநேயம்

திரு. க. உதயபிரகாஸ்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
அருணோதயா இயல் இசை நாடக மன்றம் - அனலைதீவு

"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றிய எங்கள் மூத்த தமிழ்" வழியாக வந்த திருக்குறளானது சங்கமருவிய காலத்தில் தோற்றம் பெற்ற அற இலக்கியங்களில் ஒன்றாகும். இத்திருக்குறளானது உலகப் பொதுமறை என்றும் முப்பால் என்றும் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது. இதனை பொய்யாமொழிப்புலவர் என்ற இயற்பெயர் கொண்ட திருவள்ளுவர் இயற்றினார். இத்திருக்குறளானது 133 அதிகாரத்தை கொண்டது. 1330 குறட்பாக்களைக் கொண்டது. மேலும் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்று முப்பாக்களைக் கொண்டு காணப்படுகின்றது. அந்த வகையில் திருக்குறளில் மனித நேய சிந்தனைகள் உள்ளதென்பதனை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

நேயம் என்பது அன்பு. எனவே மனித நேயம் என்பது ஒரு மனிதன் பிற மனிதனிடம் கொள்ளும் அன்பையும் பிற உயிர்களிடம் கொள்ளும் அன்பையும் குறித்து நிற்கின்றது. மனித நேயத்தை நெருங்கிய தொடர்பு கொண்டவர்களிடத்தில் காட்டும் அன்பாக அமைவதனை வள்ளுவர் தமது குறளில் குறிப்பிட்டுள்ளார்.

காதலர்கள் இருவர்களுக்கிடையில் இருக்கின்ற உறவு மற்றும் நட்பு, அன்பினை வள்ளுவர் தமது குறளில் தெளிவாகக் குறிப்பிடுகின்றார். ஒரு காதலி தன் காதலனைக் கண்ணுக்குள் வைத்திருப்பதால் தனது கண்ணுக்கு மையிடுவதனைத் தவிர்க்கிறாள் என்று காமத்துப்பாலில் வள்ளுவர் **"கண்ணுளார் காதலர்...."** எனும் குறட்பாவினால் குறித்து நிற்கின்றார்.

மேலும் அந்த காதலியானவள் தன் காதலன் நெஞ்சுக்குள் உள்ளார் என்பதால் சூடான உணவுகளை உண்டால் அவரைச் சுட்டுவிடும் என்பதற்காக அதனை உண்ணாது தவிர்க்கின்றாள் என்று வள்ளுவர் **"நெஞ்சத்தால் காதலர்"** எனும் குறள் மூலம் அன்பினை வெளிப்படுத்தி இருக்கின்றார்.

காதலர்கள் பின்பு திருமணமாகி நடத்தும் இல்வாழ்க்கை அன்போடும், அறனோடும் இருக்க வேண்டும். அதுவே பண்பும், பயனும் உடைய வாழ்க்கையாக இருக்கும் என்று தமது குறளில் பின்வருமாறு கூறுகின்றார்.

**"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"**

மேலும் அன்போடும் பண்போடும் இல்வாழ்க்கை நடத்துபவர்கள் தமது நெருங்கிய உறவுகளான தாய், தந்தை மற்றும் உறவினர்கள் மீது அன்பு செலுத்துபவராக இருப்பார். இதனால் அவரது அன்பு மேலும் உயர்வாக இருக்கும் என்றும் கூறுகின்றார். அதனைத் தொடர்ந்து நெருங்கிய தொடர்பு இல்லாதவர்களிடத்திலும் அன்பு கொள்வது மனித நேயத்தின் சிறந்த பண்பாகும் என்று வள்ளுவர் எடுத்தியம்புகிறார். பிற மனிதர்களிடம் அன்பு செலுத்தி அவர்களை நண்பர்களாக்கிக் கொள்வதோடு தேவை கருதி அவர்களுக்கு உதவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய வேண்டும். இது மனித நேயத்தின் பண்பாகும்.

அதாவது ஒருவரது ஆடை நழுவினால் உடனே அவரது கை சென்று அதனை சீர் செய்வது போல் நண்பர் ஒருவருக்கு உடனடியாகத் தேவைப்படும் உதவியினைச் செய்வதனை மனித நேயம் என்ற வரையறைக்குள் கொண்டு வருகின்றார். இதனை வள்ளுவர்.

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு"

என்று தமது குறளில் கூறியுள்ளார்.

இவ்வாறு வள்ளுவர் நெருங்கிய தொடர்பு இல்லாதவர்களிடமும் அன்பு செய்ய வேண்டும். உதவி செய்ய வேண்டும் என்றும் அவ்வாறு செய்வது மனித நேயத்தின் பாற்படும் என்றும் கூறுகின்றார்.

நாம் அனைவரும் பிறப்பால் சமம் என்று வள்ளுவர் கூறுகின்றார். மனிதர்களுக்குள் ஏற்றத்தாழ்வுகள், தாழ்வுமனப்பான்மைகள் இல்லாது இருக்க வேண்டும். அதுவே சிறந்த மனிதனின் நன்நடத்தை என்று வள்ளுவர் குறளில் பின்வருமாறு கூறுகின்றார்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் – சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

மேலும் ஒருவர் தமக்கு உள்ளவற்றை மற்றவர்க்குப் பகிர்ந்து கொடுத்து வாழுவதால் மனிதநேயம் சிறந்து விளங்கும் என்று கூறியுள்ளார்.

அக்காலத்தில் மக்கள் அனைவரும் பகிர்ந்துண்டு வாழ்ந்து வந்துள்ளார்கள். துறந்தார்க்கும், இல்லாதவர்க்கும் உணவளித்து இல்வாழ்க்கை நடாத்திவந்துள்ளார்கள். இது மனிதநேயப் பண்புகளுக்குள் சிறந்தது என வள்ளுவர் தமது குறளில் கூறுகின்றார். இதனை

"துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை"

என்று கூறுகின்றார்.

அது மட்டுமல்லாது ஒரு இல்வாழ்க்கை நடத்துபவரின் தலையாய கடமை என்பது என்னவென்றும் அதில் மனிதநேயம் எவ்வாறு விளங்குகிறது என்றும் வள்ளுவர் எடுத்தியம்பியுள்ளார்.

அக்காலத்தில் வழிப்போக்கராக வருபவர்களை ஆதரித்து, அவர்களுக்கு உணவளித்து, தங்குமிடம் கொடுத்து, விருந்தோம்பல் செய்வது மனிதநேய செயற்பாடுகளுள் ஒன்றாக இருந்தது. இதனை வள்ளுவர் தமது விருந்தோம்பல் அதிகாரத்தில்,

"இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்று கூறுகின்றார்

மேலும் பசியென்று வருபவர்களுக்கு உணவளித்து அவர்களது துன்பத்தை போக்க வேண்டும் என்பதை வள்ளுவர் ஈகை என்று குறித்து நிற்கின்றார். உதவி செய்பவர்கள் தமது உள்ளத்தால் செய்ய வேண்டும். இல்லையேல் அவர்கள் உயிர் இருந்தும் செத்தவர்களாகவே கருதுகின்றார்.

வறுமை என்று உதவி கேட்பவர்களுக்கு ஒருவர் உதவி செய்வதை ஒருவகையாக கூறுகின்றார் வள்ளுவர். உதவி என்று கேட்காமல் வறுமையில் உள்ளவர்களை இனங்கண்டு உதவி செய்வதனை ஒப்புரவின்பாற் கொள்கிறார். இவர்களை வள்ளுவர் அறிவுடையவராகக் கூறுகின்றார். இவர்கள் தம்மிடம் உள்ள செல்வங்களை வங்கியில் போட்டு, வருகின்ற வட்டியைக் கொண்டு மற்றவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி செய்வதனைக் குறிக்கும். இதனை வள்ளுவர் "ஊருணி நீர் நிறைந்தற்றே" என்ற குறளில் குறிப்பிடுகின்றார்.

ஒரு மரத்தின் கனி ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே பயன்தரும். அடுத்த வருடம் பயன்தரும் காலம் வரும்வரைக்கும் பயன்தராது. இவ்வாறு இருப்பவர்களின் செயற்பாட்டினை அன்புடையவராக வள்ளுவர் கூறுகின்றார்.

அதனைத் தொடர்ந்து மூன்றாம் நபர் மருத்துவக் குணம் நிறைந்த மரத்தைப் போன்றவர். மருந்து மரத்தினுடைய வேர், பட்டை, இலை எல்லாம் எவ்வாறு பயன்படுகின்றதோ, அது போல பெருஞ் செல்வந்தருடைய செல்வம் உள்ளது என்றும் மற்றவர்களுக்கு அது பயனுள்ளது என்றும் கூறுகின்றார்.

அதுமட்டுமல்லாமல் ஆளும் மன்னன் மனிதநேயத்துடன் நாட்டை ஆள வேண்டும் எளிமையாகவும் இன் சொல்லுடன், ஆட்சியில் நீதிநெறி தவறாது மக்களை ஆள வேண்டும் என்றும் வள்ளுவர் கூறுகின் றார்.

இது போல மனித நேயத்தில் இரக்கம் முக்கியமான பங்காற்றுகின்றது. இந்த இரக்கம் மற்றும் அன்பு இணைந்து அருளுடமையாகின்றது. நாம் மற்றவர் நலன் மீது அக்கறை கொண்டு எல்லாம் மற்றவர்களுக்கும் வேண்டும் என்ற எண்ணத் துடன் வாழ வேண்டும், அன்பு இல்லாத வர்களே எல்லாம் தம்முடையவை என்று எண்ணி பிறர் நலம் நோக்காமல் வாழ்பவர் ஆகின்றார். இதனை வள்ளுவர்

**"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு"**

தமது குறளின் மூலம் கூறி மனித நேயத்தின் பண்பை வெளிப்படுத்தியுள் ளார். எல்லா மதங்களும் மனித நேயத் தையே கூறுகின்றன. கிறிஸ்தவம் "உன்னைப் போல் உன் அயலானையும் நேசி" என்றும், இந்து சமயம் "அனைவரிடம் கொள்ளும் அன்பு உத்தமம்" என்றும், முஸ்லீம்கள் "வறியவர்களுக்காக துவா செய்யுங்கள்" என்றும் கூறுகின்றன. இதனை வள்ளுவர் தமது குறட்பாக்களிலும் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஒருவர் நமக்கு ஏதேனும் உதவி செய்தால் அவ்வுதவிக்கு நன்றி கூறுவது மனிதநேய கோட்பாடுகளில் ஒரு அம்ச மாகும். அத்தோடு அவர் செய்யும் உதவி சிறியது என்றாலும் அதனை பெரிதாகக் கருதி உதவி செய்தவர்க்கு நன்றி கூற வேண்டும்என்று வள்ளுவர் "செய்நன்றியறிதல்" எனும் அதிகாரத்தில் பின்வருமாறு கூறுகின் றார்.

" காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

சிறிய உயிர்கள் ஆயினும் பெரியளவு பயன் உள்ளவை என்றெண்ணி அது இறைவனின் படைப்பு என்று கருதி அன்பு செய்யவேண்டும். இவ்வாறு உயிர்க ளிடத்தில் அன்பு செய்ய வேண்டும் என்ப தனை வள்ளுவர் புலால் மறுத்தல் எனும் அதிகாரத்தில் கூறியுள்ளதும் குறிப்பிடத் தக்கது.

மேலும் ஒருவர் நமக்கு கெடுதல் செய்தாலும் அவருக்கு நாம் கெடுதல் செய்யாமல் நன்மை செய்தால் அவர் வெட்கப்பட்டு மனவருந்தும் நிலைக்கு ஆளாகிடுவார் என்று வள்ளுவர் தமது குறட்பாவில் கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்
நாண நன்னயஞ் செய்து விடல்"

அதுபோல வள்ளுவர் காலத்திற்குப் பின்பும் மனித நேயத்தின்பாற் நின்றவர்களும் உள்ளனர். இவர்களது சமூகக் கட்டமைப்பின் ஏற்றத்தாழ்வு முறைமைக்கு சம உரிமை வேண்டும், பெண்களுக்கு சம அந்தஸ்து வேண்டும் எனக் கூறிய அறிஞர் அண்ணா, வெள்ளையர்களின் இன வெறிக்கு எதிராக மனிதநேயத்துடன் போராடி இருபத்தேழு ஆண்டுகள் சிறை வாசம் அனுபவித்த நெல்சன் மண்டேலா மற்றும் மார்டின்லூதர்கிங், அகிம்சைக்கு எடுத்துக் காட்டான மகாத்மாகாந்தி, எளிமை, மனித நேயத்திற்கு உதாரணமான அன்னை தெரேசா, மற்றும் பாண்டிய மன்னன் என்பவர்கள் வள்ளுவர் கூறும் மனித நேயத்தோடு நடந்த உத்தமர்கள் ஆவார்கள்.

மேற்குறிபிட்ட ஒட்டுமொத்தமாக நோக்கும் போது திருவள்ளுவரின் சிந்தனைத் தளத்தில் மனிதநேயம் புரையோடிப்போய் உள்ள தென்றால் அது மிகையாகாது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கிய வாழ்வளிக்கும் யோகாக் கலை

திருமதி தக்சாயினி செல்வகுமார்
(முதுகலைமாணி பண்பாட்டியல் கற்கை)
கலாசார உத்தியோகத்தர் - ஊர்காவற்றுறை

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்ற ஔவையாரின் கூற்றுக்கு அமைய எமக்குக் கிடைத்த இப்பிறவி மாண்புடையது. ஆனால் இவ் அரிய மானிடப் பிறவியை எடுத்துக் கொண்ட நாம் நாளாந்த வாழ்க்கையில் எவ்வளவு தூரம் சந்தோசமாக வாழ்கின்றோம் என்பது கேள்விக் குறியாகவே இருக்கின்றது.

குறிப்பாக இன்று நாம் பல்வேறுபட்ட இக்கட்டான காலத்தில் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். ஒவ்வொரு உயிரினமும் ஆரோக்கியமாகவும் சந்தோஷமாகவும் வாழ ஆசைப்படுகின்றோம். எனினும் ஒவ்வொரு வரும் மற்றவர்களைப் பற்றி சிந்திக்காது சுயநலமாகவே வாழப் பழகி விட்டோம். இவ்வாறான சுயநல உலகில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் ஒவ்வொருவரது உடல், உள ஆரோக்கியத்திற்கு ஒரு வரப்பிரசாதமாக அமைவதே யோகக் கலை ஆகும்.

அதாவது இன்றைய வாழ்க்கை முறையில் யோகாக் கலையின் தேவை என்பது இன்றியமையாத ஒன்றாக மாறிவிட்டது என்று கூறிக்கொள்ளலாம். குறிப்பாக அண்மைய காலங்களில் அனைவராலும் அதிகம் பேசப்படும் வார்த்தையாகக் கூட யோகக் கலை மாறிவிட்டது. அதாவது உடலினதும் உள்ளத்தினதும் ஆரோக்கியத் தேடலின் விளைவாக அமையப் பெற்றதே யோகக் கலையாகக் கொள்ள முடிகின்றது.

உடலையும் உள்ளத்தையும் ஆரோக்கியமாக வைக்கும் இக்கலையானது இன்று நேற்று தோன்றியதல்ல. பல நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே இக்கலையானது தோன்றியது என்று அறியமுடிகின்றது. குறிப்பாக யோகாக் கலை முதல் முதலில் பாரத தேசத்தில் பதஞ்சலி முனிவரால் உலகிற்கு அளிக்கப்பட்டது, என்று கூறப்படுகின்ற போதும், அதனையும் தாண்டி யோகக் கலையானது சிதம்பரத்தில் அரங்கேற்றப்பட்டது என்றும், ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இமாலயத்தில் இக்கலை காணப்பட்டது என்ற செய்திகளை வரலாறுகள் ஊடாக அறிய முடிகின்றது.

தமிழர்களுடைய நாகரிகமான சிந்துவெளி நாகரிகத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற யோகா முத்திரைகளின் மூலமாகவும், கீழடி ஆய்வுகள் மூலமாகவும் இதன் தொன்மை உலகிற்கு வெளிப்படுகின்றது. யோகா பற்றிய பல குறிப்புகள் தமிழ் மந்திரம் என அழைக்கப்படும் திருமந்திரத்தில் கூறப்பட்டுள்ளது. சித்தர்கள் பாடல்கள் மூலமாகவும் இவற்றினை கண்டுகொள்ள முடிகின்றது. பாரத தேசத்தைத் தாயக தேசமாகக் கொண்ட இக்கலையில் பாரதரிசிகள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சிறந்து விளங்கினர் என்று கூறப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தவகையில் யோகக் கலை என்றால் என்ன என்று நோக்குமிடத்து யோகம் என்றால் ஒன்றிணைதல். அதாவது உடல் மனம் இவைகளை ஒன்றிணைப்பது எனும் அர்த்தம் கொள்கின்றது. யோகா என்ற சமஸ்கிருத சொல்லானது ஜீவாத் மாவை பரமாத்மாவோடு இணைப்பது என்ற கருத்தைத் தருகின்றது.

யோகா என்பது ஓகம் என்ற சொல்லிலிருந்து தோற்றம் பெற்றது என்று கூறப்படுகின்றது. இச்சொல்லுக்கு இருக்கை, ஆசனம் இருக்கை நிலை, இணைத்தல், ஒன்று சேர்த்தல், உடல் உயிர் மனத்தால் ஒன்றிணைதல் என்று பல பொருள் கூறப்படுகின்றது.

உடலுக்கும் அண்ட சராசரத்தில் உள்ள பஞ்ச பூதங்களுக்கும் இடையே உள்ள தொடர்பினை நன்கு அறிந்த பண்டைய முனிவர்களிடம் மர நிழல்களில் இயற்கையாகக் கல்வி கற்ற மாணவர்கள் மூலம் வழிவழியாக வளர்ந்து வந்த இந்த யோகாசன கலையானது இன்று உலகளா விய நிலையில் வளர்ந்து கொண்டிருக் கின்றது எனக் கூறின் மிகையாகாது.

யோகா என்பது உடல் மற்றும் மனம் இரண்டிலும் கவனம் செலுத்தக்கூடிய உடற்பயிற்சி முறையாகும். யோகா முறைக ளில் சுவாசப் பயிற்சிக்கு முக்கிய பங்கு உண்டு. ஏனெனில் நமது சுவாச முறையா னது உடலில் முழு ஆரோக்கியத்தோடு தொடர்புடைய ஒன்றாகும்.

யோகா மனதிற்கும் உடலுக்கும் இடையே ஒரு பாலமாகச் செயற்படு கின்றது. இது நமக்கு பல விதமான ஆரோக்கிய நன்மைகளை வழங்குகின்றது. யோகாவில் பல முறைகள் உள்ளன. சிலர் தியானம் மற்றும் நினைவாற்றலை அதிகரிக்கக் கூடிய யோகா முறைகள் மீது அதிக கவனம் செலுத்துகின்றனர். இன்னும் சிலர் உடல் வலிமை குறித்த முறைகள் மீது கவனம் செலுத்துகின்றனர். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு வகை மார்க்கங்களில் யோகம் என்பது தனிப் பெருமை வாய்ந்தது. சரியை கிரியை நெறிகளுக்கு அப்பால் மகத்தானது; புனித மானது; ஞானத்திற்கும் வழி வகுப்பது.

ஸ்திரத்தன்மை மற்றும் சமாதானம் தொடர்பான ஐ. நா வின் விழுமியங்களில் யோகாவிற்கு மிகவும் நெருக்கமான கருத்துக் காணப்படுகின்றது. அதாவது உடல் உள ஆன்மீக சமநிலையைத் தோற்றுவிக்கும் புராதன கலை உணர்வை வென்றெடுக்க உதவுகின்றது. யோகா வானது எமது இருப்பிற்கான ஆதாரமாக விளங்குவதுடன் சுய அறிவையும் உலக அறிவையும் பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகளுக்குக் கொண்டு செல்வதாக அறிஞர்கள் கூறுகின்றனர். அத்துடன் நேரிய சிந்தனை வளத்தை வளர்ப்பதற்கான உறுதுணையாக விளங்குகின்றது. உலக வாழ்வின் இயல்புத் தன்மையை யோகா ஏற்றுக்கொள்வதுடன் இதனை உண்மை யின் இயக்க சக்தி என்றும் ஞானிகள் கூறியுள்ளனர்.

உடல் ஆரோக்கியத்திற்கு மட்டு மின்றி மனக்குழப்பங்களில் இருந்து விடுபடவும் சுய நம்பிக்கையை, அறிவை மேம்படுத்தவும் இது உதவுகிறது. சகல உயிர்களையும் ஆட்சி செய்யும் மனதை ஒரு நிலைப்படுத்த யோகாவின் சக்தி மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. அவசர உலகில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அதனால் எமது மனோபலம் அடிக்கடி சோர்வையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்துகின்றது இந்நிலையில் மனதுக்கு சிறிதளவு ஓய்வு கொடுத்து மீண்டும் புத்துணர்வை பெற்றுக் கொள்வதற்கு உதவும் சக்தியாக யோகாக்கலை காணப்படுகின்றது என்பது மிகையாகாது.

உடல் எடையை குறைக்க யோகா உதவுகின்றது. உடற்பயிற்சியானது யோகாவை விடவும் உடல் எடையைக் குறைப்பதில் அதிக பயனளிக்கின்றது. ஆனால் யோகா உடல் எடையைக் குறைப்பதைத் தாண்டி பல நன்மைகளை அளிக்கின்றது. உண்மையில் யோகா முறையானது உடல் எடை குறைப்பை உடற்பயிற்சியுடன் சேர்ந்து செய்யும்போது இது சாத்தியமாகின்றது. எனவே அதிகமான உணவை எடுத்துக்கொண்டு யோகாவை முயற்சிப்பதால் உடல் எடையில் எந்தவித மாற்றத்தையும் பெறமுடியாது. உடல் எடையைக் குறைக்க நினைப்பவர்கள் கண்டிப்பாக யோகா முறையைப் பின்பற்றலாம். ஆரோக்கியமான உணவு மற்றும் யோகாமுறையை முயற்சிக்கும் போது அது அவர்களுக்கு நன்மையை அளிக்கும்.

இவ்வாறு அன்று தொட்டு இன்றுவரை பேணப்பட்டு வருகின்ற யோகாசனக் கலையை நாம் தினமும் செய்து வருகின்ற போது பல நன்மைகளைப் பெற முடிகின்றது. குறிப்பாக நாம் யோகாசனங்கள் செய்யும் போது நம்முடைய உடலைப் பல கோணங்க ளில் மறைத்து சுருக்கி யோகா செய்வதால் நம்முடைய உடலானது நல்ல அழகான வடிவத்தைப் பெறுகின்றது. தினமும் யோகாசனம் செய்வதன் மூலம் நமக்கு ஏற்படக்கூடிய இதயம் சம்பந்தமான நோய்களைத் தடுக்க முடியும். யோகா செய்பவர்களுக்கு இரத்த ஓட்டம் சீராகி இதயம் பலம் பெறுகின்றது. மேலும் நல்ல சீரான சுவாசம் கிடைப்பதோடு இதயம் சீராக இயங்கி உடல்நிலை மேம்பட்டு ஆயுள் நீடிக்கின்றது.

மன அழுத்தம், பயம், கொழுப்பை சீராக்கி, படபடப்பில் இருந்து விடுபடுவது, நாட்பட்ட நோய்களான ஒவ்வாமை, தூக்கம் இன்மை, உயர்இரத்த அழுத்தம், சர்க்கரை நோய், முதுகு வலி போன்ற வற்றிற்குச் சிறந்த பயன் அளிக்கின்றது. யோகக் கலையானது நமக்கு உள் நிலையில் அமைதி, ஆனந்தம் மற்றும் நிறைவை வழங்குகின்றது. இரைப்பையின் செயல்ப் பாட்டை இயல்பாக்குகின்றது. அஜீரணக் கோளாறை சீரடையச் செய்கின்றது. நரம்புகளை சீராக இயங்கச் செய்கின்றது. தகவல் பரிமாற்றம் மற்றும் பிறருடன் பழகுவதில் மேம்பட்ட நிலை, மனத்தெளிவு, உணர்ச்சிகளில் சமநிலை, மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்து கின்றது.

யோசிக்கும் திறனுக்கும், உருவாக்கும் திறனுக்கும் சமநிலையை பேணும் தன்மை யோகாவிற்கு உள்ளது. யோகா செய்வதால் நுரையீரலைச் சீர்படுத்திச் சீரான சுவாசத் தைப் பெறலாம். அதிலும் ஆழமான மூச்சு பயிற்சி உடல் வலிமையைக் கூட்டி மன அழுத்தத்தைப் போக்குகிறது. வயதான காலத்தில் உடல் தளர்வடைந்துவிடும் பங்கினைக் குறைக்கின்றது. நாள் முழுவதும் ஆற்றல் மற்றும் விழிப்புணர்வுடன் இருக்க யோகா உதவுகின்றது. தன்னம்பிக்கையை ஏற்படுத்துகின்றது. தினமும் யோகா செய்பவர்களது நரம்பு மண்டலம் பலம் பெறுகின்றது. மூளை தொடர்பான பாதிப்புகள் ஏற்படுவது தடுக்கப்படுகிறது என்று பல ஆய்வுகள் கூறுகின்றன. மேலும் நோயற்ற வாழ்வை மகிழ்ச்சியுடனும் மன அமைதியுடனும் கொண்டாடத் துணை புரிகின்றது. இவை அனைத்தையும் விட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன அமைதியை முழுமையாகக் கொடுக்கின்றது. இவ்வாறு யோகா பற்றி அடுக்கிக் கொண்டே போகலாம்.

இவ்வாறு சிறப்பு வாய்ந்த யோகக் கலையினைச் சிறப்பிக்கும் முகமாக 2015 ஆம் ஆண்டு முதல் யூன் 21 ஐ.நாவில் சர்வதேச யோகா தினம் அறிமுகப்படுத்தப் பட்டு உலக நாடுகள் பூராகவும் கொண்டா டப்பட்டு வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

யோகா பயிற்சியானது உடலில் வளத்தையும் வாழ்விற்கு வேண்டிய தரும நெறிகளையும் போதிக்கின்றன. அவை போதிக்கும் நிலைக்கு ஏற்பவே இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், தியானம், சமாதி, பிரத்தியாகாரம் என 8 ஆகப் பிரித்து நோக்கப்படுகிறது.

பண்டைய முனிவர்கள் இந்த யோகாசனக் கலையை மானிட குலம் தழைக்கப் போதித்தார்கள். நாட்டியக்கலை போன்று யோகாசனம் ஒரு தெய்வீக கலை தான். மனித ஆயுளை அதிகரிக்கச் செய்வதுடன் நரம்புகள், நரம்புவலி, நரம்புச் சக்கரங்களை சீராக்கச் செய்வதுடன் அவற்றை ஒழுங்குடன் இயங்கச் செய்யத் தூண்டுகின்றது. உயிர் கருவியான இதயம் சுவாசப் பையைச் சீராக அணுகி ஆரோக்கிய நிலையில் இயங்க வைக்கிறது. அத்தோடு உடலை இயங்கச் செய்வதுடன் ஒவ்வொருவரையும் அவரவர் தொழில் வாழ்வில் வெற்றிபெற புத்திசாலித்தனத் தையும் சாமர்த்தியத்தையும் அளிக்கின் றது. யோகாசனங்கள் மனித உடலின் கோணங்களை நிமிர்த்தி உடலை அழகாக, ஆரோக்கியமாக வைத்திருக்க வழிகளை ஏற்படுத்துகின்றது எனக் கூறப்படுகின்றது. யோகாசனம் செய்வதால் உடல் ஆரோக்கியம் பெருகுவது மட்டுமின்றி மன அமைதி, மனக்கட்டுப்பாடு, ஒழுக்கம் போன்றவையும் ஏற்படுகின்றன.

யோகா பயிற்சியினால் சுவாசப் பைகள் இருதயம், நாடி நரம்புகள் யாவும் வலிமையும் வனப்பும் மகிழ்ச்சியும் பெறுகின்றன. கண்கள் ஒளி பெறுகின்றன. மூளை நன்கு வேலை செய்கின்றது. உறுப்புகள் நல்ல முறையில் வேலை செய்கின்றன. நரை, திரை, மூப்பு முதலி யன தலையெடுக்காமல் அழகும் பொலி வும் பெறுகின்றனர்.

யோகாசன முறைகள் வாழ்க்கையில் மேலேறிச் செல்வதற்கான படிக் கட்டுகள் போன்றவை. அவற்றை அளவோடு ஒழுங்காகச் செய்து வந்தால் உடற்பாரம் குறைந்தது போலவும் காற்றில் மிதக்கும் பட்டத்தைப் போலவும் ஒரு உணர்ச்சி உண்டாகும். யோகாசனம் செய்வதால் எம்மை தீய பழக்கவழக்கங்கள் விட்டு நீங்கிப் போய்விடுகின்றன. யோகாசனம் மனதில் உள்ள அவசியமில்லாத எண்ணங்களை அகற்றி நல்ல நோக்கங் களை விதைப்பதைச் சாதகமாக்குகின்றது. யோகாசனங்கள் ஒரு கற்பகதரு போன்றது.

இக்கலையானது முனிவர் சித்தர் முதலா னோரால் கையாண்டு மேற்கொள்ளப்பட்டு வந்த அற்புதநெறி ஆகும். "உடல் வளர்த் தேன் உயிரை வளர்த்தேனே" எனத் திருமந்திரம் உடலோம்பலை வலியுறுத்து கின்றது. சித்தர்கள் ஆசனம், பிராணா யாமம், தியானம், முதலியவற்றால் உள்ளத்துக்கும் உடலுக்கும் மிகுந்த பலத்தை அடைந்திருந்தனர். இதனால் இயற்கை வாழ்வு வாழ்ந்து தெய்வீக சக்திக ளையும் அடைந்தனர், இயற்கை மூலமாக இயங்கும் சக்தியுடன் இணைந்து செயலாற் றுவது யோகம் என்று பகவான் பகவத் கீதையில் விளக்கியுள்ளார். "நோயற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வே குறைவற்ற செல்வம்" எனத் தமிழ் மூதாட்டி ஔவையார் எடுத்துக் கூறியுள் ளார். யோகாசனம் எந்தவித நோயும் பிடிக்காமல் பாதுகாப்புத் தரும். இக் கலைகளின் மூலம் நோய்கள் பலவற்றைப் போக்கி நல் வாழ்வைப் பெற முடியும். குறிப்பாக யோகாசனம், உணவு முறை, தியானமுறை, நாட்டு மக்களின் சித்தவைத்தியம் என்பன மக்களின் நல் வாழ்வுக்கு நம் முன்னோர் வகுத்து தந்த சிறந்த வழிகாட்டிகளே.

தியானம் யோகாவின் ஓர் அங்கமாகக் கருதப்படுகின்றது. ஆழ் நிலைத் தியான பயிற்சியானது இலகுவில் சமநிலைக்கு இட்டுச் செல்வதாக உள்ளது என மகரிஷிகள் வலியுறுத்தியுள்ளார். யோகக் கலையை மத சம்பந்தமான ஒரு பயிற்சியாகக் கருதாது சகல மதத்தை சேர்ந்தவர்களும் இதை ஒரு விஞ்ஞான பூர்வமான பயிற்சியாகவே கொள்ளலாம். அது மாத்திரமின்றி அவை மனதை திருத்துவதற்கும், பொறி, புலன்களை அடக்குவதற்கும் உதவியாக உள்ளது. இவ்வாறெல்லாம் புகழ்பெற்ற யோகா முறைகள் ஆன்மிகவியலில் மனதையும் இறைவனையும் அடைவதற்கு உதவியாக உள்ளது.

யோகாசனம் துறவிகளுக்கும் யோகிக ளுக்கும் சித்தர்களுக்கும் உரியவை என்றும் நாம் அஞ்சி அவற்றை எடுக்க லாமா, என்ற கருத்துக்களும் நிலவுகின்றது. அது அவ்வாறன்று. யோகாசனப் பயிற்சி யினை நல்ல குரு ஒருவரின் உதவியுடன் தொடர்வது நன்மை பயக்கும்.

இறுதியாக "எவன் உணர்வுகளை மனதில் அடக்கி, புலன்களால் கர்ம யோகம் செய்கின்றானோ அவனே யோக நிலையை அடைகின்றான்" என பகவத்கீதை கூறுகின் றது. உண்மைப் பொருளை உள்ளும் புறமும் பொருத்தி அன்பும் அருளும் அமைதியும் அழகும் இன்பமும் இயற்கையும் கூடிய பூரண வாழ்வு வாழ யோகா அவசியமாகின்றது. யோகம் இன்றி நாகரிகம் இல்லை. கலைகள் சாத்தியம் இல்லை. கவிதை இல்லை. வாழ்வும் இல்லை. வழக்கும் இல்லை வளமும் இல்லை! இல்லை!! இல்லை!!! ஆகவே வாழ் வாங்கு வாழ நாமும் யோக வழியை மேற் கொண்டு நலமோடு வாழ்வோமாக.


**உசாவல்கள்**

* பயன் தரும் யோகாசனங்கள்
பேராசிரியர் டாக்டர் எஸ் நவராஜ் செல்லையா, எஸ் எஸ் பப்ளிகேஷன், ராஜ்மோகன் பதிப்பகம் லில்லி புவனம், சென்னை, 2014 டிசம்பர்

* உணவில்லாமல் வாழும்கலை யோகா முறை
எஸ். வெங்கடேசன், விஜய பதிப்பகம் கோயம்புத்தூர், ஜோதி என்டர்பிரைசஸ், சென்னை, 2016

* சிகரத்தை எட்ட யோகா
அரிமா ஆர் எம் சிவானந்தம், பதிப்பகம், சென்னை, 2005

* யோக வாழ்வு
திரு நவரத்தினம், திரு கந்தப்பு இறைவன், கிரியா பாபாஜி அன்பகம், கனடா, 2019

* யோகிகளின் உண்மைகள்
ச.மணிமொழி இளங்கோ, உண்மை உலகம் வெளியீடு, சென்னை 2007

* யோக சாத்திரம்
இரத்தினம் பிள்ளை கலியுக வரதன், கிளிசொச்சி மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவை, 2007







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள நெருக்கீடும், நெருக்கீட்டு முகாமைத்துவமும்

திரு. எஸ். சதீஸ்காந்
உளவளத்துணை ஆலோசகர்,
பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை

உள நெருக்கீடு இல்லாத நாள் என ஒன்று கூட இன்றைய எமது வாழ்வியலில் இருக்க முடியாது. குடும்பம், வேலைத்தளம், பாடசாலை, போக்குவரத்து, பொருளாதாரம், என எங்கும் நெருக்கீடுகள் அதிகரித்துவிட்டன. இவ் உள நெருக்கீடானது எமது சந்தோஷம், கோபம், துக்கம், எரிச்சல், பயம் போன்ற பல மனநிலை மாற்றங்களுக்கு அடிப்படையாக விளங்குகின்றது. அதேபோல் பதகளிப்பு (Anxiety), மனச்சோர்வு (Depression) போன்ற உள நோய்களுக்கும் காரணமாக அமைகின்றது. மாரடைப்பு நோய்களுக்கும் காரணமாக அமைகின்றது. மாரடைப்பு நோய்க்கும் அடிப்படையாக விளங்குவது இவ் உள நெருக்கீடே என ஒன்ராறியோ பல்கலைக்கழக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இத்தகைய உளப்பிரச்சினைகளுக்கு மட்டுமன்றி பல பாரிய உடல் நோய்களுக்கும் நெருக்கீடானது காரணமாகின்றது.

உளநெருக்கீட்டின் தன்மையினையும் அதன் தாக்கத்தினையும் பொறுத்து அதனை இரண்டாக வகைப்படுத்தலாம்.

1. Eustress (Positive Stress)
2. Distress (Negative Stress)

## Eustress

எமக்கு ஏற்படுகின்ற உள நெருக்கீடானது எமக்கு ஒரு உந்துசக்தியாக அமையுமாயின் அது Eustress எனப்படும். உதாரணமாக உயர்தர பரீட்சையை எதிர் நோக்கவிருக்கும் மாணவன் ஒருவனுக்கு எப்படியாவது அப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்ற உள நெருக்கீடு காணப்படும். இவ் நெருக்கீட்டின் காரணமாக நன்றாக படித்துப் பரீட்சைக்குத் தயாராகுவான். பரீட்சை முடிந்த பின்னர் இந் நெருக்கீடு இல்லாமல் போய்விடும். ஆகவே இத்தகைய நெருக்கீடானது அம்மாணவன் நன்றாக படிக்க வேண்டும் என்பதற்கான ஊக்கியாக (Motivation) செயற்பட்டுள்ளது. அதேபோல் உங்கள் முதலாளியினால் அல்லது மேலதிகாரியினால் உங்களிடம் ஒரு பொறுப்பு ஒப்படைக்கப்படும் போது சாதாரணமாகவே உங்களிடம் உளநெருக்கீடு ஏற்படுகின்றது. இவ் உள நெருக்கீடானது ஒப்படைக்கப்பட்ட பொறுப்பினை செவ்வனே செய்து முடிப்பதற்கு ஒரு ஊக்கியாக அமைகின்றது. வேலை முடிந்தவுடன் நெருக்கீடு இல்லாமல் போய்விடும். இது ஒரு ஆரோக்கியமான உள நெருக்கீடு ஆகும்.

## Distress

குறிப்பிட்ட ஒரு நிகழ்வு காரணமாக எமக்குள் ஏற்படும் உள நெருக்கீடானது நிறைவு பெறாமல் தொடர்ச்சியாக காணப்படுமாயின் அது Distress எனப்படும் இத்தகைய நெருக்கீடே எமது உடல், உள ஆரோக்கியத்தில் பாரிய பாதிப்பை ஏற்படுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே குறிப்பிட்ட உதாரணங்களை நோக்குகையில், பரீட்சையை எதிர் நோக்கும் மாணவனுக்கு ஏற்பட்ட உள நெருக்கீடானது பரீட்சை முடிவடைந்த பின்னரும் தொடர்ச்சியாக காணப்படுமாயின் அது அவனுக்கு பின் நாளில் உடல், உள நோய்களுக்குக் காரணமாக அமைகின்றது.

அடுத்த உதாரணத்தை நோக்குகையில், உங்களிடம் ஒரு பொறுப்பு வழங்கப்படும் போது சாதாரணமாகவே நெருக்கீடு ஏற்படுகின்றது. இந்த நெருக்கீட்டினால் வழங்கப்பட்ட பொறுப்பினை சரியாகச் செய்ய முடியாது போயின் அது Distress எனப்படுகின்றது. மாறாக குறித்த வேலையை முடித்த பின்னரும் உங்களிடம் அதே உளநெருக்கீடு தொடர்ச்சியாக காணப்படலாம். இதுவும் Distress ஆகும். இது உங்கள் நாளாந்த செயற்பாடுகளிலும் உடல் உள ஆரோக்கியத்திலும் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது.

இத்தகைய உளநெருக்கீடானது ஏன் ஏற்படுகின்றது? நெருக்கீடானது உடல் உள ரீதியாக எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்துகின்றது? நெருக்கீட்டினை எவ்வாறு முகாமை செய்வது? தொடர்பாக தொடர்ந்து பார்ப்போம்.

**உள நெருக்கீட்டிற்கான அறிகுறிகள்**

* பதட்டம்/படபடப்பு
* அடிக்கடி கோபமடைதல் (எரிச்சலடைதல்)
* கிரகிப்புத் தன்மை குறைவடைதல்
* ஒரே விடயத்தை மீள மீள யோசித்தல்

**உள நெருக்கீட்டின் காரணமாக உடலில் ஏற்படும் மாற்றங்கள்**

* அதிக களைப்பு, சோர்வு
* அதீத தலைவலி (முன் நெற்றியில்)
* தசை நடுக்கம் (கை, கால், உடல் நடுக்கம்)
* பசியின்மை
* உடலில் வலி இருப்பது போல உணருதல் (Somatic)
* பெண்களுக்கு மாதவிடாய் ஒழுங்கீனம்
* பாலியல் நாட்டமின்மை(ஆண்களுக்கு)

**உள நெருக்கீடு காரணமாக நடத்தையில் ஏற்படும் மாற்றங்கள்**

* செயற்பாடு குறைவடைதல் அல்லது அதீத செயற்பாடு (Activities)
* ஓய்வின்மை
* போதைக்கு அடிமையாதல் (பெரும்பாலும் ஆண்கள்)
* விளங்கிக்கொள்ளல் அல்லது கிரகித்தல் குறைவடைதல்
* நித்திரைப் பிரச்சினை

**உள நெருக்கீடு காரணமாக உறவு முறையில் ஏற்படும் மாற்றங்கள்**

* அதிகமாக விவாதித்தல் / சண்டையிடுதல்
* எதையும் ஏற்றுக்கொள்ளாமை
* தவறான புரிதல்
* தீர்மானமெடுப்பதில் அடுத்தவர் மீது தங்கியிருத்தல் (சுய தீர்மானம் எடுக்கும் திறன் இல்லாது போதல்)

**உள நெருக்கீடு காரணமாக உடலில் ஏற்படும் மாற்றங்கள்**

* சுவாசப் பிரச்சினை / மூச்சுவாங்குதல்
* இதயத்துடிப்பு அதிகரித்தல்
* உயர் இரத்த அழுத்தம்
* தலைச் சுற்று
* வாந்தியும், குமட்டலும்
* ஆஸ்த்துமா
* பசியின்மை
* தோல் நோய்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* உணவு ஒவ்வாமை
* சமிபாட்டுப் பிரச்சினை / நெஞ்சுவலி
* முள்ளந்தண்டு வலி
* பதட்டம்

**உள நெருக்கீடுக்கான காரணங்கள்**

* அதிக பொறுப்பு வழங்குதல்
* பொறுப்பு வழங்காமை
* குறை ஊதியம் /பொருத்தமற்றதொழில்
* ஒப்பீடு
* அதிக எதிர்பார்ப்பு
* திருப்தியின்மை
* பொருளாதாரப் பிரச்சினை
* தோல்விகள்
* சர்வாதிகாரம்
* பாராட்டுக்கள் / வெகுமதிகள் இன்மை
* ஒத்துழைப்பின்மை
* போக்குவரத்துப் பிரச்சினைகள்
* குடும்பப் பிரச்சினைகள்
* ஓய்வின்மை
* பாலியல் பிரச்சினைகள்
* சந்தேகம்
* புரிந்துணர்வு இன்மை

**உள நெருக்கீட்டினை எவ்வாறு வெற்றி கொள்ளலாம்**

* எம்மிடமுள்ள வளங்களை திறமையாகவும் முழுமையாகவும் பயன்படுத்தல்
* உணர்வுகளை சரியான முறையில் வெளிப்படுத்தல் / கையாள்தல்
* தொடர்பாடல் திறன்களைஅதிகரித்தல்
* தொழில் தகைமைகளை அதிகரித்தல்
* எனது பாத்திரத்தினை (rcle) சரியாக விளங்கிக் கொள்ளுதல்
* நேர முகாமைத்துவம்
* செவிமடுக்கும் திறனை அதிகரித்தல்
* சிறந்த போசாக்கான உணவுப்பழக்கம்
* சுய சுத்தம்
* உடற்பயிற்சி மற்றும் பொழுதுபோக்கு
* போதுமான நித்திரை (7 மணித்தியாலங்கள்)
* மசாஜ்
* பிடித்தமான வாசனைத் திரவியங்களை நீரில் கலந்து குளித்தல் (Aroma Therapy)
* Hug Therapy
* கருத்துப் பகிர்வு (கலந்தாலோசித்தல்)
* ஆன்மீக ஈடுபாடு
* புத்தாக்க சிந்தனைகள்
* சூழலையும் சூழ்நிலைகளையும் மாற்றுதல்
* சுய பாராட்டுதல்
* தேவையற்ற தொடர்புகள், தொடர் பாடல்களைத் தவிர்த்தல்
* உளவள ஆலோசனை பெற்றுக் கொள்ளல்

மேற்படி விடயங்களில் அனைத்தையும் நாம் கடைப்பிடிக்காவிடினும் குறிப்பிட்டளவு நாம் பயிற்சி செய்து கொண்டால் உள நெருக்கீட்டினை நாம் சரியாக கையாண்டு வாழ்வினை வெற்றிகொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெடுதி எனும் எண்ணக்கரு எந்தவகையில் இறைவனின் மேலாண்மையில் தாக்கம் செலுத்துகிறது

செல்வி. பிறிந்தியா தவராசா
அபிவிருத்தி உத்தியோகத்தர் - புள்ளிவிபரக்கிளை
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

உலகில் பரந்துபட்ட எந்த மதத்திலும் கெடுதி (பாவம், கேடு, அழிவு, தீமை, துன்பம்) பற்றிய பிரச்சனை உதாசீனம் செய்யப்படவில்லை. மனித இனத்தின் தொடக்கத்திலேயே பாவம் பற்றிய பிரச்சனையானது தலைதூக்கியுள்ளது. இந்தப் பிரச்சனைக்குச் சமயங்களும் தீர்வுகாண முயற்சிக்கின்றன. உண்மையில் கெடுதி எனும் பிரச்சனை இல்லாதுவிடின் சமயங்கள் தோற்றம் பெறுவதற்கும் தொடர்ந்து நிலைப்பதற்கும் வாய்ப்புகள் இல்லாது போயிருக்கும். ஒவ்வொரு சமயங்களும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கெடுதி குறித்து ஆராய்ந்து தத்தம் பௌதீகவதீத கற்பிதங்களுக்கு முரணுறாதவாறு புரிந்துகொள்ள முற்படுகின்றன. அனைத்தையும் தன் கட்டுப்பாட்டில் வைத்துச் செயற்பட வைக்கும் சர்வவல்லமை கொண்ட இறைவன் இருந்தும் இன்னும் ஏன் கெடுதிகள் குறைவடையவில்லை? எனும் வினா தவிர்க்க முடியாததாகிறது. எனவே இது தொடர்பான தெளிவுபடுத்தல் காலத்தின் தேவையாக உள்ளமையால் இக் கட்டுரையினூடாகச் சில விடயங்களை முன்வைக்கலாம் என நினைக்கிறேன்.

கெடுதி என்றால் என்ன என்பதை வரையறை செய்வதில் கூடுதல் கடினநிலை இருக்கவே செய்கிறது. வாழ்வியல் அனுபவங்களுக்கு நல்லதல்லாததாய் அமைகின்ற எதனையும் கெடுதி எனப் பொதுவாகக் கூறலாம். தவறான பாதையில் செல்லுகின்ற போதுதான் கெடுதியின் இருப்பையும் பெறுபேற்றையும் எதிர்கொள்ள நேரிடும். துன்பம், நோவு, வேதனை, ஊழ், வறுமை, அழிவு இவை வாழ்வியல் உண்மைகள். இவை கெடுதியானவை. கெடுதியான செயல்கள் தனி மனிதனை மட்டுமல்ல சமூகத்தின் அமைதியையும் மகிழ்ச்சியையும் கெடுத்துவிடும்.

## கெடுதியை இருவகையாக பிரித்து நோக்கலாம்

1.பௌதீகக்கெடுதி - மனிதர்களுக்கு வந்தமைந்து துன்பம் இடர் வேதனையை அளிப்பது. "வழமைக்கு மாறாக எல்லா வேதனைகளையும் எதிர்கொள்ளல்" எனும் வகையில் அமையும்.
உதாரணமாக : இயற்கை அழிவுகள், நோய்கள், புயல், பூமிஅதிர்வு, மண்சரிவு, எரிமலை வெடிப்பு, காட்டுத்தீ, வறட்சி, வெள்ளம் போன்றன.

2. ஒழுக்கக்கெடுதி - இதில் தனிமனிதச் செயற்பாடுகள் உள்ளடங்கும். இதனை பழி அல்லது பாவம் எனவும் கூறலாம்.

உதாரணமாக : தீராத நோய் நிலைகள், திடீர் விபத்துகள் போன்றன.

இறையியல் கருத்துக்களைக் கொண்டிருப்போருக்குக் கெடுதி பற்றிய பிரச்சனை மிக கடினமானதாக இருக்கிறது. இந்து மதம், கிறிஸ்தவ மதம், இஸ்லாமிய மதம், பௌத்த மதம் போன்றன கடவுள் பற்றிய கொள்கையில்,

* இறைவன் எல்லாம் வல்லவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* எல்லாம் அறிந்தவர்
* அன்புமயமானவர்
* எங்கும் நிறைந்தவர்
* முழுமையானவர்

என்றவாறான ஒருநிலைப் போக்கு காணப் படுகிறது. அவ்வாறாயின் கடவுள் கெடுதியி னைத் தடுக்க வேண்டும். ஆனால் கெடுதி யானது நிலைத்து நிற்கிறது. எனவே இங்கு சில ஐயவினாக்களும் எழவே செய்கிறது.

1. இறைவனால் கெடுதியை தடுக்க முடிந்தாலும் அவரால் கெடுதியை தடுக்க முடியாது போகிறது. அப்படி யாயின் இறைவன் ஆற்றலற்றவரா?
2. இறைவனால் கெடுதியை தடுக்க முடியும். ஆனால் அவர் விரும்ப வில்லை. அவ்வாறாயின் இறைவன் தீங்கு விளைவிப்பதில் விருப்பம் உடையவரா?

கெடுதியானது நன்மைக்கு எதிரான தாகும். கடவுளின் சிறப்பு நிலையும் கெடுதி யின் நிலைபேறும் மேலும் மேலும் குழப்ப நிலைக்கு இட்டுச் செல்கிறது. மனித இனத்தின் ஆரம்பத்திலேயே பாவம் பற்றிய பிரச்சனையானது காணப்படுகிறது. புராணக்கதைகள், சமயங்கள் இந்தப் பிரச்சனைக்குத் தீர்வுகாண முயற்சிக்கின் றன. பௌத்தர்களும் இந்துக்களும் பாவமானது அறியாமையின் விளைவு என நம்புகின்றனர். சைவ சித்தாந்தம் பதி, பசு, பாசம் எனும் முப்பொருளை விளக்குவ துடன் பாசத்தின் கூறுகளில் ஒன்றான ஆணவம் இக்கெடுதிக்குக் காரணமாக அமைகின்றது என்பதை எடுத்துரைக் கின்றது. கிறிஸ்தவர்கள் பாவத்தில் இருந்து விடுபடுவதற்கு எந்தவித அறிவோ அல்லது மனித முயற்சியோ உதவி செய்யாது என்றும் கடவுளின் கருணை ஊடாகவே மீட்சி கிடைக்கும் என்றும் நம்புகின்றனர்.

இந்து மதத்தினைப் பொறுத்தவரை ஆன்மாக்கள் அறியாமையினால் வினை களை ஆற்றி அதன்வழி பல பிறப்புக் களைப் பிறந்து உழலுகின்றன. இறைவ னின் அருளினால் உண்மையை உணர்ந்து அறியாமை நீங்கிய பின்பு இறைவனுடன் இரண்டறக் கலந்து விடுதலை பெறுகின்றன எனக் குறிப்பிடுகின்றது.

கிறிஸ்தவ மதத்தினைப் பொறுத்தவரை பாவத்தின் தண்டனையாகவே கெடுதி அமைகின்றது. கடவுளின் படைப்பில் பாவம் இருக்கவில்லை என்றும் மனிதனின் செயலினால்தான் அது விளைந்தது என்றும் சுட்டிக்காட்டுகிறது.

ஆதாம் ஏவாள் கதை மூலம் இறைவன் உயிர்களைப் படைத்தான் என்றும் அவர்களுக்கு சுதந்திரமளிக்கப்பட்டது என்றும் விலக்கப்பட்ட கனியை உண்டு பாவத்தை தேடிக் கொண்டனர் என்றும் இதுவே பாவத்தின் தொடர்ச்சிக்குக் காரணமாகியது என்றும் கூறுகிறது.

பௌத்த மதத்தைப் பொறுத்தவரையில் புத்தபெருமானுக்கு வாழ்வென்பதே கெடுதி யாகத் தோன்றியது. துன்பத்திலிருந்து மீள்வது என்பதே வாழ்விலிருந்து மீள்வதைப் போன்றது. கர்மவிதியே தீமைக் குக் காரணமாகிறது. பௌத்த மதம்

1. துன்பம்
2. துன்பத்திற்கான காரணம்
3. துக்க நிவாரணம்
4. துக்க மார்க்கம்

எனும் நான்கு மார்க்கங்களை முதன்மையா னதாகக் கொண்டமைகின்றது.

"தீவினை என்பது
கொலையே களவே காமத்தீ விளைவு
உலையே உடம்பில் தோன்றும் மூன்றும்
பொய்யே குறளை கடுஞ்சொல் பயனில்
சொல்லெனச் சொல்லில் தோன்றுவ
நான்கும்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என 10 வகையானவற்றை கெடுதியான செயல்கள் என்பதனுள் அடக்கிவிடுகிறது. ஒருவர் செய்த வினையானது செய்தவரை விட்டு அகலாதென்பதை

"அவ்வினை நின்னையும் அகலாது ஆங்குதலும்

என்றிவை தெய்வம் கூறலும்..."

எனும் பாடல்வரிகளில் உணர்த்துகிறது.

இஸ்லாமிய சமயத்தை பொறுத்தவரையில் "பாவபந்தத்திலிருந்து விடுதலை பெறுவதற்கு தூய கடவுள் பற்றிய அறிவே மிகச் சிறந்த வழி" ஆகும் என்கிறது.

இவ்வாறாக எல்லா சமயங்களும் கெடுதி பற்றியும் அதனிலிருந்து நீங்குவதற்கான வழிவகைகள் பற்றியும் கூறியிருந்தாலும் கடவுள் பற்றிய குணாம்சங்களை எடுத்து நோக்கும் போது கெடுதி தேவையான ஒன்றா? கெடுதி கடவுளின் மேலாண்மையை குறைந்துவிடாதா? என்றவாறான வினாக்கள் எல்லோர் மனதிலும் எழுவது தவிர்க்கமுடியாததாகிறது.

ஒழுக்கக்கெடுதிகள் அதிகரிக்க அதிகரிக்க இயற்கைக் கெடுதிகள் தண்டனையாக வந்துசேரும் என இறை சிந்தனையாளர்கள் நம்புகின்றனர். இறைவன் மீதாய் மனிதன் விசுவாசம் கொள்ளாத போதும், இறைவனின் நம்பிக்கைக்குரிய பாத்திரமாய் நடவாத போதும் இயற்கைக் கெடுதிகளை இறைவன் வரவழைத்து மனிதனைத் தண்டிக்கிறான் என்ற கருத்தாக்கத்தை முன் மொழிகின்றனர். அவ்வாறாயின் கருணை வடிவமான இறைவன் பிறிதோர் உயிருக்குத் தண்டனை விதிக்கலாமா? இன்றைய உலகில் மனிதநேயவாதிகள் குற்றவாளிகளைத் தண்டிப்பதைக் காட்டிலும் மன்னிப்பு மற்றும் சீர்திருத்த முறைகளைப் பரிந்துரை செய்கையில் எல்லாம் வல்ல அன்புமயமான இறைவன் ஒழுக்க நியதிகள் மீறப்படும் போது இயற்கைக் கெடுதிகளை உருவாக்கலாமா? என்கின்ற வினா எழுகிறது. பசி, பஞ்சம், பட்டினி, அதிகவெப்பம், வெள்ளப் பெருக்கு, மண்சரிவு, சூறாவளி போன்ற இயற்கைக் கெடுதிகளால் அன்றாடம் பலர் இறக்கிறார்கள். போசாக்குக் குறைபாட்டால் பலர் எம் கண்முன்னே விழுந்து இறக்கிறார்கள், என்பதை நேரடியாகவும் செய்திகள் வாயிலாகவும் தினமும் அறிகின்றோம். அவ்வாறாயின் கடவுளின் இருப்புடைமை எங்ஙனம் சாத்தியமாகும்? இந்த சந்தர்ப்பத்தில் கடவுள் என்ற பேச்சே அர்த்தமற்றதாகிவிடும். இயற்கைக் கெடுதிகள் இடம் பெறுகையில் தவறு ஏதும் செய்யாதவர்களை தவிர்த்து விடுகிறதா இல்லையே! நல்லர்களும் இயற்கைக் கெடுதிகளுக்கு உள்ளாக வாய்ப்பு ஏற்படுகிறது.

உண்மையில் ஒன்றினைக் கெடுதியானது அல்லது நன்மை பயப்பது என்றவாறாக உருவாக்குவது என்பது ஒவ்வொருவரினதும் எண்ணங்களிலேயே தங்கியுள்ளது. கெடுதி ஓரளவிற்கு நல்லதென்றும் அது ஓர் உயர்ந்த நன்மையை அடைவதற்கு துணை புரிகிறது என்றும் கூறலாம். இதற்கு சிறந்த எடுத்துக் காட்டாக,

"எந்தத் தீமைக்குள்ளும் சிறு நன்மையுண்டு"

"வேப்பம் பூவிலும் சிறு தேன்துளி உள்ளது"

போன்ற பாடல்வரிகளை நினைவுபடுத்தலாம். கெடுதியும் ஏதோவொரு விதத்தில் நன்மை பயப்பதே. இயற்கையாய் இடம் பெறும் கெடுதிகள் உலகை மறுவுருவாக்கம் செய்வது போல் ஒவ்வொரு மனிதனும் துன்பம், நோய், அவமானம், தோல்வி, திடீர் விபத்துக்கள், பசி, பஞ்சம், பட்டினி போன்ற பல்வேறு கெடுதிகளை அன்றாடம் அனுபவித்து வருகின்றான். ஆயினும் மேலான நல்லதை அடைவதற்கான ஒரு கருவியாக கெடுதி இருக்கவே செய்கிறது என்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் புரிந்துகொள்ள வேண்டும். கெடுதியை ஒரு சவாலாக ஏற்று அதிலிருந்து விடுதலைபெற வேண்டும். தனிநபரைப் பொறுத்தவரை கெடுதி இறைவனால் நிகழ்த்தப்படுகிறது என்றவாறாகவும் இறுதியில் நன்மை பயப்பதாகவும் அமையும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

எல்லா வகையான கெடுதியும் மனிதனின் தவறினால்தான் இடம்பெறுகின்றன. கடவுள் மனிதனைப் பாவங்களின்றித்தான் படைத்தான். கடவுளால் கொடுக்கப்பட்ட சுதந்திரத்தை தவறாகப் பயன்படுத்தி பாவத்தில் விழுந்துகிடக்கிறான். இதில் சிலர் கடவுளின் கருணையால் மீட்கப் படுவதும் சிலர் நிலையான தண்டனையைப் பெறுவதும் அவரவர் பாவச் செயல்களைப் பொறுத்து நிகழுகின்றது.

சாதாரணமாகவே நாம் எமது வாழ்வில் எமக்கும் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் ஏற்படும் கெடுதிகளை அறிகின்றோம். அதன் வலியைத் தினமும் உணருகின்றோம். அது இயற்கை அழிவுகளாக இருக்கலாம்! இல்லை மனிதனால் உருவாக்கப்பட்டவையாகக் கூட இருக்கலாம்! இவை எல்லாம் எமக்கு தீங்கினையே விளைவிக்கின்றன. உண்மையில் கடவுள் ஒருவர் இருப்பார். அவர் சர்வவல்லமை உடையவர், எல்லாம் அறிவார் அன்புடையவர் என இன்னோரன்ன குணவியல்புகளைக் கூறி வழிபடுகிறோம். ஆனாலும் மனித வாழ்க்கை துன்பமயமானதாகவே காணப்படுகிறது. அந்தவகையில் "கெடுதியும் உண்டு. சர்வவல்லமை படைத்த இறைவனும் உண்டு, மனிதனும் உண்டு" தனிமனித பாவச்செயல்கள் குறைந்தால் இயற்கைக் கெடுதிகளும் இல்லாமல் போகும். அவரவர் செய்த பாவ புண்ணியங்களின் பயனாகவே மனித வாழ்வு துன்பத்தில் உழல்வதும் இன்பத்தில் திளைப்பதும் சாத்தியமாகும் என்பதே வெளிப்படையாகின்றது.

"ஊழிற் பெருவலி யாவுல மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்" திருக்குறள் - 380

---

## பேசாதே *!!* ஏற்றுக்கொள்*!!!*

அதிகமாப் பேசினால் அமைதியை இழப்பாய்
ஆணவமாகப் பேசினால் அன்பை இழப்பாய்
வேகமாகப் பேசினால் அர்த்தத்தை இழப்பாய்
கோபமாகப் பேசினால் குணத்தை இழப்பாய்
வெட்டியாகப் பேசினால் வேலையை இழப்பாய்
வெகுநேரம் பேசினால் பெயரை இழப்பாய்
பெருமையாகப் பேசினால்
ஆண்டவனின் அன்பை இழப்பாய்....



- விவேகானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிந்து போகும் பாரம்பரியம்

செல்வி. சுபாஷினி இமானுவேல்
தம்பாட்டி
ஊர்காவற்றுறை

மண்ணிலே பிறந்தவனை
விண்ணோக்கி உயர்த்திடவே
விழுமியத் தொகுதியாய்
முகிழ்ந்ததே பண்பாடு.

கலாசாரம் காத்திடவே
ஒவ்வொரு தமிழ்மகனும் பௌவிய
உடைகளென வேட்டி சால்வையுடன்
பட்டுச் சேலையதும் இஷ்டமுடன் கட்டினரே.

மொழிவளத்தைப் பேணுவதற்கு
வேற்று மொழியைக் கைவிட்டுப் பற்றுவைத்த
தூய தமிழ் கற்றதுடன் அதைக்கேட்டுச்
சுவைத்துக்கொண்டும் கதைத்துக் கொண்டும்
வாழ்ந்த இனம் எம்மினம்.

கலாசார நிகழ்வு வந்தால்
செம்பினிலே நீர் நிரப்பி பூரண கும்பத்துடன்
தோரணமும் கட்டிவைத்துக் கலாசாரம்
காத்தவர்கள் எம் தேசத் தமிழர்கள்.

குடும்பக் குலவிளக்காம்
எம் குலத்துப் பெண்களன்று
தலைபின்னி மாலைவைத்து
பாவாடை தாவணியில் தலைகுனிந்து
நடக்கையிலே அச்சமும் நாணமும்
இச்சையுடன் சேர்ந்து வரும்
ஆனால் இன்று ஏனோதானோ வென்று
பண்பாடுதனை மறந்து - அதை
மண்ணோடு மண்ணாக்கிக் கண்கெட்டு
நடக்கின்றாரே பண்பாடற்ற எம்மினத்தார்.

பட்டுச் சேலையும்
மாறுகரைச் சால்வையுமாய்
பொட்டும் பூவுமெனப் பூரித்த பண்பாடு
செத்த பிணம் போல் சேற்றில் புதைந்து விட
பாவாடையில் வெட்டும் மேலாடையில்
கட்டுமாய் காட்டேறிக் கோலத்தில்
தொலைகிறதே பண்பாடு

சாகிறதே நம் சரித்திரம்.
மொழிவளத்தைப் பேணவென
தூயதமிழ் கதைத்தவர்கள்
அன்னிய மொழிக்கலப்பால்
ஆங்கில மோகத்தால் சங்கத்தமிழ் மறந்து
அம்மாவை "மம்மி"யென்றும்
அப்பாவை "டாடி" என்றும் அழைக்கின்றனர்
தமிழ் மறந்த எம்மினத்தார்.

பின்னிய கூந்தலுடன் சென்னியிலே மலர்சூடி
கன்னியர் நடந்த காலம்
கண்ணீராய் கரைந்து போக
தலைவிரி கோலத்துடன் அதைவார
மனமின்றி மதிகெட்டலைகின்றனர்
மதியற்ற தமிழ்ப் பெண்கள்.

மரக்கறி வகைகளுடன்
மண்விளைத்த கிழங்குகளை
எண்ணமுடன் உண்டு
திண்ணமுடன் வாழ்ந்தவர்கள்
வேற்றுயிரைக் கொன்றுதின்று
மாமிச வெறியர்களாய் மாறிப்போய் - இன்று
மாக்களாய்ப் போயினரே
ஒருவனுக்கு ஒருத்தியென்று ஓர் உயிராய்
வாழ்ந்தவர்கள் ஒற்றுமைக்கருத்தின்றி
வேற்றுமைக் கருத்தூன்றி
விவாகரத்துப் பெற்றுக்கொண்டு
அக்கிரகாரத்துத் துறவிகளாய்
அங்குமிங்கும் அலைகின்றாரே
தங்கிவாழத் துணையின்றி
தனிமரமாய்.

அப்பப்பா என்ன இது
பட்டமரம் பாறியது போல்
பாரம்பரியம் சாகிறதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்ச்சூழலுக்குப் பின்னர் இந்துசமய வாழ்வியலில் ஏற்பட்ட மாற்றங்கள்

திரு.கு.கோபிராஜ் M.A
அபிவிருத்தி உத்தியோகத்தர்
கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம்,ஊர்காவற்றுறை

பண்பாடு என்பது பண் என்ற சொல் அடியில் இருந்து தோற்றம் பெற்றது. பண்படுத்தல் உள்ளம் பண்படுத்தப்பட்ட நிலை என்பது பொருளாகும். இதை வள்ளுவர்

*" வெள்ளத்தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்*
*உள்ளத் தனையது உயர்வு"* என்றார்.

ஆலயங்களைப் பரிபாலிப்பதிலும் நித்திய, நைமித்திய கிரியைகளைச் செய்வதிலும் இன்று பல சவால்கள் ஏற்பட்டு உள்ளன. நாட்டின் யுத்தம் மக்கள் வாழ்வியலிலும் ஆலய பரிபாலனம் போன்ற விடயங்களிலும் மாற்றங்களையும் விளைவுகளையும் ஏற்படுத்தி உள்ளன.

## மதம் சார் பண்பாடு

யாழ்ப்பாணப் பண்பாட்டு வரலாற்றில் இந்துமதம் முதன்மையானது. வரலாற்றுக் காலம் தொடக்கம் இன்றுவரை மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுக் காணப்படுகிறது. அந்நியர் ஆட்சி யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட காலத்தில் இந்து மதத்திற்குப் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட போதும் அவற்றைத் தாண்டி வளர்ச்சி பெற்று வந்தது. எனினும் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட அந்நியர் ஆட்சியில் சமூகத்தில் கீழ் மட்டத்தில் இருந்தவர்கள் கிறிஸ்தவ மதத்தினைத் தழுவினார்கள். இதனால் இந்து, கிறிஸ்தவ மதங்கள் செல்வாக்கு பெற்றன. A9 பாதை திறக்கப்பட்டதும் பௌத்த மத செல்வாக்கு மேல் ஓங்கி இருந்ததை அவதானிக்க முடிகிறது. யாழ்ப்பாணத்திற்கு அதிகரித்து வரும் தென்பகுதி மக்கள் வருகை மற்றும் பௌத்த துறவிகள், பௌத்த அரசியல் தலைவர்கள் வருகை என்பன பௌத்த செல்வாக்கு அதிகரிக்க செய்துள்ளது. பௌத்த பண்பாட்டு தலங்கள் தோற்றம் பெற்றமையும் வழிபடப்பட்டமையையும் அவதானிக்கலாம். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இஸ்லாமிய தலங்கள் புனரமைக்கப்பட்டு வருவதனையும் அவதானிக்கலாம்.

## கலைகளில் ஏற்படும் மாற்றங்கள்

யாழ்ப்பாணப் பண்பாட்டு அம்சங்களில் ஒன்றான கலைகளில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் குறிப்பிடத்தக்கன. யாழ்ப்பாணத்தில் இடம்பெற்று வந்த உள்நாட்டு போரானது பாரம்பரியக் கலைசார் அம்சங்கள் மறைந்து போகக் காரணமாகின்றது. ஆனால் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு A9 பாதை மீளத் திறக்கப்பட்டமை கலைசார் அம்சங்களில் மீண்டும் ஓர் எழுச்சியை ஏற்படுத்தியிருந்தது. மறைந்து போன இசை நடன நிகழ்வுகள், மேடை நாடகங்கள், தெருக்கூத்துக்கள் மற்றும் விளையாட்டு நிகழ்வுகள் போன்றன மீண்டும் திருவிழாக்களில் நடத்தப்பட்டு வருவதுடன் இசை நிகழ்வுகளில் வெளிநாட்டு, இந்தியக் கலைஞர்களின் இசை நிகழ்வுகளும் இடம்பெற்று வருவதனை அவதானிக்கலாம். சான்றாக யாழ்ப்பாணக் கலைஞர்களின் கலை இடமான கலைத்தூது கலையகத்தில் பிரபல்ய பிரித்தானிய இசைக் கலைஞர்களின் பாடல்களோடு கூடிய இசை நிகழ்ச்சி இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேபோல தெருநாடகங்களும் மீளெழுச்சி பெற்றுவருவதனைக் காணலாம். இன்றைய சூழலில் அதிகரித்துவரும் நோய்த்தாக்கங்களைக் கட்டுப்படுத்திச் சமூகத்தில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்த மீண்டும் தெரு நாடகங்கள் உருவாக்கப் பட்டுள்ளன.

## ஆடை அலங்காரத்தில் ஏற்பட்டு வரும் பண்பாட்டு மாற்றம்

யாழ்ப்பாணத் தமிழ்ப் பெண்ணின் சிறந்த ஆடை சேலை ஆகும். இளம் பெண்கள் தாவணியும் முழுப் பாவாடையும் அணிவர். ஆண்கள் வேட்டி அணிவர். யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் தென் பகுதி மக்கள், வெளிநாட்டவர் அணியும் சுடிதார், ஜூன்ஸ், குட்டைப் பாவாடை போன்ற கவர்ச்சி ஆடை பெண்களும், ஆண்களும் அணிகின்றமையை அவதா னிக்கலாம். இதைவிடப் பெண்கள் தம்மை அலங்கரிக்கக் கூந்தலைப் பின்னிக் கட்டிய நிலையில் ஆலயங்களுக்குச் செல்வர். யுத்தத்தின் பின்னர் சில பெண்கள் தம்மை அலங்கரிக்க தலைமுடியை பின்னாது விடுவதனை விரும்புவதுடன் அதை நாகரிக மாக கருகின்றனர். பெண்கள் கூந்தலைப் பேணிப் பாதுகாக்கச் செம்பருத்திப்பூ சீயாக் காய் தலையில் தேய்த்து குளித்தனர். ஆண்கள் குறிப்பிட்ட இளந்தலை முறையி னர் தலை முடியை வளர்ப்பதுடன் அதில் சாயங்களைப் பூசுகின்றனர். பெண்களிடம் மஞ்சள் மா பூசும் பழக்கம் அன்று இருந்தது. இன்று கிறீம் பூசும் வழக்கம் உண்டாகியுள்ளது.

## இந்து சமய சடங்குகளில் ஏற்பட்ட மாற்றம்

பண்பாட்டில் உணவு, உடை, சமய, கலாசார, பண்பாட்டு முறைகள் அனைத் துமே அறவழிப்பட்டதாக மகிழ்ச்சி பொதிந் ததாக அமைந்து இருந்தது. இனங்களி டையே இனத்தொடர்புகளால் தமிழர் தம் பண்பாட்டைக் கடன் கொடுத்த எம் இனம் இன்றோ வேறு இனங்களிடம் பண்பாடு களை வலிந்து வாங்கி நிலைகுலைந்து நிற்கிறது. தமிழர் பண்பாட்டில் புழக்கத்தில் இருந்த சத்துணவுகளான ஒடியல்பிட்டு குரக்கன் பிட்டு, வரகரிசிக் கஞ்சி, குத்தரிசிச் சோறு, பழஞ்சோறு, பனக்காய் கழி, நல்லெண்ணெய்ப்பிட்டு, பாற்பிட்டு, உழுத்தங்கழி, எள்ளுப்பாகு, பயத்தம் துவையல் போன்ற பாரம்பரிய உணவுகள் உடலிற்கு உறுதி கொடுத்தன. நோய்களில் இருந்து பாதுகாத்து நீண்ட ஆயுளை வழங்கின எனக் குறிப்பிடலாம். இன்று அவற்றின் சுவைகள் மட்டுமல்ல, பெயர்கள் கூட இளம் சந்ததியினர்களுக்குத் தெரியாத வகையில் வழக்கொழிந்து போய்க் கொண்டிருக்கின்றன. கோதுமை மா இவற்றின் இடத்தை ஆக்கிரமிப்புச் செய்து விட்டது. கோதுமை ரொட்டி, பிட்டு, இடியப்பம், கொத்துரொட்டி, பீசா, நூடில்ஸ், கேக், சான்விச், பேஸ்ரி போன்றன அறிமுக மாகியுள்ளன. இதில் பல இரசாயனப் பதார்த்தங்கள் சுவைக்காகப் பயன்படுத்தப் படுகிறன. இதனை அன்றாட வாழ்வில் பழக்கப்படுத்திக் கொண்டதன் விளைவால் உடற் பருமன் கூடி நீரிழிவு, இரத்த அழுத்தம் போன்ற தொற்றா நோய்கள் பல ஏற்பட்டதுடன் மருத்துவ மனைகளில் நேரத்தைச் செலவழிக்க வேண்டியுள்ளது. யுத்தத்தின் பின்னர் புலம் பெயர்ந்து சென்றவர்களினால் புதிய நவீன உணவு வகைகள் பண்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டதுடன் கிராமங்களில் பெரும் முதலீடுகளில் தொற்றா நோய் கிளினிக் மருத்துவமனைகளும் தனியார் மருத்துவ மனைகளும் யுத்தத்தின் பின்னர் அதிகளவு உருவாகியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து சமயப் பண்பாட்டில் உடை அணிதல் உயர்ந்த நிலையில் இருந்து வந்தது. இது எமது பண்பாட்டை, அடையா ளத்தைத் தெளிவாகப் புலப்படுத்தியது. சடங்குகளில் மட்டுமே பாரம்பரிய உடையைக் காணமுடிகிறது. அன்றைய எம் பாரம் பரிய உடை, உடலை மறைக்கும் வகையிலும் சீதோஷ்ண நிலைகளைச் சீராக்கும் வகையிலும் உற்பத்தி செய்யப்பட்டு அணியப்பட்டு வந்தன. இன்று அந்நிலை மாறி வெளிநாட்டவர் தம் நாட்டுக் கால நிலைக்கும் கடற்கரைக் குளியலுக்கும் பயன்படுத்தும் ஆடை வகைகளை நாகரிகம் எனும் போர்வையில் எம்மவர் ஆடைகளாக அணிந்து பண்பாட்டைச் சீரழிக்கின்றனர்.

தமிழர் பண்பாட்டில் சடங்குகளும் சம்பிரதாயங்களும் மேன்மைமிக்கனவாக விளங்கி வந்ததுடன், அறிவியல் சார்ந்து இருந்தமையைக் காணலாம். குடும்ப, சமூக, பொது. நிகழ்வுகளில் எல்லாவற்றிலும் தமிழர் சமுதாயத்தில் மூத்தோருக்கும், பெரியோருக்கும் உயர்ந்த மரியாதையும் பயபக்தியும் வழங்கப்பட்டன. நிகழ்வுகளில் பெரியோர் கருத்துக்கள் பேணப்பட்டன. எந்த நிகழ்வினையும் தீர்மானிக்கும் உரிமையும் சக்தியும் அவர்களுக்கு உரியதாகும். சடங்கு சம்பிரதாயங்களை பெரியோர் முன்னின்று நிகழ்த்தி வைத்தனர். திருமண விழா, பூப்புனித நீராட்டு விழா, புதுமனைப்புகு விழா, பிள்ளைப்பேறு, அபரகிரியைகள் இவ் வழக்கம் அன்று அதிகம் காணப்பட்டதைக் குறிப்பிடலாம். இன்று இவற்றைப் பண் பாட்டுக்கு ஒவ்வாத நிலையில் வீடியோ, புகைப்படக் கலைஞர்களும் மண்டப முதலாளிகளும் முன்னின்று நடத்தும் புதிய மரபு உருவாகி வருகின்றது.

தமிழர் பண்பாட்டு மரபில் விருந் தோம்பல் பண்பாடு முதன்மை பெற்றது. வீட்டார் விருந்தினரைத் தாமே அழைத்து வந்து உட்காரவைத்து வாழை இலையில் விருந்து படைத்து மகிழ்ச்சிப்படுத்துதல் கட்டாயமாக வழக்கத்தில் இருந்ததுடன் செம்பும் தண்ணீரும் வழங்கி விருந்துக்கு அழைக்கும் மரபும் இருந்தது. இன்று "போலே" செற்களில் உணவுகள் வைக்கப் பட்டு சில்வர் தட்டுடனோ, பிளாஸ்ரிக் தட்டுடனோ "லஞ்ச்சீற்" மீது இட்டு அவரவர்களே தம் வயிறுகளை நிறைத்துக் கொள்ளலாம். நிகழ்வுக்கு அழைத்தவர்க்கு விருந்தோம்ப நேரமில்லாது போய்விடுகின்றனர். இன்று விருந்துண்ண அழைப்பார் இல்லாத விருந்தாக மாறி வருகிறது. சடங்கு சம்பிரதாயம் எல்லாம் நாளும், கோளும் கணித்து அமாவாசை, அட்டமி, நவமி, பார்த்து, அவை விலக்கி சுபநேரம் குறித்து உறவுகள் அந்நாளில் ஒன்றாகக் கூடி மகிழ்ந்ததைக் காணலாம். இன்று இந் நிலை அருகி அனைவருக்கும் ஏற்ற லீவு நாள் பார்த்தும், நிகழ்வு மண்டப கிடைப் பனவு நாளுமே சுபநேரமாகக் கொண்டு நிகழ்வுகளைச் செய்வதும் உறவினர் நேரடியாக அறுகரிசி போட்டு வாழ்த்துதல் வெறும் தொலைபேசி வாழ்த்துதலுடன் முடிவதை அவதானிக்கலாம். மூத்தோரைக் கனம் பண்ணுவதும் அவர்கள் கருத்துக்களுக்குச் செவி சாய்ப்பதும் அதன்படி நடப்பதும் அன்றைய பண்பாடு. யுத்தத்தின் பின்னர் தாய், தந்தையரை மதியாத தன்மையும், முதியோர் இல்லங்களின் அதிகரிப்பும் வலுவடைந்து வருகின்றது.

**1. யுத்தத்தினால் அந்தணர் தொகை குறைவடைந்தமை**

யுத்தத்தின் பின்னர் அந்தணர் பல காரணங்களால் பூசை, கிரியைகள் ஆற்றும் தொழிலில் ஈடுபடாமல் வெளிநாடுகளுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குச் சென்றனர். ஏனைய தொழிலை நாடிச் சென்றமை. இதனால் தரமான குருக்கள்மார் இல்லை. வேறுதுறைக்குப் போக முடியாத வர்கள் சில இடங்களில் வேண்டா வெறுப் பாக அந்தணத் தொழிலை மேற்கொள் கின்ற நிலை காணப்படுகிறது.

**2. ஆடம்பரம் அதிகரித்தமை**

யுத்தத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து அதிகளவானோர் வெளிநாடு சென்று உள்ளனர். தாய் நாட்டுக் கோயில்களுக்கும் சமயச் செயற்பாடுகளுக்கும் பொருளாதா ரத்தை வாரி வழங்குகின்றனர். யுத்தத்தின் பின் கும்பாபிசேகம் பெரும்பாலான ஆலயங்களில் நடைபெற்றன. ஆனால் உள்ளார்ந்த செயற்பாடு குறைவாகவே உள்ளது.

**3.யுத்தத்தின் பின்னர் பாரியஆலயங்கள் உருவாக்கப்பட்டன**

யுத்தத்தினால் புலம்பெயர்ந்து சென்றோர் பொருளாதாரத்தை அதிகரித்து ஏனைய நாடுகளைப் பார்த்து அதன்படி யாழ்ப்பாணத்திலும் ஆலயம் அமைக்க விரும்பினர். இந்தியாவில் ஆலயம் உருவாக்கி அந்தணர் இந்திய சிவாச்சாரி யார்களினால் பயிற்சி வழங்கப் பட்டு பூசை கிரியைகள் நடைபெறுகின்றன. இணுவில் மேற்கு நாராயண கோயில், சரஸ்வதி அம்பாள் ஆலயம், மருதனார்மடம் ஆஞ்சநேயர் ஆலயம்.

**4. மனப்பான்மை மாற்றம்**

வெளிநாட்டு மனப்பான்மை அந்தணர் வீடு உட்பட அனைத்து இடங்களிலும் அதிகரித்துள்ளது. கும்பாபிஷேகம் ஒரு மண்டலம் சுருங்கி அரை மண்டலம், கால் மண்டலமாகச் சுருங்கி விட்டது.

**5. நேரம் குறைவாக இருத்தல்**

ஒரு ஆலயத்தில் யுத்த காலத்தில் பதற்றம், ஊரடங்குச் சட்டம் போன்ற வற்றினால் கிரியைகள் ஆகம முறைப்படி நடைபெற்றாலும் உத்தமம், மத்திமம், அதமம் எனக் கிரியைகள் சுருங்கி ஆலயத்தில் அர்ச்சகர், நிர்வாகி, பக்தன் மூவரும் திருவிழா, பூசை என்ன நேரம் நடைபெறும் என்பதைத் திட்டமிடுகி றார்கள்.

**6. யுத்தத்தின் பின்னர் முன்னர் முதன்மை பெற்ற தெய்வங்கள்**

சிவன், பிள்ளையார், முருகன், வைரவர், அம்மன் போன்றன காணப்பட்டன. யுத்தத்தின் பின்னர் ஆஞ்சநேய, ஐயப்ப, பிரத்தியங்கராதேவி, சீரடிபாபா போன்ற தெய்வங்கள் முன்னுரிமைப்படுத்தி மூல மூர்த்தியாகி ஆலயங்கள் கட்டப்படல். சிவன் சில இடங்களில் பரிவாரத் தெய்வ மாக மாற்றமடைந்து உள்ளார்.

**7. யுத்தத்தின் முன்னர் ஆலயம் கிழக்கு நோக்கி அமைக்கப்பட்டது**

தற்போது வசதிக்கேற்ப எத்திசையிலும் அமைக்கப்படுகிறது. புலம்பெயர் நாடுக ளுக்குச் சென்ற தமிழர்கள் அந் நாட்டில் நிலவசதி, அரசின் கொள்கைப்படி ஆலயம் அமைத்தது மட்டுமன்றி, ஈழத்தில் எப்படி யும் அமைக்கலாம் என்ற மனநிலையில் ஆலயங்களைஅமைக்கின்றனர்.

**8. ஆலயங்களில் தொண்டர்கள் பற்றாக்குறை**

ஆலயங்களில் யுத்தத்திற்கு முன்னர் ஊர் மக்கள் திரண்டு வடம் பிடிப்பதற்கும் சுவாமி காவுவதற்கும் முண்டியடிப்பதைக் காணலாம். இன்று வெளிநாடுகளுக்கு மக்கள் இடம்பெயர்ந்து சென்றதால் ஆலய வாகனங்கள் சிறியவையாகவும், சகடை மூலம் தள்ளிச் செல்ல ஏற்றதாகவும் அமைக்கப்படுவதுடன் பாரிய ரதங்கள், சில்லுகள் மரத்திற்கு பதிலாக ரயர்கள் பயன்படுத்தப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**9. கிராமிய தெய்வ வழிபாடுகள் அருகி விட்டன**

யுத்தத்தின் பின்னர் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட பகுதியில் பாதிக்கப்பட்ட ஆலயங்கள் யாவும் கும்பாபிசேகம் செய்து ஆகம வசதிக்குள் உள்வாங்கப்பட்டு விட்டன. பெயர்களும் மாற்றப்பட்டு விட்டன. கண்ணகி ஆலயம் - இராஜராஜேஸ்வரி ஆலயம் என மாற்றப்பட்டுவிட்டது.

**10. விரதங்களில் ஏற்பட்ட மாற்றம்**

யாழ்ப்பாண மாவட்டத்தில் யுத்தத்திற்கு முன்னர் கந்தசஷ்டி விரதம் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்று இருந்துள்ளது. தற்போது வரலட்சுமி விரதம், கேதார கௌரி விரதம், ஐயப்பன் விரதம் போன்றன செல்வாக்குப் பெற்று உள்ளன.

**உசாத்துணை**


பணுவில்- 2018 இதழ் - 4
உதயன் பத்திரிகை -17-02-2010
நேர்முகம் - "கோப்பாய் சிவம்" - இணுவில்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் உரிமை சமவாயம்

திரு. சி. யுகராஜா
பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை
பிரதேச செயலகம் ஊர்காவற்றுறை

"பிள்ளைகளினதும் இளம் ஆட்களினதும் உடல், உள, ஒழுக்க, சமூக, மத வளர்ச்சியை முழுமையாக விருத்தி செய்வதனை உறுதிப்படுத்துவதற்கும், சுரண்டல் மற்றும் ஓரங்கட்டப்படுதல் என்பவற்றிலிருந்தும் அவர்களைப் பாதுகாப்பதற்கும் என, அரசானது அவர்களின் நலன்களை விசேட கவனத்தோடு மேம்படுத்தல் வேண்டும்" என்பதாக இலங்கையின் அரசியலமைப்பிலுள்ள அரசகொள்கை வழிகாட்டி கோட்பாடுகள் ஏற்பாடு செய்கின்றது. உறுப்புரை 27(13), என்ற அரச கொள்கை வழிகாட்டிக் கோட்பாட்டினை பின்பற்றுவதன் மூலம் ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் தொடர்பான சமவாயத்துடன் (CRC) தொடர்புடைய விதிகளின் கீழ் அரசின் கடமைகள் அமைகின்றன".

ஐக்கிய நாடுகள் அமைப்பின் சிறுவர்கள் பற்றிய சமவாயம் 1989 இல் தமது உறுப்பு நாடுகளிடம் சமர்ப்பிக்கப்பட்டது. இது உலகம் முழுவதிலும் பரந்து வாழும் சகல சிறுவர்களையும் உரிமைகளைக் கொண்டுள்ளவர்களாக அறிமுகம் செய்வதற்கு முன் வைத்ததொரு காலடியாகும். சிறுவர்களுக்கு உரிமைகளை உரித்தாக்கிக் கொடுப்பதற்காக தமது அர்ப்பணிப்பை வெளிப்படுத்திய உலக சமுதாயத்தினருடன் இலங்கை 1991 இல் இணைந்து கொண்டது. இலங்கை இரட்டை முறையியலைப் பின்பற்றுகின்ற ஒரு நாடாக இருப்பதனால் இவ்வாறு இணங்கிக் கைச்சாத்திட்டு உறுதி செய்கின்ற சர்வதேச கடப்பாடுகள் அவ்வாறே இலங்கையில் தத்துவமுள்ளதாக்கப்படுவதில்லை.இலங்கையின் சட்ட வாக்கமான பாராளுமன்றத்தினால் யாப்புக்களை நிறைவேற்றிக்கொள்வதன் மூலம் மாத்திரம் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகளை நாட்டினுள் தத்துவமாக்குவதற்கும், இலங்கையில் சிறுவர்களுக்கு மேற்படி உரிமைகளை உரித்தாக்கிக் கொடுப்பதும் இடம்பெறுகின்றது. மேலும் உயர்நீதிமன்ற வழக்குத் தீர்ப்புக்களின் மூலமும் சிறுவர் உரிமைகள் பற்றிய சட்டங்கள் நாட்டினுள் தத்துவம் உள்ளதாக்கப்படுகின்றன.

சமவாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 54 உறுப்புரைகளில் முதல் 42 உறுப்புரைகள் முழுவதும் சிறுவர்களுக்கு அதன் மூலம் உரித்தாக்கிக் கொடுக்கப்படுகின்ற உரிமைகள் பற்றி விபரிக்கப்படுவதுடன்,ஏனைய 12 உறுப்புரைகளின் மூலம் அரச தரப்பினருக்கு பொறுப்பளிக்கப்படுகின்ற பொறுப்புக்களை நிறைவேற்றுகின்ற முறை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.சிறுவர்களுக்கு உரித்தாக்கிக் கொடுக்கப்படுகின்ற இந்த உரிமைகளை (1) வாழ்வதற்கு (2) வளர்வதற்கு (3) பங்கேற்பதற்கு மற்றும் (4) சகல வகையிலுமான துஸ்பிரயோகங்களிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு என்ற வகையில் 4 வகைகளாக வகைப்படுத்த முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமவாயத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ள சிறுவர் உரிமைகளை உரித்தாக்கிக் கொடுப்பதற்காக முறையான புதிய முறையியல்களை அறிமுகம் செய்வதற்கும் காணப்படுகின்ற முறையியல்களை இற்றைப் படுத்துவதற்கும் அரசாங்கங்கள் அடிக்கடி நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளன. 1995ஆம் ஆண்டின் அப்போதைய சனாதிபதியின் துறைசார் நிபுணர்களின் பங்களிப்புடன் தாபிக்கப்பட்ட சிறுவர் துஸ்பிரயோகங்களைத் தடுப்பதற்கான சனாதிபதி செயலணியின் சிபார்சு ஒன்றாக வரைவு செய்யப்பட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டம் 1998இல் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டது.

**சிறுவர்கள் எனப்படுவோர் (உறுப்புரை 1)**

பதினெட்டு வயதிற்குக் குறைந்த மனிதப்பிறவிகள் பிள்ளைகள் அல்லது சிறுவர்கள் ஆவர். ஆனால் இலங்கையைப் பொறுத்தவரையில் பல்வேறு சட்டங்களிலும் வேறுபட்ட வயதெல்லை சிறுவர் என்ற சொற்பிரயோகத்தைப் பிரதிபலிக்கின்றன. உதாரணமாக,

**a. 18 வயதிற்குட்பட்டவர்கள் சிறுவர்கள்**

* தண்டனைச் சட்டக்கோவை (1998/29 சட்டத்தால் திருத்தப்பட்ட 1883/2ம் இல த.ச.கோ)
* தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டம் (1998/50ம் இலக்க சட்டம்)
* பராமரிப்புச் சட்டம் (1999/37 ஆம் இலக்க சட்டம்)
* விபச்சாரத்திற்காகப் பெண்களையும் சிறுவர்களையும் விலைப்படுத்தலைத் தடுத்தலும் எதிர்த்தலும் மீதான சமவாயச் சட்டம் (2005/30 ம் இலக்கச்சட்டம்)
* குடும்ப வன்முறைச்சட்டம் (2005/34 ஆம் இலக்க சட்டம்)

**b. 14 வயதிற்குட்பட்டவர்கள் சிறுவர்கள்**

* பெண்களையும் இளம் ஆட்களையும் சிறுவர்களையும் தொழிலுக்கமர்த்தல் சட்டம் (2003/8 சட்டத்தால் திருத்தப்பட்ட 1956/47 ஆம் இல சட்டம்)
* தொழிற்சாலைக் கட்டளைச்சட்டம் (1946/22 சட்டத்தால் திருத்தப்பட்ட 1942/45 ஆம் இல சட்டம்)
* சிறுவர் இளம் ஆட்கள் கட்டளைச்சட்டம் (1939/48 ஆம் இலக்க கட்டளைச்சட்டம்)
* சிறுவர் இளம் ஆட்கள் (தீங்குமிக்க வெளியீடுகள்) சட்டம் (1956/48 ஆம் இலக்கச் சட்டம்)

**c. இளம் ஆட்கள்**

வேலையாட்கள் விசேட படிகள் சட்டத்தில் 16 வயதிற்குட்பட்ட ஆண்களையும் 15 வயதிற்குட்பட்ட பெண்களையும் சிறுவர்களெனக் கருதுகின்றது. இவையனைத்தையும் சட்டத்தின் நோக்கங்களின் அடிப்படையில் சிறுவர்களை வரையறை செய்கின்றன. இதைவிட இளம் ஆட்கள் என்ற வகுதியினரும் காணப்படுகின்றனர். அவர்கள்:

* சிறுவர் இளம் ஆட்கள் பெண்கள் தொழிற்சட்டம்
* தொழிற்சாலைக் கட்டளைச் சட்டம் என்பவற்றில் 14 வயதிற்கும் 18 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் இளம் ஆட்கள் என்றும்,
* சிறுவர் இளம் ஆட்கள் கட்டளைச்சட்டம்
* சிறுவர் இளம் ஆட்கள் (தீங்குமிக்க வெளியீடுகள்) சட்டம் என்பவற்றில் 14 வயதிற்கும் 16 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் இளம் ஆட்கள் என்றும் வகுக்கப்படுகின்றனர்.

**பாரபட்சம் காட்டப்படாமை (உறுப்புரை 2)**

எந்த வகையான பாகுபாடுமின்றி அனைத்துச் சிறுவர்களும் ஒரேவிதமான உரிமைகளுக்கு உரித்துடையவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதனை இவ்வுறுப்புரை உத்தரவாதப் படுத்துகிறது. இருப்பினும்,விசேட கவனிப்பு மற்றும் பாதுகாப்பு என்பன தேவைப்படு கின்றவர்களான மாற்றுத்திறனாளி பிள்ளை கள் போன்றவர்களுக்கு விசேட வசதிகள் வழங்குதல் போன்ற செயற்பாடுகள் பார பட்சமான நடாத்துகையாக கருதப்படுவ தில்லை. மேலும் வறிய பிள்ளைக்கு நிதி உதவி அல்லது புலமைப் பரிசில் வழங்குத லென்பதும் பாரபட்சம் எனக் கருதப்படு வதில்லை.

**பிள்ளையின் அதியுயர் நலன்** (உறுப்புரை 3)

சிறுவர்களுடன் தொடர்புபடுகின்ற அனைத்து செயல்களிலும் தனிப்பட்ட பிள்ளையின் அல்லது சிறுவர் குழுவின் அதியுயர் நலனானது முதன்மை நோக்க மாகக் கவனத்திலெடுக்கப்பட வேண்டும். உதாரணமாக கட்டுக்காவல் வழக்குகளி னைத் தீர்மானிக்கையில் நீதிமன்றமானது "பிள்ளையின் சிறந்த நலன்" தொடர்பான கோட்பாட்டினைப் பின்பற்றும். கட்டுக் காவலினை வழங்குகையில், பிள்ளையின் உடல் மற்றும் உள ஆரோக்கியம் மற்றும் மகிழ்ச்சியினை உறுதிப்படுத்தக்கூடிய பெற்றோரிடமே நீதிமன்றினால் தீர்மானிக் கப்பட்டு கட்டுக்காவல் வழங்கப்படும். 2007/56 ஆம் இலக்க குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்பாட்டொழுங்குச் சட்டம் பிரிவு 5(2) இல் சிறுவர் தொடர்பான எல்லா விடயங்க ளிலும் சிறுவரின் அதிசிறந்த நலனே உயரிய முக்கியத்துவமாதல் வேண்டும் என ஏற்பாடு செய்கிறது.

**பெற்றோரிடமிருந்தான பிரிவு** (உறுப்புரை 9)

சிறுவர்களுடைய சிறந்த நலனுக்கு பாதகம் ஏற்படாத வரையில் சிறுவர்களுக்கு அவர்களுடைய பெற்றோர்களுடன் வாழ் வதற்கான உரிமையுண்டு. இலங்கையில் இதன் சட்ட ஏற்பாடாக 1883/2ஆம் இலக்க தண்டனைச் சட்டக்கோவை பிரிவு 308 (பெற்றோர் 12 வயதிற்குட்பட்ட சிறுவரை காப்பளியாது விடுதல் அல்லது கைவிடுதல்) குறிப்பிடத்தக்கது.

**சிறுவர்களைக் கடத்திச்செல்லுதல்** (உறுப்புரை 11)

சிறுவர்கள் அவர்களின் சொந்த நாட்டிலிருந்து சட்ட விரோதமான முறையில் வெளியில் எடுத்துச் செல்லப்படு வதனைத் தடுப்பதற்கு அரசுகள் அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். இவ்வுறுப்புரையானது விசேடமான பெற்றோரினால் செய்யப்படும் ஆட்கடத் தல்கள் தொடர்பில் கவனஞ் செலுத்து கின்றது. இலங்கையில் இதன் சட்ட ஏற்பாடாக குற்றவியற்கோவை பிரிவு 367 குறிப்பிடத்தக்கது.

**அனைத்து வகையான வன்முறைகளில் இருந்தும் பாதுகாப்பினை பெறுவதற் கான உரிமை** (உறுப்புரை 19)

சிறுவர்கள் ஊறுபடுத்தப்படுவதி லிருந்தும், உடலியல் பாதிக்கப்படுவதி லிருந்தும் அல்லது உளரீதியில் தவறாக நடாத்தப்படுவதிலிருந்தும் பாதுகாக்கப் படுவதற்கு உரிமை உடையவர்கள். இலங்கையில் இதன் சட்ட ஏற்பாடாக தண்டனைச் சட்டக்கோவை பிரிவு 308அ குறிப்பிடத்தக்கது.

**கல்வி கற்பதற்கான உரிமை** (உறுப்புரை 28) **மற்றும் கல்விக் குறிக்கோள்கள்** (உறுப்புரை 29)

அனைத்து சிறுவர்களுக்கும் ஆரம்பக் கல்வியினைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமையுண்டு. மேலும் சிறுவர்களின் கல்வியானது ஒவ்வொரு பிள்ளைகளினதும் ஆளுமை, திறன்கள் மற்றும் ஆற்றல்கள் என்பவற்றை முழுவதுமாக விருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் வகையில் அமைய வேண்டும். இலங்கையில் இதன் சட்ட ஏற்பாடாக 1939/31 ஆம் இலக்க கல்விக்கட்டளைச் சட்டத்தின் பிரிவு 47 மற்றும் 2015 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாடசாலைகளில் சிறுவர்களின் கட்டாய வருகை ஒழுங்கு விதிகள் (வர்த்தமானி 1963/30) ஆனது ஐந்து வயதிற்கு குறையாதவரும் பதினாறு வயதிற்கு மேற்படாதவருமான ஒரு பிள்ளையின் வயதெல்லை கட்டாயக் கல்வி வயது எனக்குறிப்பிடுகிறது.

**குடும்பம் இல்லாத சிறுவர்களுக்கு பாதுகாவல்** (உறுப்புரை 20) **மற்றும் நிறுவனத்திலுள்ள சிறுவர்கள் பற்றி கண்காணிப்பு** (உறுப்புரை 25)

சிறுவர்களுக்குப் பெற்றோர்கள் இல்லையெனில் அல்லது அவனுக்கு /அவளுக்கு தங்கள் பெற்றோர்களுடன் இருத்தல் பாதுகாப்பின்றி இருக்குமானால் அவனுக்கு/அவளுக்கு விசேட பாதுகாப்பும் உதவியும் பெற்றுக்கொள்வதற்கு உரிமையுண்டு. இலங்கையில் இதன் சட்ட ஏற்பாடாக 1939/48 ஆம் இலக்க சிறுவர் இளம் ஆட்கள் கட்டளைச்சட்டம் பிரிவு 37(2) மற்றும் பிரிவு 35 மற்றும் 1998/28 ஆம் இலக்க குற்றவியல் நடபடிக்கோவை பிரிவு 415அ, தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 288, 288அ, 288ஆ மற்றும் 1997/19 ஆம் இலக்க (திருத்தம்) குற்றவியல் நடவடிக்கோவையின் முதலாவது அட்டவணையின் படி குற்றஞ்சாட்டத்தக்க குற்றங்களின் உண்மைத்தன்மைகள் தொடர்பில் நீதிமன்றம் அவனுக்கு /அவளுக்கு பராமரிப்பு, பாதுகாப்பு தேவையாகிறது என்பதில் திருப்தியடைய வேண்டும்.

நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பில் 1941/22 ஆம் இலக்க அனாதை இல்லங்கள் கட்டளைச்சட்டத்தினால் திருத்தப்பட்ட ஒழுங்குமுறைகளின் படி அனாதை இல்லங்கள் மற்றும் சிறுவர் இல்லங்களை பதிவு செய்தல் மற்றும் கட்டுப்பாட்டிற்கான ஏற்பாடுகள் காணப்படுகின்றன.

**பெற்றோர் ஆதரிப்பு** (உறுப்புரை 5), **பெற்றோரின் கடப்பாடு** (உறுப்புரை 18)

2005/34 ஆம் இலக்க குடும்ப வன்முறை தடுப்புச்சட்டம் பிள்ளையின் உயரிய நலனுக்காக, குடும்பத்தில் பாதுகாப்பான மற்றும் சாதகமான சூழலை உருவாக்குவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.

2013 மற்றும் 2014 இல் அரசினால் மொழிபெயர்க்கப்பட்ட பாதுகாப்பு அளவீடுகள் தொடர்பான தேசிய கொள்கைக்கு பொருந்துவதான இரண்டு சுற்றறிக்கைகள் (சுற்றறிக்கை எண் 13/2013 மற்றும் சுற்றறிக்கை எண் 19/2013,12.2013 இன் MFE/RAD/1/3 சுற்றறிக்கை சனவரி 15.2014 இல் நடைமுறை) ஆனவை பணிப் பெண்களாக தொழில்வாய்ப்பிற்காக புலம்பெயர்ந்து செல்லுகின்ற பெண்களின் கட்டாய குடும்பப் பின்னணி அறிக்கையானது முதன்மையாகப் பெண் பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பை அடிப்படையாகக் கொண்டமைந்தது.

அரசியலமைப்பு ஏற்பாடுகள்,1999/37 ஆம் இலக்க பராமரிப்புச்சட்டமானது குடும்பங்கள் மற்றும் பெற்றோர் இருவரையும் உறுதிப்படுத்துவதற்கு சிறுவர் உரிமைகள் சமவாயத்தின் ஏற்பாடுகளுடன் பராமரிப்பு தொடர்பான சட்டமானது இணங்கிச் செல்கிறது.

அனைத்து சிறுவர்களுக்கும் கட்டாயக் கல்விக்கான குறைந்தபட்ச வயது 14 இல் இருந்து 16 ஆண்டுகளாக உயர்த்தப்பட்டுள்ளது. இயலாமை பிள்ளைகள் (2003) தொடர்பான தேசிய கொள்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயலாமையுடன் கூடிய பிள்ளைகள் தமது இயலாமைகளுடன் விருத்தியடைவதற்கு கல்வியில் தரத்தினைக் கட்டமைப்பதற்காக அவர்களுக்காக உட்படுத்தல் கல்வி செயற்படுத்தப்படுகிறது.

**தத்தெடுத்து பிள்ளைகளை வளர்த்தல்** (உறுப்புரை 21)

சிறுவன் ஒருவரைத் தத்தெடுத்து வளர்ப்பதாய் இருந்தால் அது சட்ட பூர்வமானதாகவும் சிறுவனின் ஆகக்கூடிய நன்மைக்குக் காரணமானதாக நடத்தப்பட வேண்டும். 1941/24ஆம் இலக்க மகவேற்புக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 61)

**வலது குறைந்த சிறுவர்கள்** (உறுப்புரை 23)

ஒரு பிள்ளை உடலியல் ரீதியாகவோ, உளவியல் ரீதியாகவோ வலது குறைந்த நிலையிலிருப்பினும் ஏனைய பிள்ளைகளுக்கு உரித்தான சகல சலுகைகளும் அந்தப்பிள்ளைகளுக்கும் உரித்தாகுதல் வேண்டும். 1996/28 ஆம் இலக்க மாற்றுத் திறனாளிகளின் உரிமைகளைப் பாதுகாத்தல் சட்டமானது மாற்றுத்திற னாளிகளின் பாதுகாப்பிற்கான ஏற்பாடுகளை வழங்கு கிறது.

**நீதிமன்ற நடவடிக்கைகள்** (உறுப்புரை 40)

குற்றவியற் சட்டத்தை மீறிய ஒரு பிள்ளைக்கு எதிராக நீதிமன்ற நடைமுறை பின்பற்றப்படுமிடத்து சகல தரப்பினரதும் முழுமையான ஆதரவைப் பிள்ளைக்கு கிட்டச்செய்தல் வேண்டும். 2007/56 அம் இலக்க குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்பாட் டொழுங்குச் சட்டம் பிரிவு 47.

1939/48 ஆம் இலக்க சிறுவர் இளம் ஆட்கள் கட்டளைச்சட்டம் பிரிவு 9(5), 10, 13, 14(1), குற்றவியல் நடபடிக்கோவை பிரிவு 306, தண்டனைச் சட்டக்கோவை பிரிவு 75,76 போன்ற ஏற்பாடுகள்.

**சமூக பாதுகாப்பு** (உறுப்புரை 26),
**வாழ்வதற்கான நிலைமை** (உறுப்புரை 27)

2002/24 ஆம் இலக்க நலன்புரி பலன்கள் சட்டம் கட்டண மற்றும் வெளிப்படையான தேர்வுச் செயல்முறைகள் மூலம் அனைத்து நலன்புரி நிவாரணம் வழங்கத்தேவையான சட்டக் கட்டமைப்பு நன்மைகளை வழங்கு கிறது.

இலங்கை சமுர்த்தி அதிகாரசபை சட்டம் (30/1995) சமூக மற்றும் பொருளாதார ரீதியாக நலிவடைந்த குடும்பங்கள், இயலாத பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்களுக்கு முன்னுரிமை அளிக்கப் பட்டு, அவர்களின் அடிப்படைத் தேவை களைப் பூர்த்தி செய்ய மற்றும் சமூக அணித்திரட்டலில் விலக்கப்பட்டுள்ள வர்கள் தொடர்பில் தலையீடு செய்கிறது.

**துன்புறுத்தல்களும் சுதந்திரத்தைப் பறித்தலும்** (உறுப்புரை 37)

அரசியலமைப்பின் 11 வது பிரிவு, 1994/22 ஆம் இலக்க சித்திரவதை மற்றும் கொடூரமான மனிதாபிமானமற்ற, இழி வான நடாத்துகைக்கு எதிரான சமவாயச் சட்டத்தினால் உத்தரவாதமளிக்கப்பட் டுள்ள ஏற்பாடுகள். தண்டனைச் சட்டக் கோவையில் உள்ள ஏற்பாடுகள்.

சிறுவர்களின் உழைப்பு (உறுப்புரை 32), போதைவஸ்து தொல்லைகள் (உறுப்புரை 33), பாலியல் துஸ்பிரயோகம் (உறுப்புரை 34), விற்பனை செய்தல் மற்றும் கடத்திச் செல்லுதல் (உறுப்புரை 35) 2021/2 ஆம் இலக்க, பெண்களையும் இளம் ஆட்களை யும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கு அமர்த்துதல் (திருத்தச்) சட்டம், 2021/4 ஆம் இலக்க, தொழிற்சாலைகள் (திருத்தச்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டம், 2021/3 ஆம் இலக்க, குறைந்தபட்ச வேதனங்கள் (இந்தியத் தொழிலாளர்கள்) (திருத்தச்) சட்டம், 2021/1 ஆம் இலக்க, கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்துதல்) (திருத்தச்) சட்டம் என்பவற்றில் 16 வயதிற்கு கீழ் உள்ள ஆள் எவரையேனும் தொழிலில் ஈடுபடுத்த முடியாது என்பதான ஏற்பாடுகள் மற்றும் 2006/16 இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1883/2 ஆம் இல தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவுகள் 358அ, 360, 360அ(2) மற்றும் 360அ(4) போன்ற ஏற்பாடுகள் கடுமையான தண்டனையைத் தடைசெய்து செயல்படுத்துகிறது.

2006/27 ஆம் இல புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபைச் சட்டம் பிரிவு 31, 1979/41 இல மது போதையில் புரியப்படும் தவறுகள் (விசேட எற்பாடுகள்) சட்டம் பிரிவு 4 போன்றவற்றின் ஏற்பாடுகள்.

1998/29 இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1883/2 ஆம் இல தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவுகள் 286அ, 360ஆ, 360அ(2) மற்றும் 360அ(4) போன்ற ஏற்பாடுகள் கடுமையான தண்டனையைத் தடைசெய்து செயல்படுத்துகிறது.

2001/10 ஆம் இல சர்வதேச சிறுவர் கடத்தல் சம்பந்தமான குடியியல் அம்சங்கள் சமவாயச்சட்டத்தின் ஏற்பாடுகள், 2006/16 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1883/2 ஆம் இல தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவுகள் 360இ, 360அ(2), 360அ(4) போன்ற ஏற்பாடுகள் கடுமையான தண்டனையைத் தடைசெய்து செயல்படுத்துகிறது. 1883/2 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவுகள் 360, 360அ(2), 360அ(4) போன்ற ஏற்பாடுகள் கடுமையான தண்டனையைத் தடைசெய்து செயல்படுத்துகிறது.

**எல்லா விதங்களிலுமான துஸ்பிரயோகங்கள்** (உறுப்புரை 36)

1998/29 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1883/2 ஆம் இல தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவுகள் 288, 288அ, 288ஆ, 360 போன்ற ஏற்பாடுகள் சட்ட விரோத நடவடிக்கைகளில் சிறுவர்களை பயன்படுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது.

**ஆயுதங்களைத் தாங்கிய தொல்லைகள்** (உறுப்புரை 38)

சிறுவர்களை யுத்தத் தொல்லைகளுக்கு தொடர்புபடுத்திக் கொள்வது பற்றிய மேலதீக உடன்பாடு (Optional Protocol) 2000 ஆம் ஆண்டின் மே மாதத்தில் அறிமுகம் செய்யப்பட்டது. அந்த உடன்பாட்டின் பிரகாரம் சிறுவர்களை யுத்தம் போன்ற தொல்லைகளுக்குக் கலந்து கொள்ள வைப்பது தடைசெய்யப்பட்டுள்ளது.

1998/50 ஆம் இல தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தில் "சிறுவர் துஸ்பிரயோகம்" என்ற சொற்பிரயோகம் ஆயுத முரண்பாடுகளில் ஈடுபடுவதையும் உள்ளடக்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

2006/16 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1883/2 ஆம் இல தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 358அ என்பதான ஏற்பாடு. மேலும் சிறுவர் உரிமைகள் கண்காணிக்கப்படுவதற்கு, கிராமிய மட்டத்தில் - கிராமிய மேம்பாட்டுக் குழு பிரதேச மட்டத்தில் - பிரதேச மட்ட சிறுவர் உரிமைகள் கண்காணிப்புக்குழு மாவட்ட மட்டத்தில் - மாவட்ட மட்ட சிறுவர் மேம்பாட்டுக்குழு மாகாணமட்டத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாண மட்ட சிறுவர் செயற்பாட்டுக்குழு தேசிய மட்டத்தில் - தேசிய மட்ட சிறுவர் உரிமைகள் கண்காணிப்புக்குழு என்பதாக இலங்கை முழுவதும் கண்காணிப்புக் குழுக்களும், பாதுகாப்புக்குழுக்களும் அமைக்கப்பட்டுச் செயற்பட்டு வருகின்றன. இதற்கான சுற்றறிக்கைகளும், வழிகாட்டிக் கோவைகளும் இலங்கை அரசாங்கத்தின் சிறுவர் மேம்பாடு சம்பந்தமான அமைச்சி னாலும், மாகாண மட்டத்தில் சிறுவர் நன்ன டத்தைத் திணைக்களத்தினாலும் வெளியிடப் பட்டுள்ளன. மேலும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் 2010 இலிருந்து நடைமுறையிலுள்ள 1929 சிறுவர் அழைபேசி ஊடான சேவையையும் ஒரு மைல்கல்லாக குறிப்பிட முடியும்.

எனவே மேற்குறிப்பிட்ட குடியியல், குற்றவியல் சட்டங்கள் ஊடாகவும் மற்றும் வர்த்தமானிகள், சுற்றறிக்கைகள் ஊடாகவும் "சிறுவர் உரிமைகள்" என்ற விடயத்தில் காலத்திற்குக்காலம் தமது சட்டவாக்கத் தினூடான கரிசனையைக் கொண்டிருப்ப துடன், அந்த சட்ட வாக்கத்தை அமுல்படுத்து கின்ற கடப்பாட்டினை அமைச்சுக்கள் (மத்தி, மாகாண), அதிகாரசபைகள், திணைக்க ளங்கள், செயலகங்கள் போன்றவற்றிற்கு பொறுப்புடைமையை ஏற்படுத்தி அவற்றிற் கிடையில் இணைப்பாக்கம் செய்து தனது கடமைகளைச் சிறுவர் உரிமைகள் தொடர் பான சமவாயத்துடன் (CRC) தொடர்புடைய விதிகளின் கீழ் செயற்படுத்தி வருகின்றது எனலாம்.

**உசாத்துணை நூல்கள்**

1. டாக்டர் பேரின்பநாதன்.ஆ. (2013) சிறுவர் துஸ்பிரயோகம். கரிகணன் பிறிண்டேர்ஸ், 681, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
2. வழக்கறிஞர் சாறுக்க சமரசேகர. (2008) சிறுவர் உரிமைகள் இலகுவான முறையில். நீதி நியாயத்தைச் சமமாக அணுகும் கருத்திட்டம், கொழும்பு,சரசவி பிரின்டஸ், கிரிபத்கொட.
3. செல்வகுணபாலன்.செ. (2018) சிறுவர் சட்டங்கள். குமரன் புத்தக இல்லம், கொழும்பு 06.
4. பேராசிரியர் முதித விதானபதிரன. சிறுவர் துஸ்பிரயோகம் தடுத்தல் மற்றும் முகாமை செய்தல். தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, தலவதுகொட.
5. பேராசிரியர் வசந்தா செனவிரத்ன, சுனேத்திரா பீ.ஏ, சட்டத்தரணி லேபா கேரத். (2020) சிறுவர் வியாபாரத்தினை இனங்காணுதல்,அறிக்கை செய்தல் மற்றும் விசாரணை செய்தல் தொடர்பான பயிற்சி விடய பாடத்திட்டம் கற்றல் செயன்முறை மற்றும் கருவிகள். தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, தலவதுகொட, Print Zone நிறுவனம்.
6. Thatparan,J.(2021) CRC Articles and its Interpretation in line with the Legal provision existing in Sri Lanka. URL:https:// www. academia.edu/82912652/ CRC_ Articles_ and_its_ Interpretation_ in_line_with_ the_Legal_ provision_ existing_in_Sri_Lanka (Date last accessed: 24th August, 2022)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டிளமைப் பருவத்தினரின் எழுச்சியும் அழுத்தமும்

**திருமதி அமிலேசியு சிந்துஜா**
**உளவளத்துணை உதவியாளர்**
**பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை.**

**மனிதன்** ஒரு உயிரி என்ற வகையில் பின்வரும் பல படிநிலைகளில் வளர்ச்சி அடைந்து செல்கின்றான்.

குழந்தைப்பருவம் → பிள்ளைப்பருவம் → குமரப்பருவம் → நடுத்தரப் பருவம் → முதிர்பருவம்

பிள்ளைப்பருவத்திற்கும் நடுத்தரப் பருவத்திற்கும் இடைப்பட்ட பருவமே கட்டிளமைப் பருவமாகும். 14 வயது தொடக்கம் 21 வயது வரையான காலப்பகுதியை உள்ளடக்கியது. இப்பருவத்தினரிடையே உடலியல் ரீதியான மாற்றங்கள், பாலியல் முதிர்ச்சி, மனவெழுச்சி மாற்றம், எதிர்பாலின உணர்வு, பொழுதுபோக்குகளும் கவர்ச்சிகளும் எனப் பல மாற்றங்கள் ஏற்படும் இதனால் தான் ஸ்ரான்லி ஹால் இப்பருவத்தை "சிக்கலான அமைதியற்ற பருவம்" எனக் குறிப்பிடுகின்றார். உடலியல் ரீதியான மாற்றங்களாக, ஆண்களிடம் - உடல் வளர்ச்சி பெற்று குரல் மாற்றமடையும், தசைநார்கள் பலமடையும், ஆணுறுப்பை சுற்றியும், கமக்கட்டு, முகம் மார்பு போன்ற பாகங்களில் ரோமம் வளரும், விந்து வெளியேறுதலும். பெண்களைப் பொறுத்தவரையில் மார்பகங்கள் வளர்ச்சியடைதல், இடுப்பு அகலமடைதல், பெண் உறுப்பைச் சுற்றியும் கமக்கட்டிலும் ரோமம் வளருதல் போன்ற மாற்றங்களும் ஏற்படும். இவ்வாறான நிலையில் புதிய உடல் மாற்றத்திற்கு ஏற்ப கட்டிளமைப்பருவத்தினர் தமது நடத்தையை உடனடியாக மாற்றமுடியாமல் இருப்பதனால் அது அவர்களது மனவெழுச்சியில் தாக்கத்தை ஏற்படுத்தும். குறிப்பாக பாலுறுப்புக்களின் விரைவான வளர்ச்சியினால் குழப்பநிலையும் பதகளிப்பும் சிலரிடம் உண்டாகும்.

இத்தகைய உடலியல் ரீதியான வளர்ச்சி ஆளுக்கு ஆள் வேறுபடும். இப்பருவத்தில் முந்தி அல்லது பிந்தி ஏற்படும் முதிர்ச்சியும் கட்டிளைஞர்களின் மனவெழுச்சி சமநிலையைக் குலைப்பதுண்டு. குறிப்பாகப் பாடசாலைகளில் பாலியல் முதிர்ச்சி அடைந்தவர்களையும் முதிர்ச்சி அடையாதவர்களையும் ஒன்றாக வைத்துக் கற்பிப்பது சற்று சிரமமானதே. மனிதனது எல்லாப்படிநிலைகளிலும் பிரச்சனைகள் ஏற்பட்டாலும் இப்பருவத்தில் ஏற்படும் பிரச்சனைகள் தனிப்பட்டவையாகும். ஏனெனில் உடல் மாற்றங்களும் அதைத்தொடரும் பாலியல் முதிர்ச்சிகளும் கட்டிளமைப்பருவத்தினர், தம்மை பற்றி கொள்ளும் கருத்தை மாற்றுவதன் விளைவாகத் தாம் முதிர்ச்சி அடைந்து விட்டதாகக் கற்பனை செய்து கொள்வார்கள்.

ஆண்பிள்ளைகளை பொறுத்த வரையில் மதுபாவித்தல், நண்பர்களை வீட்டிற்கு கூட்டிவருதல், இரவில் தாமதமாக வீட்டிற்கு வருதல், சமய நம்பிக்கைகள் குறைவடைதல், தங்களை Hero ஆக கற்பனை செய்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்வதால் பெற்றோர் கண்டிப்பார்கள். இதனால் குடும்பத்தில் முரண்பாடுகளும் வாக்கு வாதங்களும் ஏற்படும். அந்தவகையில் கட்டிளைஞர்களது பிரச்சனைகளை தனித்தனியே நோக்குவோம்.

a.Idenfify Crisis - தன்னைப்பற்றிய குழப்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் வயது வந்தவர் தனக்கெனத் தனித்துவம் உண்டு என்பதனை நிலை நிறுத்த முயற்சித்தல்.

b.Generation Gap -தலைமுறை இடைவெளி

நவீன தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக இளையோருக்கும் முதியோருக்கும் இடையே பொருந்தாத சூழ்நிலையும் போராட்டமும் காணப்படுதல்
உ_+ம் தொலைபேசி பாவனை.

c.எதிர்மறை மனப்பான்மையும் மரபு மீறலும்.

தனித்தன்மையை நிலைநாட்டும் முயற்சியில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தலும் சமூக மரபுகளை மீறுதலையும் இயல்பாகக் கொண்டிருப்பார்.

d. ஒப்பார் குழு ஆதிக்கம்

ஒத்தவயதினரின் ஆதிக்கம் மிகுந்து காணப்படுவதால் சமூகநெறி பிறழ்வதற்கான வாய்ப்புக்கள் அதிகம்.
உ_+ம் : குழு வன்முறைச் செயற்பாடுகள்

e. மனவெழுச்சி மிகுந்து காணப்படுதல். (Emotional swings)

நிறைவேறாத ஆசைகள், விருப்பங்கள் இளையோரை அதிகம் கோபம் கொள்ளச் செய்கின்றன. மேலும் அவர்கள் ஏமாற்றத்திற்கும் விரக்தி நிலைக்கும் ஆளாகின்றனர்.

f. சுயசார்பு விளைவு (Craviy for indendence)

சுதந்திரத்தை விரும்புவதும் கட்டுப்பாடுகளை விரும்பாதிருப்பதாலும் எதிர்த்துப் பேசுதல், மறுத்துப்பேசுதல், கேள்வி கேட்டல் போன்ற நடத்தைகளை வெளிக் காட்டுகின்றனர்.

இறுதியாக கட்டிளமைப் பருவத்தினரது எழுச்சிகளையும் அழுத்தங்களையும் நாம் எவ்வாறு தீர்க்கலாம் என்பதனை நோக்குவோம்.

1. கட்டிளமைப் பருவத்தினரது மன இயல்புகளைப் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும்.
2. முறையான பாலியல் கல்வியை வழங்க வேண்டும்.
3. மாணவர்களது நாட்டங்களையும் கவர்ச்சிகளையும் சரியான வகையில் அடையாளம் கண்டு வழிப்படுத்துதல் வேண்டும்.
4. சமய அறநெறிக் கல்விகளை ஊக்குவிக்க வேண்டும்.
5. இந்த பருவத்தினை வெற்றியுடன் சமாளிப்பதற்குச் சரியான அறிவுரைகளையும் வழிப்படுத்தலையும் பெற்றோர்கள் ஆசிரியர்கள் வழங்க வேண்டும்.
6. மாஸ்லோவினுடைய தேவைக்கோட்பாட்டிற்கு அமைவாகப் பிள்ளைகளது உடலியல் தேவை, காப்புதேவை, அன்பு உறவுத் தேவை, கணிப்புதேவை, சுயதிறன் நிறைவுத்தேவை என்பன நிறைவேற்றப்படுகின்ற போது பிள்ளைகள் உளவியல் ரீதியில் ஆளுமை மிக்கவர்களாகவும் சவால்களை எதிர் கொள்கின்ற ஆற்றல்கள் மிக்கவர்களாக தம்மை மாற்றிக் கொள்வார்கள். இதனைப் பெற்றோர்கள் சரியாக நிறைவேற்ற வேண்டும். இவ்விடத்தில் அறிஞர் ஹ்ரியின் "நிலை குலைந்த குடும்பங்களிலேயே இளம் குற்றவாளிகள் உருவாகின்றனர்" என்ற கருத்தும் நோக்கத்தக்கது.

g. பொது நுண்மதி இப்பருவத்தில் விரைவாகவும் சீராகவும் வளர்ச்சியடையும். 15 வயதில் இது உச்ச வளர்ச்சி அடையத் தொடங்கும். பாடசாலைகளில் வழங்கும் கல்வி வசதிகள் மூலம் தூண்டும் விசைகள் முறையாக வழங்கப்படுமானால் சொல்சார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறன், கல்விசார்திறன், இடைவெளித்திறன் ஆகியன கட்டிளமைப்பருவத்தில் வளர்ச்சி அடையும்.

8. ஆரோக்கியமான பொழுது போக்குகளில் ஈடுபடுவதற்கும் சரியான வழிப்படுத்தல் அவசியமானதாகும்.

சிக்கலான நெருக்கீடு நிறைந்த இப்பருவத்திலிருந்து இளையவர்களை ஆளுமைமிக்கவர்களாக வெளியே கொண்டு வருவதற்கு அனைத்து தரப்பினரதும் ஒத்துழைப்பும் அவசியமானதாகும்.

**உசாத்துணை நூல்கள்.**


1. பிள்ளைகளுக்கு நல்ல பெற்றோர்களாய் சுகாதார அமைச்சு 2013 குடும்ப சுகாதார பணிமனை
2. கல்வி உளவியல்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் அழிந்து போகும் நடனக்கலை

திருமதி சுதர்ஷினி கரன்சன்
நடன ஆசிரியர்
சிறிய புஸ்பம் மகளிர் வித்தியாலயம், கரம்பொன்

இறைவன் மாபெரும் கலைஞன் உலகப் படைப்புக்களில் அவனது கைவண்ணமும் கலைவண்ணமும் பளிச்சிடுகின்றன. தனது ஒப்பற்ற கலைஞானத்தின் நிறைவினை மனிதரோடு அவன் பகிர்ந்துகொள்ள விரும்பினான். அதன் விளைவுதான் ஆயகலைகள் அறுபத்து நான்கு என நம் முன்னோர் வகுத்துச் சொன்ன பல்வேறு கலைகள். இந்த உலகில் நாம் காணும் பல்வேறு கலைகளில் ஒன்று தான், நமது பழம் பெரும் கலைப்பாரம்பரியத்தில் ஊன்றிப்போன ஆடற்கலை. ஈழத்தமிழர்களாகிய நாம் நமது தேசியம் பற்றி பலவழிகளிலும் சிந்தித்துச் செயலாற்றிவரும் இக்கால கட்டத்தில் எமது பாரம்பரிய நடனக்கலை பற்றியும் சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம். இதுமட்டுமன்றி இந்நடனம் பல்வேறு கேள்விகளோடும், முரண்களோடும் மட்டும் முடங்கி நிற்பதையே உணரமுடிகின்றது. ஆனால் இது பற்றிய தீவிரமாக தேட வேண்டிய ஒருகாலத்தின் தேவை எம் கண்முன் நிற்கின்றது

திறந்து விடப்பட்டுள்ள பூகோளமயமாதலின் விளைபயன்களை நாம் எமது தேசத்திற்குள்ளும் சந்திக்கத் தொடங்கிவிட்டோம். எமது தனித்துவமான கலாசார பண்பாடுகளை உருவி எறிந்து விட்டு உட்புகும் மின்னலைகளாக மேலாதிக்க கலாசாரம் எமது மரபுக் கலைகளை காலத்தின் வேகத்தால் அடித்துச் செல்வதற்கு முன்னர் அது பற்றிய கருத்துநிலை, எதிர்காலப் பேணுகை, ஆரோக்கியமான தேடல், செந்நெறிப்படுத்தல் என ஆழமாக சிந்தித்து பொது முடிவுகளை எடுக்கவேண்டிய கடைப்பாட்டில் ஒவ்வொரு பண்பாட்டாளரும் குறிப்பாக நடனம் பற்றி சிந்திக்கின்றவர்களும் இருக்கின்றார்கள். கிராமங்கள் நகரமயமாதல் எஞ்சி நிற்கும் நடனவழி முதுகலைஞர்களின் இழப்புக்களும் மிக வேகமாக நடந்துகொண்டிருக்கின்றன. நடனக்கலையானது தெய்வீகத்தன்மை கொண்டுள்ளது. இக்கலையின் கூறுகளை முழுமையாக ஆய்வு செய்வது என்பது கடினமான விடயமாகும்.

நாட்டியம் என்பது மனிதனின் பலவகைப்பட்ட உணர்வுகளை, அல்லது அவர்களது கருத்தை வெளிப்படுத்துவதற்கு ஏற்ற ஒரு சிறந்த ஊடகமாகப் பயன்படுகின்றது. கிறிஸ்துவிற்கு முன்பு இந்தியாவிலே தோற்றம் பெற்ற பரதக்கலையானது அழகியலையும், ஆன்மீகத்தையும் இணைத்துப் பார்ப்போரைப் பரவசப்படுத்தக் கூடிய தன்மை கொண்டது, மட்டுமல்லாது பார்ப்போருக்குத் தெய்வீக உணர்வை ஊட்டவல்லது. பரதநாட்டியத்தில் நாம் ராகம், பாவம், தாளம் என்ற மூன்று அம்சங்களை அவதானிக்கலாம். இதில் இராகமானது எம் செவிக்கும், மனதிற்கும் விருந்தாவது மட்டுமல்ல, அந்த நடனத்துடன் எம்மை ஒன்றிப் போகவும் வைக்கின்றது. நடனமாடுபவர் தனது உள்ளத்தில் ஏற்படும் பல்வேறு கருத்துக்களை தன்னுடைய முகம், கண் என்பவற்றின் பாவனைகள் மூலம் வெளிப்படுத்து தல் பாவம் ஆகும். இராகம், பாவம் என்பவைக்கு மெருகூட்டுவது போல அமைகின்றது தாளமாகும். இந்த மூன்று அம்சங்களையும் சரிவரப் பொருத்தி ஒருவர் நடனமாடுவராகில் சிறியோர் முதல் பெரியோர்வரை மிக இலகுவாக நடனத்துடன் லயமாகிவிடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவேதான் நாட்டியத்தைப் பார்த்து ரசிப்பதற்கு எந்தவொரு மொழியும் தேவையில்லை. இது ஓர் ஆன்மமொழி என்றே கூறலாம். ஆதிகாலந்தொட்டு தமிழர் வாழ்விலே கலைகள் ஒன்றிணைந்து விளங்கி வந்துள்ளன. அவை பாரம்பரியமாகப் பேணப்பட்டு, வளர்க்கப்பட்டு வந்துள்ளன. அக்கலையறிவு மக்களுக்கு மனிதப் பண்பினை வளர்க்க உதவி செய்கின்றது என்பது தெளிவாகின்றது. உலகமானது இன்று பல்வேறு தடைகளையும் தாண்டி புதிய கண்டுபிடிப்புக்களை மேற்கொண்டும் நாடுகளில் பல்கலாசார இறையாண்மையை வழங்கி மனித நேயத்தை வளர்த்து அமைதிப்போக்கில் சென்று கொண்டிருக்கின்றது. அதேவேளை எமது சமூக மக்கள் இன்றும் அமைதியற்ற, சுதந்திரமற்ற, சுயநிர்ணயமற்ற, மகிழ்ச்சியற்ற சூழ்நிலையில்தான் வாழ்ந்து வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது. அமைதியை ஏற்படுத்தினாலும் சரி, வன்முறையைத் தூண்டினாலும் சரி அது மனதின் சக்தியாலே முடியும். ஆதலால் ஒவ்வொரு மனிதனும் தனது மனத்திலுள்ள தேவையற்ற விகாரங்களை நீக்குவதன் மூலம் உலகில் அமைதியையும் நல்லுறவையும் உருப்பெற வைக்கலாம் என்பதை நடன நாடகங்கள் எடுத்துக் காட்டிநிற்கின்றது. அமைதி வேண்டும் என்று நாட்டு மக்கள் பிரதிநிதிகளாக நடன ஆற்றுகைக் கலையூடாக அமைதிப் பணிகளை நடத்தியுள்ளது சர்வதேசத்திலும் நடைபெற்றுள்ளது. பொருத்தமான உள்ளடக்கங்களை பொருத்தமான நாடக வடிவத்திற்கூடாக எடுத்தாளப்பட்டுள்ளது. நடனப் பணிகளுக்குப் பின்னால் பாடசாலைகள், நடன ஆசிரியர்கள் கட்டுக்கள் கடந்த மனிதநேயப் பணியை கலையூடாக ஆற்றி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில் சமூக நல்லுறவிற்கு நடன அளிக்கைகள் ஊடாக எவ்வாறான பங்களிப்பை வெளிக்கொண்டுள்ளது என்பது அவசியமாகும். ஒரு சமூகத்தில் பல்வேறுபட்ட மக்கள் இன, மத, தேசிய வேறுபாடுகளின்றி அனைத்திற்கும் அப்பால் உள்ள ஐக்கியம், சகோதரத்துவம், புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு மற்றும் சகிப்புத்தன்மை என்பவற்றை அடித்தளமாகக் கொண்டு வாழும் நிலைப்பாட்டினை "சமூக நல்லுறவு" என்பர். சமாதானம் என்ற சொல்லின் மூலம் ஒரு இனத்தின் தனித்துவம் இழக்கப்பட்டு, உரிமைகள் விட்டுக்கொடுக்கப்பட்டு, கைகோர்த்து திரிதல் என்ற அர்த்தம் கொள்ளப்படலாகாது. பல நடன நாடகங்கள் ஊடாக ஒவ்வொரு மனித இனத்தினதும் சுயகௌரவம் மதிக்கப்பட்ட உரிமையும், தனித்துவமும் அங்கீகரிக்கப்பட்டு ஏற்படும் நீதியுடனான சமாதானமே உண்மையான சமாதானம் என நடனங்கள் ஊடாக ஈழத்தில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அந்த வகையில் நடன நாடகங்கள் சமூகத்திற்குத் தேவையான ஒன்றாக நான் கருதுகின்றேன். இன்றைய கலாசார பிறழ்வுகள், நாட்டின் இன ஒற்றுமைக்கும் நடன நாடகங்கள் பல பங்களிப்பினை செய்துள்ளமையை அன்றைய, இன்றைய காலகட்ட ஆற்றுகைகள் ஊடாக வெளிவந்த பத்திரிகை விமர்சனங்கள், வெளியீடுகள், சஞ்சிகைகள் மூலம் அறியமுடிகின்றது.

அன்றிலிருந்து இற்றை வரைக்கும் நடன நாடகங்கள் ஊடாக எமது சமூகத்திற்கும் நாட்டிற்கும் எடுத்துச் சொன்ன கருத்துக்கள் இன்றியமையாதவை. "கலை துப்பாக்கியி லிருந்து புறப்பட்ட ரவையை நிறுத்த முடியாது விட்டாலும்கூட சுடுவதை நிறுத்த வல்லது" என்பது அறிஞரின் கருத்து. எனவே கலை (நடனம்) எமது பண்பாடு, இருப்பு, சமுதாய விழுமியங்களை இன்றைய இளைய தலைமுறைகள் எவ்வாறு அதன் வரையறைகளுக்குள் நின்று எமது தேசத்தைக் காப்பாற்றப் போகின்றார்கள் என்பது பாரிய இடைவெளிதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் எதிர்நோக்கும் சமூக, பொருளாதார சவால்களுக்கு கையாளும் உத்திகள்

செல்வி. நா. கிருஷாந்தினி
சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்,வேலணை

போரால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் கையாளும் சமூகச் சமாளிப்பு உத்திகளாவன:

* உயிர்வாழும் உத்திகள்
* ஆணாதிக்க மற்றும் பாலியல் துன்புறுத்தலிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கான உத்திகள்

இந்தப் பகுதியில், உயிர்வாழும் சவால்களை எதிர்கொள்ளப் பெண்கள் தங்கள் குடும்பங்களைத் தலைமைதாங்கும் போது சமாளிக்கும் உத்திகள் பற்றி விவாதிக்கப் படுகிறது. இவை முக்கியமாக இரண்டு அம்சங்களாக வகைப்படுத்தப் பட்டுள்ளன. 1. முறைசார் மற்றும் முறையான ஆதாரங்கள், 2. முறைசாரா உத்திகள் என்பன.

## உயிர் வாழும் சவால்களை சமாளிக்க முறை சாரா உத்திகள்

இலங்கையின் மோதலுக்குப் பிந்தைய சூழலில், உயிர்வாழும் சவால்களைச் சமாளிப்பதற்குத் தங்கள் குடும்பங்களைத் தலைமைதாங்கும் பெண்களால் பல முறை சாரா வளங்கள் பயன்படுத்தப்பட்டன. வருமானம் இல்லாமை மற்றும் குறைந்த வாழ்வாதார வாய்ப்புகள் அவர்களை முறைசாராத் துறைகளை நாடவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அவர்களின் கருத்துப்படி தீவுகளில் கௌரவக்குறைவான வேலையும், பருவகால தொழில் செய்யும் பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் அதிகமாக இருந்தார்கள். அவர்களில் சிலர் புலம் பெயர் நாட்டில் வசிக்கும் உறவினர்கள் அல்லது அவர்களது நெருங்கிய குடும்ப உறுப்பினர்களின் நிதியுதவியுடன் வாழ்வாதார நடவடிக்கைகளை ஆரம்பித்தனர்.

## சிறுவர் தொழிலாளர்

சிறுவர் தொழிலாளர்களை உருவாக்கி தங்கள் குடும்பத்திற்குத் உயிர்வாழும் உத்தியாகக் கொண்டுள்ளார்கள். அவர்கள் பெண் குழந்தைகளை வீட்டு வேலைகளில் அமர்த்தினார்கள். ஆண்களை வெவ்வேறு அமைப்புகளுக்கு வேலைக்கு அனுப்பினார்கள். மூன்று பகுதிகளைச் சேர்ந்த சில குடும்பங்கள் தங்கள் ஆண் குழந்தைகளைக் கிராமத்திற்கு வெளியே வேலைக்கு அனுப்பியதை ஒப்புக்கொண்டுள்ளனர். தீவுகளில் குழந்தைத் தொழிலாளர் சில குடும்பங்களுக்கு முக்கியமான ஆதாரமாக இருந்தது. அவர்களின் கருத்துப்படி, அவர்கள் தங்கள் குழந்தைகளைப் படிப்பதைவிட வேலைக்கு அனுப்புவதில் ஆர்வம் காட்டியுள்ளார்கள்.

## கடன் வாங்கும் நடைமுறை

பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் தங்கள் பிழைப்பை நிர்வகிப்பதற்கு பணம் மற்றும் பொருள் (அரிசி, தேங்காய், எண்ணெய் மற்றும் உலர்ந்த மூலப் பொருட்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ணக் கூடிய பொருட்கள்) வடிவத்தில் கடன் வாங்குவதை ஏற்றுக் கொண்டனர். அவர்கள் தங்கள் குடும்ப உறுப்பினர்கள், விற்பனையாளர்கள், நண்பர்கள், பக்கத்து வீட்டுக்காரர்கள் அல்லது வங்கிகளிட மிருந்து இந்தப் பொருட்களைக் கடன் வாங்கினார்கள். பல்வேறு நோக்கங்க ளுக்காக தங்களுடைய நகைகள் மற்றும் நிலப்பத்திரங்களை அடகுவைப்பதும், பணம் கிடைத்தவுடன் மீட்பதும் அவர்கள் மத்தியில் பிரபலமான நடைமுறையாக இருந்தது. சமாளிக்கும் உத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அவர்களைச் சுற்றி இருக்கும் வளங்களின் ஆதரவுடன் சூழ்நிலையை நிர்வகித்தல் இருவகைப் படுத்தலாம். இந்த வளங்களை உடல் மற்றும் சமூகவளங்களாக அடையாளம் காணலாம்.

முறைசாரா வளங்களிலிருந்து கடன் வாங்குவது தமிழ்ச் சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கலாசாரம், பரஸ்பர பகிர்வு மற்றும் அக்கறை ஆகியவை இந்தநடை முறையின் பின்னணியில் உள்ள முக்கிய யோசனைகளாகும். விரிவாக்கப்பட்ட குடும்பங்களின் வீழ்ச்சி, விரைவான நகரமய மாக்கல் மற்றும் மாறிவரும் வாழ்க்கை முறை காரணமாக, கடன் வாங்குவது குறைந்து வரும் நடைமுறை யாகிவிட்டது. விவசாயச் சங்கங்கள் மற்றும் கிராம வங்கியில் கடன் வாங்குவது இன்னும் பரவலாக நடைமுறையில் உள்ளது. தீவுப்பகுதியில் உள்ள சில குடும்பங்கள் வங்கிகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட பணக்கடன் வழங்குபவர்கள் போன்ற முறையான முகவர் நிலையங் களை தங்களுடைய நிதி அவசர நிலைக ளுக்கு நம்பியிருந்தனர். இந்தக் கண்டு பிடிப்பின் அடிப்படையில், இலங்கையின் மோதலுக்குப் பிந்தைய சூழ்நிலையில் உயிர்வாழும் பிரச்சினைகளைக் கையாளப் பெண்களால் கையாளப்பட்ட சமாளிப்பு உத்திகளைப் பற்றி விளக்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட ஒரு கூறுகளில் கடன் வாங்கும் நடைமுறையைக் கருதலாம்.

நுண்கடன் சூழலில் பெண் தலைமைத் துவ குடும்பங்கள் அறிந்தோ அறியாமலோ பாதிக்கப்படும் போது எவ்வாறான இடர்களை எதிர்கொள்கின்றனர் என்பது தொடர்பாக நோக்க வேண்டியது அவசிய மாகும். குறைந்தளவு வட்டியில் கடன்களை இலகுவாகப் பெற முடியும் என்கின்ற போது இக்கடன்களை பெற கிராமப்புறங்களைச் சேர்ந்த பெண்களே அதிகளவில் முன் வருகின்றனர். பெரும்பாலும் நிறுவனங்கள் கடன் பெறுவோரது தொழில் முயற்சிகள் கடன் மற்றும் வட்டியை மீளச்செலுத்த இயலுமான காரணங்களை ஆராய்கின்ற போதிலும் அதிகரிக்கும் விலைவாசி, காலநிலை மாற்றங்கள், வாழ்வாதாரம் பாதிப்புறல், தொழில் வீழ்ச்சி, முறையான திட்டமிடலின்மை போன்றவற்றால் கடன் தொகைகள் தொடர்பான சட்டரீதியான பாதுகாப்பு இல்லையென்பது கவலைக் குரியது. வாழ்வாதாரத்தை உயர்த்தி கஷ்ட நிலையைப் போக்குவதற்காக வழங்கப் பட்ட நுண்கடன் இன்றைய நிலையில் பெண்களின் வாழ்வாதாரத்தையே பாழ் படுத்தியுள்ளது. இதனால் ஏற்பட்டிருக்கும் சமூகச் சீர்கேடுகளும் நிலை மாறுதல்க ளும் குறிப்பாக பெண்களை சீரழித்துள்ளது எனலாம். நுண்நிதி நிறுவனங்கள் பெண்களை மையப்படுத்திய நுண்கடன் திட்டங்களை செயற்படுத்துவதால் அதில் பெண்கள் ஈர்க்கப்படுகின்றார்கள். குறிப்பாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இப் பெண்கள் ஏதோ ஒருவிதத்தில் தங்களின் வாழ்வா தாரத்தை உயர்த்திகொள்வதில் முனைப்பு காட்டுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறுபட்ட கடன்களுக்கு பழக்கப் படும் பெண்கள் சில சந்தர்ப்பங்களில் முறையற்ற கடன் வழங்குநர்களிடம் இருந்தும் கடனைப் பெற்றுக்கொள்கி றார்கள். மேலும் இவர்களிடையே சேமிப்பதற்கு எவ்வித உத்தியும் காணப்படு வதில்லை. கடனை மீளசெலுத்துவதற்கு தங்களிடையேயுள்ள நகைகள், சொத்துக் களை அடகுவைக்கின்றார்கள். இந்நிலை சொத்துக்களின் அழிப்புக்கு வழிவகுக் கின்றது.

இவ்வாறான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் பெண்கள் அரச நிறுவ னங்களான கிராமியவங்கி, சமுர்த்திவங்கி போன்றவற்றிலிருந்து கடன்களை பெற்றுக் கொள்ள அதிக விருப்பம் காட்டுகின்ற போதிலும் வங்கியை சென்றடைவதற்கான தூரம், ஆவணங்கள், உத்தரவாதம், காலவரையறை போன்ற காரணங்களால் அந்நிறுவனங்களை நாடுவதைத் தவிர்க் கின்றனர். அத்தோடு அரசசார்பற்ற நிறுவனங்களினால் வழங்கப்டும் கடன் உதவிகள் ஓரங்கட்டப்படுவதனால் இத் தகைய தனியார் நுண்கடன் நிறுவ னங்களுக்கு மக்கள் இலகுவாகச் சென்ற டைவதற்கான வாய்ப்புக்கள் அதிகரிக் கின்றன. பெண்களின் விழிப்புணர்வின்மை மற்றும் கல்வி அறிவின்மையினால் அவர்கள் இவ்வாறான பாதிப்புக்களுக்கு உள்வாங்கப்படுகின்றார்கள்.

### அரச சார அமைப்புகளின் ஆதரவுடன் முன்னேற்றம்

தங்கள் அயராத முயற்சியால் அல்லது அரச சார அமைப்புகளின் ஆதரவுடன் தங்கள் குடும்பத்தை வழிநடத்தும் பெண்கள் முன்னேறினர். அவர்கள் சுய தொழில் அல்லது வீடு சார்ந்த உற்பத் திகளைத் தொடங்குவதற்கு வாழ்வாதார ஆதரவைப் பெற்றனர். தங்கள் குடும்பங் களைத் தலைமைதாங்கும் பெண்கள் வருமானம் ஈட்டும் முயற்சிகளை ஒரு குறிப்பிட்ட பணியுடன் மட்டுப்படுத் தவில்லை. அது சிறு உழைப்பு முதல் தண்ணீர் விற்பனைவரை இருந்தது. சில குடும்பங்களுக்கு, கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு அவர்களின் முன்னேற்றத் திற்கு அடிப்படையாக இருந்தது.

அவர்களின் அடிப்படை மற்றும் பிற தேவைகளை பூர்த்தி செய்ய தங்கள் குடும்பத்தை வழிநடத்தும் பெண்கள் பல உத்திகளைக் கடைப்படித்தனர். இது முறைசார மற்றும் முறையான ஆதாரங் களைப் பொறுத்தது. சில பெண்களுக்கு, குடும்ப உறுப்பினர்கள் மற்றும் உடன் பிறந்தவர்கள் மிகவும் ஆதரவாக இருந்த னர். மற்றும் தனிகுடும்பங்களில் வாழும் பெண்கள் முக்கியமாக தங்கள் குழந்தைக ளிடமிருந்து ஆதரவைப் பெற்றனர். முறை யான ஒப்பிடுகையில், முறையான ஆதாரங் கள் மிகவும் பயனள்ள தாகவும் எளிதில் அணுகக்கூடியதாகவும் இருந்தன. வெவ்வேறு பகுதிகளில் வாழும் பெண்கள் சூழலுக்கு ஏற்ற பல்வேறு உயிர்வாழும் உத்திகளைக் கடைப் பிடித்தனர். வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளில் அதிக பரிச்சயம் இல்லாவிட்டாலும் அவர்களின் உற்சாகமும் உறுதியும் அவர்களை முன்னோக்கித் தள்ளியதுடன் ஓரளவு வெற்றியும் பெற்றனர்.

### தன்னார்வ தொண்டு நிறுவனங்களை நாடுதல்

தன்னார்வத் தொண்டு நிறுவ னங்கள், சமுகத்தீமைகளை எதிர்த்துப் போராடு வதற்கு தங்கள் குடும்பத்திற்குத் தலைமை தாங்கும் இந்த பெண்களுக்கு உதவ, சில பயிற்சிகள், குழு நடவடிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்குகின்றன. தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் தங்கள் ஒற்றுமையை வெளிப்படுத்தவும், அவர்களின் ஒழுக்கத்தை வலுப்படுத்தவும் ஒரே சமூக மாக இருக்க அவர்களுக்கு பயிற்சி அளித்தன. இந்த பெண்கள் தங்கள் குடும்ப உறுப்பினர்களை தடுப்புக்காவலில் இருந்து விடுவிப்பதற்கு அல்லது அவர்களின் குறைகளை சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்ப்பாதற்கு கூட்டாக நடவடிக்கை எடுக்க அரசசாரா அமைப்புகளால் ஆதரிக்கப்பட் டது. எனவே, அதிகாரமளிப்பதில் தன்னார்வத்தொண்டு நிறுவனங்களின் பங்கு முக்கியமானது.

எனது கருத்துப்படி, இந்தப் பெண்களை மேம்படுத்துவதில் உள்ளூர் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. தங்கள் குடும்பங்களைத் தலைமைதாங்கும் பெண்கள் தங்கள் வாழ்க்கையின் பல அத்தியாவசிய அம்சங்களில் உணர்திறன் பெற்றனர், உதாரணமாக பாலியல் வன் முறை, சொத்துரிமை, அரசியல் விழிப்பு ணர்வு, வாக்களிக்கும் உரிமை மற்றும் அரசியல் அணிதிரட்டலின் தேவை ஆகியவற்றிலிருந்து விடுபடவேண்டும். இந்த குறிப்பிட்ட தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் முதலாளிகளும் ஊழியர் களும் இந்த பெண்களைத் திரட்டி, அவர்கள் விரும்பிய இலக்கினை அடைய அவர்களின் ஆற்றலைப் பலனளிக்கும் வகையில் திருப்புகின்றனர். எனினும் ஆய்வுபிர தேசத்தில் பெண்கள் அரசியல் களங்களில் அவ்வளவாக செயற்பட வில்லை.

### உளவியல் சவால்களைக் கையாளுதல்

இந்தப் பகுதியில், உளவியல் சவால் களை கையாள்வதற்குத் தங்கள் குடும் பத்தை வழிநடத்தும் பெண்கள் பின்பற்றும் பல்வேறு உத்திகள் விவாதிக்கப்படும். அறிவாற்றால், நடத்தை மற்றும் உணர்ச் சிக்களங்கள் தொடர்பான உத்திகள் இதில் இதில் அடங்கும். இந்த மூன்று களங்களும் தனிப்பட்ட மற்றும் மூலோபாயத்தை உள்ளடக்கியது.

### நடத்தை தொடர்பான உத்திகள்

அவர்களின் குறைகளை எளிதாக்கவும், அவர்களின் நம்பிக்கையின் அளவை வலுப்படுத்தவும், தங்கள் குடும்பங்களைத் தலைமைதாங்கும் பெண்கள் மதச்சடங்குகள், மதமாற்றம் மற்றும் கடைப்பிடிப்பதை ஏற்றுக்கொண்டனர். போதைப்பொருள் பயன்பாடு, மருந்து மற்றும் ஆலோசனை, குடும்பத்தில் பகிர்தல், பாரம்பரிய மருத் துவர்களின் ஆதரவை நாடுதல் ஆகியவை அவர்களால் பின்பற்றப்பட்ட பிற உத்திக ளாகும்.

தீவின் சிலபகுதிகளில் வசிக்கும் குடும்பங்களைத் தலைமை தாங்கும் பெண்கள் அரசசார்பற்ற நிறுவனங்களின் ஆதரவுடன் குழு நடவடிக்கைகளில் ஈடுபடு வதற்காக வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர். முறைசாரா கூட்டங்கள் மூலம் பகிர்ந்து கொள்வது உளவியல் சிக்கல்களை எதிர்த்துப் போராட பெண்களால் பரவலாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

### குழு உத்திகள்

குழு உத்திகளைப் பொறுத்தவரை அவர்கள் தன்னார்வ தொண்டு நிறுவ னங்கள் சர்வோதயம் நம்பிக்கை அடிப்ப டையிலான மதநிறுவனங்கள் இந்து மற்றும் கிறிஸ்தவ அமைப்புகளால் ஏற்பாடு செய்யப்பட்ட குழு நடவடிக்கைகளில் கலந்துகொள்ள விரும்பினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது கருத்துப்படி, சில தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் தங்கள் குடும்பங்களுக்கு தலைமை தாங்கும் பெண்களுக்கு அவர்களின் உளவியல் பிரச்சினைகளை சமாளிக்க உதவுதலில் முக்கிய பங்குவகித்தன. இந்த நோக்கத்திற்காக, அவர்கள் தங்கள் குடும்பத்தை வழிநடத்தும் பெண்கள் மற்றும் அவர்களின் குழந்தைகளுக்காக பல குழு நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தனர். சமமான மற்றும் சுறுசுறுப்பான பங்கேற்பு, பரஸ்பர பகிர்வு மற்றும் கற்றல் ஆகியவை அவர்களின் பிரச்சினைகளை எளிதாக்குவதற்கான முக்கிய பணிகளாகும். தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் ஆரம்பிக்கப்பட்ட முக்கியமான நடவடிக்கைகளில் உளவியல் வலுவூட்டல் ஒன்றாகும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்காவற்றுறை பிரதேசத்தின் வறுமை ஒழிப்பில் சமுர்த்தி நுண்நிதிச் செயற்பாடுகளின் தாக்கம்

செல்வி. பானுசிறி ஸ்ரீகந்தராசா
முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்
பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை

## 1. அறிமுகம்

இவ்வுலகிலுள்ள அனைவரும் ஏதோவொருவகையில் சமத்துவமான பௌதீக பரிமாணத்திலேயே பிறக்கின்றனர். ஆனால் சமூக, பொருளாதார, கலாசார, அரசியல் போன்ற தவிர்க்க முடியாத புறக்காரணிகளின் செல்வாக்கினால் ஒவ்வொருவரும் வெவ்வேறான வாழ்வியலுக்கு உட்படுத்தப்படுகின்றனர். அதனடிப்படையிலேயே மக்களினுடைய வருமானமட்டத்திலும் அவர்களுடைய வாழ்க்கைத்தரத்திலும் கணிசமான ளவு வேறுபாடு காணப்படுகின்றது. இதனடிப்படையிலேயே உலகு முழுவதற்குமான நிலைபேறான பொருளாதார அபிவிருத்தி கொள்கைகளில் வறுமையை ஒழித்தல் மிகமுக்கியமான ஒன்றாகக் கருதப்படுகின்றது.

வறுமை என்பது உலக வங்கி அறிக்கையின்படி, ஒருநபர் உயிர்வாழக் குறைந்தபட்சம் 1.9 டொலர் நாளாந்தம் தேவைப்படுகின்றதெனவும் அதனைப்பெற முடியாத தரப்பினரே வறுமை நிலைமையில் உள்ளனர் எனவும் வரையறுக்கின்றது. தற்பொழுது உலக சனத்தொகை அண்ணளவாக 7.9 பில்லியன் ஆகும் (November 2021). அதில் 9.2% ஆன (689 மில்லியன்) மக்கள் நாளொன்றுக்கு 1.9 டொலருக்கும் குறைவான வருமானத் தினையே பெறுகின்றனர் என உலக வங்கியினுடைய தகவல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையில் 2016 ஆம் ஆண்டு 4.1% ஆன மக்கள், தேசிய வறுமைக்கோட்டின் கீழ் காணப் பட்டனர் எனவும் 2019 இல் 0.4% ஆனோர் 1.9 டொலருக்குக் குறைவான வருமானத்தினைப் பெற்றனர் எனவும் 2019 ஆம் ஆண்டு 1000 குழந்தைகளில் 7 குழந்தைகள் ஐந்து வயதினைப் பூர்த்தி செய்ய முன்னரே வறுமையால் இறந்தனர் எனவும் இலங்கை புள்ளிவிபரத் திணைக்களத் தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன. Covid – 19 தொற்று 2020 ஆம் ஆண்டு 97 மில்லியன் மக்களை தீவிர வறுமைக்கு உட்படுத்தியது என உலக வங்கி மதிப்பீடுகள் குறிப்பிட்டன.

அண்ணளவாக 2.1 கோடி சனத்தொகையுடைய இலங்கை, உலக வங்கி அறிக்கை யின் பொருளாதாரத்தரம் தொடர்பான தரப்படுத்தலில் 2019 ஆம் ஆண்டு மிகுந்த பிரயத்தனத்துடன் upper middle income என்ற தரத்தினை எட்டியது. 2019 ஆம் ஆண்டில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத்தாக்குதல், கொரோனா தாக்கத்தினால் உண்டான பொருளாதார வீழ்ச்சி காரணமாக 1.7.2020 இல் lower middle income நாடாக தரமிறக்கப்பட்டுள்ளது. per capital income 4060 US டொலரிலிருந்து 4020 US டொலராக குறைவடைந்தமையே தரமிறங்கலுக்கான காரணமாகும்.

உலகளாவிய ரீதியில் உற்பத்தியின் அளவு, உற்பத்தித்திறன் என்பன அதிகரித்துள்ள போதிலும் வறுமையானது அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. இது அபிவிருத்திக்கும் சமாதானத்திற்கும் எதிரான பாரிய அச்சுறுத்தலும் சவாலுமாகக் காணப்படுவதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசுக்கு வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளில் கவனம் செலுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

மேலும் பல பரிமாண வறுமையானது ஒரு நபரது வருமானம் வறுமைக்கோட்டிற்கு மேற்பட்ட நிலைமையில் காணப்படும் போதும் ஊட்டச்சத்து நிறைந்த உணவு, அடிப்படைக்கல்வி, மருத்துவ வசதி, தங்குமிட வசதி, மின்சார வசதி, தூய குடிநீர், முறையான கழிப்பறைகள், பிறக்கும் குழந்தைகளின் ஆயுட்காலம் ஆறு ஆண்டுகளுக்கு குறைவானது போன்ற காரணிகளில் ஏதேனும் மூன்றினை இழந்தால் ஏழை எனக்குறிப்பிடுகின்றது.

இவ்வாறான வறுமை நிலைமையைச் சீர் செய்யச் சிறந்த வழிமுறையாக உலக நாடுகளால் கையாளப்பட்டு வரும் உத்தியாக நுண்நிதியியல் காணப்படுகின்றது. நுண்நிதியியல் எனப்படுவது "குறைந்த வருமானம் உடையவர்களுக்கு நிதிச் சேவைகளை வழங்குதல்" ஆகும். இது உற்பத்தித்திறனான செயற்பாட்டு நோக்கங்களை நிறைவேற்ற ஏனைய முறைசார் வங்கிகளில் பிணைகளையோ உத்தரவாதங்களையோ வழங்கி கடன் பெறமுடியாத வறிய மக்களுக்கு சிறியளவிலான கடன்களை நெகிழ்வான கட்டுப்பாடுகளுடன் வழங்கி அவர்களது சேமிப்பு மற்றும் வருமான மட்டங்களை உயர்த்தி வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதனைப் பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளது.

நுண்நிதியியலானது மேலும் வறிய மக்கள் தமது சிற்றளவிலான சேமிப்புக்களைப் பேண நுண்சேமிப்பும், அவர்களது உற்பத்திச்செயற்பாடுகள் மற்றும் வாழ்க்கை தொடர்பான ஆபத்துக்கள் என்பவற்றிலிருந்து பாதுகாப்பதற்காக நுண்காப்புறுதியும், இதற்கு மேலாக நுண்நிதி மாற்றுகைச் சேவைகளையும் வழங்குகின்றது.

இலங்கையில் நுண்நிதியியலுடன் தொடர்புபட்ட அனைவரையும் பாதுகாப்பதற்காக 2016 ஆம் ஆண்டு 6 ஆம் இலக்க நுண்நிதியியல் சட்டமானது உருவாக்கப்பட்டது. இதற்கு மேலாக இலங்கை மத்திய வங்கியால் நெறிப்படுத்தல்களும் ஒழுங்குவிதிகளும் குறிப்பிடப்படுகின்றன. ஆனாலும் இச்சட்டங்கள் தொடர்பான விழிப்புணர்வு பொதுமக்களிடையே பெருமளவு ஏற்படவில்லை என்பது வருந்துவதற்குரியதாகும்.

இலங்கை அரசானது வறுமை ஒழிப்பிற்காகக் காலத்திற்குக் காலம் பல்வேறு உபாயங்களை கடைப்பிடித்து வருகின்றது. 1988 ஆம் ஆண்டு மார்கழி மாதம் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது மேன்மை தங்கிய ஆர்.பிறேமதாச அவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட கருத்திட்டமே ஜனசவிய என்னும் வறுமை ஒழிப்பு திட்டமாகும்.

அதனடிப்படையிலேயே 1995 ஆம் ஆண்டு 30 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் மூலம் மக்களுக்கு நலன்புரி சேவைகளை வழங்குவதற்கென அரச திணைக்களத்தினுடைய அனுசரணையில் சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களமும் வறுமை நிவாரணத்திணைக்களமும் உருவாக்கப்பட்டன. இவ் இரு திணைக்களங்களும் ஒன்றிணைக்கப்பட்டு 2004 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி முதல் சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களமாக செயற்படுத்தப்பட்டு வருகின்றது. மிக ஏழ்மையில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களது வறுமையை ஒழிக்கும் பொருட்டு அரசினால் அறிமுகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தப்பட்டதே சமுர்த்தி நுண்நிதியியல் செயற்பாடுகளாகும். குறைந்த வருமானம் பெறுவோரைத் தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்வதற்கு தூண்டுவதே இதன் குறிக்கோளாகும். அக்குறிக்கோளை நிறைவேற்றும் பொருட்டு குறைந்த வருமானம் பெறுவோருக்கு வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டங்களையும் சமுர்த்தி வங்கிக்கடன் திட்டங்களையும் வழங்குவதன் ஊடாக கிராமிய, நகர மற்றும் பிரதேச வறிய மக்களின் வாழ்வாதாரத்தை நிலைபேறாக அபிவிருத்தி செய்யும். இதன் வெளிப்பாடாக ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவிலும் சமுர்த்தி திணைக்களங்கள் தொழிற்படுகின்றன.

சமுர்த்தி அதிகார சபையின் நோக்கு வறுமை குன்றிய சுபீட்சமிகு இலங்கையைக் கட்டியெழுப்புதல் ஆகும். இதன் வெற்றிக்குச்சான்றாக சமுர்த்தி என்ற சொல்லை அறியாத மக்கள் பிரிவினரே இல்லை எனும் அளவிற்கு செயற்படுகின்றது.

இலங்கையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் காவலூர் என வர்ணிக்கப்படும் தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை பிரதேச செயலக பிரிவானது மோசமான காலநிலை மற்றும் வளங்கள் குன்றிய பிரதேசங்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது.

ஊர்காவற்றுறை பிரதேச செயலக சமுர்த்தி திணைக்களம் 2004 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 23 ஆம் திகதி அன்று திறந்து வைக்கப்பட்டது. பல வருடங்களாக சமுர்த்தி நுண்நிதியியல் செயற்பாடுகள் செயற்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் இதுவரையிலும் வறுமையிலிருந்து இப் பிரதேசம் மீள முடியாமல் உள்ளது. அந்த வகையில் சமுர்த்தி நுண்நிதியியல் செயற்பாடுகள் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக பிரிவினுடைய வறுமை ஒழிப்பில் எத்தகைய பங்கினை வகிக்கின்றது என்பதனை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமையப்பெறவுள்ளது.

பல சமயங்களில் சமுர்த்தியினுடைய சேவை உண்மையாகவே தேவையானவர்கள் இனங்காணப்படாமல் போவதும் சமுர்த்தி மீது பல குற்றச்சாட்டுக்களை எழுப்பியுள்ளது. இது இப்பிரதேசத்தின் பிரச்சனை மட்டுமல்லாமல் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியிலும் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. அந்தவகையில் இதில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளை கருத்திற்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

சமுர்த்தி திட்டத்திற்கும் அதனுடைய செயற்பாடுகளுக்கும் இடையிலான இடைவெளியே இதற்கு பிரதான காரணமாகும். வெளிப்படைத்தன்மை, பொறுப்புணர்வு, மக்கள் பங்குகொள்ளும் திறன், சமூக நீதி, குடிமக்கள் பற்றி தகவல் அறியும் உரிமை, கடுமையான அரசியல் போக்கு போன்ற பல்வேறு காரணிகளானது சமுர்த்திச் செயற்பாடுகளை செயற்படுத்துவதில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. பொதுவாக சமுர்த்திச் செயற்பாடுகள் வறுமை ஒழிப்பிற்கு சிறந்த ஊடகமாக இருந்தாலும் அவை பற்றிய பல விமர்சனங்கள் இருந்த வண்ணமே உள்ளதனால் சமுர்த்தி வங்கிகளின் செயற்பாடுகளை மதிப்பிட வேண்டியதாகவுள்ளது.

ஊர்காவற்றுறை பிரதேசத்தில் தனியார் நுண்நிதியியல் நிறுவனங்களோ தனியார் வங்கிகளோ எதுவும் நிறுவப்படவில்லை. இது இப்பிரதேசத்தில் இலாபம் உழைக்க முடியாது என்பதனையே மறைமுகமாக எடுத்துக் காட்டுகின்றது.

இப் பிரதேசத்தில் நிலத்தடி நீர் வசதியின்மை, உவர்நீர் பிரச்சனை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகளவிலான வெப்பம், வறட்சி போன்றவற்றால் மக்களது அன்றாட வாழ்வியல் நிலைமை சீர்குலைந்து காணப்படுகின்றது. இந்நிலைமையில் வேறு பிரதேசங்க ளுக்கு மாற்றலாகிச் செல்ல முடியாத தரப்பினரே இங்கு வாழ்ந்து வருகின்றனர். அந்த வகையில் மேலும் எவ்வாறு தற்போதைய சமுர்த்தி செயற்பாடுகளை வினைத்திற னாகவும் விளைதிறனாகவும் செயற்படுத்தி பிரதேசத்தினை அபிவிருத்தி செய்து வறுமையை ஒழிக்க முடியும் என்பதனையும் மேலும் எவ்வாறான திட்டங்களை அமுல் படுத்துவதன் மூலம் சுபீட்சம் மிக்க பிரதேசமாக மாற்றமுடியும் என்பதனையும் அறிய இக் கட்டுரை உதவும்.

## 2. இலக்கிய மீளாய்வு

| ஆய்வாளர் | மேற்கொள்ளப்பட்ட ஆய்வு | முடிவு |
|---|---|---|
| ரிஸ்பி மற்றும் ஜெயசிங்க (2010) | ஏழை மக்கள் சமுர்த்தி நுண்கடனைப்பெறுவதில் எதிர்நோக்கும் சவால்கள். | • சமுர்த்தி நடவடிக்கைகள் வறுமை ஒழிப்பில் கணிசமானளவு தாக்கம் செலுத்துகின்றது.<br>• சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆய்விற்குட்படுத்தப்பட வேண்டும்.<br>• நுண்கடன் சிறந்த முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். |
| ஜெயசூரிய (2017) | இலங்கையில் நுண்நிதியானது வறுமை ஒழிப்பில் தாக்கம் செலுத்துகின்றது | • சமுர்த்தியினுடைய நுண்நிதிச்செயற்பாடுகள் வறுமை ஒழிப்பில் தாக்கம் செலுத்துகின்றது.<br>• சமுர்த்தி கடன் திட்டத்தினால் மக்களினுடைய நடைமுறை வாழ்வானது நிலைநிறுத்தப்படுகின்றது |

## 3. ஆய்வு முறையியல்

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தினுடைய புள்ளிவிபரக் கணக்கெடுப்பின் படி 31.12.2021 ஆம் ஆண்டு 3,415 குடும்பங்களில் 10,884 அங்கத்தவர்கள் காணப்படுகின்றனர். இப் பிரிவில் மாதாந்தம் சமுர்த்திப்பயனை பெற்றுக் கொள்வதற்காக 1,967 குடும்பங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் இன்னமும் சமுர்த்திப் பெறுவனவை பெறக்கூடிய நிலைமையில் 1,105 குடும்பங்கள் இனங் காணப்பட்டுள்ளனர்.

கட்டுரையின் நோக்கத்தை அடைவதற்காக 15 கிராம சேவகர் பிரிவுகளில் இருந்து 04 கிராம சேவகர் பிரிவுகள் (ஊர்காவற்றுறை (J/49), பருத்தியடைப்பு (J/50), நாரந்தனை வடமேற்கு (J/56), நாரந்தனை (J/57))



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவுசெய்யப்பட்டு சமுர்த்தியிலிருந்து மாதாந்த நலனைப் பெறும் 1967 பயனாளிகளில் இருந்து 100 பேர் தகவலை பிரதிநிதித்துவப்படுத்துவற்காக எழுமாறான மாதிரியாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

இவ் கட்டுரைக்குத் தேவையான முதன்மைத் தரவானது வினாக்கொத்து மூலம் எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்ட 100 பயனாளிகளால் நிரப்பப்பட்டது. இரண்டாம் நிலைத்தரவுகளாக பிரதேச செயலகம் மற்றும் சமுர்த்தி திணைக்களத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட புள்ளிவிபர கைநூல் தரவுகள் ஆங்காங்கே பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும் சமுர்த்தி உத்தியோகத்தர்களுடனான கலந்துரையாடல் மற்றும் சமுர்த்தி திணைக்கள வலையமைப்புக்களில் இருந்தும் தரவுகள் சேகரிக்கப்பட்டன. வினாக்கொத்து மூலமாக சேகரிக்கப்பட்ட தரவுகள் சமூக விஞ்ஞான ஆய்வுகளுக்கான புள்ளிவிபர மென் பொருள் (SPSS) மூலம் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

| எண்ணக்கரு | மாறிகள் | குறிகாட்டிகள் | அளவீடுகள் |
|---|---|---|---|
| சமுர்த்தி செயற்பாடுகள் (சாரா மாறி) | நுண் கடன்கள் | கடனின் வகை<br>கடன் தொகை<br>திருப்பி செலுத்தும் காலம்<br>கடனுக்கான வட்டிவீதம் | வினா 1 - 7 |
| | நுண் சேமிப்பு | சேமிப்பின் வகை<br>சேமிப்பு முறைமை | வினா 8 - 10 |
| | நுண் காப்புறுதி | காப்புறுதியின் வகை<br>காப்புறுதி முறைமை | வினா 11 - 13 |
| | ஏனைய நலத்திட்டங்கள் | வேலைவாய்ப்பு<br>உணவு முத்திரை<br>வீட்டு திட்டம்<br>வாழ்வாதார நடவடிக்கை<br>சமூக நல கொடுப்பனவு | வினா 14 - 23 |
| வறுமை | வருமானம் | மாதாந்த வருமானம் | வினா 24 - 28 |
| ஒழிப்பு (சார் மாறி) | | நுகர்வு<br>சேமிப்பு | |
| | சுகாதாரம் | மருத்துவ வசதி | வினா 29 - 32 |
| | வீட்டு வசதி நிலைமை | குடிநீர்<br>மின்சாரம் | வினா 33 - 36 |
| | கல்வி நிலைமை | பாடசாலை செல்லும் பிள்ளைகளின் எண்ணிக்கை<br>கல்வி நிலைமையில் நாட்டம் | வினா 37 - 40 |

கருதுகோளுருவாக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ1:- வறுமை ஒழிப்பில் சமுர்த்திக் கடன் கணிசமானளவு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

உ2:- வறுமை ஒழிப்பில் சமுர்த்தி சேமிப்பு கணிசமானளவு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

உ3:- வறுமை ஒழிப்பில் சமுர்த்தி காப்புறுதி கணிசமானளவு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

உ4:- வறுமை ஒழிப்பில் சமுர்த்தி நலத்திட்டங்கள் கணிசமானளவு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

## 4. தரவுகளை சமர்ப்பித்தலும் பகுப்பாய்வு செய்தலும்

**உண்மைத்தன்மையை பரிசீலிக்கும் பகுப்பாய்வு (Reliability Test)**

கட்டுரைக்கான தரவுகளைச் சேகரிப்பதற்காக தயாரிக்கப்படும் வினாக்கொத்தினுடைய நம்பகத்தன்மை, செல்லுபடியாகும் தன்மை என்பவற்றைத் தீர்மானிக்க இந்த பரிசீலனை உதவுகின்றது. இங்கு Cronbach's Alpha நம்பகத்தன்மையை அளவிடும் அளவுகோலாகும். Cronbach's Alpha பெறுமதியானது $0.9 \geq a \geq 0.8$ என்பதனால் வினாக்கொத்தானது சிறந்த நம்பகத்தன்மையுடையது எனும் முடிவிற்கு வரலாம். (ஜோர்ச்சும் மலரியும்,2003:தவகோலும் டென்னிக்,2011).

அட்டவணை: உண்மைத்தன்மை பரிசீலனை

| Cronbach's Alpha | எண்ணிக்கை |
|---|---|
| 0.8070 | 40 |

**பிற்செலவுப் பகுப்பாய்வு (Regression Analysis)**

பிற்செலவுப்பகுப்பாய்வானது மாறிகளுக்கிடையிலான தாக்கம், செல்வாக்கு ஆகியவற்றைப் பரீட்சிக்க பயன்படுத்தப்படுகின்றது. அந்தவகையில் வறுமை ஒழிப்பில் சமுர்த்தி செயற்பாடுகளின் தாக்கமானது எவ்வாறாகவுள்ளது என்பதனைத் தீர்மானிக்க இப் பகுப்பாய்வானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

அட்டவணை: பிற்செலவுப் பகுப்பாய்வு

| மாறிகள் | B | Std. Error | t | தரப்படுத்தப்பட்ட குணகங்கள் Beta | significant Value |
|---|---|---|---|---|---|
| நுண்கடன் | 0.259 | 0.092 | 2.809 | .263 | 0.006 |
| நுண்சேமிப்பு | 0.923 | 1.284 | 0.719 | .759 | 0.474 |
| நுண்காப்புறுதி | 0.274 | 0.069 | -3.970 | -.379 | 0.000 |
| ஏனைய நலத்திட்டங்கள் | 0.402 | 1.280 | -0.314 | -.331 | 0.754 |
| R பெறுமதி | | | | | 0.524[a] |
| R- வர்த்தகப்பெறுமதி | | | | | 0.275 |
| சீராக்கப்பட்ட R வர்த்தகப்பெறுமதி | | | | | 0.244 |
| காரணிப்பகுப்பாய்வினுடைய F – பெறுமதி | | | | | 8.999 |
| காரணிப்பகுப்பாய்வினுடைய பொருண்மைப் பெறுமதி Prob (F – Statistic) | | | | | 0.000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கட்டுரையின் சாரா மாறிகளானவை 24% மாத்திரமே பிரதேசத்தினுடைய வறுமை ஒழிப்பில் தாக்கம் செலுத்துவதாகவும் ஏனைய 76% ஆனவை கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படாத காரணிகளின் செல்வாக்கிற்கு உட்பட்டுள்ளன எனவும் சுட்டிக்காட்டு கின்றது. தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளானவை மிகவும் பொருத்தமானவை என F பெறுமதியானது சுட்டிக்காட்டுகின்றது.

மேலே உள்ள அட்டவணையானது சமுர்த்தி செயற்பாடுகளினுடைய குணகமானது ஊர்காவற்றுறை பிரதேச செயலக பிரிவினுடைய வறுமை ஒழிப்பில் எவ்வாறான தாக்கத்தை செலுத்துகின்றது என்பதனை எடுத்துக்காட்டுகின்றது. அந்தவகையில் நுண்கடனுக்கும் வறுமை ஒழிப்பிற்கும் இடையில் நேரான தொடர்புள்ளதுடன் 0.259 B பெறுமதியில் பொருண்மை மட்டமானது $P = 0.006 \leqslant 0.05$ ஆகக் காணப்படுவதனால் நுண் கடனானது வறுமை ஒழிப்பில் குறிப்பிடத்தக்களவு தாக்கத்தைக் கொண்டுள்ளது. நுண்சேமிப்பிற்கும் வறுமை ஒழிப்பிற்கும் இடையில் நேரான தொடர்புள்ளதுடன் 0.923 B பெறுமதியில் பொருண்மை மட்டமானது $P = 0.474 \geqslant 0.05$ ஆகக் காணப்டுவதால் நுண்சேமிப்பானது வறுமை ஒழிப்பில் குறிப்பிடத்தக்களவு தாக்கத்தைக் கொண்டிருக்கவில்லை.

நுண்காப்புறுதிக்கும் வறுமை ஒழிப்பிற்கும் இடையில் எதிரான தொடர்புள்ளதுடன் -0.274 B பெறுமதியில் பொருண்மை மட்டமானது $P = 0.000 \leqslant 0.05$ ஆகக் காணப்படுவதால் நுண்காப்புறுதியானது வறுமை ஒழிப்பில் குறிப்பிடத்தக்களவு தாக்கத்தைக் கொண்டுள்ளது. ஏனைய பிற நலத்திட்டங்களுக்கும் வறுமை ஒழிப்பிற்கும் இடையில் நேரான தொடர்புள்ளது டன் 0.402 B பெறுமதியில் பொருண்மை மட்டமானது $P = 0.754 \geqslant 0.05$ ஆகக் காணப்டுவதால் ஏனைய பிறநலத்திட்டங்கள் வறுமை ஒழிப்பில் குறிப்பிடத்தக்களவு தாக்கத்தைக் கொண்டி ருக்கவில்லை.

## 5. பரிந்துரைகள்

இப்பிரதேச வறுமைக்கு பிரதான காரண மாக மக்கள் சீரான வருமான மீட்டல் தொழில் இன்றிக் காணப்படுவது இனங் காணப்பட்டுள்ளதுடன் தொழில் நடவடிக்கை களில் ஏற்படும் நட்டங்கள் அதற்கடுத்த பிரதான காரணியாகக் காணப்படுகின்றது. அதிகரித்த குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை மற்றும் குடும்பத்தலைவர்க ளின் இறப்புக்கள் போன்றவை வறுமை தோற்றம் பெறக்காரணம் என அறிய முடிந்தது. இது சிறுவர்களின் கல்வி, சுகாதாரம் போன்ற அடிப்படை விடயங்களில் பாதிப்பை ஏற்படுத்துவதுடன் குடும்பத்தில் பிணக்குகளையும் ஏற்படுத்துகின்றன. இதற்கிணங்க வறிய மக்களை எழில் பெறச்செய்வதற்குத் தேவையான பரிந்துரை களாக பின்வருவன முன்வைக்கப்படுகின்றன.

சிறுகைத்தொழில் முயற்சி விஸ்தரிப்புகளிற்காக வழங்கப்படும் சமுர்த்தி கடன்கள் தொழில் நடவடிக்கை தவிர்ந்த அடிப்படைத் தேவைகளிற்குப் பயன்படுத்தப்படுவது இனங்காணப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட கடன்கள் உரியமுறையில் பயன்படுத்தப் பட்டு வாழ்வாதாரம் உயர்வடைவதனை உறுதிப்படுத்த வேண்டும். தவறும் பட்சத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிரதேசத்தினுடைய பெரும்பா லான குடும்பத் தலைவர்கள் உழைக்கும் விருப்பம் குறைந்தவர்களாக காணப்படு வதனால், தொழிலிற்கான அவசியம் பற்றிய விழிப்புணர்வு அவசியமானதாகும். சிறு உற்பத்தி மற்றும் குடிசைக்கைத் தொழிலுக்கான கடன்களை வழங்கும் போது மக்களால் இலகுவாக அணுகக் கூடிய நடைமுறைகளை அமுல்படுத்தப்பட வேண்டும்.

சமுர்த்திக் கடன் பெற்ற பயனாளிகள் கட்டணங்களை மீளச்செலுத்தும் பொழுது அதனைப்புத்தகங்களில் பதிவு செய்வதில் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெளி வின்மை காணப்படுவதாகவும் தெரிவித்த னர். தன்னியக்க இயந்திர முறைமையை அறிமுகம் செய்தல் மற்றும் உத்தியோகத் தர்களுக்கு அவசியமான தகவல் தொழில் நுட்ப பயிற்சிகளை காலத்திற்கு காலம் வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற் கொள்ளுதல் இதற்கான தீர்வாக அமையும்.

சமுர்த்தியில் மேற்கொள்ளப்படும் சேமிப்பு கணக்கு பற்றிய விளக்கங்களை வழங்கி கவர்ச்சிகரமான வட்டிகளை வழங்கினால் அதிகளவான மக்களை இலகுவாக வாடிக்கை யாளர்களாகப் பெறலாம்.

சமுர்த்திச் செயற்பாடுகளில் காப்புறுதி முக்கியமானதாகும். இது கடன் பெற்ற பயனாளிகளினுடைய இழப்புக்களை ஈடு செய்ய உதவுகின்றது. ஆனால் அது பற்றிய எந்தவித தகவல்களையும் ஊர்காவற்றுறை மக்கள் அறிந்திருக்கவில்லை. இதனை நிவர்த்தி செய்ய தேவையான நடவடிக்கை களை மேற்கொள்ள வேண்டும்.

மூன்று மாதங்களுக்கொரு தடவை வழங்கப்படும் மாதாந்தக் கொடுப்பன வினை அவ்மாதத்திலேயே வழங்கினால் மக்களின் வாழ்க்கைத்தரத்தினை சீராக பேண முடியும். தற்போதைய் செலவுக ளுடன் ஒப்பிடும் போது மாதாந்தக் கொடுப்பனவு மிகவும் குறைவாகக் காணப் படுவதனால் அதனை உயர்த்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

மக்களை வறுமையில் இருந்து விடுவிக் கவே இலவசக் கொடுப்பனவுகள் மற்றும் நிதி வசதிகள் வழங்கப்படுகின்றன. அவர்கள் அதனை ஆதாரமாகக் கொண்டு முன்னேறுவதற்கு தூண்டப்பட வேண்டும். இதிலேயே தங்கியிருப்பதற்கான எண்ணத்தை கலைக்க உத்தியோகத்தர்கள் அவர்களை மதிப்பீடு செய்து தேவையான நடவடிக்கை களை மேற்கொள்ள வேண்டும்.

ஏற்றுக்கொள்ளக்கூடிய வருமானத்தி னைப் பெறும் குடும்பங்கள் தொடர்ந்தும் சமுர்த்தி மாதாந்தக் கொடுப்பனவுகளை பெறுவது அவதானிக்கப்பட்டது. குடும்ப விபரங்கள் உடனுக்குடன் தரவேற்றம் செய்வதன் மூலம் இவ்வாறானவற்றை தடுக்க முடியும்.

பொதுமக்களுக்கான சேவையை வழங்கும் உத்தியோகத்தர்கள் மிகவும் தரம் வாய்ந்தவர்களாகவும் பக்கச்சார் பற்றவர்களாகவும் வினைத்திறனானவர்க ளாகவும் உள்ளனர் என்பதனை உறுதி செய்து நியமனம் வழங்கப்படவேண்டும். தவறும் பட்சத்தில் அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவதற்கான சட்டங்களை உருவாக்கி நடைமுறைப் படுத்த வேண்டும்.

வறுமை ஒழிப்புத்திட்டங்கள் நாடு முழுவதும் ஒரே விதமாக மேற்கொள்ளப் படுதல் தவறான விடயமாகும். ஏனெனில் பிரதேசத்திற்கு பிரதேசம் காலநிலை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளங்கள், தொழில்வாய்ப்பு, பழக்க வழக்கம் போன்ற பல வேறுபாடுகள் காணப்படுவதால், ஒரு குறிப்பிட்ட பிரதேசத்திற்கென வடிவமைக்கப்பட்ட சமுர்த்தி வறுமை ஒழிப்புத்திட்டமானது ஏனைய பிரதேசங்களிற்கு பொருத்த மற்றதாக காணப்படுகின்றது. எனவே, ஒரு பிரதேசத்தில் வறுமை ஒழிப்புத் திட்டத்தை செயற்படுத்த முன் அப்பிரதேசத்தின் பிரச்சினைகள் மற்றும் தேவைகளை இனம் காணும் வகையிலமைந்த ஆய்வை மேற் கொண்டு அப்பிரதேசத்தின் வறுமையை ஒழிப்பதற்கான திட்டங்களை வடிவமைப் பதே ஒரு சிறந்த வறுமை ஒழிப்புத்திட்டமாக காணப்படும். இதற்காக மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் குறித்த பிரதேச வாரியான பிரச்சனைகளை அரசாங்கத்திற்கு நேரடியாக எடுத்துரைப் பது பொருத்தமானதாக அமையும்.

## முடிவுரை

வறுமை என்பது மகிழ்ச்சியில் குறைவை ஏற்படுத்தக்கூடியதும், சுயகௌரவத்துடன் வாழ்வதற்கு தேவையான அடிப்படைத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாத அளவிற்கு மிகக்குறைந்த வருமானத்தை கொண்டு காணப்படுவதாகும். வறுமையா னது மக்களின் உள்ளங்களிலும் உணர்வு களிலும் மாற்றத்தைக் கொண்டுவரக்கூடிய தாகக் காணப்படுவதனால் மனிதனின் ஆற்றல் மற்றும் கண்ணியம், ஒழுக்கம் போன்றவற்றையும் அழித்துவிடுகின்றது. இவ்வறுமையானது மனிதனை இழிவு நிலைக்கு உள்ளாக்குவதுடன் ஒழுக்கக் கேடான செயல்களில் மூழ்க வைத்து மனிதர்களை குற்றங்கள் புரியவும் தூண்டு கின்றது. அந்தவகையில் வறுமையை ஒழிப் பதில் அரசாங்கத்திற்கு பாரிய பொறுப்பு உண்டு. அதனடிப்படையிலேயே பிரதேச வாரியாக சமுர்த்திச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இச் சமுர்த்தி செயற்பாடுகளை பிரதேச வாரியாக உரிய முறையில் மக்களைச் சென்றடையச் செய் வதன் மூலம் இலங்கையை அபிவிருத்தி பாதையில் நகர்த்த முடியும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை பொருளாதார நெருக்கடியும் நடுத்தர வருமான மக்களின் சவால்களும்

திரு. சி. தினேஷ்
மோட்டார் போக்குவரத்து உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை.

இலங்கை பொருளாதார நெருக்கடிநிலை ஆனது சுதந்திரம் அடைந்த காலத்தின் பின் பல தடவைகள் ஏற்பட்டிருந்தாலும் கூட 2019 ஆரம்பத்தில் தொடங்கி இன்றுவரை தொடரும் நெருக்கடி நிலையானது இலங்கை வரலாற்றில் பாரியதொரு பொருளாதார நெருக்கடி நிலையாகப் பார்க்க முடியும். இவ்வகையிலே 2019 இல் வெளிநாட்டு கடன் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) 88% ஐ தாண்டியதுடன் Covid 19 பெருந்தொற்றினைத் தொடர்ந்து உலகளாவிய பொருளாதார மந்த நிலையானது நெருக்கடி நிலையை மேலும் விஸ்தீரணப்படுத்தியது எனலாம். 2021 இல் வெளிநாட்டு கடன் 101% தாண்டி அதிகரித்த துடன் அரசாங்க வரிவருவாய் மற்றும் நிதிக்கொள்கைகளில் ஏற்பட்ட வரிவிலக்களிப்பு சலுகைகள் அரசாங்க வாக்கு வங்கிகளை மட்டுமே நிரப்பித் தேர்தலில் வெற்றியடையச் செய்ததே தவிர பொருளாதார நிலையில் மிக மோசமான ஒரு நிலைக்கு வித்திட்டதெனலாம்.

இதனை மேலும் விரிவாக நோக்குகின்றபோது வரிக்குறைப்புக் காரணமாக 2020 இல் 5% மாக இருந்த வரவு செலவு திட்டப்பற்றாக்குறையானது 2022 இல் 15% - 17% ஆக அதிகரித்தது எனலாம். அத்தோடு இலங்கை அரசானது 2022 இல் திருப்பி செலுத்த வேண்டிய கடன் ஆனது 7 பில்லியன் அமெரிக்க டொலர் தேவைப்படும் இடத்து வெறுமனவே 2.3 பில்லியன் அமெரிக்க டொலருக்குக் குறைவாக இருந்தமை 2022 இன் முதல் காலாண்டிலேயே இலங்கை திவால் நிலையின் விளிம்பில் உள்ளதைப் பல பொருளியல் ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

மேலும் இலங்கை பாரியதொரு நெருக்கடிக்குள் செல்வதற்கு பொதுவான காரணங்களாகச் சரியான பொருளாதாரக் கொள்கைச் சீர்ப்படுத்தலைச் செய்யத் தவறிய அதேவேளை பாரியளவு கடன்கள் பெற்றுக் கொண்டமையும் அதனை கடன் மறுசீரமைப்பு மூலம் நெறிப்படுத்தத் தவறியமையும் குறிப்பிடப்படுகின்றது. அதாவது இலங்கை வெளிநாட்டுக் கடன்களை ஈடுசெய்வதற்கு அதிகளவு உள்நாட்டு வங்கிகளிடம் இருந்து கடன் பெற்றமையானது உள்நாட்டு பண இருப்பைப் பாதிக்கச் செய்தமையால் புதிய நாணயத் தாள்களை 2019 இன் இறுதி காலாண்டில் இருந்து இன்று வரை வெளியிட வேண்டிய தேவை ஏற்பட்டது. இதன் போது தங்கக் கையிருப்பின் அளவோ அல்லது சர்வதேச நாணய நிதியம் (IMF) இன் ஆலோசனையோ கேட்கப்படாது பெருமளவான புதிய நாணயத்தாள்கள் வெளியிடப்பட்டமையானது உள்நாட்டு நாணய மதிப்பிழப்புக்குக் காரணமாக அமைகின்றது.

மேலும் இலங்கையின் நாணய மாற்றுவீதம் ஆனது மிதக்க விடப்பட்ட வகையில் காணப்படுகின்றமை சர்வதேச ரீதியான கொடுக்கல் வாங்கலுக்குப் பயன்படும் அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதியில் பாரியதொரு பெறுமதி வீழ்ச்சிக்குச் சடுதியாக இட்டு சென்றமையினால் அமெரிக்க டொலர் சார்பாக பாரியதொரு நெருக்கடி நிலைக்குத் தள்ளப்பட்டு டொலர் பற்றாக்குறை ஆனது. மேலும் மேலும் தொடர்ச்சியாகப் பின்னடைவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகோலியது. இதனை ஆரம்பத்தில் மத்திய வங்கியின் நாணய அதிகாரிகளின் தலையீட்டுடன் முகாமை செய்யப்பட்ட நாணய மாற்றுவீதத்தினை ஏற்படுத்தியிருந்தால் சர்வதேசச் சந்தையில் ஏற்பட்ட தாக்க நிலையை ஓரளவு குறைத்திருக்க முடியும். இதனால் இறக்குமதி பொருட்களுக்கான செலவு அதிகரித்ததுடன் ஏற்றுமதி ரீதியான வருமானங்கள் சவாலுக்கு உட்பட்டது. நாட்டின் பிரதான ஏற்றுமதியாக இருந்த ஆடை உற்பத்தி துறையானது நலிவடைந்து ஆபிரிக்க நாடுகளை நோக்கி இலங்கையில் முதல்த்தர ஆடை உற்பத்தி நிறுவனங்கள் நகர்கின்றன. அதோடு தேயிலை ஆனது உரப்பாவனையின் தடையினால் எதிர்பார்த்த அளவில் உற்பத்தி கிடைக்காமையால் ஏற்றுமதி பாதிக்கப் பட்டதை அறிந்து கொள்ள முடியும்.

மேலும் சீனாவில் இருந்து பெறப்பட்ட அதிகளவு கடன்கள் அவசியமற்ற பல உட்கட்டமைப்புத் திட்டங்களுக்குப் பயன்படுத் தப்பட்டமையும் அதிகரித்த கடன் சுமைக்கு இட்டுச் சென்றது. அத்தோடு உள்நாட்டு உற்பத்திகளின் குறைவும் முக்கிய காரணங்களாகக் குறிப்பிட முடியும். இதன் பேறாக இலங்கையின் தற்போதைய நிலையினை நோக்குகின்ற போது உணவு பணவீக்கம் ஆனது 2022 இன் ஆரம்பத்தில் 45.3% இருந்து ஆவணி மாதத்தின் பின்னர் 58.9% ஆக அதிகரித்து தற்போது 75.8% ஆக உள்ளது. அத்தோடு உணவு அல்லாத பணவீக்கம் ஆனது 34.2% இல் இருந்து தற்போது 43.6% மேலாக அதிகரித்துள் ளமை இலங்கையின் தற்போதைய நெருக் கடி நிலையை கோடிட்டுக் காட்டுவதாக அமைகின்றது. 91% ஆக பணவீக்கம் அதிகரித்ததாகவும் சில அறிக்கைகள் குறிப்பிடப்படுகின்றன. மேலும் மத்திய வங்கியின் புதிய ஆளுநர் பதவி ஏற்றதன் பிற்பாடு கூட 217 பில்லியன் ரூபா நாணயத்தாள்கள் புதிதாக அச்சிடப்பட்டமையானது திறைசேரியின் கையறு நிலையைக் காட்டி நிற்கின்றது.

மேலும் அண்மைய இடைக்கால வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கீட்டின் போது 323 பில்லியன் ரூபாவில் அதிகூடிய நிதி பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டதுடன் பாதுகாப்புப்படைக்கு சம்பளம் மற்றும் வேதநாதிகளுக்காக 273 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வெளிநாட்டு துறை மற்றும் உள்நாட்டு துறைகள் மட்டுமல்லாது வங்கிதுறையும் பாதிப்படைந்துள்ளது. அதாவது அதிகரித்த உள்நாட்டு கடன்கள் காரணமாக மத்திய வங்கியின் வட்டிவீத மறுசீரமைப்புக்கு அமைய வைப்புக்களுக்கான வட்டி வீதங்கள் 25-28% அதிகரித்துக் காணப்படுவதுடன் கடன்களுக்கான வட்டி வீதங்களும் சரிவர தீர்மானிக்க முடியாமையும் அடகு வட்டி வீதங்களும் 26-29% வரை அதிகரித் துள்ளமை நாட்டின் நாணயப் புழக்கத்தை ஒரு விதத்தில் தடுப்பதாகக் காணப்படினும் கூட அரசாங்கம் வங்கியில் இருந்து கடன் தொகை அதிகளவு பெற்றுக்கொள்வதானது வங்கிகளின் இலாபத்தன்மை மற்றும் திரவத்தன்மை அடிப்படையில் பாரிய தொரு பின்னடைவினைச் சந்திக்க வேண்டிய முறிவு நிலைகளை நோக்கி நகர்வடைகின்றமை குறிப்பிடத்தக்கதாக உள்ளது. அத்தோடு வருமானத்துக்கும் செலவுக்குமான இடைவெளி 500$ இல் இருந்து 700$ - 800$ வரை அதிகரித்து காணப்படுவதுடன் குறிப்பாகப் பொருளாதார நெருக்கடி என்பது பல நாடுகளிலும் பல காலங்களிலும் ஏற்பட்ட ஒன்றாக உள்ளது. அதாவது யூரோவலய நெருக்கடி அயர்லாந்து, கிரேக்கம் ஐக்கிய அமெரிக்க நிதி நெருக்கடி, ஆர்ஜென்டினா, ரஷ்யா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியட்நாம் ஆகிய நாடுகளுடன் கிழக்காசிய நாடுகளும் வெகுவாக பாதிக்கப்பட்டமை. ஆனால் அவை தமது பொருளாதார கொள்கை மேம்படுத்தல் மற்றும் IMF நிபந்தனைகளை நிறைவேற்றியமை, உலகவங்கி, ஐரோப்பிய யூனியன் போன்ற வற்றின் உதவியினால் தம்மை மீட்டெடுத் துள்ளன. இத்தகைய வழி முறைகள் கையாள்வதன் மூலமாக இலங்கையையும் மீட்டெடுக்க கூடிய வழிவகைகள் இருக்கின்ற போதிலும் IMF இன் நிபந்தனைக்கு அமைய அரச நிறுவனங்களில் ஆளணிக ளைக் குறைத்தல். நட்ட நிறுவனங்களை மூடிவிடுதல், சில அரச நிறுவனங்களை தனியாரிடம் ஒப்படைத்தல் (புகையிரத திணைக்களம், மின்சார சபை, பெற்றோலிய கூட்டுத்தாபனம், மரக்கூட்டுத்தாபனம், விமானசேவை) அத்தோடு நாணய வெளியீடுகளை நிறுத்துதல் தேவையற்ற முதலீடுகளை குறைத்தல். 4 இலட்சத்துக்கு மேற்பட்ட இராணுவத்தினரை பகுதியளவு குறைத்தல் போன்றன.

ஆனால் இதில் பல விடயங்களை இன்னும் பரிசீலனை செய்யாது இலங்கை உள்ள நிலையில் உண்மையில் IMF ஆனது 2.9 பில்லியன் அமெரிக்க டொலர்க ளையே 4 வருடத் தவணையாக தருவதாக ஒப்புதல் அளித்துள்ளது. ஆனால் இலங்கையின் கடன் ஆனது 60 பில்லியன் அமெரிக்க டொலராக உள்ள நிலையில் IMF உதவுகின்ற போது வெளிநாட்டு நேரடி முதலீடுகள் சுற்றுலா பயணிகளின் வருகை, நாட்டின் ஸ்திரத் தன்மை ஆகிய வற்றால் வருமான மூலங்கள் உருவாவதற் கான வாய்ப்புக்கள் உள்ள நிலையில் நிபந்தனைகள் பூர்த்தி செய்யாதவிடத்து பிரேமதாச ஜனாதிபதியாக இருந்த காலத்தில் IMF இடைநடுவில் வெளியேறி யது போல கைவிடுகின்ற சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. மேலும் GSP+ வரிச் சலுகையானது ஐரோப்பிய நாடுகளின் சலுகை பெரும்பாலான புலம்பெயர் தமிழர்களின் ஆதிக்கம் அதிகளவு காணப்படுகின்றமையால் மனித உரிமை மீறல்கள் உள்ள நாட்டிற்கு வழங்குவது சவாலாக உள்ளது. ஜப்பான் நாடானது அதிக உதவி வழங்கும் நாடு. மென் பொருள் புகையிரத வடிவமைப்பை கைவிட்டமையானது நன்கொடை வழங்கும் திட்டத்தில் ஜப்பான் பின்வாங்கியது எனலாம்.

மேலும் MCC உடன்படிக்கை தூக்கி எறியப்பட்டமை அமெரிக்காவின் உதவி யைத் தாமதப்படுத்தியதுடன் இந்தியாவின் அதானி நிறுவனத்துக்கு வழங்க இருந்த காற்றாலை ஒப்பந்தம் தாமதப்படுத்தப் படுகின்றமையும் சீனாவில் இருந்து வரும் 22% பொருட்களுக்குரிய தடைகளும் பல நாடுகளை உதவி வழங்கும் நிலையில் இருந்து பின்வாங்க வைத்திருக்கும் நிலையில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவற்றைச் சாதகமாகப் பரீசிலிப்பதால் இவ் அரசு நீடிக்குமாயின் 2023 இறுதியிலும் 2024 தொடக்கத்திலும் இலங்கை பழைய நிலைக்கு மீண்டெழு வதற்கான சாத்திய கூறுகள் காணப்படு கின்றன. எது எவ்வாறு இருப்பினும் அண்மைக்காலமாக இலங்கையின் நெருக்கடி நிலையானது நடுத்தர வருமானம் பெறுபவர்களை வெகுவாகப் பாதித்த தெனக் கொள்ளலாம். அதாவது நிலை யான அரச மற்றும் தனியார்துறை ஊழியர்கள் மற்றும் சில்லறை வர்த்தக நட வடிக்கைகள் ஈடுபடுபவர்களது கொள்வ னவு வலு மிகவும் குறைவடைந்துள்ளது.

நேரில் வரிகள் அதிகரித்தமையானது அதிகரித்த உணவுப் பணவீக்கத்தை மேலும் விஸ்தீரணப்படுத்தியதுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமளவு தாக்கத்தை அத்தியாவசிய பொருட்களின் மீது ஏற்படுத்தியது. இதனால் நடுத்தர வருமானம் உழைப்போர் இடையே வறுமை அதிகரித்து செல்வதுடன் மக்களின் பாதுகாப்பற்ற உணவுகள், உணவுப் பற்றாக்குறைகள் காணப்படுவதாக ஐக்கிய நாடுகளின் உணவு அமைப்பு குறிப்பிடுகின்றது. அதாவது இலங்கையில் 5.6 மில்லியன் நடுத்தர மக்கள் பாதிப்படைந்ததாக அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. மேலும் அதிகரித்த தொலைதொடர்பு கட்டணங்கள், போக்குவரத்து, சுகாதார மருத்துவ கட்டணங்கள், பெற்றோலியம், நீர் கட்டணம், குழந்தைகளுக்கான உணவுகள் ஆடை அணிகலன்கள் வரி, சீர்திருத்தத்தின் காரணமாக அதிகரிக்கப்பட்டமையால் நிலையான வருமானம் பெறும் நடுத்தர வர்க்கத்தினரை பெரிதாக பாதித்துள்ளது. அத்துடன் வங்கியில் இருந்து பெற்ற கடன்களுக்கான சலுகை காலம் கொடுக்கப்படாத நிலையில் அதிகரித்த பணவீக்கத்தை சமாளிக்கும் திறனற்றவர்களாகவும் மனவிரக்தி நிலையில் இருப்பதாகவும் அண்மைகால ஆய்வுகள் கூறுகின்றன.

மேலும் வங்கிகளின் தங்க ஆபரணங்களுக்கான அடகு வட்டிவீதங்கள் அதிகரித்தமை ஆனது, பல நடுத்தர குடும்பங்களுக்கு சவாலாக உள்ளமை அச்சொத்தை இழக்கின்ற தன்மை காணப்படுகின்றது. இது Covid 19 காலத்தைவிட மிக மோசமான காலப்பகுதிகளாகக் கொள்ளப்படுகின்றது.

மேலும் சட்ட அமுலாக்கம் இலங்கையின் சட்டத்துறையின் நெகிழ்வான போக்குகளினால் சிறுகச்சிறுகச் சேர்த்த சொத்துக்களையும் களவு, வழிப்பறி, கொள்ளை போன்றவற்றால் இழக்கின்ற நிலை பெரும்பாலும் நடுத்தர குடும்பங்களையே பாதித்துள்ளது. அத்தோடு இவர்கள் வாழ்க்கை தரம் ஆனது சார்பு வறுமையை ஒட்டியதாகவே காணப்படுகின்றது. அதாவது இன்னொரு வருடன் ஒப்பிட்டு வாழப்பழகியமையால் மேலும் வறிய நிலையை அடைவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன. பெரும்பாலான மூன்றாம் தர மக்களின் சேமிப்போ அல்லது முதலீட்டு திட்டங்களோ வங்கிகளை நம்பி உள்ளதே தவிர அசையாத சொத்துக்களில் காணப்படுவது குறைவாக உள்ளமையால் அதிகரித்த வாழ்க்கை செலவின அதிகரிப்புநிலை இவர்களை மந்தநிலைக்கு தள்ளியது எனலாம்.

உள்ளூர் விவசாயப் பொருட்கள் உட்பட உற்பத்திகள் அனைத்திலும் ஏற்பட்ட விலையேற்றமானது இவர்களின் அன்றாட உணவுப்பழக்க வழக்கத்திலும் மாற்றம் கொண்டு வரப்பட்டமையால் பல அசௌகரியமான வாழ்க்கை முறைக்குள் தள்ளப்பட்டுள்ளமையைக் கண்கூடாகக் காணமுடிகின்றது. ரஷ்யா உக்ரேன் நாடுகளுக்கிடையிலான யுத்த நிலமைகளால் அமெரிக்க உட்பட ஐரோப்பிய நாடுகளும் பாதிப்புக்கு உள்ளாகி இருப்பதால் (பெற்றோலிய, எரிவாயு, போக்குவரத்து) எமது நடுத்தர வருமான மக்களுக்கு கிடைக்கின்ற வெளிநாட்டு சொந்தங்களின் உதவிகளைத் தாமதப்படுத்தி மட்டுப்படுத்த வழிகோலியது எனலாம்.

மேற்கூறிய காரணங்களோடு சரியான திட்டமிடல் இன்மை, சேமிப்பு இன்மை, ஒப்பிட்டு வாழுதல், அதிக பேராசை, வரவுக்கு மீறிய செலவுகள், தங்கி இருப்போர்க்கான செலவுகள், பகட்டுத்தனமான வாழ்க்கை முறைகள் போன்றவற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றால் இலங்கையின் நெருக்கடிநிலை பெரிதளவு நடுத்தர வர்க்கத்தையே பாதித் துள்ளது. இவ்வாறான பாதிப்புக்கள் காரண மாக 56%ற்கு மேற்பட்ட நடுத்தர மக்கள் எதிர்காலத்தில் வறிய நிலையை அடைவார்கள் என பல்வேறு ஆய்வாளர் களும் குறிப்பிடுகின்றமை இலங்கையின் ஒரு துரதிஷ்டவசமான நிலையாகும். இதனால் கிட்டத்தட்ட 53% மேற்பட்ட நடுத்தர வருமான மக்கள் இலங்கையை விட்டு வேறுநாடுகளுக்கு செல்வதற்கு விருப்பம் கொள்வதாக அண்மைக்கால ஆய்வுகள் கூறுகின்றன. இவ்வாறு நாடு சுமுகமானநிலை அடைந்தாலும்கூடப் பாதிக்கப்பட்ட நடுத்தர குடும்பங்கள் மீள்வதற்கு சிலபல வருடங்கள் செல்லும் என்பது பல பொருளியல் ஆய்வாளர்களது கருத்தாக அமைகின்றது.

மேற்கூறியவற்றை தொகுத்து நோக்கும் போது ஆகஸ்ட் மாதத்தைக் காட்டிலும் ஒக்டோபர், நவம்பர் மாதம் முதன்மை பணவீக்கம் மற்றும் உணவு அல்லாத பொருட்களுக்கான பணவீக்கநிலைமை சற்று குறைவடைந்து உள்ளதுடன் மத்திய வங்கி சுயாதீன கட்டுப்பாட்டுடன் இயங்கு கின்றது. IMF இன் வருகை மற்றும் உலக உணவு அமைப்பு, உலக வங்கி சாதகமான சூழ்நிலைகளை ஏற்படுத்தி வருவதுடன் சுற்றுலாப் பயணிகள் வருகையும் அதிகரித்து காணப்படுகின்ற மையை உலக பொது அமைப்புகளின் நிதியீட்டங்க ளின் ஜனாதிபதிக்கான மேற்கத்தேய நாடுகளின் உதவிக்கரம் நீட்டுகை போன்றவை இலங்கையின் நிலைமையை சற்றே கடின நிலையில் இருந்து காப்பாற்றி உள்ளது. இது சிறந்த பொருளாதாரக் கொள்கை மூலம் மீட்கப்படுமாக இருந்தால் இரண்டு வருடங்களுக்குள் நாடு மீட்சியடை யக் கூடும். அரசியல் குழப்பம் மற்றும் ஸ்திரத்தன்மை ஆகியவை அதிகரிக்கும் ஆயின் இன்னும் பல ஆண்டுகள் நாடு சுபீட்சம் அடைவதற்கான எந்தவொரு வாய்ப்பும் இல்லை என்றே கூறலாம். எது எவ்வாறாயினும் நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வது பலரின் அவாவாகும்.

GDP - (Gross Domestic Product)
IMF - (International Monetany Fund)
MCC - (Millennium challenge corporation)







# ஆரம்பக்கல்வி, மாணவர்களின் மொழி விருத்தியின் பங்குதாரர்கள்!

திருமதி க. நல்லைமாமணி,
வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரிவு, ஊர்காவற்றுறை.

## அறிமுகம்

மனிதனை ஏனைய விலங்குகளில் இருந்து வேறுபடுத்திக் காட்டுவது மொழியாகும். ஆதியில் மனிதனும் ஏனைய விலங்குகளைப் போலவே சைகை மூலம் தனது உணர்வுகள், எண்ணங்களைப் பரிமாறி வந்தான். மிக வேகமாகத் தனது எண்ணங்களுக்குக் கருத்துருவும் வரிவடிவங்களையும் வழங்கியதனூடாக மொழியைச் செம்மைப்படுத்தினான். மொழியானது மனிதனது அறிவைச் சேகரித்து, களஞ்சியப்படுத்தி வைக்கும் ஓர் ஊடகமாக விளங்குகின்றது.

மொழி என்பது மொழித்திறனின் தொகுப்பு எனக் கருதப்படுகின்றது. ஆரம்ப காலங்களில் இலக்கண, இலக்கியக் கல்வியே மொழிக்கல்வி எனக் கொள்ளப்பட்டது. மொழி என்பது தொடர்பாடலுக்கான கருவி. மொழி அத்தகைய பணியை ஆற்றவேண்டுமானால் மொழித்திறன்களை விருத்திசெய்து கொள்வது அவசியமானதாகும்.

## அடிப்படை மொழித்திறன்கள்

அடிப்படை மொழித்திறன்களாக

* செவிமடுத்தல்
* பேசுதல்
* வாசித்தல்
* எழுதுதல்

போன்ற திறன்கள் அடங்குகின்றன. ஒருபிள்ளை, பிறப்பு முதலே மொழிக்கான திறன்களை மெல்ல மெல்லப் பெற்றுவிடுகின்றது. மொழித்திறனில் முதன்மையான, செவிமடுத்தல் மூலமும் ஒலிஎழுப்புதல் மூலமும் பிள்ளை தனது தொடர்பாடலை ஆரம்பித்துவிடுகிறது. செவிமடுத்தல் ஒலியை மையமாகக் கொண்டு அமைகின்றது. ஒருவரின் மொழி விருத்தியானது பெரும்பாலும் செவிமடுத்தல் அல்லது கேட்டல், பொருளுணர்ந்து கேட்டல், கிரகித்து கேட்டல் எனும் இரு பொறிமுறைகளைக் கொண்டது. இங்கு செவிமடுத்தல் / கேட்டல் என்பது ஒலிகளை சாதாரணமாக பொருளுணர்ந்து கிரகித்தல் என்பதையே குறிக்கும்.

மொழித்திறனில் பேசுதல் என்பது எண்ணங்கள், கருத்துக்களை வெளிப்படுத்தும் ஊடகமாக திகழ்கின்றது. ஒருவர் எவ்வளவு அறிவுள்ளவராக இருந்தாலும் அதனை வெளிப்படுத்தும் திறனற்றவராக இருப்பின் அது பயனற்றதே. இன்று பேசுதல் ஒருகலையாகக் கொள்ளப்படுகின்றது. பேச்சுக்கலை இல்லாத துறையே இல்லை என்னுமளவுக்கு இன்று பேச்சுத்திறன் முக்கியம் பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படை மொழித்திறன்களில் வாசித்தலும் ஒன்றாகும். இது "வாசிக்கக் கற்றல்", "கற்க வாசித்தல்" எனும் இரு செயன்முறையைக் கொண்டது. வாசிக்கக் கற்றல் என்பது பிள்ளையின் ஆரம்ப நிலையிலும், கற்க வாசித்தல் பிள்ளையின் கற்றலுக்கான தேடல் நிலையிலும் இடம் பெறுகின்றது. வாசித்தலினால் கிரகித்தல், தகவல் சேகரித்தல், இரசனைபெறல், சொல்வளத்தை விருத்தி செய்தல், சுய கற்றல் போன்ற நன்மைகள் விளைகின்றன.

மொழித்திறனில் இறுதியாக அமைவது எழுதுதல் ஆகும். எழுதுவது இரு வகைக ளில் அமைகின்றது.

1. எழுதும் திறன்
2. எழுத்துத் திறன்

எழுதும் திறன் எனும் போது எழுத்துக்களை பொறிமுறையாகவும் இலக்கணவழு இன்றியும் எழுதுதல் ஆகும். எழுத்துத்திறன் என்பது ஆக்க எழுத்தைக் குறிக்கும். அதாவது கட்டுரை, கதை, கடிதம் மற்றும் இலக்கியப் படைப்புக்களை எழுதுவதில் அடங்கும்.

## மொழி விருத்தியில் பெற்றோரின் வகிபாகம்

குழந்தை ஒன்று கருவில் இருக்கும் போதே தாயுடனான தொடர்பாடலைக் கொண்டுள்ளது என்பது மருத்துவ அறிஞர்களின் கருத்து. பிறப்பின் பின்பும் குழந்தையின் முதல் தொடர்பாடலாளராக தாயே விளங்குகின்றார்.

பின்பு குடும்பம் சார்ந்த உறுப்பி னர்கள், பிள்ளையுடன் தொடர்புறுகின்றனர் என்ற வகையில் பிள்ளையின் மொழி விருத்தியில் குடும்பத்தின் பங்கு முக்கிய மானதாக விளங்குகின்றது.

குடும்பத்தின் அங்கத்தவர்கள் பயன் படுத்தும் வார்த்தைப் பிரயோகங்களை பிள்ளைகள் அப்படியே கற்றுக்கொள்கின் றனர். நாகரிகமான உரையாடல்கள் இடம்பெறும் வீட்டுச் சூழலில் வளரும் பிள்ளைகள் நல்ல மொழியறிவு வளம் கொண்டதாக வளருகின்றன. குடும்ப அங்கத்தவர் அதிகமாக உள்ள குடும்பங்க ளில் வளரும் பிள்ளைகள் அதிகமான சொற்களை உள்வாங்கியவர்களாகவும் சரளமாக உரையாடக் கூடியவர்களாகவும் வளர்கின்றனர். முன்னைய காலங்களில் அதிகமான குடும்பங்கள் கூட்டுக் குடும்பங்களாகக் காணப்பட்ட போது அக் குடும்பங்களில் பாட்டி, தாத்தா, மாமன், எனப் பலதரப்பட்ட உறவுகள் இருக்கும் சந்தர்ப்பத்தில் பிள்ளையினுடனான நெருக்கமான உறவும், பிள்ளைக்காக நேரத்தை செலவழிக்கக் கூடியதாக இருந்ததன் விளைவாகப் பிள்ளையின் மொழிவிருத்தி அதிகமாகக் காணப்பட்டது.

இன்றைய அவசரயுகத்தில் குடும்பங்கள் தனிக் குடும்பங்களாக மாறியதோடு பெற்றோர்களினதும் பிள்ளைகளினதும் தொடர்புறும் நேரம், சம்பாசிக்கும் நேரம் என்பன குறைந்ததன் விளைவாகப் பிள்ளைகளின் மொழி விருத்திக்கான சந்தர்ப்பங்கள் குறைந்துள்ளமையைக் காணலாம்.

## மொழிவிருத்தியில் பெற்றோரின் பங்களிப்பு

பிள்ளையின் செயற்பாட்டிற்கும் சிந்தனைச் செயன்முறைக்கும் மொழி அவசியமானது என்ற வகையில் பிள்ளை களின் மொழிவிருத்தியில் பெற்றோர் பங்களிப்பது மிகமிக அவசியமாகும். மொழிவிருத்திக்கான செயற்பாடுகளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர் ஏற்படுத்த வேண்டும். பின்வரும் செயற்பாடுகளை ஏற்பாடு செய்யமுடியும்.

* தினமும் குறிப்பிட்ட நேரத்தை பிள்ளை களுக்காக ஒதுக்கி அவர்களுடன் சமூக உரையாடலில் ஈடுபடுதல்.

* ஓய்வுநேரங்களில் நல்ல கதைகளையும், பாடல்களையும் சொல்லிக் கொடுத்தல்.

* பிள்ளைகள் விரும்பும் படியாக சமயப் பாடல்களை (தேவாரம்) உரக்கவும், பக்தியுடனும் சொல்லிக் கொடுத்தல்.

* வீட்டிலேயே அவர்களுக்கான நூல்களை வாங்கிக் கொடுத்து வாசிக்கத் தூண்டுதல்.

* பிள்ளைகள் மொழிப்பிரயோகத்தில் தவறு ஏற்படும் பட்சத்தில் உடனேயே திருத்தம் செய்தல். உறவினர்களுக்குக் கடிதம் எழுதும் பழக்கத்தைப் பிள்ளைக ளுக்கு ஏற்படுத்தல்.

* பாடசாலையில் படித்த கதை, பாடல் போன்றவற்றை வினாவுதல்.

* வெளியிலே அழைத்துச் செல்லும் போது வணிகநிலையங்களின் பெயர்ப் பலகை களை வாசிக்கத் தூண்டுதல்.

* நூலகத்திற்கு அழைத்துச் செல்லல்.

## இலத்திரனியல் சாதனங்களின் தாக்கம்

ஆரம்பக்கல்வி மாணவர்களின் மொழி விருத்தியில் இலத்திரனியல் சாதனங்களின் தாக்கம் குறிப்பிடத்தக்க பங்கை வகிக்கின் றது. ஆரம்பப் பிரிவு மாணவர் என்ற வகையில் தொலைக்காட்சி, கணினி என்பன முக்கியம் பெறுகின்றது.

வசதியான பெற்றோரின் பிள்ளைகள் இன்னும் பிறசாதனங்களைப் பயன்படுத்து வதும் உண்டு. பெரும்பாலும் எல்லா வீடுகளிலும் தொலைக்காட்சி ஆக்கிரமித் துள்ளமையும் அதுவும் சீரியல் நாடகங்கள் குறிப்பாகக் குடும்பப் பெண்களைக் கட்டிப் போட்டிருக்கின்றது என்பதையும் மறுக்க இயலாது. தொலைக்காட்சி நிகழ்ச்சியைப் பார்ப்பதால் மாணவர்களின் மொழி ஆற்றல், சொற்களஞ்சிய விருத்தி ஏற்படு கின்றது என்பது ஓரளவு உண்மையாயினும் அதன் மறுபக்கம் வேறுபட்டதாக அமைகின்றது. அதாவது தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மற்றும் பிள்ளைகள் விரும்பிப் பார்க்கின்ற "காட்டூன்" போன்ற நிகழ்ச்சிக ளால் பிள்ளைகளின் சுயகற்றல், நூல் வாசிக்கும் பழக்கம் மற்றும் இலக்கியப் படைப்புக்களை வாசிக்கும் ஆற்றல் என்பன வெகுவாகக் குறைந்துள்ளமை, பிள்ளைகளின் மொழி வளர்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அத்தோடு தொலைக் காட்சி மற்றும் வானொலியில் பேசப்படும் மொழி நாகரீகமாகவும், கவர்ச்சியாகவும் இருக்க வேண்டும் என எண்ணி இலக்கண வழுக்களோடு பேசப்படுவதையும் காணலாம். இதனைப் பின்பற்றும் இளைய சமூகம், மொழி யினைச் செம்மையாகவும் திருத்தமாகவும் பேணும் என்பது ஐயமே.

## மொழி விருத்தியில் பாடசாலையின் பங்கு

பல்வேறு குடும்பச் சூழலில் நியமமற்ற மற்றும் பேச்சு வழக்கு மொழிகளைப் பேசி வந்த பிள்ளை முன்பள்ளியில் மொழி யினைத் திருத்தமாகப் பயன்படுத்தும் திறனை முழுமையாகப் பெற்றுவிடாது.

அடுத்த கட்டமான பாடசாலையிலேயே நியமமான முறைகளைப் பின்பற்றத் தொடங்குகின்றது. கலைத்திட்டத்திற் கேற்ப மொழித்திறன்கள் யாவும் சம அளவில் கற்பிக்கப்படுகின்றன. ஆரம்பப் பிரிவில் மொழி கற்பித்தலில் பொது நோக்கங்களை பின்வருமாறு வரையறுக் கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* அடிப்படை மொழித்திறன்களில் தேர்ச்சி அடைதல்.

* நாளாந்தத் தேவைகளுக்காக மொழியை பயன்படுத்துதல்.

* மொழி மூலம் உள ஆற்றல்களை வெளிப்படுத்துதல்.

* மொழிசார் ஆக்கங்களை இரசித்து நயத்தல்.

* மொழியைத் திருத்தமாகவும், ஆக்க பூர்வமாகவும் கையாளுதல்.

மொழிவிருத்திச் செயற்பாடுகளை பாடசாலைகளே நிறைவாகச் செய்யக் கூடிய சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. தனியாக மொழிப்பாடத்திற்குரிய செயற் பாடுகளோடு ஏனைய பாடங்களினைக் கற்பிக்கும் போது மொழிவிருத்திச் செயற்பாடுகள் இடம்பெறும் சந்தர்ப்பங்க ளும் உள்ளன. இணைச் செயற்பாடுகள் மற்றும் மொழித்திறன் நிகழ்வுகள், போட்டிகள், கலாசார நிகழ்வுகள் ஊடாக வும் பாடசாலைகளில் இச்செயற்பாடுகள் மேம்படுத்தப்படுகின்றன.

மொழியைக் கற்றுக்கொள்வது என்ப தன் பொருள், மொழியை பற்றிய அறிவை வளர்த்துக் கொள்வது அன்று மாறாக மொழியைப் பயன்படுத்துவதே ஆகும் என்பது மொழியியலாளர்களின் நிலைப் பாடு. பாடசாலைகளில் முன்னர் மொழி கற்பித்தல் என்பது இலக்கண இலக்கிய விடயங்களைக் கற்றல் என்பவற்றையே கொண்டிருக்கின்றன. இன்று மொழித் திறன்களை விருத்தி செய்தல், பயிற்சி செய்தல் என்பவற்றிற்கு புதிய மொழிகற்றல் கற்பித்தலிற்கு முக்கியத்துவம் வழங்கப்படு கின்றது. அத்தோடு மொழித்தேர்ச்சிகளுக் கான பரீட்சைகளையும் நடாத்திச் சான்று படுத்தப்படுகின்ற அல்லது தகைமைப் படுத்தப்படுகின்ற செயற்பாடுகளையும் பாடசாலைகள் செய்கின்றன.

## நிறைவுரை

மொழி பிள்ளைகளிடத்தே தொடர்பாட லிற்கான சாதனமாக மட்டும் அமைந்துவிட வில்லை. அவர்களின் சிந்தனை ஆற்றலை மேம்படச் செய்யவும் உதவுகின்றன. இன்று நமது பண்பாடு, கலாசாரம், என்பவற்றைப் பேணவேண்டும் எனின் தாய் மொழியின் தூய்மையையும் செழுமையையும் பேணிக் காக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகி யுள்ளோம். மொழி என்பது ஒர் இனத்தின் அடையாளமாகக் கூடக் கொள்ளப்படு கின்றது. உலகமயமாதல், தொழில்நுட்ப வளர்ச்சி போன்றவற்றின் விளைவாக எந்தவொரு மொழியும் தமது செழுமையை இழந்து வருகின்றது என்றே கருதப்படு கின்றது. இந்நிலையில் பிள்ளைகளின் மொழிவிருத்தியில் பெற்றோர்கள், முன் பள்ளிகள், வெகுஜன ஊடகங்கள், பாடசாலை மற்றும் பொது அமைப்புக்கள் போன்றன இந்த விடயத்தில் கரிசனை கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. எனவே நமது அன்றாட செயற்பாடுகளில் வாசித்தல், நேரடி உரையாடல் போன்ற வற்றின் மூலமாக சமூகத்தில் மொழி விருத்தியை மேம்படுத்திக்கொள்ளலாம்.

## உசாத்துணை நூல்கள்


கலாமணி,த. (2013) மாற்றம் காணும் கல்வி உலகுடன் இணைதல். ஜீவநதி வெளியீடு, கலையகம் -அல்வாய்

சின்னத்தம்பி,மா. (2013) சமுதாயத்திற்கான கல்வி. கரிகணண் பிறிண்டேர்ஸ், இல :681 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

இராதாகிருஸ்ணன்,மு. (2014) கற்றலும் கற்றல் சூழலும், மதுரா பதிப்பகம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலப் பயணம்

திரு. தோ. லலித்,
பிரதேச செயலகம்,
ஊர்காவற்றுறை.

இந்த உலகத்தில் வாழ்கின்ற எல்லோரும் வாழ்க்கையில் கண்டிப்பாக எதையாவது இழந்திருப்போம். சிலபேர் அவர்களுக்குப் பிடித்த நபரை இழந்திருப்பார்கள். சிலபேர் அவர்களுக்குப் பிடித்த பொருளை இழந்திருப்பார்கள். இதில் நிறையப்பேர் நமது வாழ்க்கையில் இது நடக்காமல் இருந்திருந்தால் இந்த நேரம் நன்றாக இருந்திருக்கும் என்பர். பலபேருக்கு இப்படி நடந்திருந்தால் வாழ்க்கை நன்றாக இருந்திருக்கும் என்று யோசிக்கத்தோன்றும்.

திரும்பவும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால் நான் இந்த முடிவு எடுத்து முன்னேறியிருப்பேன். இப்படி நாங்கள் அனைவரும் நினைப்பது நடக்குமா? நம்மால் இந்த நொடியை மட்டும்தான் அனுபவிக்க முடியும். ஆனால் விஞ்ஞானம் இந்தக் கூற்றை மறுக்கின்றது. காலப்பயணம் சாத்தியம் என அடித்துக் கூறுகின்றது. காலப்பயணம் என்றால் ஏற்கனவே எங்களால் நடந்த சந்தர்ப்பத்தைப் பார்க்க முடியும். வாழ்க்கையில் நடக்கப் போகின்ற சந்தர்ப்பத்தை எங்களால் தடுக்க முடியும்.

உண்மையில் காலத்தைத் தாண்டிப் பயணிப்பது சாத்தியமா? பொதுவாக நாம் ஒரு பொருளைக் காண்பதற்கு தேவை வெளிச்சம் என்கின்ற ஒளி. அதற்கு முக்கிய காரணம் போட்டான் என்கிற ஒளித்துகள்களை வெளியிடும் சூரியன். சூரியனிலிருந்து வெளியிடும் போட்டான் என்கின்ற எடையில்லாத ஒளித்துகள்கள் பூமியில் உள்ள பொருட்களின் மேற்படு வதனால் நம்மால் எந்த ஒரு பொருளையும் பகலில் காணமுடிகிறது. அதே பொருட்கள் இரவில் நம் கண்முன் இருந்தாலும் சூரியஒளி இல்லாமல் நம்மால் காணமுடியாது என்பதே வெளிச்சம் என்ற ஒளியின் அடிப்படை. இப்படி சூரியனிலிருந்து புறப்பட்டுவரும் போட்டான் எனும் ஒளித்துகள் பூமியை அடைய 8 நிமிடங்கள் 24 நொடிகள் ஆகும்.

அதாவது இதன் அடிப்படை உண்மை என்னவென்றால் நாம் இந்தநொடியில் நிகழ்காலத்தில் பார்த்து கொண்டிருக்கும் எந்தவொரு காட்சியும் 8 நிமிடம் 24 நொடிகளுக்கு முன்பு இருந்தவை என்பதே அறிவியல் கூறும் உண்மை ஆகும். இன்னும் தெளிவாகக் கூற வேண்டும் என்றால் இந்தநொடியில் சூரியன் வெடித்து அழிந்து போனாலும் இதனை நாம் அறிந்து கொள்ள 8 நிமிடமும் 24 நொடிகளும் ஆகும். என்பது தான். எனவே ஒளியை விட வேகமாகப் பயணித்தால் பின்னோக்கி இறந்தகாலத்திற்குச் செல்ல முடியும் என்பதே Time Travel எனப்படும். காலத்தைத் தாண்டிய பயணத்தின் அடிப்படை. இதனைத்தான் ஐன்ஸ்ரீன் E=Mc2 என்ற சார்பியல் கொள்கை விளக்குகிறது.

எந்த ஒரு பொருளும் ஓய்வு அல்லது இயக்கத்தில் இருக்கும் போது குறிப்பிட்ட ஆற்றலைக் கொண்டிருக்கும் என ஒலியின் திசை வேகத்தை கொண்டு 1905ம் வருடம் அவர் வெளியிட்ட "றிலேற்றிவிற்றி" தியரிதான் Time Travel பற்றிய முதல் சிந்தனையை ஆழமாக விதைத்தது. இதனை மையமாக வைத்து ரைம் ராவல் அடிப்படையில் பலதிரைப் படங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியாகி உள்ளன. ஆனால் இது வரையிலும் ரைம் மிசின்கள் நிஜத்தில் உருவாக்கப்படவில்லை என்றாலும் காலத்தை தாண்டிப் பயணித்தவர்களின் மர்மங்கள் நீடித்து கொண்டுதான் இருக்கின்றன. Time Travel நிகழ்ந்து கெமராவில் பதியப்பட்ட சந்தர்ப்பங்களையும் மற்றும் நிஜத்தில் தற்போது உள்ள பொருட்களையும் பின்வருமாறு நோக்குவோம்.

**மோதிர வோச்:**

2008ம் வருடம் சீனாவில் நடந்த ஒரு தொல்பொருள் ஆராய்ச்சியில் மணிக்கூட்டு வடிவத்தில் இருந்த ஒரு மோதிரம் கண்டு எடுக்கப்பட்டுள்ளது. இதனை ஆராய்ந்த போது தங்கத்தால் செய்யப்பட்ட இது 4000 வருடங்கள் பழமையானது என்று கண்டறியப்பட்டது ஆனால் இன்று புழக்கத்தில் இருக்கும் கடிகாரம் கண்டுபிடிக்கப்பட்டே 100 வருடங்கள் தான் ஆகின்றது என்ற போது 4000 வருடங்கள் பழமையான மோதிரம் இந்த வடிவத்தில் இருப்பது மர்மமான ஒன்று தான். ஒருவேளை Time Travel மூலம் கடந்த காலத்திற்கு வந்தவர்கள் விட்டு சென்றிருக்கலாம் என்று இதற்கான ஆதாரமாகப் பார்க்கப்படுகின்றது.

**திரைப்பட சிறப்புக்காட்சி நிகழ்வு :** 1928ம் வருடம் வெளியான சார்ளிசப்ளின் நடித்த தி சர்க்கஸ் என்ற திரைப்படம் அந்த திரைப் படத்தின் சிறப்புக்காட்சி திரையிடப்பட்ட அன்று வருகை தந்த ஒரு பெண் தனது காதுகளில் செல்போன் ஒன்றை வைத்து பேசுவது போல் ஒரு காட்சி தற்செயலாகப் பதிவாகியிருந்தது. நீண்ட வருடங்களுக்கு பின் சமீபத்தில் இணைய தளத்தில் வெளியாகி வைரலான இந்த காட்சி Time Travel பற்றிய மர்மத்தை ஏற்படுத்து வதாகவே அமைந்துள்ளது. அப்போது தொலைபேசிகள் உபயோகத்தில் இருந்தாலும் செல்போன் போன்ற வயரல்ஸ் சாதனங்களும் செல்போன் ரவர்களும் இல்லாத காலத்தில் இது எப்படி சாத்தியம் என்பதே இந்த மர்மத்திற்கான காரணம் ஆகும்.

**கிறிஸ்தவத் தேவாலயம்:** ஸ்பெயின் நாட்டில் அமைந்திருக்கும் புகழ்பெற்ற பழமையான தேவாலயம் தான் ஜரோநிமஸ்கற்ரல். கி.பி.12ம் நூற்றாண்டில் இந்த தேவாலயத்தின் வெளிப்புற அமைப்பில் விண்வெளிவீரனைப் போன்ற உருவம் செதுக்கப்பட்டுள்ளது. எந்த ஒரு தொழில்நுட்பமும் இல்லாத 12ம் நூற்றாண்டில் விண்வெளி வீரனை போன்ற அச்சு அசலான உருவம் எப்படி வந்தது என்றும் இது Time Travel மூலம் எதிர்காலத்தில் இருந்து வந்தவர்களால் கட்டப்பட்டு இருக்கலாம் என்றும் காலப்பயணம் குறித்த சந்தேகத்தை உறுதிப்படுத்துவ தாகவே அமைந்துள்ளது.

**குத்துச்சண்டை நிகழ்வு :** ஆகஸ்ட் 1995ல் புகழ்பெற்ற குத்துசண்டை வீரர் மைக்டைசனுக்கும் பீற்றர் மென்ளே என்பவருக்கும் இடையே குத்துசண்டை போட்டி ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. இதில் ஆச்சரியம் என்வென்றால் போட்டியை காணவந்த ஒருவர் கெமரா மொபைல் போன் ஒன்றினைப் பயன்படுத்தி படம் பிடிப்பது போன்ற ஒரு பதிவான காட்சி தான். 1990களில் சாதாரண செல் போன்களே பெரும்பாலும் இல்லாத போது கெமரா மொபைல் போன் ஒன்றினைப் பயன்படுத்தி படம் பிடிப்பது போன்ற ஒரு பதிவான காட்சி Time Travel பற்றிய மர்மமாகவே உள்ளது.

**மியூசியம்:** அமெரிக்காவின் மியூசியம் ஒன்றில் இடம் பெற்றிருக்கும் பழமையான கற்சிலை ஒன்றில் ஒரு பணிப்பெண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லப்டொப் போன்ற ஒரு உருவத்தை தன் எஜமானி முன்தாங்கிநிற்பது போலவும் அதில் USP போட் இருப்பது போல் வடிவமைக்கப்பட்டுள்ளது. பழங்கால கிரேக்க, ரோமானிய ஓவியங்களிலும் இது போன்ற உருவங்கள் இடம் பெற்றிருக்கின்றன. கி.மு.100வது வருடத்தை சேர்ந்ததாக கூறப்படும் பல்லாயிரம் வருடங்கள் பழமையான தொல்பொருள் ஒன்றில் தற்கால நவீன சாதனம் எப்படி வந்தது என்பது ஆச்சரியம் கலந்த மர்மத்தை ஏற்படுத்துவதாகவே அமைந்திருக்கின்றது.

காலப்பயணத்தால் மனிதர்களுக்கு பிற உயிர்களுக்கும் பல நன்மைகள் கிடைத்தாலும் காலப்பயணம் இயற்கை விதிக்கு முரணாக இருப்பதாலும் இயற்கை தன்னை சமநிலைப்படுத்துவதாலும் இயற்கையைத் தனது போக்கில் விடுவதே இயற்கைக்கும் மனிதகுலத்துக்கும் பிற உயிர்களுக்கும் நன்மை பயக்கும் என்பதே சாலச்சிறந்ததாகும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனலைதீவு பொதுநூலகம் : வளர்ச்சிப்போக்கு பற்றிய ஒரு பதிவு

**திருமதி தர்மிளா செந்தூரன்,**
**நூலகர் - பொது நூலகம், அனலைதீவு.**

உள்ளூராட்சி மன்றங்கள் தமது நிருவாக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சேவைகளையும் பல்வேறு செயற்திட்டங்களையும் வழங்கி வருகின்றன. அனலைதீவு கிராமாட்சி மன்றம், அனலைதீவு கிராமசபை, V.C.என அழைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத்தில் அனலைதீவு பொதுசன நூல் நிலையம் 1979ம் ஆண்டு கார்த்திகை மாதம் 28ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. அப்போது 108 நூல்களுடன் கிராமாட்சி மன்ற கட்டடத்தின் ஓர் சிறிய அறையில் ஆரம்பிக்கப்பட்ட அன்றைய நூலகத்தின் பொறுப்பாளராக கணேசையர் சௌந்தரராஜன் அவர்கள் 28.11.1979 இல் நியமிக்கப்பட்டார். இவரே இந்த நூலகத்தின் முதலாவது நூலகப் பொறுப்பாளர் ஆவார். இவரது காலப்பகுதியில் நூலகமானது படிப்படியாக வளர்ச்சி காணத் தொடங்கியது.

சிறியதாக ஆரம்பிக்கப்பட்ட நூலகத்தில் நூல்களின் அதிகரிப்பு, வாசகர் அதிகரிப்பு காரணமாக இரவல் வழங்கும் பகுதி, உசாத்துணைப்பகுதி, சிறுவர் பகுதி, வாசகர்சாலைப் பகுதி எனப் படிப்படியாகப் பலபகுதிகள் உருவாக்கப்பட்டன. நூலக ஆலோசனைக்குழு ஆரம்பிக்கப்பட்டு அக்குழுவின் ஒத்துழைப்புடன் 1985ம் ஆண்டு ஜனவரி மாதம் ‘அனலை’ எனும் கையெழுத்துச் சஞ்சிகை வெளியிடப்பட்டது. அச்சஞ்சிகையானது அனலை வாழ் மக்களின் வாழ்வியல் மற்றும் கிராமத் தகவல்கள், வாழ்வாதார முயற்சிகள், கவிதை, கட்டுரை, சிறுகதை, நாடகம் போன்றவற்றை உள்ளடக்கி வெளிவந்தது.1990 தொடக்கம் 1996 வரையான இன முரண்பாட்டுக் காலப்பகுதியில் யாழ்ப்பாணத்துடன் எந்த விதமான தொடர்பும் அற்றிருந்த தனிமைப்படுத்தப்பட்ட காலப்பகுதியில் கப்பல் மூலம் கொழும்பிலிருந்து நூல்கள் கொண்டு வரப்பட்டு அனலைதீவு பொது நூலகமானது மாணவ சமுதாயத்தை வளர்த்தெடுப்பதில் பெரும் பங்காற்றியது என்றால் அது மிகையாகாது. எந்தவொரு ஆசிரிய வளமும் இல்லாத காலகட்டத்தில் நூலகத்தினூடாக அனைத்து விதமான கற்றல் செயற்பாடுகளையும் மாணவர் சமுதாயம் பெற்றுக் கொண்டமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும். நூலகத்திற்கான நிரந்தர கட்டடமாக திரு.மு.சீவரெத்தினம் ஆசிரியர் அவர்களின் வீடு கொள்வனவு செய்யப்பட்டது. இந்நூலகத்தின் நூலகர் 2003 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஊர்காவற்றுறை பொது நூலகத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற போது செல்வி சோ.லதா அவர்கள் நூலகப் பொறுப்பாளராக கடமையாற்றினார். இந்நிலையில் இரண்டாவது நூலகராக சாவகச்சேரி பிரதேசசபையில் இருந்து திரு.சி. சிவசோதிலிங்கம் அவர்கள் இடமாற்றம் பெற்றுவந்து பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவரது காலப்பகுதியில் நூலகமானது பல நூற்சேர்க்கைகளையும் தளபாடங்களையும் பெற்றுக்கொண்டதுடன் அனலைதீவில் தங்கி நின்று வாசகர் தேவைக்கேற்பச் சிறந்த சேவையினை வழங்கி வந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இக்காலப்பகுதியில் நூலகப் பட்டியலாக்கம் மற்றும் நூலகத்தொண்டர்களுக்கான பயிற்சி நெறிகள் நூலகரால் வழங்கப்பட்டு வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் சான்றிதழ்களும் வழங்கப் பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ச்சியாக 2008ம் ஆண்டு நூலக சேவகராக செல்வி. தர்மிளா சந்திரசேகரம் அவர்கள் பணியினைப் பெற்றுக் கடமை புரியும் வேளையில் 2011ம் ஆண்டு வடமாகாண நூலகர் சேவை போட்டிப் பரீட்சையில் சித்திபெற்று ஊர்காவற்றுறை பிரதேச சபையில் நூலகராகத் தெரிவாகி திரு.சி.சிவசோதிலிங்கம் அவர்களின் பணி இடமாற்றத்தின் பின் அனலைதீவு பொதுநூலகத்தில் நூலகராகக் கடமை யேற்றுக் கொண்டார். இவர் காலத்தில்2011 தேசிய வாசிப்பு மாதச் செயற்றிட்டங்களை சிறந்த முறையில் செயற்படுத்தி 2012ம் ஆண்டு தேசிய விருதினை அனலைதீவு பொதுநூலகம் முதன்முதலில் பெற்றுக் கொண்டது. தொடர்ச்சியாக 2012ம் ஆண்டு அனலைதீவு கலாசார ஒன்றியம் (கனடா) அமைப்பு நூலக சமூகத்தின் கோரிக் கையை ஏற்றுக்கொண்டு பொது நூலகத்தி னைப் புனரமைப்புச் செய்தது. சுற்றுமதில் அமைக்கப்பட்டு நீர் இணைப்பு வசதிகள் செய்யப்பட்டு வர்ணம் பூசப் பட்டது. 2012ம் ஆண்டும் தேசிய வாசிப்பு மாத செயற் திட்டங்களுக்காக 2வது தடவையும் நூலகம் தேசிய விருதினைப் பெற்றுக் கொண்டது.

2013 இல் முன்னர் வெளிவந்த "அனலை" கையெழுத்துச் சஞ்சிகை அச்சு வடிவில் வெளியிடப்பட்டது. தொடர்ந்து 2014ம் ஆண்டு அனலைதீவு பொது நூலகமானது சிறந்த பேணற்செயற்பாட் டினை மேற்கொண்டமைக்காக வடமாகா ணத்தின் பிரதேசசபை நூலகங்களில் முதன்மை விருதினைப் பெற்றுக் கொண் டது. இவ்வாறாகச் சமூகத்தோடு ஒன்றிய சேவையினை அனலைதீவு நூலகமானது தொடர்ச்சியாக மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்க விடயமாகும். 2013ம் ஆண்டு நூலகப் பரிசாரகராக செல்வி.மு. சுதர்சினி அவர்கள் பணிக்கு அமர்த்தப் பட்டார். அவ்வாண்டும் தேசிய விருதினை அனலைதீவு பொது நூலகமானது பெற்றுக் கொண்டது. 2019 நூலகப் பரிசாரகர் மு.சுதர்சினி அவர்கள் ஊர்காவற்றுறை பொது நூலகத்திற்கு தற்காலிக இடமாற்றம் பெற்றுச் சென்றவேளை அனலைதீவு உப அலுவலகத்தில் பணியாற்றிய செல்வி. சு.அருளினி அவர்கள் தற்காலிக நூலகப் பரிசாரகராகக் கடமை யாற்றி நூலக சேவையை நடாத்திட உதவி வருகிறார்.

மேலும் நூலகத்தின் விரிவாக் கத்திற்குப் போதிய இடவசதி இல்லாமை முக்கிய காரணமாக இருக்கின்ற போதிலும் பத்திரிகை சேவை வாசகர், சேவை இரவல், வழங்கும் சேவை, உசாத்துணை சேவை சிறுவர் பகுதி சேவை, நிழற்பிரதி சேவை, சிறுவர் பூங்கா மற்றும் சிறுவர் கதை சொல்லும் நேரம் எழுத்தறிவு ஊட்டல் போன்ற செயற்பாடுகள் நூலகத்தால் சிறப்பாக நடாத்தப்படுகின்றன. நூலகத் தில் தொண்டு அடிப்படையில் பயிற்சி நெறியினை வாசகர்வட்ட உறுப்பினர்கள் பெற்றுக்கொள்கின்றனர். அனலைதீவு பிரதேசத்தினைப் பொறுத் தவரை தனியார் கல்வி நிலையங்கள், வேறு பொழுது போக்கு வசதிகள் எதுவும் இல்லாத நிலையில் இப்பிரதேசத்தின் சிறந்த பயன் பாட்டு வளமாகப் பொது நூலகமானது விளங்குகின்றது. அதன் சேவைகள் தொடர்ந்து நடைபெறச் சமூக நிறுவனங்கள் ஒத்துழைப்பு நல்குவது குறிப்பிடத்தக்க விடயம். எனினும் இந் நூலகத்திற்குக் கேட் போர் கூடம் ஒன்று மிகவும் அவசியமான தாகக் கருதப்படுகிறது. விழாக்கள், கருத்த ரங்குகள் ஒன்றுகூடல்களின் போது மிகவும் சிரமப்படும் நிலை காணப் படுகிறது.

தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழா, உலகபுத்தகதினம், நூலகவாரம் போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு கலைஞர்கள், எழுத்தாளர்கள் கௌரவிப்பு மற்றும் நூலகத்தின் 'அனலை' சஞ்சிகை வெளியீடு என்பனவும் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

நூலகமானது ஓர் பல்கலைக்கழகமாகும். தீவகத்தின் சிறந்த கலைக்களஞ்சியமாகவும் விளங்கி வருகின்ற அனலைதீவு பொது நூலகத்தின் வளர்ச்சிப்போக்கு மேலும் சிறக்க பொது நிறுவனங்கள் முனைப்புடன் செயற்பட வேண்டும் என்பது அவசியமான வேண்டுகை ஆகும்.

---

* வாடா மல்லிகைக்கு வண்ணம் உண்டு - வாசமில்லை
  வாசமுள்ள மல்லிகைக்கோ வயது குறைவு.
* வீரமுள்ள கீரிக்கு கொம்பில்லை.
  கொம்புள்ள மானுக்கோ வீரம் இல்லை.
* கருங்குயிலுக்கு தோகையில்லை .
  தோகையுள்ள மயிலுக்கோ இனிய குரலில்லை.
* காற்றுக்கு உருவமில்லை - கதிரவனுக்கு நிழலில்லை
  நீருக்கு நிறமில்லை - நெருப்புக்கு ஈரமில்லை.
* ஒன்றை கொடுத்து ஒன்றை எடுத்தான்,
  ஒவ்வொன்றிற்கும் காரணம் வைத்தான்.
* எல்லாம் இருந்தும், எல்லாம் தெரிந்தும்
  கல்லாய் நின்றான் இறைவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில் முயற்சியாண்மை மூலம் பொருளாதாரத்தை வெல்லுதல்

திரு. செல்லத்தம்பி சுதன்
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம் ஊர்காவற்றுறை.

உலகின் படைப்பும் உயிரினங்களின் இருப்பும் அதன் நிலைப்பும் முயற்சியாண்மையிலே தங்கியிருக்கின்றது. இயற்கையில் இருந்து செயற்கை வரை, உயிரினங்களில் இருந்து சடப்பொருட்கள் வரை முயற்சியாண்மையின் பயனாலேயே இயங்குகின்றன. அது இயற்கையில் நிகழ்வதாக அல்லது செயற்கையாக அதாவது மனித முயற்சியின்பால் ஏற்படுவதாக அமையலாம். புவியின் அசைவும், மரங்களின் வளர்ச்சி, ஒரு எறும்பின் உணவு தேடல், சிறு பிள்ளையின் அசைவு என எல்லாச் செயற்பாடுகளும் முயற்சியாண்மையின் பாற்படும் என்று கூறினால் மிகையாகாது. சுருங்கக் கூறின் ஒன்றினுடைய நகர்வு அதாவது அடுத்த கட்டத்திற்குச் செல்லும் முயற்சிகள் அனைத்தும் அதனுடைய "முயற்சியாண்மையே" ஆகும்.

நாம் இங்கு கூர்ந்து கவனிக்கவேண்டியதும் முக்கியப்படுத்த வேண்டியதும் "தொழில் முயற்சியாண்மையே" ஆகும். முயற்சியானது தொழில் முயற்சியாண்மையாக மாற்றமடைவதுதான் மனித சமூகத்தின் மிகப் பெரிய வெற்றியாகும். நாம் சிறு வயதில் படித்து இருக்கின்றோம், "அன்னம் நீருடன் பால் கலந்து ஒரு பாத்திரத்தினுள் இருக்கும் போது நீரை விடுத்து பாலை மட்டும் பருகுமாம்" அவ்வாறே நாமும் முயற்சியாண்மையில் இருந்து தொழில் முயற்சியாண்மையை மட்டும் வேறுபடுத்தி எம்முள் உருவாக்கினால் நாம் இந்த உலகினையே வெல்ல முடியும். இந்திய நாட்டின் அணுவிஞ்ஞானி அப்துல்கலாம் அவர்கள் வருங்கால உலகின் இளைஞர்களைப் பார்த்துக் கூறுகின்றார் "தூக்கத்தில் காண்பது கனவு அல்ல, விழித்திருந்து ஒவ்வொருவரும் கனவு காணுங்கள்" என்று. அதாவது சிந்தனை என்பது மிகவும் வலிமையானது உங்களது உயர்ந்த இலட்சியத்தை - குறிக்கோளை அடைவது பற்றிச் சிந்தியுங்கள். உங்கள் ஒவ்வொருவரிடமும் புதைந்து கிடக்கும் முயற்சியாண்மையினை பயனுடைய ஒரு தொழில் முயற்சியாண்மையாக மாற்றிக் காட்டுங்கள்.

மனிதராகிய எமது அசைவுகளை அல்லது இயக்கங்களை இரண்டு பகுதிகளாக வேறுபடுத்தலாம். ஒன்று இச்சை வழி இயக்கும் இயக்கம். அடுத்தது இச்சையின்றி இயக்கும் இயக்கம். முதலாவது நாம் விரும்பி செய்வது. இரண்டாவது நாம் விரும்பாமலே நடைபெறுவது. எம்மிடம் இருக்கும் இந்த இரண்டு அசைவுகளும் எமது முயற்சியாகும். இந்த முயற்சி எப்பொழுது இலாபகரமாக - வியாபார நோக்காக மாற்றமடைகின்றதோ அதுதான் தொழில் முயற்சியாண்மையாகும். எமது கடின உழைப்பிற்கான முயற்சிகள் மற்றும் உழைப்புக்கள் எல்லாம் தொழில் முயற்சியாண்மையேதான். இவை ஆளுக்காள், இடத்திற்கு இடம், காலத்திற்குக் காலம், ஒவ்வொரு நபர்களுக்கும் வேறுபட்டதாக அமையலாம். இவை அனைத்தினதும் பெறுபேறுகள் சிறந்த ஆரோக்கியமான வாழ்விற்கும், அதன் நிலைப்பிற்கும் உந்து சக்தியாக விளங்கி மிக இலாபகரமானதாக அமைந்தால் இவை எல்லாமே சிறந்த முயற்சியாண்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவன் பிறக்கும் போது வறுமையுடையோனாகப் பிறந்தால் அதனை ஏற்றுக் கொள்ள முடியும். ஆனால் அவன் இறக்கும் போது வறுமையுடை யோனாக இறப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று கூறுவார்கள். இதன் அர்த்தம் என்னவென்றால் நாம் முன்னேறுவதற்கு ஆயிரம் வழிகளும், ஆயிரம் தொழில்களும் உள்ளன. நேரிய முறைகளில் உழைப்பதற்கு நிறைய வழிகள் உண்டு. எமது முயற்சியால் நாமே தலைசிறந்த வழிகளை உருவாக்க முடியும். இதுதான் முயற்யாண்மையின் முக்கிய தத்துவம் ஆகும்.

சாதாரணமாக வீட்டில் இருந்து கொண்டு பெட்டி, கடகம் செய்யும் பன்னவேலைத் தொழிலாளி முதல் ஒரு நாட்டிற்கே பொருளாதாரத்தை ஈட்டித்தரும் வல்லமை படைத்த தொழில்வல்லுனர் வரை அனைவரும் தொழில் முயற்சியாளரே; முயற்சியாண்மைப் பண்பு மேலோங்கியவரே. இன்றைய காலகட்டத்தில் தொழில் முயற்சியாண்மையை ஒருவர் சிறந்த முறையில் கட்டமைத்துத் தன்னகப் படுத்திக் கொள்வது என்பது ஒரு போராட்டத் தன்மை வாய்ந்ததாக, இலகுவில் வளர்த்துக்கொள்ள முடியாதொன்றாக விளங்குகின்றது. ஏனெனில் உலகின் வளர்ச்சி என்பது மிக வேகமாக பல மாற்றங்களுடன், நுட்பங்களுடன் கற்பனைகளுக்கும் எட்டாத வகையில் மாற்றம் கண்டு வருகின்றது. தேவைகள் அதிகரிப்பு, தொடர்பாடல் முறையின் அபரிமித வளர்ச்சி, பரிமாற்ற முறைகள் மிகக் குறுகிய நேரத்தில் ஏற்படுத்திக் கொள்ளும் வசதி வாய்ப்பு, விரைவான போக்குவரத்து வசதிகள் என விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சிகள் என்பன இந்த உலகை மிகச் சிறிதாகச் சுருக்கிவிட்டது. இதனால் எம்மிடம் இருக்கும் தொழில் முயற்சியாண்மையை இன்றைய உலகின் வளர்ச்சிக்கும், வேகத்திற்கும் ஏற்ற மிக நுண்ணிய நுட்பங்களுடன், அறிவாற்றலுடன் கட்டமைக்க வேண்டிய தேவை இருக்கின்றது. எம்மிடம் உள்ள முயற்சியாண்மை ஏனையவைகளை விடச் சிறந்ததாக, நவீன நுட்பங்கள் நிறைந்ததாக இருக்க வேண்டும்.

“எண்ணித் துணிக கருமம்”, “முயற்சி திருவினையாக்கும்”, “முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்” ஆகிய முதுமொழிகள் முயற்சியின் முக்கியத்துவத்தினை எமக்கு எடுத்தியம்புகின்றன. எமது வெற்றி என்பது எமது முயற்சியிலே தங்கியுள்ளது. நாம் அடைய வேண்டிய இலக்கை அடைவதற்குரிய அனைத்து வழிமுறைகளிலும் எம்மைத் தயார்படுத்திக் கொள்வதுதான் எமது முயற்சியாக இருக்க வேண்டும். அந்த முயற்சி வினைத்திறன் வாய்ந்ததாகவும், விளைதிறன் உடையதாகவும், தற்கால மாற்றங்களுக்கும், வளர்ச்சிகளுக்கும், போட்டித்தன்மைப் பொருளாதாரத்திற்கும் ஈடுகொடுக்க வல்லதாகவும் அமைதல் வேண்டும். அதுவே சிறந்ததொரு தொழில் முயற்சியாண்மையாகும்.

இன்றைய உலகிலே சிறந்த தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்வதென்பது ஒவ்வொருவருக்கும் எட்டாக் கனியாகவே திகழ்கின்றது. இதற்கு மிக முக்கிய காரணம் இன்றைய கால நவீன விஞ்ஞான, தொழில்நுட்ப சாதனங்களின் கண்டுபிடிப்புக்களும் அதன் பயன்பாடும் ஆகும். இதன் மூலம் மனிதவலு அல்லது மனித உழைப்பு என்பது பெருமளவில் அற்றுப்போகும் அபாயநிலை ஏற்பட்டுள்ளது. முன்பு எல்லாம் பலநூறு பேர் பலநூறு நாட்கள் செய்து முடிக்கும் வேலையை இன்று ஒரு இயந்திரம் ஒரு குறுகிய நேரத்தில் செய்து முடிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் ஆயிரக்கணக்கானோர் மனித உழைப்பு வேலையை இழக்கும் நிலை காணப்படுகின்றது. இது இன்றைய நவீன வளர்ச்சியின் ஒரு கரும்புள்ளி அதாவது இருண்ட பக்கம் ஆகும். இது ஒரு சாராருக்கு பொருளாதார ரீதியில் அதிக நன்மையைக் கொடுத்தாலும் தொழிலாளர் வர்க்கத்தினருக்கு அதாவது உழைக்கும் வர்க்கத்திற்கு ஒரு பேரிடியாகும். இதில் இருந்து மீள்வதும் இதனை வெற்றி கொள்வதும் தான் இன்றைய தொழில் முயற்சியாண்மையின் சவால் ஆகும். இவை அனைத்தையும் வெற்றிகொள்ள வேண்டிய கடப்பாடு ஒரு தொழில் முயற்சியாளனுக்கு வேண்டிய ஒன்றாகும்.

எனவே தொழில் முயற்சியாண்மை என்பது ஒவ்வொருவருடைய தனிப்பட்ட பொருளாதரத்திலும், ஒட்டு மொத்த மக்கள் சமூகத்திலும், நாட்டினதும் பொருளாதா ரத்தில் முன்னேற்றத்தினைக் கொண்டு வருதல் வேண்டும். இதற்கு அனைத்துத் தரப்பினதும் ஒத்துழைப்புக் கிடைக்கப் பெறுதல் வேண்டும். இதனையே "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" எனும் முதுமொழி சுட்டி நிற்கின்றது.

இதனைவிடச் சிறந்த தொழில் முயற்சியாண்மையினை ஒவ்வொருவரி டமும் வளர்த்து சமூகத்தின் - நாட்டின் பொருளாதாரத்திலும், தனிப்பட்ட ஒருவ ரினது பொருளாதார முன்னேற்றத்திலும் சிறந்த வளர்ச்சியை ஏற்படுத்திக் கொள்வ தற்காக அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்பு மக்களுக்குக் கிடைக்கப் பெறுவது சிறந்த மைற்கல் லாகும். இதனைவிட குறிப்பாக அரச கொள்கைகள், சட்டங்கள் என்பன மக்க ளின் சிறந்த தொழில் முயற்சியாண்மையை வளர்த்து எடுப்பதற்கு ஊக்கம் வழங்கு வதாக அமைந்துள்ளமை போற்றுதற்குரிய ஒன்றாகும். இதன் ஒரு அங்கமாக மாவட்ட மட்டத்தில் உள்ள தொழில் அற்ற வர்க்கங்க ளுக்கும், தொழில் புரிவோருக்கும் பயிற்சிப் பட்டறைகளை வழங்கி தொழில் உபகர ணங்கள், தொழில் வாய்ப்புக்கள் என இன்னோரன்ன உதவிகளை வழங்கி வருகின்றமை சிறந்த தொழில் முயற்சி யாண்மையின் மூலம் பொருளாதாரத்தை வெல்லும் இலக்கினை அடைவதற்கு உந்து சக்தியாக விளங்கிவிடும் என்பது உண்மை யாகும். இதன் மூலம் நாட்டின் பொருளா தாரத்தை முன்கொண்டு செல்ல முடியும். இதுவே இன்றைய காலத்தின் மிக முக்கிய தேவையாக இருப்பதுடன் எதிர்காலச் சந்ததியினர் தலை நிமிர்ந்து வாழவும், பொருளாதாரத்தில் சிறந்து விளங்கவும் வழிவகுப்பதாக சிறந்த தொழில் முயற்சி யாண்மை அமைந்திருக்கும் என்பதில் ஐய மில்லை. இதற்கு அனைத்துத் தரப்பினரும் சிறந்த ஒத்துழைப்பினை வழங்குவது மிக அவசிய கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்திஜீ மன்றச் சிறப்பு

திரு. சி. இராமச்சந்திரன்
தம்பாட்டி.

முத்தமிழில் கவிபாடி முன்னோர்கள்
சேர்த்தெடுத்து
கற்றவர்கள் போற்றும் எங்கள்
கலைநகராம் தம்பாட்டி (முத்தமிழ்)

செந்தமிழும் அபிநயமும்
சேர்ந்தது போல்கலைநயமும்
கண்களிலே நீர் கசிய
நடிக்கும் திறமையிலும் (முத்தமிழ்)

சரித்திர நாடகத்தை
சங்கரனின் துணையோடு
சந்தங்கள் தவறாது
சரிசெய்து இசைப்பதிலும் (முத்தமிழ்)

தென்மோடி வடமோடி
இசைநாடகத்தின் போட்டி
இடைவிடாது வெற்றிகளை
எமக்களித்த தம்பாட்டி (முத்தமிழ்)

ஐந்து வயது முதல்
எண்பது வயது வரை
எங்கள் கலைஞர்கள்
எமக்களித்த பங்களிப்பை
எப்படி நாம் பாராட்ட
எமக்கில்லை வார்த்தையய்யா (முத்தமிழ்)
கலாசார சமூகமது
எமக்களித்த ஊக்கத்தால்
உரம் போட்ட கீரை போல்
உற்சாகம் கொண்டெழுந்து
தோல்வியை விட்டெறிந்து
வெற்றியை அணைத்துக் கொண்டோம் (முத்தமிழ்)

காந்திஜி மன்றத்தின் கலை அழகை கவிபாட
கரம் கூப்பி அழைக்கின்றோம்
கருணை கொண்டு வந்திடுவீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைகள்

திரு. கூடலூர் சிந்துஜன்
புளியங்கூடல்.

## யாழ்ப்பாணத்தான் ரகசியம்!

சித்திரையில் பூப்பெறிஞ்சு
கொண்டலிலே கருத்தரிச்சு
ஆடியில வரும் பழத்துக்கு
அப்படியொரு சுவையிருக்கு!!

மாரிப்பழம் பெருசா சுவையில்ல
புரட்டாதில பூப்பிடிச்சு
மாரிக்காத்தில அடிவாங்கி
மார்கழிலவந்தா மவுசு கொஞ்சம் குறைவு!!

மரமெல்லாம் பூப்பிடிச்சு
வெய்யில், காத்துக்கு கொட்டினதும்
பிஞ்சாகி பிறகதிலும் காஞ்சதும் போக
மிஞ்சினது காயாகிப் பழமாகும்!!

மாங்காயில கனக்க வகை
பாண்டி, புளி, பச்சத்தண்ணி, சேலம்
கிளிச்சொண்டு, அலரி, செம்பாட்டு, விளாட்டு
அம்பலவி எத்தனை இருந்தாலும்
கறுத்தக்கொழும்பானுக்கு தனி விலாசம்!!

கறிக்கும் சொதிக்கும் பாண்டியும் புளியும்
உப்புத்தூள் போட சேலமும் செம்பாடும்
காய்ப்பழமா சாப்பிட விளாட்டும் அம்பலவி
கனியவிட்டு சாப்பிட கறுத்தக்கொழும்பு!!

பச்சமாங்கா வெட்டிப்போட்டு
தலமீன் சொதி வைச்சா
தேவலோக அமிர்தமெல்லாம்
இரண்டு அடி தள்ளிநிக்கும்!!

களவா இரண்டு மாங்கா புடுங்கி
காம்ப தேய்சு, கையால குத்தி
வெடிச்ச இளங்காய சுவைக்க
சுவையரங்கமே அங்க தானே!!

கள்ளம் காதலில மட்டுமா,
பள்ளி விட்டு வரேக்க
பக்கத்து வளவு மாங்காய்க்கு
குறி தப்பாம அடிக்கிறதும் ஒரு கலைதானே!!

## தமிழோடு தலைநிமிர்!!!

செம்மொழியான நற்றமிழை
பொருந்திட தினம் சுவைத்து
இன்பமாய் செப்பிட முடியாது எனின்
உன் உயிரையே தூக்கி எறி!

இலக்கிய நயத்துடன் பா
இலங்கிட பல படித்து
மகிழ்ந்து நீ இயற்றிடப் பொய்ப்பின்
உன் கலையினைத் தூர எறி!

மறத்தில் ஓங்கு தமிழன்
மார்பில் வீரம் விளங்க
துணிவுடன் எதிரியைக் கடவேல்
உன் உணர்வினைக் களைந்து எறி!

மண்ணினைக் காக்கும் எண்ணம்
மனதினில் இல்லை என்றால்
மரணித்த பிணமே நீயும்
மானத்தை விட்டு எறி!

பறையொடு தமிழர் பண்பை
பக்குவமாய் மனதில் எண்ணி
பகிர்ந்திட முடியாதென்றால்
உன் சிந்தையை வீசி எறி!

கவினொடு கண்கள் ஈர்க்கும்
கலைகளும் பண்புமாய் சிறக்கும்
கலாச்சார பெருமைகள் மறப்பின்
உன்னையே வெறுத்து எறி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுண்டு போன கனவுகள்

**திருமதி டில்லிபவீனா அன்ராசா**
முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை.

## ஊரைத் தேடி

அந்த தூசி படிந்த லாந்தரை தாருங்கள்.
நான் என் ஊரைத் தேடவேண்டும்.

கருகிப்போன திரிகளில் மீண்டும் ஒளியேற்றி
சாம்பல் மேடுகளுள் புதையுண்ட
எனது ஊரைக் கண்டாக வேண்டும்.

அந்த நாற்சந்தியில் கூடிநின்று அரட்டை அடிக்கும்
நாயகர்கள் எங்கே போயினர்?
பட்டறையில் பத்திரிகை வாசித்து விவாதிக்கின்ற
மூத்தோர்களுக்கு என்னவாயிற்று?
நேற்றைய மோதல்களையும்
இன்றைய துன்பங்களையும்
நாளைய கனவுகளையும்
வெற்றிலைக்குதப்பலோடு சுவாரஸ்யமாக
மென்றுகொண்டிருக்கின்ற
அந்த நிலவொளிப் பிரியைகள் எங்கே!
கல்விக்கூடத்தை கட்டியெழுப்பியதூண்கள் எங்கே!

நண்பா! தொழினுட்பத்தை சில நிமிடங்கள்
பத்திரமாக வைத்துவிட்டு வா!
நாம் ஊரைத் தேடியாக வேண்டும்.
எங்கோ தீனசுரத்தில் ஒலிக்கின்ற எமது இனிய
பாடலை மீண்டும் பாடியாக வேண்டும்.
ஓ! அந்த லாந்தர்களின் திரிகளைத்
தூண்டிவிடுங்கள். வெளிச்சம் விரியட்டும்.
ஊர் தெரியட்டும்.

## ஜனனப் பிறழ்வு

கட்டுண்டு போன கனவுகளிலிருந்து
பூபாளம் ஜனித்திருக்கிறது.

அது ஹம்சனின் துயரை கூட்டிய
கிருஷ்ணனாகவோ
இரண்யனின் உயிர்த்துடிப்பில் விட்டெறிந்த
பிரகலாதனாகவோ இருக்க விரும்பவில்லை.

ராவணாதியரை துரும்பாக்கிய
இக் கோடியில் தான் சாமகானங்கள்
ஒப்பாரிகளாயின.
அந்த ஒப்பாரியை கிரகித்துக்கொண்டு
அபிமன்யுவாய் உருவாகிறது பூபாளம்.

நாளைகளில் ஓர் நாளில் கையில் ஓடேந்தியபடி
வீதியோரங்களில் பிறரைக் கெஞ்சியபடி
அது நடந்து திரியக்கூடும்.

அந்த நாளொன்றில்...... இன்னோர்
ஜனனத்திற்கான ஆயத்தங்கள்
நிகழ்ந்து கொண்டிருக்கும்.

## முகாரி பாடும் வானம்பாடி

எங்கள் மூச்சுகளை முனகலாக்கிக் கொண்டோம்.
சுவாசத்தின் தேவையை மறந்து யுகங்களாயின.

காற்றின் விளிம்பில் ஏறிப் பயணிக்க
நினைக்கையில் புயல் சூழ்ந்து கொண்டது.

எரிமலைத் துகள்களை தலையிலேந்தி
நடந்திருக்கிறோம் நீண்ட தூரம்.
இப்போது சாம்பல் மேடுகளிலிருந்து
எரிமலை தோன்றுவதில்லை.

அந்தப் பாலைவனம் தொட்ட பாதங்கள்
கதைகளைச் சேகரித்து வைத்திருக்கின்றன.
கேட்பதற்கு யாருமே இல்லாததால்
அவை வெறும் கதைகளாகிப் போயின.

முகில்களுக்கு கூட இப்போது நேரமிருப்பதில்லை.
மூச்சு முட்டுகிறதெனச் சொல்லி
விலகிப்போகின்றன.

அன்றெல்லாம் சேர்ந்து பாடிய வானம்பாடி
முகாரியைத் தவிர வேறெதையும்
ஆலாபிப்பதில்லை.

இப்போதெல்லாம் கழுகுகளும் பருந்துகளும்
பாதைவரை வந்து வழியனுப்பிப் போகின்றன.
அவற்றின் சிவந்த கண்கள் என்னைத் தூங்க
விடுவதில்லை.

இப்பொழுதெல்லாம் எனக்கு எதுவும் புரிவதில்லை.
எப்போது எனது மூச்சை மீளப்பெறுவது?
எப்போது நான் வானம்பாடிகளையும்
முகில்களையும் சினேகிதமாக்குவது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்பத்தமிழ்

கலாபூசணம் செபஸ்ரியாம்பிள்ளை இராஜேஸ்வரி
46/46, சென்அன்ரனிஸ் வீதி
பாசையூர், யாழ்ப்பாணம்

பார்புகழ் பசுந்தமிழால் ஓர் கவிதை எழுதுகின்றேன்
சீர்மிகுந்த பரம் பொருளே நீர்துணையாய் நின்றருளும்
உலகிலே வயதில்மூத்த முதுமொழி சங்கத்தமிழே
கலைநய வார்த்தையாவும் பொலிந்தது சிங்கத் தமிழே.

சொல்லொன்று பொருளோ பலதாம் வல்லாண்மை மிக்க தமிழே
என்னுயிர் பேச்சுமூச்சில் தவழ்வது தங்கத்தமிழே
பொன்னெழில் பொலிந்திலங்கும் தண்ணொழி மின்னும் தமிழே
விண்தொடு புகழ்நிறைந்த பண்ணிசை பாடுந்தமிழே

தாலாட்டும் பாட்டைக் கேட்டால் மழலையும் துள்ளியாடும்
தமிழென்று சொன்னால் போதும் கருவினில் சிசுவும் பாடும்
அகரமுதல் தமிழ்வரியை பெருமையுடன் எழுதுகின்றேன்
சிகரம்தொடு உயர் தமிழை சிறப்புக் கவியாய் பாடுகின்றேன்

பகுத்தறிவில்லாப் பசுவும் அம்மாவென்ற ழைப்பதைக்கேள்
பசுஈன்ற கன்றும்தாயை அழைக்கும்சொல் அம்மாதமிழே
செம்மொழியாம் தமிழ்மொழிக்கு இன்னல்கள் விளையுமென்றால்
சங்காரம் நிஜமேயென்று சங்குதனை நீ முழங்கு

எழுதுகோல் உலகினிலே மிகப்பெரிய ஆயுதமே
எந்தச் சுடுகோலினையும் எதிர்த்து மண்ணில் வீழ்த்திடுமே
கடலாழம் கண்டோர் தமிழின் அடியாளம் காணவில்லை
இடைநுழைந்த எம்மொழியும் தமிழ்மொழிக்கு நிகராயில்லை

மென்தமிழ் அறிவுத்தமிழே வன்தமிழ் வீரத்தமிழே
எம்தமிழ் வெற்றித்தமிழே என்றுமே வாழ்கதமிழே
தித்திக்கும் தமிழினாலே முத்தமிழ் கலைமாந்தர்க்கு
வித்தார மாலைபோட்டு வாழ்த்துகிறேன் வாழ்க நன்று.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாமுராய்கள்

செல்வி. அன்ரன் றொமன்ஷா
அபிவிருத்தி உத்தியோகத்தர், நாரந்தனை.

கழுத்து அறுக்கப்பட்ட மனிதத்தலைகள்
பரணியை வேடிக்கை பார்த்து கொண்டிருந்தன.
களநிலம் சாத்தியம் இல்லை என்றால்
காவு மட்டும் - நிச்சயம்

வடி கட்டிய கூஷாவில் பேத்தைக் குஞ்சுகள்
உண்ணிகள் செங்குருதிக்கலங்களை விழுங்க ஆரம்பித்தன.
கங்காருக்கு நிகரான காதல் தான்
அது வயிற்றில் நாம் நெஞ்சில்

இதயக்குழாய்களில் கசியும் குருதியினை
கரப்பான் பூச்சி இரத்தம் கொண்டு
வர்ணம் பூசி மறைக்க நினைத்தோம்.
கடைசியில் கிடைத்த செய்தி - கறுப்பு

மனிதத்தலைகளை மணிகளாகக் கொண்டு
ஏகாதி வர்க்க மாலையை அணிந்து பார்க்கும் படலம்
பைரவனுக்கு காசி ஈஸ்வரத்துக்கு கைலாசம் இதுதான் வேதம்
நீரோட்டத்தின் அட்சரங்களை நாமும் அறிவோம்.

சுயவடத்தை இழக்கி சூனியமாகப் போகும் தரணியை
நீளவிடாது வட்டமாக்க வாலிபர் உஷ்ணத்தை முதுகேற்றி
இருண்ட இரும்புத்திரையைக் கிழித்து - எறிந்து
ஆலோகத்தை உண்டாக்கப் போகின்றோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைகள்

திரு. பாலசிங்கம் பரமேஸ்வரன்
தம்பாட்டி

## வந்தருள் தாருமம்மா

செந்தமிழ் சொல் எடுத்து
உந்தனின் புகழ் தொடுக்க
நல்லருள் தரவேண்டும் முத்துமாரி அம்மா
நல்லருள் தரவேண்டுமே.
வாருமம்மா வாரியருள் தாருமம்மா.

குயில் வந்து கவி பாட மயில் வந்து நட மாட
சென்நாகம் குடை துக்க எம் கடல் வளம் ஏங்க
தருமம்மா வந்தருள் தாருமம்மா.

ஆவாரம் பூக்கள் எல்லாம் தேவாரம் பாடுதம்மா
பூமாலை நான் தொடுத்து பா மாலை நான் பாட
வாருமம்மா வாரியருள் தாருமம்மா.

தீயிலே இறங்கி வந்தோம்
தீச்சட்டி ஏந்தி நிற்கின்றோம்
ஏழைகள் எமக்காக ஏந்தல் வேண்டும்
ஊலகாளும் உமையவளே
ஊர் காக்கும் சிவன் துணையே
நுனி புரத்து நாயகியே இனி எமக்கு ஏது குறை
வருமம்மா வாரியருள் தருமம்மா.

## முத்துமாரியம்மா

தம்பாட்டி வந்துதித்த முத்துமாரி
எம்பாட்டி கவிதந்த கருமாரி
தம்பாட்டி வந்துதித்த முத்துமாரி

தெடிய பனை மரங்கள் உன் கதை கூறுதம்மா
கொடிய வினைகள் எல்லாம் உன்னருளால்
ஓடுதம்மா
விடியற் கதிரவனும் உன்னருளால் தானம்மா.
உன் மடியை நாடி வந்தோம் எமக்கருள்
தாருமம்மா.
ஊர்கவற்துறைக் காற்றும் உன் புகழ் பாடுதம்மா
கார்வண்ண மேகங்கள் பன்னீர் சொரியுதம்மா
வெள்ளை கடல் அலை உன் பாட்டுக்கிசை
போடுதம்மா கொள்ளை அழகு எங்கள்
நுனி பத மாரியம்மா.
வன்மான் மீதேறி வரும் எங்கள் சீமாட்டி
தன் மான் சிவன் அவனை துணை கொண்ட
பெருமாட்டி
இங்கண் அமர்தெமக்கு அருள் தரும் சிவகாமி
எங்கள்
ஆங்கண் கண்டெடுத்த அருள் மிகும் முத்துமாரி.

## காவடி

ஆட்டம் பாருங்கோ காவடி
ஆட்டம் பாருங்கோ
முத்துமாரி அம்மன் கோவில் கூட்டம் பாருங்கோ
அலை அலையாம் காவடிகள் ஆடி வருகுது-அது
நுனி புரத்து மாரி அம்மனை தேடி வருகுது.

அலை கடலை தாண்டி வருகுது எழுவைதீவு
காவடி
அனல் பறக்க ஆடி வருகுது அனலை தீவு காவடி
அண்டம் காக்கும் ஈவரிக்கு நயினை தீவு காவடி
கெய்தல் நில நாயகிக்கு நெடுந்தீவு காவடி

நலம் காக்கும் நாயகிக்கு நாரந்தனை காவடி
பலம் தந்த பார்வதிக்கு காரைநகர் காவடி
மண் பறக்க ஆடி வருகுது மண்டை தீவு காவடி
அல்லல்களை தீர்த்த தாயார்கு அல்லை பிட்டி
காவடி

பார் ஆளும் நாயகிக்கு நெடுந்தீவு காவடி
ஊர் காக்கும் சிவன் துணைக்கு ஊர்கவற்துறை
காவடி
இனிய தமிழ் தாயார்க்கு மண்கும்பான் காவடி
வேலவனின் தாயர்க்கு வேலணையூர் காவடி

செடில் குத்தி பாடி வருகுது செருத்தனையூர் காவடி
சரம் குத்தியாடி வருகுது சரவணையூர் காவடி
ஆட்டக் காவடி அம்மாவுக்கு தாயருக்கு அன்புக்
காவடி
துக்குக் காவடி அம்மாவுக்கு பறவைக் காவடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் தோன்றிய சிற்றிலக்கியங்களில் தீவகம் வடக்கு பிரதேசம் சார்ந்த சில பதிவுகள்

திரு. சண்முகலிங்கம் சஜீலன்,
பன்னாலை.

**சிற்றிலக்கியங்கள்**

தமிழ் இலக்கியப்பரப்பு மிகப் பரந்தது. இவற்றில் சிற்றிலக்கியங்கள் முதன்மை இடத்தைப் பெறுகின்றன. தமிழகம், ஈழம் ஆகிய இரு தமிழ்ப் புலங்களிலும் ஏராளமான சிற்றிலக்கியங்கள் தோற்றம் பெற்றுள்ளன. இவற்றில் ஈழத்தில் அறிஞர்களால் பெரிதும் விருப்புடன் வெற்றிகரமாகக் கையாளப்பட்ட இலக்கியமாக இச்சிற்றிலக்கியங்கள் விளங்குகின்றன. தொண்ணூற்றாறு வகை எனக் கூறப்படும் சிற்றிலக்கியங்களில் ஈழத்தில் மிக அதிகமாகப் பாடப்பட்டவை பிரபந்த இலக்கியங்களாகும். திருவூஞ்சல், பிள்ளைத் தமிழ், அந்தாதி, சதகம், கலம்பகம், பள்ளு, குறவஞ்சி, கிள்ளைவிடு தூது, இரட்டைமணி மாலை, மும்மணி மாலை, நான்மணி மாலை, பன்மணி மாலை என அவை விரிந்து செல்கின்றன.

தமிழர்களின் கலாச்சாரப் பண்பாட்டுத் தலைநகராகப் போற்றப்படும் யாழ்ப்பாணம் ஏராளமான அறிஞர்கள், கலைஞர்களைக் கொண்ட புலமைத்துவம் மிக்க பிரதேசமாகும். இத்தகைய சிறப்பு மிக்க யாழ்ப்பாணத்திலும் காலத்திற்கு காலம் ஏராளமான பல வகைப்பட்ட சிற்றிலக்கியங்கள் தோற்றம் பெற்றுள்ளன. இவை பெரும்பாலும் செய்யுள் வகை இலக்கியங்களாக அமைவதுடன் தமிழிலுள்ள இலக்கண, இலக்கிய யாப்பு மரபுகளை உள்வாங்கி மிகுந்த சொற்சுவையுடனும், பொருட்சுவையுடனும் படைக்கப்பட்ட இலக்கியங்களாகும். இத்துடன் இவை யாழ்ப்பாணத்தின் பல விடயங்களையும் பேசுகின்றன. குறிப்பாக யாழ்ப்பாண பிரதேசத்திலிருக்கும் ஊர்கள், அவற்றின் சூழல், இயற்கைத் தோற்றம், வளம் ஆகியன பற்றியும் அவற்றில் வதியும் மக்கள், அவர்களின் கலை, கலாசாரம், பண்பாடு, பொருளாதாரம், தொழில் ஆகியவை பற்றியும் மிகநுட்பமாகப் பேசுவதுடன் பதிவும் செய்கின்றன.

**தீவகம் வடக்கு**

தீவகம் வடக்குப் பிரதேசம் (ஊர்காவற்றுறை பிரதேசசெயலர் பிரிவு) அனலைதீவு வடக்கு (J/37) அனலைதீவு தெற்கு (J/38) எழுவைதீவு (J/39) ஊர்காவற்றுறை (J/49) பருத்தியடைப்பு (J/50), கரம்பன் (J/51) கரம்பன் கிழக்கு, (J/52) கரம்பன் தென்கிழக்கு (J/53) கரம்பன் மேற்கு (J/54) நாரந்தனை வடக்கு (J/55), நாரந்தனை வடமேற்கு (J/56), நாரந்தனை (J/57), நாரந்தனை மேற்கு (J/58) சுருவில் (J/59) புளியங்கூடல் (J/60) ஆகிய கிராமசேவகர் பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. இதில் ஊர்காவற்றுறை மிகப்பழங்காலம் தொட்டு இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை கடல்வாணிபம், கடற்போக்குவரத்து மக்களின் பாதுகாப்பு ஆகியவற்றில் முக்கியமான துறைமுகநகராக விளங்கியது. அதன்பின் 1950களின் முற்பகுதியில் ஊர்காவற்றுறை யாழ்ப்பாணம் பண்ணைப்பாலம் அமைக்கப்பட்டதும் இதன் முக்கியத்துவம் குறையத் தொடங்கியது. எனினும் இன்றும் பல விடயங்களில் ஊர்காவற்றுறையின் துறைமுகச் செயற்பாடுகள் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவகம் வடக்குப்பிரதேசம் பல தொன்மங்களைக் கொண்டுள்ளன. குறிப்பாக ஹமன்ஹில் கடற்கோட்டை, ஊருண்டிகோட்டை பருத்தியடைப்பு சுமை தாங்கி, அனலைதீவு வெளிச்சவீடு போன்ற இன்னோரன்ன பல மரபுரிமை எச்சங்கள் இப்பிரதேசத்தில் காணப்படுகின்றன. அத்துடன் தீவகத்தில் மேற்கொள்ளப்பட்ட குறிப்பாக காரைநகரின் களபூமி, சத்திராந்தை, புங்குடுதீவின் ஊரதீவு வேலணையின் சாட்டி ஆகிய கிராமங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகள் இற்றைக்கு சுமார் 2000 வருடங்களுக்கு முன்னரே தீவகத்தில் திராவிட இனமக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதற்கு சான்றாகவுள்ளன. இப் பிரதேசத்தில் காணப்படும் பழைமையான சுமைதாங்கிக் கற்கள், கேணிகள் ஆவுரஞ் சிக்கற்கள், தொட்டிகள் என்பன விவசாயம், பயிர்ச்செய்கை மந்தை மேய்ச்சல், கால் நடைவளர்ப்பு போன்றவற்றுடன் தொடர்புபட்டவையாக உள்ளன.

ஊர்காவற்றுறையின் சைவாலயங்களும், கத்தோலிக்க தேவாலயங்களும் பிரதேச மக்களின் ஆன்மீகப் பண்பாட்டின் அடிநாதமாகத் திகழ்கின்றன. இப்பிரதேசத்தின் கல்விக் கூடங்களும் பாடசாலைகளும் 19ம், 20ம் நூற்றாண்டுகளில் யாழ்ப்பாணத்தின் கல்வி வளர்ச்சியில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தின என்றால் மிகையில்லை. தீவகம் வடக்கிலுள்ள சைவாலயங்களைப் பொறுத்தவரை யாழ்ப்பாணத்தின் முக்கிய சக்தி வழிபாட்டுத் தலங்களான நாரந்தனை, தான்தோன்றி மனோன்மணி அம்மன் ஆலயம், தம்பாட்டி நுனிபுரம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், புளியங்கூடல் செருத்தனைப்பதி இராஜமகாமாரியம்மன் ஆலயம் ஆகியன இப்பிரதேச மக்களின் ஆன்மீகம், ஆலய வழிபாடு, கலாசாரப் பண்பாடு ஆகியவற்றில் முக்கியத்துவம் பெற்ற ஆலயங்களாக விளங்குகின்றன. கணபதீஸ்வரம் சிவன் ஆலயம் மேலைக்கரம்பன் முருகமூர்த்தி ஆலயம், கர்ணந்தோட்டம் சிவசுப்பிரமணியர் ஆலயம், சுருவில் ஐயனார் ஆலயம் ஆகியன பல நூற்றாண்டுகள் தொன்மைவாய்ந்த ஆலயங்களாகவுள்ளன. அனலைதீவில் ஐயனார் ஆலயம், சங்கரநாதர் மகா கணபதிப் பிள்ளையார் ஆலயம், எழுமங்கைநாச்சிமார் மனோன்மணியம்மன் ஆலயம், சங்கரநாதர் முருகமூர்த்தி ஆலயம் ஆகியன ஐநூறு ஆண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்த ஆலயங்களாக இருப்பதுடன் கோயில் உருவாக்கம் வளர்ச்சி மற்றும் அவற்றின் தொடர்ச்சி ஆகியவற்றில் தமிழகத்தின் கலாசாரப் பண்பாட்டு உறவுகளுடன் தொடர்புபட்டவையாகவும் உள்ளன. புளியந்தீவு நாகேஸ்வரன் ஆலயம் ஆதிகாலம் தொட்டு நாகவழிபாட்டுடன் தொடர்புபட்டதாக இருப்பதுடன் நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்துடன் வரலாற்றுத் தொடர்பையும் கொண்டுள்ளது.

பல சிறப்புகளையும் கொண்ட தீவகம் வடக்குப் பிரதேசத்தின் விடயங்கள் பலவும் சிற்றிலக்கியங்களைப் படைத்த ஆசிரியர்களையும் அதிகளவில் ஈர்த்துள்ளதென்றே கூறலாம். இதனால் அவர்கள் இப்பிரதேசத்தின் ஊர், வளம், சூழல் பற்றியும், இங்கு வசிக்கும் மக்கள், அவர்களின் கலை, கலாசாரம், பண்பாடு, பொருளாதாரம், தொழில், மற்றும் இன்னோரன்ன பல விடயங்கள் பற்றியும் இவ்விலக்கியங்களில் பதிவு செய்துள்ளார்கள். இவ்வாறான சிற்றிலக்கியங்கள் சிலவற்றை இங்கு நோக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர் பெயர் உட்பொருள் விளக்கம் எனும் இவ்விலக்கியம் செய்யுள் வடிவில் அமைந்தது. முழுவதுமாக இலங்கையில் வடமாகாணத்திலுள்ள ஊர் பெயர்களை சைவசித்தாந்த உட் பொருட்கருத்துகளுடன் இணைத்து படைக்கப்பட்ட அற்புதமான இலக்கிய வடிவம் ஒன்றாகும். மல்லாகம் நமசிவாயப் புலவரினால் (1860-1942) இருபத்தைந்து செய்யுள்க ளில் பாடப்பட்ட இவ்விலக்கியத்தினை மேலோட்டமாகப் பார்த்தால் யாழ்ப்பாணத்தி லுள்ள ஊர்களின் பெயர்களை அவதானிக்கலாம். ஆனால் அதன் உட்பொருள் புராண இதிகாசக் கதைகளையும், சைவசித்தாந்த கருத்துக்களையும் உள்ளடக்கிய பிரபந்த வடிவங்களிலொன்றாக இருக்கும். யாழ்ப்பாணத்திலுள்ள ஊர், பெயர்களை மிக நுட்பமாகப் பதிவு செய்வதில் இச்செய்யுள் இலக்கியம் தனித்துவம் வாய்ந்ததாகும். இவற்றுள் ஒரு பாடலில் தீவகம் வடக்கின் நாரந்தனை என்ற ஊர் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நாரந்தனையுடையான் பூநகரியின ண்ணுடையான்
நேருஞ்சுன்னாக முடையானைச் சாவகச்சேரிதுரீ
வேர்வந்தள வெட்டி பச்சிலைப் பள்ளிவிளாங்குளம் போய்ச்
சேரும் படி செலக்காரைக் காலாள் கையிற்சிக்கினனே.

இப்பாடலின் உட்பொருள் வேறுவகையானது. கைலாயத்தில் வசிப்பவராகிய சிவபெருமான் பக்தி வலையில் அகப்படுவரேயன்றி அகங்காரமுடையவர்களின் கண்களுக்குத் தோற்றமாட்டார் என்பதே இதன் பொருளாகும்.

1955ஆம் ஆண்டளவில் தமிழக அறிஞர் கி.வா.ஜகந்நாதன் அவர்கள் அனலைதீவுக்கு வருகை தந்திருந்தார். இதன் போது அனலைதீவின் சூழலினையும் இயற்கை எழிலினையும் வியந்து பின்வரும் பாடலைப்பாடினார்.

நாற்புறமும் கடலலைகள் வீச மேலே
நலந்தருமக் காற்றசைய அன்பரோடே
ஏற்புறவே ஸ்டீம் லோஞ்சில் அனலைதீவுக்
கேகுகின்ற போதினிலே என்னே இன்பம்!
பாற்படுமவ் வீதிகளும் இல்லந்தாமும்
பரபரப்பாகக் காணபதிலை புழுதியில்லை
தோற்பதிலை வெல்வதிலை சாந்தி என்னும்
தூயநிலை கடலிடையே கண்டேன் யானே.

தீவக வடக்கின் திறன்பாடு என்னும் தலைப்பிலமைந்த க.சௌந்தரராஜன் அவர்களால் இயற்றப்பட்ட பாடல்களில் ஒரு பாடல் புளியங்கூடல் கிராமத்தின் இயற்கை அழகினையும் அங்கு அமைந்திருக்கும் ஆலயங்களையும் பின்வருமாறு வர்ணிக்கின்றது.

வாரியருள் வழங்கு விநாயகர் அருள்
வேண்டி நிற்கு அடியாரொடு
மாரியன்னை பாதம் பணிந் தேத்து
மாண்புடையோர் வந்தனை செய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காராளர் கழனி யெலாம் புறவின் ஈட்டம்
கலைத் தொதுங்கா நிரை காணு
ஊரான புளியங்கூடல் உலவு தீவக
ஓர்பதியாய் ஒளிசிந்தி விளங்கு மாதோ.

**பிரபந்த இலக்கியங்கள்**

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை ஒரு ஊரையும் அதன் சிறப்புகளையும் பதிவு செய்யும் இலக்கியங்களுள் திருப்பொன்னூஞ்சல் எனும் பிரபந்தம் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. இன்று சற்று ஏறக்குறைய எல்லா ஆலயங்களிலும் பொன்னூஞ்சல் பாடும் வழக்கம் உண்டு. காப்பு, நூன்முகம், எச்சரிக்கை, பராக்கு, லாலி, மங்களம் என அமையும் இப்பிரபந்தப் பதிகத்தின் காப்புச் செய்யுளின் முதல் சில அடிகள் ஆலயம் அமைந்துள்ள ஊரை மிகச்சிறந்த முறையில் வர்ணனை செய்யும். அவ்வகையில் புலவர் ஐ. ஆறுமுகம் அவர்களால் இயற்றப்பட்ட பெரியபுலம் சங்கரநாதர் மகாகணபதிப்பிள்ளையார் திருப் பொன்னூஞ்சல் பதிகத்தின் காப்புச் செய்யுள் விநாயகர் உறையும் அனலையூரை பின்வறுமாறு வர்ணனை செய்கின்றது.

பூமருவு பொன்நகர மென்ன நன்னாப்
புலவர்புக ழனலை நகர்புரக்கு மண்ணல்
மேமருவு பெரியபுலப் பதியில் மேவுஞ்
செஞ்சடை ஐங்கரப் பெருமான் சீரூஞ்சற்கு
நாமருவு சொற்சிறப்பும் பொருளின் வாய்ப்பும்
நலம்பலவுந் தந்தருளும் நால்வாய் முக்கட்
தூமருவு தும்பிமுக நம்பி யும்பர்
தொழு முபய திருவடிகள் துணையதாமே.

இதேபோன்று பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணி ஐயர் (1931 - 2003) அவர்களால் இயற்றப்பட்ட அனலைதீவு எழுவடிவயல் எழுமங்கை நாச்சிமார் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் திருவூஞ்சல் பதிகத்தின் காப்புச் செய்யுள் கடல் சூழ் அனலைதீவின் நிலவளத்தை பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

நித்திலப்பந் தலைக்கரத்தால் ஆடிப்பாடும்
நீண்டிரைசூழ் மேலனலைச் சைவநாட்டில்
கத்துவளைக் கழனியெனும் எழுவ டியில்
கவினருள்செய் எழுமங்கை நாச்சி அம்மை
வித்தகியாம் மனோன்மணித்தாய் மகிழ்ந்தே ஆட
விரிமலர்ச்செந் தமிழினிசை ஊஞ்சல் பாட
அத்திமுகத் தண்ணலவன் அடிகள் என்றும்
அவனியிலே அருள்நல்கிக் காப்ப தாமே

அனலைதீவுடன் இணைந்த புளியந்தீவு நயினாதீவுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றி கவிஞர் நாக. சண்முகநாதபிள்ளை அவர்கள் இயற்றிய நாகேஸ்வரன் அருட்பாமாலை பின்வருமாறு பதிவு செய்கின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகூறாய் அனலையொடு சேர்ந்த ஒன்றாய்ச்
சிறப்புகளும் தவப்பேறும் பெற்ற மேன்மைப்
பெறுபேறாய்(ப்) புளியந்தீ வென்னும் நாமம்
பெற்றதொரு சிவபூமி: நயினை யோடு
உறுகூறாய்(ச) சத்தியொடு சிவமாய் என்றும்
உற்பவித்து உறுத்துதலால் பிரிந்த போது
நிறுசீராய்(ச) சிவத்தலத்தை இங்கே ஆக்கி
நிலைபெற்றீர் நாகேஸ்வர நாதா போற்றி

பழைமையும், வரலாற்றுச் சிறப்புமிக்க அனலைதீவு ஐயனார் கோவிலுக்கு நவாலியூர் சோமசுந்தரப்புலவர் (1878 - 1953) அவர்கள் வருகை தந்திருந்த போது பாடிய கலித்துறைப் பாடல்களில் ஒன்று ஐயனாரின் அருள்மாட்சியினைக் கூறுகின்றது.

ஓதக் கடல்சூழ் அனலைப் பதியி லுறையுமருட்
போதக் கடலைப் புரிகுழற் பூரணை புட்கலைக்கு
நாதக் கடவுளை நாங்கள் பணிய நமைப்பணிந்து
காதக் கடல்கடந் தோடிய தீவினைக் கட்டுக்களே

மேற்படி நவாலியூர் சோமசுந்தரப்புலவர் இயற்றிய மேலைக்கரம்பன் முருகமூர்த்தி ஆலய ஊஞ்சல் பதிகத்தின் அடிகள் சில மங்குறவாழ் தண்டலை சூழ் கரம்பன் மேவும் வரமுருகன் மதுரமொழியூஞ்சல் பாட எனவும். அந்தணராகுதிவளஞ்சேர் கரம்பன் மேவும் ஆறுமுகவேலவரே யாடீரூஞ்சல் எனவும், ஆரியலும் அருள்வளஞ்சேர் கரம்பன் மேவும் ஆறுமுகவேலவரே யாடீரூஞ்சல் எனவும் அருள்மேவு புலவர்துதி கரம்பன்மேவும் ஆறுமுகவேலவரே யாடீரூஞ்சல் எனவும் குறிப்பிடுவதனை அவதானிக்கலாம்.

புளியங்கூடல் செருத்தனைப்பதி இராஜமகாமாரியம்மன் வைபவமாலையின் (வித்துவான் சுப்பிரமணியம் சின்னத்தம்பி அவர்கள் 1985இல் இயற்றியது.) சில பாடல்கள் அம்பாள் ஆலயத்தில் கோவில் கொண்டெழுந்தருளியுள்ள வரலாற்றை மிக அற்புதமாக விபரிக்கின்றது அவற்றில் ஒரு பாடல்

செருத்தி யொடு குருந்தமரம்
சேர்ந்த பல கொன்றைமரம்
மருங்குவளர் புளியமரம்
மல்லிகை முல்லைக் கொடியும்
கரும்பருகே கருங்குவளை
கண்வளரும் கழனிகளும்
பொருந்து புளியங்கூடல்
போற்று செருத்தனைப்பதியில்
கொன்றைமர நிழலிலே
கொட்டிலிலே குடியிருந்து
கன்றை ஈன்ற பசுப்போல
கருத்து வைத்து காத்தவளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றும் இன்றும் என்றும் எங்கள்
அருந்துணைவியாய் இருந்து
துன்று பிணி துயர் தீர்த்து
தூக்கி எம்மை வளர்த்தவளே

**கனகி புராணம்**

கனகி புராணம் எனக் கூறப்படும் ஒரு செய்யுள் இலக்கியம் 19 ஆம் நூற்றாண்டில் வண்ணார் பண்ணைச்சிவன் கோவிலில் ஆடல், பாடல்களில் சிறந்து விளங்கிய கனகம்மா என்ற மங்கையொருத்தியைப்பற்றியும் அவளது ஆடல், பாடலைக் கண்டுகளிக்க என யாழ்ப்பாணத்தின் பல ஊர்களிலிருந்தும் வரும் சமூகத்தின் உயர்மட்ட செல்வந்தர்களது நடை, உடை, பாவனை மற்றும் அவர்களது குணாதிசயங்களைப் பற்றியும் நகைச்சுவை கலந்த சிலேடையில் கூறும் இலக்கியமாகும்.

இது வண்ணார்பண்ணைச்சிவன் கோவிலில் தவில் வித்துவானாக இருந்த நட்டுவச் சுப்பையனார் (1820 - 1896) என்பவரால் இயற்றப்பட்டது. இச்செய்யுள் இலக்கியம் ஐந்து சருக்கங்களைக் கொண்ட 40 பாடல்களை உள்ளடக்கியுள்ளது. இதில் சுயம்வரப்படலத்தின் ஒரு பாடல் சரவணை ஊரிலிருந்து நங்கையின் நடனத்தைக்காண வந்திருக்கும் ஊர்காவற்றுறைக்கு மணியகாரரான ஒருவரது குணாதிசயங்களை அவளது தோழியின் வாயிலாக நகைச்சுவை கலந்த சிலேடையில் வர்ணிக்கின்றது.

ஊரார் சுணங்கு தோற்றாமல்
உயர் சாந்தணிந்து, வடம் பூட்டி
வாரான் மறைக்குந் தனக் கனகே!
வரி வண்டூத முகை யவிழும்
நீராற் பொலிந்த சரவை வளர்
நெய்த நிலத்தான், வங்க நிறை
ஊராத்துறைக்கு மணிய மிவன்,
உடையா ரருணாசலத்தின் மகன்

**பொருள்:-**

ஊரிலுள்ளோர்க்கு நோய்த்தேமல் தெரியாதபடி உயர்ந்த சந்தனம் பூசி முத்தார மணிந்து அழகிய ஆடைகளை அணிந்துள்ள கனகேகேள்! வண்டுகள் வரிப்பாட்டை ஊத அரும்புமலர்கின்ற நீர்வளத்தால் பொலிவுபெற்ற சரவணை என்னும் ஊரில் வளர்ந்த நெய்தல் நிலத்தலைமகன் கப்பல்கள் நிறைந்து நிற்கும் ஊர்காவற்றுறை ஊருக்கு மணியகாரன் இவன். அருணாசல உடையாரின் மகன் என்றவாறு.

தமிழ்ப்பண்பாட்டின் வழிவந்த பிரதேசங்களையும், ஊர்களையும் கொண்ட சிறப்பு மிக்க பிராந்தியமே யாழ்ப்பாணமாகும். இங்கு ஒவ்வொரு பிரதேசமும் ஊரும் ஏதாவதொரு வகையில் சிறப்புப் பொருந்தியனவாகவே காணப்படுகின்றன. அந்த வகையில் தீவகம் வடக்குப்பிரதேசம் சார்ந்த சிறு பதிவே இக்கட்டுரையாகும். இது முழுமைப்படுத்தப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவல்ல. எமது பிரதேசங்கள், ஊர்கள் சார்ந்த பல்துறை விடயங்களும் எதிர்காலத்தில் ஆய்வு செய்யப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் அதன் சிறப்புகளையும் பெருமைகளையும் எமது எதிர்கால சந்ததி அறிந்து கொள்ள வழிவகை செய்ய வேண்டும்'.

**உசாத்துணை நூல்கள்**


1) ஊர்ப்பெயர் உட்பொருள் விளக்கம், இ.நமசிவாயம்பிள்ளை, சைவப்பிரகாச யந்திரசாலை இரண்டாம் பதிப்பு 1983.

2) அலைமொழி மலர் 1 இதழ் 2 தீவகம் வடக்கு கலாச்சார பேரவை பிரதேச செயலகம் ஊர்காவற்றுறை 2015.

3) அனலைதீவு ஐயனார் கோவில் சித்திரப்பெருந்தேர் சிறப்புமலர் 1980.

4) ஊர்காவற்றுறை பிரதேசசபை உள்ளூராட்சி வாரச் சிறப்புமலர் 2003.

5) கனகிபுராணம் பதிப்பாசிரியர் மு. இராமலிங்கம், சுதந்திரன் அச்சகம் கொழும்பு 12, 1961.


---

ஜெயிப்பது எப்படி என்று யோசிப்பதைவிட,
தோற்பது எப்படி என்று யோசித்து பார் நீ ஜெயித்து விடுவாய். - ஹிட்லர்

கோபம் என்பது பிறர் செய்யும் தவறுக்கு, உனக்கு நீயே
கொடுத்துக் கொள்ளும் தண்டனை - கௌதம புத்தர்

பொய் சொல்லி தப்பிக்காதே,
உண்மையைச் சொல்லி மாட்டிக்கொள்
பொய் வாழ விடாது! உண்மை சாக விடாது!!. - சுவாமி விவேகானந்தர்

இதயம் சொல்வதை செய்
வெற்றியோ, தோல்வியோ
அதை தாங்கும் சக்தி அதற்கு மட்டும் தான் உண்டு. - சுவாமி விவேகானந்தர்

தன்னை அறிந்தவன் ஆசைப்படமாட்டான்
உலகை அறிந்தவன் கோபப்படமாட்டான்
இந்த இரண்டையும் உணர்ந்தவன் துன்பப்படமாட்டான் - பகவத் கீதை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைக்கான பொன்மொழிகளின் தொகுப்பு

திருமதி அகிலாண்டேஸ்வரன் பத்மவினோதினி
அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை

* நம்பிக்கையே வாழ்க்கையின் சக்தி
கவலை வாழ்க்கையின் எதிரி.

* மணிக்கணக்கில் உபதேசம் செய்வதை விட
ஒரு கணப் பொழுதாயினும் உதவி செய்வது மேல்.

* அழுகையை இரசிப்பவர்கள் தான்
ஆனந்தமாய் சிரிக்க முடியும்.

* வாழ்வில் பொய் கூட உரைக்கலாம் உண்மை
பேசுபவன் போல் ஒரு போதும் நடிக்காதே.

* ஒருவனை அகந்தை ஆட்கொண்டால் அழிவு
அவன் தலைமுறையையும ஆட்டுவிக்கும்.

* உலகில் உள்ள எல்லா இதயங்களும் நல்ல இதயங்களே
ஆனால் சந்தர்ப்ப சூழ்நிலைகள் அதை மாற்றி அமைக்கின்றன.

* பெரும் அறிவாளிகள் புத்தகங்களோடு வாழ்க்கையையும்
சேர்த்தே படிக்கின்றார்கள்.

* துன்பத்தில் விழுந்து எழுபவன்
வாழ்க்கையின் எல்லை வரை இன்பம் காண்பான்.

* எல்லோரையும் திருப்திப்படுத்த நினைப்பவன்
வாழ்க்கையில் வெற்றி பெறமாட்டான்.

* வாழ்க்கை என்பது ஊஞ்சலில் உட்கார்ந்து ஊசலாடுவது அல்ல
புயலுக்கு நடுவே படகைச் செலுத்துவது போன்றது.

* நல்ல வாழ்க்கை நடத்துவதற்கு நல்ல
பண்புகளை முறையாகப் பெற்றிருக்க வேண்டும்.

* கீழ்த்தரமான தந்திரங்களாலும் செயல்களாலும்
இந்த உலகின் மகத்தான செயல்கள் எதையும் சாதித்து விட முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* உங்கள் வாழ்க்கை காலத்தினால் வரையறுக்கப்பட்டது
அதை மற்றவர்களை குறை கூறுவதில் வாழ்ந்தே வீணாக்காதீர்கள்.

* நீங்கள் மற்றவர்களால் நேசிக்கப்பட வேண்டும் என்றால்
நேசிக்கப்படும் தன்மையோடு இருங்கள்.

* பொறாமை என்பது அடிமைகளின் குணம்
வாழ்வில் உயர வேண்டுமானால் அந்த குணத்தை முதலில் அழித்துவிடு.

* சிறந்த நட்பு என்பது நண்பனின் நிலையறிந்து
அவனுக்கு தக்க சமயத்தில் உதவுவது தான்.

* மற்றவர்களின் பாராட்டுக்கும் பழிக்கும் செவி சாய்த்தால்
நல்ல காரியங்கள் எதையும் உன்னால் செய்ய முடியாது.

* இன்றைய தினத்தை புதிய நாளாக மாற்றுங்கள்
நாளைய தினம் ஆக்க பூர்வமான பொழுதாக விடியும்.

---




"விடியாத இரவென்று எதுவும் இல்லை.
முடியாத துயரென்று எதுவும் இல்லை.
வடியாத வெள்ளம் என்று எதுவும்
இல்லை. வாழாத வாழ்க்கை என்று
எதுவும் இல்லை".

-வைரமுத்து

வலியில் பெரிய வலி எது தெரியுமா
நம்ம கூடவே இருந்து
சிரித்து பேசி பின் நம் முதுகில் குத்தியது
மட்டும் இல்லாமல்



ஒன்றும் செய்யாததை போல்
நடித்துக்கொண்டே இருக்கும் போலி
உறவின் நெருக்கமே..






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேதார கௌரி விரதம்

திரு. நா. இராதாகிருஷ்ணன்
அதிபர், சதாசிவ மகா வித்தியாலயம்,
அனலைதீவு.

கேதார கௌரி விரதம் என்ற பெயரால் அழைக்கப்படும் இவ் விரதம் அம்பிகையை நோக்கி அனுட்டிக்கப்படும் சக்தி விரதங்களுள் ஒன்றாகும் என்று தப்பபிப்பிராயம் இவ்விரதத்தின் பெயர்காரணமாக பலரிடையே நிலவுவதுண்டு. திருகேதாரநாதராகிய பெருமானை நாயகியாகிய கேதார கௌரி அம்பாள் பூசித்து வழிபட்ட விரதமாகையால் இவ்விரதத்திற்கு இப் பெயர் வந்தது. இது உண்மையில் சிவலிங்கப் பெருமானைக் கருதி அனுட்டிக்கப்படும் ஒரு விரதமாகும். இன்று மிகப் பலரால் கைக்கொள்ளப்பட்டு வரும் பிரபலமான ஒரு விரதமாக இது இருப்பதால் இந்த விரதத்தின் கதை, கைக்கொள்ளும் முறை முதலியவற்றைச் சரியான முறையில் பலரும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். இவ்விரதம் சூதபுராணிகரால் ஏனைய முனிவர்களுக்கு சொல்லப்பட்டது. ஐப்பசி மாதத்து தீபாவளி அமாவாசையில் முடிவுறும் 21 நாள் விரதம் ஆகும். முன்பு ஒருசமயம் திருக்கைலாயத்திலே வசந்த மண்டபத்திலே பார்வதி சமேதராக பரமேஸ்வரன் வீற்றிருக்கின்ற பொழுது இந்திராதி தேவர்களும் முனிசிரேஷ்டர்களும் கூடி நின்று தரிசித்தனர். நாரதர் முதலியோரின் இன்னிசையும் ஊர்வசி முதலிய தேவலோக நாட்டிய பெண்களின் நடனமும் நடைபெற்றன. அப்போது சிவ பக்தரான பிருங்கி முனிவரும் அங்கு வந்திருந்து ஆனந்த மயமானஒரு விகடக் கூத்தினை ஆடிக் காட்டினார். இதன்பின் தீவிர சிவபக்தரான முனிவர் பார்வதியை விட்டு சிவனை மட்டும் தனியாக வலம் வந்து வணங்கினார். இதனைக் கண்டு வியப்புற்ற பார்வதி பரமசிவனிடம் அதன் காரணத்தை வினாவினார். அதற்கு அவர்,

சிவத்துக்கும் சக்திக்கும் உள்ள உறவு உயிருக்கும் உடலுக்கும் உள்ள உறவு போன்றது. தேகப்பற்றை நீக்கி அதி பக்குவம் அடைந்தவர்கள் உடலைப் பற்றி கவலைப்படுவதில்லை. அக்கருத்தினால் உயிர் விஷயத்தில் மட்டும் பற்றுள்ளவராதலால் சக்தி பற்றிய அக்கறையின்றி உயிராகிய சிவத்தை மட்டும் வழிபடுவார் ஆகினார் என்று விளக்கம் அளித்தார்.

அப்படியானால் இந்த பிருங்கி முனிவருக்குத் தேக வலுவாகிய சத்தி எதற்கு? என்று எண்ணிய அம்பிகை அவரது உடல் வலிமையையும் ஊன் உதிரப் பசையையும் முற்றாக விலக்கி விட்டார். அவர் வெறும் எலும்பும்தோலுமாகி இயங்கும் ஆற்றல் இன்றி தடுமாறினார். அவர் மீது இரங்கிய சிவபிரான் அவருக்கு தண்டொன்று கிடைக்கச் செய்தார். அதனை ஊன்றி ஒருவாறு இயங்கினார் பிருங்கி முனிவர். அக்கணமே அவ்விடம் விட்டு அகன்ற பார்வதி கௌதம முனிவரின் ஆச்சிரமத்திற்குச் சென்று அங்கோர் வில்வமரத்தடியில் வீற்றிருந்தார். அம்மையின் வரவை உணர்ந்து கௌதமமுனிவர் அங்கு வந்து தரிசனம் செய்தார். அம்பிகை அவரை நோக்கி "யாம் பரமேஸ்வரனோடு ஒரே உருவில் சரிபாதியாகப் பொருந்த வேண்டும் அதற்கு ஒரு நோன்பினை நான் நோற்க வேண்டும்" என்று தன் விருப்பத்தைத் தெரிவித்தார். முனிவர் கேதாரகௌரி விரதத்தைப் பார்வதிக்கு எடுத்துரைக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வதியும் முறைப்படி அவ்விரதத்தைக் கைக் கொண்டு பரமேஸ்வரர் இடப்பாகத்தைப் பெற்று மகிழ்ந்தார். இதுவே அர்த்த நாரீஸ்வர வடிவமாகும்.

அர்த்தம் ..... பாதி
நாரி..... பெண்
ஈஸ்வரர்.....ஆண்

இதனை மணிவாசகர் தமது திருவாசகத்தில் மிகவும் சிறப்பாக எடுத்துக் கூறியுள்ளார் "தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும். பால் வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பங்கிளியும் சூலமும் தொக்க வளையும் உடைத்தொன்மையும் கோலமே நோக்கி குளிர்ந்து ஊதாய் கோத்தும்பி"

வீட்டிலே இதற்கென அமைந்த தூய்மையான இடத்தில் அல்லது சுவாமி அறையில் அல்லது வில்வ மரத்தடி போன்ற பொருத்தமான இடங்களில் அல்லது ஆலயங்களில் இவ்விரத பூஜையை நடத்த லாம். மண்ணினால் சிவலிங்கம் செய்து அதில் கேதாரேஸ்வர பெருமானை ஆவாகணம் செய்து விசேட அபிஷேக பூசைகளை நடத்துதல் முறை. கும்பம் வைத்து அதிலேயும் ஆவாகனம் செய்து பூசிக்கலாம். எள்ளுருண்டை, மஞ்சள் உருண்டை, அதிரசம், வாழைப்பழம், தேங்காய், வெற்றிலை, பாக்கு என்பன வற்றை வகைக்கு ஒன்றாக தினமும் நிவேதனம் செய்ய வேண்டும். பகல் முழுவதும் பட்டினி இருந்து சாயங்கா லத்தில் இந்த பூஜையை செய்த பின் நிவேதனங்களை மட்டும் உண்டு பூசைக்கு பயன்படுத்திய தீர்த்தத்தை அருந்தி வர வேண்டும். இருபத்தோர் இழைகொண்ட பட்டு நூல் ஒன்றை முறுக்கி லிங்கம் அல்லது கும்பத்தின் மீது வைத்து பூஜை முடிவில் வலம் வந்து வணங்கிய பின் ஒவ்வொருநாளும் ஒவ்வொரு முடிச்சிட வேண்டும். 21ஆம் நாள் காப்புக் கயிற்றி னைத் தமது முன் கையிலோ புயத்திலோ கழுத்திலோ தரித்துக்கொள்ள வேண்டும். இறுதி நாளாகிய இருபத்தி ஓராம் நாள் பூரண உபவாசம் இருந்து மறுநாள் அதிகாலையில் பாரணை செய்தல் முறை. 21 நாளும் விரதம் இருக்க வசதி இல்லா தவர்கள் இறுதி நாளாகிய அமாவாசை தினத்தன்று இவ் விரதத்தை மேற் கொள்ளலாம்.

" குழைத்த வெண்திசைப்புனல்
படிந்து அரனடி குறுகா
இழைத்த தந்துவினேழு மூன்று
இடக்கரம் தரித்து
குழைத்த வெண் கதிர்பருதி
போய்க் குரைக்கடற் குளிப்ப
இழைத்த சிந்தையிணோர்பொழு
தயின்றுற வேண்டும்."

உபதேச காண்டம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெலிஞ்சிமுனை அண்ணாவியார்
# அந்தோனி யேசுதாசன்

திரு. அலெக்சாண்டர் பீற்றர்
மெலிஞ்சிமுனை.

இவர் 30.06.1952ஆம் ஆண்டு அந்தோணி பிலுப்பாச்சி தம்பதிகளின் நான்காவது மகனாகக் கலைகள் செழிந்தோங்கும் காவலூரிலுள்ள மெலிஞ்சிமுனை என்னும் கிராமத்தில் பிறந்தார். பள்ளிப் பராயத்தில் பலசமூக நாடகங்களில் தகமை வாய்ந்த பாத்திரமேற்று நடித்துள்ளார். ஆறாம் வகுப்புடன் படிப்பை நிறுத்திய இவர் தமது தந்தையாருடன் சொந்தத் தொழிலாகிய கடற்தொழிலில் ஈடுபட்டார். வாலிபவயதில் காலம் சென்ற அண்ணாவியர் கலைகுரிசில் நீ-ல-அந்தோனி அவர்களின் நெறிப்படுத்தலில் ஒருசில கூத்துக்களில் நடித்துள்ளார். பின்பு அந்தோணி கவரிமுத்து, பனவல் அலைச்சாண்டர் ஆகிய அண்ணாவியர்களின் நெறிப்படுத்தலில் மேடைஏறிய பல கூத்துக்களில் பலதரப்பட்ட பாத்திரமேற்று நடித்துள்ளார். இவர் தமது வாலிப வயதிலிருந்து இற்றைவரைக்கும் நாற்பதிற்கும் மேற்பட்ட மேடைகளில் தென்மோடி நாட்டுக்கூத்தில் நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்னார் தமது நெறிப்படுத்தலில் எழுதிய வரலாற்று மங்கை என்னும் நாட்டுக் கூத்தை 05.05.1995 அன்று யா/வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் மேடையேற்றி முதலாம் இடத்தினையும், கலைகவி என்னும் விருதினையும் பெற்றார். பின் 20.07.2000ல் நெடுந்தீவில் மந்திரிகுமாரன் கூத்தினை மேடையேற்றி கலைமாமணி என்னும் பட்டத்தைப் பெற்றார். 12.12.2014 அன்று ஊர்காவற்றுறை பிரதேச செயலரின் தலைமையில் நடத்தப்பட்ட கலைவிழாவில் அனலைதீவு ஐயனார் கலை அரங்கில் கலை விழுது என்னும் பட்டமளிக் கப்பட்டு கௌரவிக்கப்பட்டது. 03.08.2019ல் திருமறை கலாமன்றத்தினரால் கூத்தக்கலைமா மணி என்னும் பட்டமளித்து கௌரவிக்கப்பட்டது. இவர் இதுவரையில் இருபதிற்கும் மேற்பட்டகூத்துக்களை மேடையேற்றியுள்ளார்.

பதினைந்திற்கும் மேற்பட்ட கூத்துக்களை தமது சொந்த நெறிப்படுத்தலில் எழுதியுள்ளார். புலம் பெயர்ந்த காலங்களில் யாழ்ப்பாணம், நல்லூர், மருதனார்மடம், அரியாலை, நாச்சிக்குடா என பல இடங்களில் இவரின் நாட்டுக்கூத்துக்கள் மேடை ஏற்றப்பட்டன.

தற்போது -எமது மெலிஞ்முனை கிராமத்தில் கிறிஸ்து அரசர் கலை மன்றத்தின் உப தலைவராகவும் மூத்த அண்ணாவியாராகவும் பணி புரிந்து வரும் இவரின் கலைப்பணி மென்மேலும் எமது சமூதாயத்தில் வளர வேண்டும் என வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடுகதியில் தடம்புரளும் யாழ்தேவி

**திரு. பாலகிருஷ்ணன் சதீஷன்** (B.Com)
அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை.

ஆதிகாலம் தொடக்கம் இன்று வரை மனித சமுதாயம் ஒரேவகைக்குள் உட்படுத்தப்படக்கூடிய பல்வேறுபட்ட சவால்களுக்குத் தொடர்ச்சியாக முகம் கொடுத்து வருகின்றது. அந்த வகையில் கொலை, கொள்ளை, சூது, பாலியல் துஸ்பிரயோகம், போதைவஸ்துக்களின் பாவனைகளால் ஏற்படக்கூடிய விபரீதங்கள் என்று இன்னும் பலவிதமானவற்றைக் குறிப்பிடலாம். இதற்கு யாழ் சமூகமும் விதிவிலக்கல்ல. ஆனால் யாழ்ப்பாண சமூகத்தைப் பொறுத்தவரை 2008 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட ஏறக்குறைய 25 வருட காலப்பகுதி இவ்வாறான சவால்களுக்கெதிரான ஒரு மறுமலர்ச்சிக்காலம் என்றே குறிப்பிட வேண்டும். அக்காலப் பகுதியில் கல்வி தொடக்கம் பண்பாடு வரை அனைத்து வகையிலேயும் சிறந்ததொரு ஒழுக்கமான நெறிமுறையான சூழல் அனைவராலேயும் உணரப்பட்டது

**அதுவொரு கரிகாலன் காலம்...**

கல்வியே கண்ணென்பர்; களவதுவே அறியாதென்பர்;

கன்னியரோ கடவுளென்பர்; காரிருளோ கலக்கமில்லையென்பர்;

வழித்துணையோ அதுவீணென்பர்; பெண்ணியமோ பெருமையென்பர்;

தொழில் என்றால் அதிலும் நேர்மையுண்டென்பர், பசிமயக்கமென்றால் அது என்னவென்பர்;

சாதியமோ அது மாந்தர்க்கில்லை என்பர்; மதுவதுவே அதுவிலக்கென்பர் ;

மதமதுவோ அது ஒன்றென்பர், மழையதுவோ மும்மாரி பொழியுமென்பர்;

மகிழ்வதுவோ அது மனிதமென்பர் ; யாழ்ப்பாணம் என்றால் அது தமிழ்ப் பண்பாட்டின் விளக்கமென்பார்.

**இதுவொரு கலி காலம்.......**

அன்று கல்வி தொடக்கம் பண்பாடு வரை யாழ்ப்பாணத்தின் பெருமைபேசிக் கொண்டிருந்த காலம் போய், இன்று அதிகாலைச் செய்தித்தாள்களைத் திறந்தால் மனம் பதை பதைக்குமளவிற்கு பாரிய கொள்ளைகளும் கொலைச் சம்பவங்களும் பாலியல் துஸ்பிரயோக துயரங்களும் பாடசாலை மாணவிகள் தொடக்கம் பல பதின்மவயதுப் பெண்கள் ஏமாற்றப்பட்டு, திருமணமாகாமலேயே கருத்தரிக்கப்பட்ட துயரச் சம்பவங்களும் செய்திகளாகத் துன்பம் தருகின்றன. மேலும் கஞ்சா மற்றும் போதைப் பொருள் கடத்தல்கள், போதைப் பொருள் பாவனையினால், பல இளைஞர் யுவதிகள் பாதிக்கப்பட்டமை பல இளைஞர்கள் இறந்தமை போன்ற வேதனைமிகும் செய்திகளையுமே பார்வையிடக் கூடியதாக உள்ளது. அதிலும் மனிதரூபத்தில் உலாவிக் கொண்டிருக்கும் சில கொடிய விலங்குகளினால் நேரிலோ அல்லது இணைய வழியூடாகவோ காதலென்ற போர்வையில் மேற்கொள்ளப்படும் பல திட்டமிட்ட வலைவிரிப்புகளுக்கும் ஆசை வார்த்தைகளுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏமாற்றப்பட்டு தமது வாழ்க்கையினையே கேள்விக் குறியாக்கிக்கொள்ளும் பல வஞ்சிக்கப்பட்ட ஜீவன்களும் இருக்கத் தான் செய்கின்றார்கள். இவ்வாறான துயரச் சம்பவங்களைக் கேள்வியுறும் போது எந்தவொரு பாவமும் அறியாத அந்த ஆன்மாக்கள்பட்டிருக்க கூடிய வேதனைக ளையும் வலிகளையும் எண்ண எத்தனிக் கும் போதே எமக்குள் ஏற்படும் அதீத கோபம், குற்றவாளிகளைக் கொன்று தீர்த்து விடவேண்டுமென்று எண்ணினா லும் கடைசியில் சூழ்நிலைக் கைதிகளாகிய நாம் எமது இயலாமையினையும் சட்டத்தில் அதற்கான இடமற்ற தன்மையினையும் எண்ணி வெட்கித்தலை குனியத்தான் முடிகின்றது.

இப்பூவுலகில் பிறக்கின்ற அனைவ ருமே ஒரே மாதிரியான சூழ்நிலைகளிலோ அல்லது வசதி வாய்ப்புக்களுடனேயோ பிறப்பதில்லை. அறிவு தெரிந்து தன்னை யறிந்து தனக்கெனக் கனவுகளை உருவாக்கி "நாளை நாமும் சாதிக்க போகின்றோம்" என்கின்ற தன்நம்பிக் கையோடு அடியெடுத்து வைக்கும் போது.... ஒரு விதை மண்ணிலே புதைக்கப்பட்ட நாளில் இருந்து மண்ணுடன் போராடி, மண்ணிலே வழியமைத்து ஒரு துளிராக மண்ணைவிட்டு வெளியில் வந்து சுதந்திரமாக சூரியனைப் பார்த்து மூச்சு விட நினைக்கும் பொழுது, எந்தவொரு சம்பந்தமுமே இல்லாத ஒரு பாதம் அதன் மேற்பட்டு அதன் வாழ்க்கையே முடிகின்ற மாதிரி யாரென்று அறிந்தோ அறியாமலோ கொடூரர்களால் இழைக்கப் படுகின்ற பாரிய அநீதி யாரிழைத்த பிழையோ? பாதிக்கப் பட்ட ஒவ்வொரு மனிதத்தின் வாழ்க்கையும் நிலை தடுமாறி மனமுடைந்து தான் கொண்ட கனவுகளுக்கு உயிர் கொடுக்க முடியாமல் இவ்வுலக வாழ்கையினையே வெறுத்து முடிவுக்குக் கொண்டு வருமள விற்கு தள்ளப்படுகின்றார்கள். செய்தித் தாள்கள், தகவல் சாதனங்கள் ஊடாக எமக்கு தெரிந்ததே இவ்வளவு மனவலிக ளைத் தருகின்றதெனில், தன்மானத் திற்கஞ்சி பயத்திற்கஞ்சி தமக்குள்ளே வலிகளை சுமந்து கொண்டு வெறுப்பின் மிகுதியில் மரணவலிகளை அனுபவித்துக் கொண்டிருக்கும் பல பாவப்பட்ட பெண்க ளும் இருக்கத்தான் செய்கின்றார்களே! யாரறிவார். இவ்வாறன பாரிய குற்றங்கள் எவ்வாறு இழைக்கப்படுகின்றன? அவற்றிற் கான காரணத் தூண்டுதல்கள் என்ன வென்று ஆராய்ந்து பார்த்தால் பலவித மான பார்வைகளிலிருந்து அவற்றிற்கான காரணங்களை முன்வைக்கலாம்.

தமது உதிரத்தை வியர்வையாக்கி அதிலே பணம் செய்து தமது எதிர் காலங்களாகிய பிள்ளைச் செல்வங்க ளுக்கு நல்லதொரு கல்வியையும் அதன் மூலம் ஒரு வளமான வாழ்வினையும் கொடுத்து விடவேண்டும் என்கின்ற பேரா வலுடன் ஒரு தாயாகவோ தந்தையாகவோ சகோதரனாகவோ சகோதரியாகவோ அல்லது ஒரு பாதுகாவலராகவோ இருக் கின்ற ஒவ்வொருவரும் தமக்குள்ளே பல விதமான வலிகளைத் மறைத்துக் கொண்டு அவர்களுக்கு நன்மை செய்கின்றோம் என்கின்ற பெயரில் பிள்ளைளுக்கு அளவிற்கதிகமான சுதந்திரத்தினையும் தேவைக்கதிகமான பணத்தினையும் நவீன கைத்தொலைபேசிகள், பாதுகாப்பற்ற இணைய வசதிகள், பொய்மையான ஆடம்பரங்கள், வாகனங்கள் போன்ற காலத்திற்கு முந்திய வசதிகளை சிறுவயதி லிருந்தே ஏற்படுத்திக் கொடுப்புதனால் அவற்றின் மீதுள்ள அதீத விருப்பம் காரணமாக உரியகாலத்தில் கிரமமாகப் பயிலப்பட வேண்டிய முறையான கல்வி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரான ஒழுக்க நெறிகள் என்பவற்றில் இருந்து தவறித் தேவையற்ற விடயங்களின் மீது ஏற்படுகின்ற தவறான ஈடுபாடு காரணமாகச் சிறுவயதிலேயே வழிதவறிச் சிந்தித்தல் அல்லது செயற்படல் குறிப்பாக இணையவசதி கொண்ட கைத்தொலை பேசிகளின் முறையற்ற கையாளுகை யினால் ஏராளமான சிறுவர்கள் இளை ஞர்கள் மற்றும் யுவதிகள் ஏமாற்றப்பட்டும் தவறான பழக்கவழக்கங்களிற்கு அடிமைப் பட்டிருக்கின்றமை போன்ற சம்பவங்கள் யாழ்ப்பாணத்தில் பதிவாகியிருப்பதுடன் இன்னமும் இடம் பெற்றுக் கொண்டு இருக்கின்றன.

அடுத்ததாகச் சேர்க்கைப்பிழை அதாவது வயதுக்கு மீறிய ஆரோக்கியமற்ற நட்பு, தவறான பழக்கவழக்கங்கள், தவறான செயற்பாடுகள் மீது அதீத மோகம் கொண்டவர்களுடன் ஏற்படுத்திக் கொள்கின்ற நட்பு - இவ்வாறான செயற்பாடுகள் பழக்கவழக்கங்களினால் மெல்ல மெல்லப் புகைபிடித்தல், குடிப்பழக்கம் என்று ஆரம்பித்து நாளடைவில் மித மிஞ்சிய குடிப்பழக்கமாக உருப்பெற்று அவற்றின் மீது கொண்டுள்ள அதீத ஆவல் மற்றும் தவறான வழிப்படுத்தல் போன்றவற்றின் காரணமாகப் போதைவஸ்துப் பாவனை, புகைப் பொருட்கள் பாவனை, சூது விளையாட்டு என்று பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் பழக்கங்க ளுக்கு அடிமைப்படும் நிலைக்குத் தள்ளிக் கொண்டு போய், காலப்போக்கில் இவ்வாறன பழக்கங்களிலிருந்து விடுபட முடியாமல் தவிக்கின்றனர். நாளாந்தம் இவற்றின் பாவனையில்லாமல் வாழ முடியாது என்கின்ற ஒரு சூழ்நிலைக்கு உடலும் மனநிலையும் தள்ளப்பட்டுவிடும். இதில் பெரும்பாலும் பாதிப்பிற்குள்ளா கின்ற வர்க்கத்தினர் யாரென்று நோக்கி னால் பதினாறு வயது தொடக்கம் இருபத்தைந்து வயதிற்கிடைப்பட்ட இளைஞர்களாக இருப்பதற்கான சாத்தி யங்கள் அதிகம். அதற்காக இந்த வயதுக் கட்டமைப்பினைத் தவிர்ந்த வயதினர் பாதிக்கப்படாமலி ருக்கின்றனரா என்றால் அவர்களுடன் ஒப்பிடும்போது பாதிக்கப் படும் வீதம் குறைவாகவே காணப்படு கின்றது. பாதிப்பிற்குள்ளாகின்ற நபர்களில் ஒட்டு மொத்தத்தில் குறிக்கப்பட்ட ஒரு தொகுதி ஊழியப்படையினரைத் தவிர மீதமுள்ளவர்கள் பெரும்பாலும் பிறரில் தங்கிவாழ்வதற்கான வாய்ப்புக்களே உண்டு.

ஊழியப்படையாக இருந்தாலும் சரி, தங்கிவாழ்வோராக இருந்தாலும் சரி, ஏதோ ஓர் வகையில் இவர்களுக்கு கிடைக்ககூடிய வருமானம் குறிக்கப்பட்ட ஒரு சில நாட்களிற்கே கூடப்போதுமானதாக இருக் காது அதனால் இவ்வாறன சூழ்நிலை கள் உருவாகும் போது தான் இவர்களுக்குள் மனநிலைரீதியாக ஒருவித போராட்டம் உருவாகும் இந்நிலையில் போதையின் தேவையோ, அல்லது தீயபழக்கங்கள் மீதான ஈர்ப்போ அதிகரிக்கின்ற மாதிரி யான மாயையொன்று உருவாகி, அவற் றினை நிறைவேற்றிக் கொள்வதற்காக தங்களுக்கான வருமான மூலங்களிலி ருந்தும் தாங்கள் யாரில் தங்கிவாழ்கின்றார் களோ அவர்களிடமிருந்தும் தங்களது சுயத்தினை இழந்து தமக்குத் தேவையான பணத்தினையோ அல்லது பொருட்க ளையோ பணத்தினையோ பெற்றுக் கொள்வதற்கு எத்தனிப்பர். எதிர்பார்ப்புக் கள் நிறைவேறாத பட்சத்தில் வன்முறைகள் உருப்பெறும். இதன் மூலம் பல பெற்றோர்கள் தாக்கப்பட்டு பாதிப்பிற்குள்ளாக்கப்பட்ட பல சம்பவங்களும் யாழ்ப்பாணத்திலே பதிவாகியி ருப்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான வன்முறையின் தொடர்ச்சியாக சிறுகளவுகள், பணத்திற்காக கை கலப்புக்கள், பிறர் உடமைகளை சேதப்படுத்துதல் என்று சமூகத்திற்கு பாரிய அநீதிகள் இழைக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது. ஒட்டுமொத்தத்தில் சினிமாப் பாணி போல இன்றைய யாழ்ப்பாண நிலவரம் மிகவும் மோசமடைந்து காணப்படுகின்றது இவ்வாறன வன்முறையுரு வெடுப்புக்கள் தோன்றக்காரணம் பெற்றோர் பாதுகாவலர்களின் கவனயீனமான செயற்பாடுகள், அதிநவீன இணைய வசதிகளுடன் கூடிய தொலைபேசிகளின் முறையற்ற அல்லது தவறான கையாள்தல் முறையும் இணைய வழி தொடர்பாடலின் தவறான புரிதல் அல்லது முறையற்ற கையாள்தல்கள் மற்றும் இந்தியச் சினிமாக்களின் சில தவறான வழிகாட்டுதல்களும் இவற்றிற்கான பெரும்பான்மையான காரணங்கள் என்பதையும் யாரும் மறுப்பதற்கில்லை.

அடுத்த கட்டமாக கடுமையான குடிப் பழக்கம், போதை, புகைப்பழக்கம் போன்றவற்றிற்கு அடிமையானவர்களால் மட்டும்தான் இவ்வாறான சமூகச் சீர்கேடுகள் இடம் பெறுகின்றதா என்று கேட்டால் நிச்சயமாக இல்லை என்பது தான் பதிலாக இருக்கும். ஏனெனில் பல அரச, தனியார் அலுவலகங்கள் மற்றும் பாடசாலைகள் போன்ற இடங்களில் கடமை ஆற்றுகின்ற எவ்விதமான குடிப்பழக்கங்களிற்கோ போதைப்பொருள் பாவனைகளுக்கோ அடிமைப்படாத ஊழியத் தொகுதிகளிலுமே ஒரு சில ஊழியர்களால் பாலியல் வன்முறைகள் இழைக்கப்பட்டிருப்பதற்கு கடந்த கால பத்திரிகைகள் மற்றும் இணையவழிச் செய்திகளும் சான்றாக இருக்கின்றன. இவை தவிர செய்திகள் வாயிலாகவோ அல்லது தகவல்களாகவோ வெளிவராத பல சம்பவங்களும் இன்னும் இடம்பெற்றுக் கொண்டு தானிருக்கின்றன.

அடுத்ததாகப் பாதிப்பிற்குள்ளாக்கப் படுகின்றவர்களின் பெற்றோர் பாதுகாவலர்களால் அறியாமல் இழைக்கப்படுகின்ற தவறுகள் அதாவது பிள்ளைகள் எல்லா வழிகளிலும் பாதுகாப்பான சூழலில் தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்களா என்பதனை உறுதி செய்யத்தவறுதல், அவர்களின் நாளாந்த நடவடிக்கைகள், செயற்பாடுகளில் ஏதாவது மாற்றங்கள் தென்படுகின்றதா அல்லது அவர்களின் நட்புவட்டங்களில் மாற்றங்கள் வித்தியாசங்கள் ஏற்பட்டுள்ளதா அல்லது அவர்களில் உடல் உளரீதியாக ஆரோக்கியமான வளர்ச்சி காணப்படுகின்றதா என்பவற்றினை உணர்ந்து கொண்டு அவற்றில் வழக்கத்திற்குமாறாக ஏதாவது மாற்றங்கள் தென்பட்டால் உடனடியாக அடுத்தகட்ட நடவடிக்கையினை எவ்வாறு கையாள்தல் என்கின்ற அறிவு அல்லது தெளிவில்லாதவர்களாக இருத்தல் அல்லது தெரிந்தும் ஒரு அசண்டையீனமாகச் செயற்படுதல் போன்ற சம்பவங்களினாலும் இன்று பலரது எதிர்காலம் ஒரு கேள்விக்குறி யாகவே காணப்படுகின்றது.

இன்று யாழ்பாணத்தினைப் பொறுத்த வரைக்கும் போதைப் பொருள் பாவனை மிகப் பெரியதொரு சவாலாக மாறியுள்ளது. அண்மைக்காலங்களில் பத்தொன்பது வயது தொடக்கம் இருபத்தைந்து வயதிற்கிடைப்பட்ட பல இளைஞர்கள் ஊசி மூலமாக போதைப் பொருட்களினை அதிகளவில் உடலினுள் செலுத்தி அதன் மூலம் மாரடைப்பு ஏற்பட்டு இறந்த சம்பவங்கள் யாழ்ப்பாணத்திலே பதிவாகி இருக்கின்றன. இது தவிர தற்காலத்தில் பல பாடசாலை மாணவர்கள் மத்தியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதைப் பழக்கங்கள் மிகவேகமாக அதிகரித்து வருகின்றன. அதாவது குறிக்கப் பட்ட ஒரு தொகுதி குழுக்களால் மிகவும் மதிநுட்பமான முறையில் திட்டமிட்டு நடாத்தப்படும் மனித இனவழிப்பு அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதில் ஆண்களை மட்டுமல்லாமல் பெண்களையும் இலக்கு வைத்து இத்திட்ட மிட்ட சீரழிப்புக்கள் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. உதாரணமாக அண்மையில் யாழ் நகரப்பகுதியினை அண்டிய பகுதியில் ஒருவீடொன்றில் இரு பெண்கள் ஐஸ் போதைப்பொருள் பாவித்துக்கொண்டிருந்த நிலையில் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டமை போன்ற சம்பவங்களும் சவாலுக்கு இன்னமும் வலுச்சேர்ப்பதாகத்தான் உள்ளது. இவை போக நாளாந்தம் பத்திரி கைகள் வாயிலாக யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் பொலிசார். மற்றும் பாது காப்புப் படையினர்களினால் முறியடிக் கப்பட்டதாக வரும் கஞ்சா மற்றும் போதைப்பொருள் கடத்தல் செய்திகள் பத்திரிகைகள் வாயிலாகத் தொடர்ந்தும் வெளிவந்து கொண்டேயிருப்பதனால் கடத்தல்களும் தொடர்ந்தும் இடம் பெற்றுக் கொண்டுதானிருக்கின்றது என்பது தெளிவாகின்றது. எனவே எமது சமூகம் எந்நேரமும் பாரியதொரு சவாலுக்கு முகங் கொடுத்து விழிப்புணர்வோடு வெற்றிகாண வேண்டிய தேவையொன்று உண்டு.

எனவே இவ்வாறன மிகப்பெரியதொரு சவால்களை கட்டுபாட்டிற்குள் கொண்டு வருவதென்பதோ அல்லது இப்படியான தொரு நயவஞ்சக கும்பல்களை சதிக் குழுக்களை முறியடித்து ஒரு பாதுகாப்பான சூழல் ஒன்றை ஒரு பாதுகாப்பான சூழலொன்றை சமூகத்தில் உருவாக்கு வதென்பது ஒவ்வொரு தனிமனித சக்திகளுக்கும் அப்பாற்பட்ட விடயம் என்ப தனால் நாம் ஒவ்வொருவரும் இப்படியான புறச்சூழல் பாதிப்புக்களிலிருந்து எம்மை யும் எம்மைச் சார்ந்திருக்கக் கூடிய அனைவரையும் விழிப்புணர்வோடு பாது காக்க வேண்டியது அவசியமாகும்.

அந்த வகையில் பெற்றோர் அல்லது பாதுகாவலர் தமது பிள்ளைகள் பற்றித் தெளிவாக அறிந்திருக்கவேண்டிய அதே சமயம் அடக்குமுறையற்ற அன்பான வழியில் பூரணகண்காணிப்பைக் கொண்டி ருத்தல் அவசியம். அதாவது ஒரு பிள்ளையி னுடைய ஒவ்வொரு அசைவினையும் உணர்ந்து கொள்ளக்கூடிய பக்குவத்தினை அல்லது ஆற்றலைக்கொண்டிருக்க வேண்டும். எனவே சிறுவயதிலிருந்தே நல்ல ஒழுக்கத்தினையும் பழக்கவழக்கங் களையும் முறையான கல்வியையும் கற்றுக்கொடுக்கவேண்டும். பாடசாலை செல்லும் பருவத்திலிருந்தே பாடசாலை முடிந்து வீட்டிற்கு வந்தபின் பாடங்களை மீட்கும் செயற்பாட்டுடன் நாளாந்தம் பிள்ளைகள் உங்கள் கண்காணிப் பிலிருந்து விலகி மீண்டும் உங்கள் கண் காணிப்பிற்குள் வருவது வரைக்குமான காலப்பகுதியில் நடைபெற்ற விடயங்கள் அனைத்தையும் ஒவ்வொன்றாகச் சுவாரஸ்யமான முறையில் கேட்டு அறிந்து கொள்ள வேண்டும். அதேநேரம் இதனை ஒரு நாளாந்தக் கருமமாக மாற்ற வேண்டும். இவ்வாறு செய்வதனூடாகப் பிள்ளைகள் நாளாந்தம் எப்படியான சூழலை எதிர்கொள்கின்றார்கள் அல்லது சூழலை எதிர்கொண்ட விதத்தில் ஏதாவது மாற்றங்கள் தேவையா அல்லது ஏதாவது பிரச்சினைகளில் சிக்கியிருக்கின்றார்களா என்பதை அறிந்து அதற்கேற்ற வகையில் செயற்பட முடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்ததாக நட்பு வட்டம் பல்வேறு பட்ட ஆய்வுகளினடிப்படையில் நாளாந்தம் அதிகமாக பழகுகின்ற ஐந்து பேரின் சராசரி தான் ஒரு மனிதன் என்று சொல்லப்படு கின்றது. எனவே பிள்ளைகளின் நண்பர்கள் சம்பந்தமான ஆய்வும் தெளிவும் கட்டாய மாக இருக்க வேண்டியது அவசியம். பிள்ளைகளின் வார்த்தைப்பிரயோகங்கள், செயற்பாடுகளில் தவறான அபிப்பிராயம் காணப்பட்டால் உடனடியாக நட்புவட்டங் களைப் பரிசீலித்துப் பார்க்கவேண்டும். தவறுகள் தென்பட்டால் உடனடியாக நண்பர்களையும் சேர்த்து திருத்தமுடியுமா என்பதனைப் பரிசீலிக்க வேண்டும். முடியாத பட்சத்தில் நண்பர்களை மாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டியது அவசியம், அதேசமயம் எங்களது வீட்டுச் சூழலையும் ஆரோக்கியமான முறையில் பேண வேண்டியதும் அவசியம், அதாவது பிள்ளைகளின் முன்னால் நாகரிகமற்ற முறையில் நடந்து கொள்வதனையோ, மதுப்பாவனை புகைப்பிடித்தல் போன்ற செயற்பாடுகளையோ, தகாத வார்த்தைப் பிரயோகங்கள் அல்லது சண்டையிடுதல் போன்ற அநாகரீகமான விடயங்களையோ முற்றாக தவிர்த்துக் கொள்ளவேண்டும். மாறாக அன்பாக, பண்பாக, எப்படி நடந்து கொள்வது என்பதை நாளாந்த வழக்கங்க ளினூடாகப் பிள்ளைகளுக்கு முறையாகக் கற்றுக் கொடுக்க வேண்டும். ஏனெனில் ஒரு பிள்ளை பொதுவாக ஒருநாளின் அதிக மான நேரத்தை செலவழிக்கின்ற இடங்க ளில் வீட்டுச் சூழலுக்குப்பெரும் பங்குண்டு. அந்த வகையில் ஒரு வீட்டுச் சூழலைப் பாதுகாப்பான, ஆரோக்கியமான நல்ல முறையில் மகிழ்ச்சிகள் நிறைந்த இடமாக உருவாக்கிக் கொடுக்க வேண்டியது பெற்றோர் பாதுகாவலரின் மிகமுக்கிய மான கடமைகளிலொன்றாகும்.

அடுத்த கட்டமாகப் பிள்ளைகள் தாமாகவே தங்களது பிரச்சினைகளை எதிர் கொண்டு வெற்றிகரமாக அடுத்த கட்டத்திற் குச் செல்லக்கூடிய ஒரு முதிர்வுப் பருவத் தினை எட்டும்வரைக்கும் பெற்றோர் பாதுகாவலர் பிள்ளைகள் வெளியிற் சென்று வரவேண்டிய தேவைகளிற்கு அவர்களைத் தனியே அனுப்பாமல் தாமோ அல்லது நம்பிக்கைக்கு பாத்திரமான ஒருவருடனோ சென்றுவர அனுமதிப்பது சிறந்ததாகும். ஆனால் நடைமுறை வாழ்க்கையில் இது எல்லோருக்கும் சாத்தியமான விடயமல்ல. எனவே இப்படிப் பட்ட சூழ்நிலைகளில் பிள்ளைகள் சமூகத்தில் எப்படிப்பட்ட பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும், எதிர் கொள்ளவேண்டிய சந்தர்ப்பங்களில் மேற் கொள்ளவேண்டிய தற்காப்பு நடவடிக்கை கள் என்ன அல்லது அருகில் உள்ள யாரிடமாவது அவர் பாதுகாப்பானவர் தான் என்பதனை உணர்ந்து எவ்வாறு உதவி கேட்கலாம் என்பது பற்றியதொரு தெளிவான விளக்கங்களையும் முன்னேற் பாடாகக் கூறிவைக்கவேண்டியது அவசி யம். ஏனெனில் பொதுவாகப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் கல்வி மற்றும் வேலையின் நிமித்தம் வீடுகளிலிருந்து தொலைவுகளிலுள்ள பாடசாலைகள் கல்வி நிலையங்கள் மற்றும் தொழில் நிலையங் களுக்கு அனுப்பி வைக்கின்றார்கள். இந்நிலையில் பிள்ளைகள் தனியாகவே அல்லது பொதுப் போக்குவரத்துகளிலோ நீண்டகாலம் பயணிக்கவேண்டிய தேவை ஏற்படுகின்றது. எனவே இப்படியான சந்தர்ப்பங்களில் புறச்சூழலிருந்து எப்படி யான விடயங்களை உள்வாங்க வேண்டும் அல்லது தவிர்க்கப்பட வேண்டும் என்பது பற்றி அறியாமலே பிரச்சினைகளில் சிக்கிக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் அதிகம். இதுதவிர இப்படியான பல வழிகளில்

பிரச்சினைகளில் சிக்கவைத்து வழிமாற்றி வஞ்சிப்பதனையே நாளாந்த வேலையாகக் கொண்டு பலர் செயற்பட்டுக் கொண்டிருக் கின்றார்கள். எனவே இப்படியான விடயங் களில் அவதானமாக இருக்கவேண்டியது அவசியம்.

அடுத்ததாக தனிமை அல்லது அளவுக்கதிகமான ஓய்வு நேரம் பொதுவாக இன்றைய காலகட்டம் கூட்டுக்குடும்ப வாழ்க்கைமுறைகளிருந்து தனிக்குடும்ப வாழ்க்கைமுறைகளிற்கு மாறியிருக்கும் அதேசமயம் பொருளாதாரச் சிக்கல் மற்றும் நாகரிகம் என்கின்ற போர்வையில் ஓரிரு குழந்தைகள் என்று குடும்பங்கள் வெகுவாக சுருக்கமடைந்துள்ளது. இந் நிலையில் பெற்றோர் முழுநேர வேலைக்கு செல்லக் கூடியவர்களாக இருக்கும் பட்சத்தில் பிள்ளைகளின் கல்வி நேரங்கள் போக மிகுதிநேரங்கள் சரியாக உடலுக்கும் மூளைக்கும் ஆரோக்கியமான முறையில் கட்டமைக்கப்படாமல் வீடியோகேம் இணையவசதியுடனான தொலைபேசிப் பாவனை என்றிருந்தால் இதன் தொடர்ச்சி நாளடைவில் தனிமையுணர் வினை ஏற்படுத்தி ஒருவிதமான மன உளைச்சலினை உருவாக் கும். இது அவர்களை வழிதவறிச் சிந்திக்க அல்லது தமது இலக்குகளில் இருந்து விலகிச்செயற்படத் தூண்டும். எனவே இவ்வாறான விடயங்களில் கவனமெடுத்து சிறுவயதுகளிருந்தே ஓய்வு நேரங்களில் உடலுக்கும் மூளைக்கும் ஆரோக்கியமான முறையில் உடற்பயிற்சி களில் ஈடுபடுத்து தல்; நல்ல புத்தகங்களை வாசிக்கும் பழக்கங்களை ஏற்படுத்துதல்; மனதுக்கும் உடலுக்கும் புத்துணர்வை ஏற்படுத்தும் இசைக்கருவிகள் யோகாசனம் போன்ற விடயங்களைப் பயிற்றுவிப்பதனூடாக அவர்களது ஓய்வு நேரங்களைப் பயனுறுதி மிக்கதாக மாற்றவேண்டும்.

அடுத்ததாக உரியவயதுகளில் முறையான பாலியல் பற்றிய அறிவினை பாலியற்கற்கைகளினூடாக வழங்கவேண் டியது அவசியம். சமூகத்தில் கல்வி மற்றும் தொழில்ரீதியாக மூன்றாம் நபர் ஒருவருடன் பழகும்போது தேவையற்ற சம்பாசனை களைத் தவிர்த்து பாதுகாப்பான முறையில் ஒரு ஆரோக்கியமான உறவினை எவ்வாறு, பேணுவது என்பது சார்பான அறிவுரை களை வழங்குகின்ற அதேசமயம் சமூகத் திலிருக்கக்கூடிய மது புகைப்பொருட்கள் மற்றும் போதைப்பொருட்கள் போன்ற வற்றின் பாவனையால் உடல்நிலை மற்றும் மனநிலைரீதியாக ஏற்படப்போகும் பாதிப் புக்கள் என்ன அவற்றினால் இழக்கப்படப் போகின்ற எதிர்காலத்தின் இனிமையான வாழ்க்கை மற்றும் அன்பான உறவுகள் போன்ற விடயங்கள் பற்றி சிறந்ததொரு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியதும் மிகவும் அவசியமானதொன்றாகும்.

இப்படியான ஒவ்வொரு விடயங்களிலும் விழிப்புணர்வோடு செயற்பட்டு நம்மையும் நமது எதிர்காலச் சமூகத்தினையும் பாது காக்க வேண்டியது நம்மனைவரதும் முக்கிய பொறுப்பாகும். எனவே எதிர்காலம் சார்பாக விழிப்புணர்வுடன் செயற்பட்டு ஒரு பாதுகாப்பான ஆரோக்கியமான சமூகத் தினை மீட்டெடுப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுவைதீவு

திரு. பரணி
அனலைதீவு

யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்மேற்கே அமைந்துள்ள தீவுத்தொகுதிகள் வரலாற்றுக் காலம் முதற்கொண்டு சமூகம், பொருளாதார, பண்பாட்டியல் அடிப்படையில் சிறப்புற்று விளங்கியதைப் பல்வேறு ஆவணங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இத்தீவுகள் அதிவரள் வலயத்தில் காணப்படுவதாலும், மண்வளம், தரைக்கீழ் நீர்வளம் போன்றன மக்களின் வாழ்க்கைக்குச் சவாலாக அமைந்துள்ளதாலும், நீர்வழிப் போக்குவரத்தின் ஊடாகவே தீவுகளுக்கிடையிலும் தீவுகளுக்கு வெளியிலும் தொடர்புகளை ஏற்படுத்த வேண்டி இருப்பதனாலும் பல்வகையிலும் தனிமைப்படுத்தப்பட்ட தீவுகளாகவே இருந்து வருகின்றன.

இவற்றுள் யாழ்ப்பாண நகரின் தென்மேற்குத் திசையில் 34கிலோமீற்றர் தொலைவில் அலைகடலின் நடுவே இலங்குவது எழுவைதீவு ஆகும். இது ஊர்காவற்றுறை பட்டினத்திலிருந்து 3 கடல்மைல்கள் தூரத்தில் தென்மேற்குத் திசையில் அமைந்துள்ளது. 21/2 கிலோமீற்றர் நீளமும் 1/2கிலோமீற்றர் அகலமும் கொண்டமைந்த மணற்பாங்கான நில அமைப்பை பிரதானமாகக் கொண்டு வடக்கு - தெற்குத் திசையாக நீண்டு காணப்படு கின்றது. இதன் பரப்பு 1.68 சதுரகிலோமீற்றர் ஆகும்.

"எழு" என்னும் ஒருவகைச் செடிகள் பல்கிப் பெருகிக் காணப்பட்டதால் எழுவைதீ வென்று இனிய பெயரைப் பெற்றதாக கூறுவர். அவ்வாறே, உலக வர்த்தகத் துறைமுகமாகத் திகழ்ந்த ஊர்காவற்றுறைத் துறைமுகத்தை நாடிப் பல்வேறு நாடுகளிலிருந்தும் கப்பல்கள் வரும்பொழுது கிழக்குத் திசையில் முதலில் தோற்றப்படுவது எழுவைதீவின் உயர்ந்த நில அமைப்பும் பனை மரங்களுமாக இருந்தமையால் எழுவான் தீவு என்ற காரணப் பெயர் மருவி எழுவைதீவென அழைக்கப்பட்டதாகவும் கூறுகின்றனர்.

தீவின் மேற்குக் கடற்கரை கற்பார்கள், முருகைக்கல் நிறைந்ததாகக் காணப்படும் அதே நேரத்தில் கிழக்குக் கடற்கரை மணல் செறிந்ததாகக் காணப்படுகின்றது. பொதுவாக தீவுப்பகுதி சுண்ணாம்புப் பாறைத் தளத்தில் அமைந்திருப்பதன் காரணமாகவும் மணல் மண் வகைப்பட்ட மண்ணமைப்பைக் கொண்டிருப்பதாலும் மழைநீர் தேங்கி நிற்கும் தன்மையில் எழுவைதீவு சாத்தியமற்ற நிலையைக் கொண்டுள்ளது. தரையமைப்பு மேற்கேயும் தெற்கேயும் சிறிது உயர்ச்சியைக் கொண்டு பின் சரிவடைந்து காணப்படுகின்றது. வடக்கேயும் கிழக்கேயும் தரை கடலையொட்டி 2 மீற்றர் வரையான பரந்த தரையமைப்பைக் காட்டுகின்றது. மணல்மண் வகையான தரைமண்ணே பெரும்பாலும் இருந்தபோதிலும் தென்பகுதியில் 15 ஏக்கர் வரையிலான களிமண் பிரதேசமும் காணப்படுகின்றது. இப் பிரதேசமே இத்தீவின் முக்கிய பயிர் செய்யக்கூடிய நிலப்பரப்பாகும். மழைநீர் வடிகாலி னூடாகச் சென்று தேங்கி நிற்கக் கூடிய புவியியல் சாதகநிலை காணப்படவில்லை. எனினும் சுமார் 150 கிணறுகளும் ஒரு குளமும் சில கேணிகளும் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரண்ட பூமியாகக் காணப்படு வதால் பிரதானமாகப் பனை, தென்னை, ஆல், பூவரசு போன்ற தாவரங்களும் வரண்நில பற்றைத்தாவரங்களும் காணப் படுகின்றன. தீவின் தென்பகுதி உவர்நீர்த் தன்மையைக் கொண்டிருக்க, வடக்குப் பகுதி கிணறுகள் நன்னீரைக் கொண்டிருந் தாலும், கோடைக்காலங்களில் இலகுவாக வற்றிக் காய்ந்துவிடுகின்றன. இதனால் குடிமக்களுக்கு நாளாந்தப் பாவனைக்குரிய நீர்ப் பற்றாக்குறை ஏற்படுவதுடன் கால் நடை போன்றன நீண்டகால ஆயுளைக் கொண்டிருக்க முடியாதவையாகவுள்ளன. வருடமழைவீழ்ச்சிக் குறைவால் மழைநீர் சேமிப்பு தொட்டி அமைத்தல், குளத்தை ஆழப்படுத்தல் போன்ற பொறிமுறைகள் பரிசீலிக்கப்பட்டுள்ளன. இதனால் குடிநீர் விநியோகிக்கும் பணியை, ஊர்காவற்றுறை பிரதேசச் செயலகம், ஊர்காவற்றுறை பிரதேசசபை என்பன அகதிகளுக்கான ஐ.நா. தூதரக உதவியுடன் செயற்படுத்தி யுள்ளார்கள். மிக வரட்சியான காலங்களில் நன்னீர் வழங்குகை படகு மூலம் விநியோக வாகன வசதிகள் மூலமும் நடைமுறைப் படுத்தப்படுகின்றது.

ஒல்லாந்தர் காலத்தில் அனலைதீவு போன்ற இடங்களிலிருந்து மக்கள் இங்கு வந்த குடியேறியுள்ளதாக அறியக்கிடக்கின் றது. இவர்கள் இந்து சமயத்தவர்களாக இருந்தனர். பின்னர் மாதகல், மண்டைதீவு போன்ற பகுதிகளிலிருந்து பருவகால மீன் பிடித் தொழிலில் ஈடுபட்ட கத்தோலிக்கக் குடும்பத்தினர் இங்கே வந்ததாகவும் காலப்போக்கில் அவர்கள் எழுவைதீவின் தென்பகுதியில் ஆரம்ப காலக்குடியேற்றங் களை ஏற்படுத்தினர் எனவும் கூறுகின்றனர். இவ்வகையில் இரு சமயங்களைக் கொண்ட வர்களும் எழுவைதீவின் வாழ்வுக்கும் வளத்துக்கும் காரணர்களாக விளங்கி ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர். கிறீஸ்தவர்கள் தீவின் தென்பகுதியில் இறங்கு துறையருகில் தமக்கு அருள் பாலிக்கும் அர்ச்.தொம்மையப்பருக்குத் திருத்தலம் அமைத்திருக்கின்றனர். இந்து சமய மக்கள் தமக்கென வழிபாட்டிற்கு முத்தன்காடு என்னுமிடத்தில் முருகப் பெருமானுக்குத் திருத்தலம் அமைத்துள்ள னர். வேறு சிறு சைவ ஆலயங்களும் அமைந்துள்ளன. தங்கள் தங்கள் திருத்தலங்க ளுடன் இணைந்து சேவை நிலையங்களை காலகதியில் அமைத்துள்ளனர்.

இத்தீவின் கல்விக் கலங்கரை விளக்க மாக இரு பாடசாலைகள் விளங்குகின்றன. 1925ம் ஆண்டில் அர்ச்.தொம்மையப்பர் றோமன் கத்தோலிக்கப் பாடசாலை எனப் பதியப்பட்டு, யாழ்.மேற்றிராசனத்தால் நிர்வகிக்கப்பட்ட பாடசாலை ஆரம்பததில் தொம்மையப்பர் ஆலய வளவினுள் ஆரம்பித்து நடாத்தப்பட்டது. பின்னர் மத குருவின் அனுசரணையுடனும் பெற்றோரின் பங்களிப்புடனும் ஆலயத்துக்கு அண்மை யில் புதிய கட்டிடம் அமைக்கப்பட்டது. இப் பாடசாலை 1964 இல் அரசினரால் பொறுப் பேற்கப்பட்டது. இதன் பின் பல்வேறு அபிவிருத்திகள், கல்விச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. தரம் 5 வரையிலான வகுப்புக்கள் இடம் பெறுகின்றன. தற்பொழுது இதன் பெயர் எழுவைதீவு றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் ஆகும்.

எழுவைதீவு முருகவேள் கனிஷ்ட வித்தியாலயம், க.பொ.த சாதாரணதர வகுப்புக்கள் வரை கொண்டதாக, ஸ்ரீ முருக மூர்த்தி ஆலயத்துக்கு அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது. இப்பாடசாலையும் 1925ம் ஆண்டிலே சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன், அம்பலவாணர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்துச்சாமி என்பவரால் ஆரம்பிக்கப் பட்டது. பின்னர் இப்பாடசாலை முருகவேள் மகாவித்தியாலயம் எனப் பெயரிடப்பட் டுள்ளது.

புரட்டஸ்த்தாந்து மிஷனரிமாரால் ஸ்தாபிக்கப்பட்ட பாடசாலை ஒன்றும் இங்கு இருந்தது. எழுவை தீவின் முதல் பாடசாலை என்னும் சிறப்புடைய அப்பாடசாலை 1960 வரை அரசாங்கம், தனியார் பாடசாலைக ளைப் பொறுப்பேற்கும் வரை இயங்கியது. பின் நிறுத்தப்பட்ட அப்பாடசாலையில் உப தபாலகம் செயற்படுகின்றது.

1964ம்ஆண்டில் கிராமசேவையாளர் பிரிவு - 8 எழுவைதீவு என இருந்து பின்பு J/19 எழுவைதீவு என மாற்றம் பெற்று தற்போதைய பிரிவின் படி J/39 எழுவைதீவு என அழைக்கப்படுகின்றது.

ஆரம்ப காலத்தில் அனலைதீவு, எழுவைதீவு என்பன ஒரே உள்ளுராட்சி அமைப்பாக விளங்கியது. அனலைதீவின் ஒரு வட்டாரமாக எழுவைதீவு இயங்கியது. ஒரு பிரதிநிதி தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டார். 1952ம் ஆண்டிலிருந்து எழுவைதீவு தனிக் கிராம சபையாக்கப் பட்டது. 1981 இல் யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச்சபையின் உபதபாலகமாக இயங்கியது. 1988 இல் இருந்து ஊர்காவற் றுறை பிரதேசசபை உப அலுவலகமாக இயங்குகின்றது.

1980 ஆம் ஆண்டில் பொது சன நூலகம் ஆரம்பிக்கப்பட்டது. ஆயர்வேத வைத்திய சாலை உள்ளுராட்சி சபையால் நடாத்தப் படுகின்றது. இரண்டு சனசமூக நிலையங் கள் சிறப்பாக இயங்குகின்றன. ஒன்று பாத்திமா சனசமூக நிலையம், மற்றையது மாணிக்கவாசகர் சனசமூக நிலையம். பாத்திமா முன்பள்ளி என்னும் சிறுவர் பாடசாலையும் நடைபெறுகின்றது.

ஊர்காவற்றுறை பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் ஒரு கிளை பொதுமக்களுக் கான கூட்டுறவுச் சேவைகளை வழங்கு கின்றது.

கிராமமக்களின் பிரதான தொழிலாக மீன்பிடித் தொழில் அமைந்துள்ளது. தீவின் தெற்கில் வாழும் கத்தோலிக்க மக்களில் பலர் சொந்தமாக இயந்திர மீன்பிடிப் படகுகளும் கட்டுமரங்களும், பாய்வள்ளங் களும் உபகரணங்களும் கொண்டு தீவின் சுற்றாடலில் மீன் பிடிப்பர். கருவாடு செய்து பதப்படுத்தியும் ஐஸ் இட்டு குளிரேற்றி பாதுகாத்து வெளிச்சந்தைகளுக்கு விற்பனை செய்வர். இதற்கென மீனவர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

பனை வளமிக்க கிராமமாகையால் அவை சார்ந்த தொழில்களில் தேர்ச்சி பெற்றவர்கள் பலர் உள்ளார்கள். கடகம், கூடை, பாய் போன்றவற்றுக்கு எழுவைதீவு சிறப்புப் பெயர் பெற்ற கிராமமாகும். பனை சார்ந்த ஏனைய முயற்சிகளுக்கான பயிற்சிகள், வாய்ப்புக்கள் காலத்துக்குக் காலம் ஏற்படுத்தப்பட்டு சந்தை வாய்ப்பும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. தரமான பனாட்டு, புழுக்கொடியல், ஒடியல் வகைகளை எழுவைதிவு உள்நாட்டுக்கும் வெளிநாட்டுக்கும் ஏற்றுமதி செய்கின்றது.

சுகாதார, மருத்துவ வசதிகளைப் பொறுத்து பலகாலமாகவே மேன்னிலைப் பட முடியாத நிலை காணப்படுகின்றது. ஆரம்ப சுகாதார நிலையத்தில் மாதாந்தக் கிளினிக்குகள் நடைபெறும். இதனால் சிறு காய்ச்சல் ஏற்பட்டால் கூட கடல்தாண்டி ஊர்காவற்றுறை மருத்துவமனைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் செல்கின்றார்கள். மேற்படிப்புக்கும் ஊர்காவற்றுறை பிரதான பாடசாலைகளுக்கு இவ்வூர் மாணவர்கள் சென்று வருகின்றார்கள். மின்சார வசதி 2003, 2004ல் ஏற்படுத்தப் பட்டுள்ளது. தகுந்த நேர வழங்குகைக்கும் காணப்படுகின்றது.

பிரதான வீதி மிகமோசமாகப் பழுதடைந்த காணப்படுவதுடன், துறைமுகமும் அதன் இணைப்பு வீதியும் அவசர திருத்த வேலை செய்யப்பட வேண்டிய நிலையிலுள்ளன. கடலரிப்பு துறைமுகத்தை மட்டுமன்றி தீவின் கரைகளிலும் தாக்கமேற்படுத்தி வருகின்றது. செல்லப்பா வீதி, ஆறுமுகம் வீதி, வலைப்பாட்டு வீதி, வீரபத்திரர் கோயில் வீதி, சுடலை வீதி, அந்தோனியார் கோயில் வீதி போன்ற பல வீதிகளும் ஒழுங்கைகளும் சீரமைக்கப்படாத நிலையிலுள்ளன. செல்லப்பா வீதி, அந்தோனியார் கோயில் வீதி என்பன கடற்படை முகாம் ஊடாக செல்வதால் சிலகாலம் தடை செய்யப்பட்ட பாதைகளாக இருந்தன.

நாட்டில் நிலவிய யுத்தநிலை காரணமாக இயல்புநிலை பாதிக்கப்பட்ட நிலையில் 1990ம் ஆண்டின் கடல்வலயச் சட்டங் காரணமாக கடற் தொழில்புரியும் வாய்ப்புக்கள் மறுக்கப்பட்ட நிலையில் மக்கள் தமது பாரம்பரிய தொழில்களைச் செய்ய முடியாத சிரமம் அடைந்தனர். இதனால் தமது குடும்ப ஜீவனோபாயத்திற்காக கடினமானதும், தமக்குப்பழக்கமில்லாததுமான தொழில்களைச் செய்ய வேண்டியவர்களானார்கள். இதனால் பல்வேறு சமூகப் பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு முகங் கொடுக்க வேண்டியவர்களானார்கள்.

நீண்ட காலமாக அரச படகுகளோ, தனியார் படகுகளோ இல்லாத நிலையில் சிரமமுற்றார்கள். தொழில்புரிவோர்கள், உற்பத்தியாளர்கள் சந்தைகளை நாடுவதற்கு வாய்ப்புக்கள் இருக்கவில்லை. அரச சேவையாளர்களின் இடப் பெயர்வுகளால் அனைத்துச் சேவை நிலையங்களும் செயலிழந்தன. மாணவர் பாடசாலைகளில் இடைவிலகும் தன்மை அதிகரித்தது. ஆளணிப் பற்றாக்குறை, பொருத்தமான ஆளணியினரின் இடப்பெயர்வுகள், தளபாட, உபகரண, சேவைகள் கிடைக்கப் பெறாத நிலைமைகள் நிலவின. யுத்தப் பாதிப்புக்களை நிறையவே இத்தீவு சந்தித்தது எனலாம்.

இதனால் ஒட்டுமொத்த எழுவைதீவின் அபிவிருத்தி பல நிலைகளிலும் பல ஆண்டுகள் பின் தள்ளப்பட்டுவிட்டது. அடிப்படைக் கட்டுமானங்களில் ஏற்பட்டுள்ள சீரற்ற தன்மைகளால் இடம்பெயராத மக்கள் மட்டுமன்றி, மீண்டும் சொந்த இடங்களுக்குத் திரும்ப விருப்பங்கொள்கின்ற மக்களுக்கும் கூட அவர்களின் பிரகாசமிக்க எதிர்காலம் கிட்டத்தில் தெரிகின்றநிலை காணப்படவில்லை எனலாம். ஆயினும் மனந்தளராத முயற்சியாளர்களாக எழுவைதீவு மக்கள் காப்படுகின்றனர்.

சின்னஞ் சிறிய தீவிதாம் எழுவை
செந்திரு வேலன் கோயிலும் கிறிஸ்து
மன்னவன் ஆலய மாட்சியும் தாங்கும்
மலர்ந்தது எழுவை மண்ணிலிப் போது
தன்னிலையுயரும் வகை யிதாற் கம்மே
தானிருந்திடினும் குடிசனக் குறைவு
முன்னிருந்தது போலில் லையால் வளர்ச்சி
முற் றும் நிறைந்திடக் காண்பது அரிது
இந்நிலை நீங்கிட மார்க்கமும் கண்டால்
எழுவையும் சிறந்து எழுந்திடுங் கண்டீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதலினால் விரதமிருப்பீர்

திரு. என். ஸ்ரீரஞ்சன்
புளியங்கூடல்

ஒருவருடைய வயதென்பது அவர் பிறந்தநாளில் இருந்து இற்றைவரையான காலப் பகுதியைக் கருதுகிறது. இதனை விட ஒருவருக்கு வேறு ஏதாவது வயது இருக்கலாமா? சிலரது தோற்றத்தைப் பார்க்கும் போது அவர்கள் தமது நிஜ வயதிலும் பார்க்கக் கூடுதலான வயதானவர்கள் போல் தோன்றுகிறார்கள். வேறு சிலர் தமது நிஜ வயதிலும் பார்க்க குறைவான வயதானவர்கள் போல் தோன்றுகிறார்கள். இந்நிலையில் உண்மையான வயதென்பது எது? முதலில் குறிப்பிடப்பட்ட கணக்கிடப்பட்ட வயதா? அல்லது தோற்றத்தைக் கொண்டு மதிக்கும் வயதா?

ஆரோக்கியம் மற்றும் வாழ்க்கைக் காலம் என்று நோக்கும் போது ஒருவரது வயதானது மேற்சொல்லப்பட்ட இரண்டுமே இல்லை. அவரது உடலின் வயதே உண்மையான வயதென்றும் அதனை சில வழிகளில் கணிப்பிட்டுக் கொள்ள முடியும் என்று சில அறிஞர்கள் வாதிடுகிறார்கள்.

மேற்சொல்லப்பட்ட வெவ்வேறு வயதுகளில் மிக முக்கியமானது எது? ஒருவரது கல்வி, தொழில், திருமணம், இளைப்பாறல் போன்ற சட்டரீதியான தேவைகளுக்கு முதலாவது வகை வயது முக்கியம், மற்றவர்களால் கவரப்படல் போன்ற சமூகத் தேவைகளுக்கு இரண்டாவது வகை வயது முக்கியத்துவம் பெறுகிறது.

முதலாவது வகை வயது தொடர்பில் நாம் ஒன்றும் செய்வதற்கில்லை. வாழ்க்கையில் ஒருவருக்கு காலத்திற்கு காலம் எது நடக்கிறதோ இல்லையோ வயது தன்பாட்டில் போய்க்கொண்டே இருக்கும். இரண்டாவது வகை தொடர்பில் செல்வாக்குச் செலுத்தி குறைந்த வயதுடையவராகத் தோற்றமளிப்பதற்கு மக்கள் அதீதப் பிரயத்தனத்தை மிகப்பெரும் பொருட்செலவில் செய்கின்றனர். மூன்றாவது வகை வயதொன்று இருப்பதையே பெருமளவிற்கு அறியாதவர்களாக நாம் இருக்கிறோம்.

பலமற்ற காலை ஊன்றியபடி, கண்ணை மூடிக்கொண்டு ஒற்றைக்காலில் ஒருவரால் எவ்வளவு நேரம் நிற்க முடிகிறது. மேலிருந்து செங்குத்தாகக் கீழ் நோக்கி விழும் அடிமட்டம் ஒன்றை எந்தளவில் ஒருவரால் பிடித்து நிறுத்த முடிகிறது போன்ற சில செயற்பாடுகள் மூலம் மேலே குறிப்பிட்ட மூன்றாவது வகை வயதை கணித்துக் கொள்ளலாம் என்கின்றனர் ஆய்வறிவாளர்கள். முப்பது செக்கன்களிற்கு மேல் மேற்சொன்னவாறு ஒற்றைக் காலில் நிற்க முடிதல், 5 அங்குல மட்டத்திற்குள் அடிமட்டத்தை பிடித்து நிறுத்த முடிதல் என்பவை அவரது உண்மையான வயது எத்தகையதாக இருப்பினும் அவரது உடலின் வயது 20களில் இருப்பதைக் குறிக்கும் என்கின்றனர் இந்த அறிஞர்கள்.

"முப்பது செக்கன்கள் நிற்பது என்ன அவ்வளவு பெரிய விடயம் என்னால் முப்பது நிமிடங்கள் நிற்க முடியும்" என்று உங்களில் சிலபேர் நினைக்கிறீர்கள். கண்ணை மூடிக்கொண்டு பலமற்ற காலை ஊன்றிய படி நின்று பாருங்கள் உண்மை தெரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல்நிலை தடுமாறாமல் நிற்கக் கூடிய ஆற்றல் (balance), மற்றும் விரைவு எதிரியக்கம் (reaction time) என்பவை வயது அதிகரிக்கும் போது குறைவடைந்து செல்லும். இவை இரண்டையும் முறையே பரிசோதிக்கும் வழிகளே மேற்சொல்லப் பட்டவை ஆகும்.

ஒருவரது உடலின் வயதில் பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின் றன. அவற்றில் முக்கியமானது அவரது மரபுக் கீற்று (gene). அதில் நாம் ஒன்றும் செய்வதற்கில்லை. இரண்டாவது நாம் உட் கொள்ளும் உணவின் அளவு என்று சொல்லப்படுகிறது. அதாவது நாம் உண்ணும் உணவின் அளவைக் குறைத்தால் குறிப்பாக விரதமிருந்தால் இன்னும் குறித்துரைத்துச் சொல்வதாயின் உபவாசம் இருந்தால் எமது உடலின் வயதைக் குறைவாகப் பேணலாம். அதனால் நீண்டகாலம் உயிர் வாழலாம் என்கின்றனர் இந்த ஆய்வறிவா ளர்கள்.

1930களில் அமெரிக்காவில் ஏற்பட்ட மிக மோசமான வரட்சி காரணமாக உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. இதனால் நாடு பாரிய மந்தம் (great depression) ஒன்றை எதிர்நோக்கியிருந்தது. உண்ண உணவின்றி பெருந்தொகையான மக்கள் பட்டினியால் வாடினர். ஆனால் இக்காலப் பகுதியில் வாழ்ந்த மக்களின் ஆயுட்காலம் ஆறு வருடங்களாக அதிகரித்திருந்ததாம்.

அமெரிக்க வோசிங்ரன் பல்கலைக் கழகப் பேராசிரியர் லூய் பொன்ரானா "உண்ணும் உணவின் அளவைக் கட்டுப் படுத்துதலும் மனித ஆயுட்கால அதிகரிப் பும்" என்ற ஆராய்ச்சியில் பத்து வருடத் திற்கு மேல் ஈடுபட்டுள்ளார். இதன் படி உட்கொள்ளும் கலோரிகளின் அளவை கணிசமானளவு, குறைத்து உண்பவர்க ளின் ஆயுட்காலம் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பைக் காட்டி நிற்கிறது என்கிறார்.

டொக்டர் கிறிஸ்ரா வறடி சிக்காக் கோவில் வசிப்பவர். இவர் தனது ஆய்வில் ஒரு தொகை நபர்களை ஈடுபடுத்தி ஒன்றுவிட்டு ஒருநாள் விரதமிருக்கச் செய்தார். இவர்கள் விரதநாட்களில் 600 கலோரிக்கு உட்பட்ட உணவை மட்டும் மதிய போசனமாக உட்கொண்டனர். மற்றைய நாட்களில் அவர்கள் விரும்பி யதை விரும்பிய அளவு சாப்பிட்டனர். இந்த ஆய்வுக்குட்படுத்தியவர்களின் கொலஸ்ரோல் அளவுகளில் மிக முன்னேற்றம் ஏற்பட்டிருந்தது அவதானிக்கப்பட்டது.

அமெரிக்கப் பேராசிரியர் மார்க் மாற்சன் வயதடைந்து செல்லும் மூளை பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பவர். இவரது ஆய்வின் பிரகாரம் விரதமிருப்பதனால் அல்செய்மர் வியாதி, ஞாபக மறதி போன்ற மூளை தொடர்பான வியாதிகளால் பீடிக்கப்படும் காலத்தைப் பல ஆண்டுக ளிற்குத் தள்ளிப்போடலாம் என்று கண்டுள் ளார்.

ஈக்குவேடர் நாட்டு கிராமமொன்றில் வாழும் மக்களில் சிலர் லறோன் நோய்க் குறி என்ற நோயினால்ப் பாதிக்கப்பட்டுள் ளனர். இதனால் இவர்களது உடல் வளர்ச்சி மிகக் குறைவாகக் காணப்படுகின்றது. இவர்களது சராசரி உயரம் கிட்டத்திட்ட மூன்றரை அடியாக மட்டுமே உள்ளது. இவர்கள் மிகவும் மோசமான உணவுப் பழக்கத்தினையும் வாழ்க்கை முறையை யும் கொண்டிருக்கிறபோதும் இவர்களிற்கு சலரோகம், புற்றுநோய் ஆகிய வியாதிகள் வருவதே இல்லை என்பதை பேராசிரியர் லோங்கோ கண்டறிந்து அது தொடர்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராய்ச்சி செய்துள்ளார். உடல் வளர்ச்சியைத் தூண்டும் IGFI எனப்படும் ஹோர்மோன் மிகவும் குறைவாகவே இவர்களது உடலில் சுரக்கப்படுகிறது. என்பதைக் கண்டறிந்துள்ளார். உடலில் காணப்படும் செல்களைப் பிரித்து புதிய செல்களை உருவாக்கி IGFI உடலை வளரச் செய்கிறது. IGFI குறைவாக இருக்கும் போது அது புதிய செல்களை உருவாக்குவதில்லை. பதிலாக செல்களைப் பழுதுபார்த்து அவற்றில் உள்ள குறைகளை நீக்கி அவற்றைச் சரி செய்கிறது. இதன் விளைவு ஆரோக்கியமான உடல், நோயற்ற வாழ்க்கை, நீண்ட ஆயுள்.

இந்த IGFI குறைவாகச் சுரப்பதனால் தான் மேலே குறிப்பிட்ட ஈக்குவேடர் நாட்டு கிராம மக்கள் ஒரு பக்கத்தில் உரிய வளர்ச்சியை அடையாமல் குள்ளமாகவும் மறுப்பக்கத்தில் சலரோகம், புற்றுநோய் போன்றவற்றின் தாக்கத்திற்கு உள்ளாகா மலும் நீண்ட காலம் வாழ்கின்றனர்.

இந்த IGFI எமது உடலில் சுரக்கப்படுகிறது. இது சுரக்கும் அளவைத் தூண்டுவது நாம்உட்கொள்ளும் புரதச் சத்தாகும். புரதத்தை எடுக்கும் அளவு குறையும் போது IGFI குறையும் ஆனால் புரதத்தை ஒரேயடியாகக் குறைத்தலும் கூடாது. இந்த வகையில் IGFI இனைக் குறைப்பதற்கு இலகுவானதும் பாதுகாப்பானதுமான இன்னுமொரு வழி விரதம் இருத்தலாகும் என்கிறார் பேராசிரியர் வோல்டர் லொங்கோ.

இவரின் ஆராய்ச்சி தொடர்பில் அவரையும் இக்கட்டுரையில் குறிப்பிடப் பட்டுள்ள ஏனைய ஆய்வறிவாளர்களையும் பேட்டி கண்டு Eat, Fast and Live Longer என்ற விவரணப் படத்தைத் தயாரித்து பிபிசி தொலைக்காட்சியில் ஒளிபரப்பியவர் திரு. மைக்கல் மோஸ்லி என்பவராவார். இவர் நான்கு இரவுகளைக் கொண்ட மூன்று நாட்கள் தொடர்ச்சியாக விரதமிருந்தார். நாளொன்றிற்கு வெறுமனே 50 கலோரிகள் கொண்ட சூப்பை மட்டுமே உட்கொண்டு விரதமிருந்தார். தனது விரதத்தைத் தொடங்க முன்னரும் விரதத்தை முடிக்க முன்னர் நான்காவது நாள் காலையிலும் அவர் தனது பைகள், இரத்தத்தில் உள்ள சீனியின் அளவு போன்ற பலவற்றைப் பரிசோதித்துக் கொண்டார். விரதமுடிவின் போது வந்த சோதனை முடிபுகள் அவர் முதலில் எடுத்து வந்த முடிவுகளோடு ஒப்பிடும் போது மிகவும் முன்னேற்றகரமான முடிவுகளாக இருந்தன. குறிப்பாக அவரின் IGFI இன் அளவு பாதியாகக் குறைந்திருந்தது. மூன்று நாட்கள் விரதமிருந்து இவ்வளவு முன்னேற்றகரமான நிலைமைக்கு உடலைக் கொண்டுவர முடியுமாயின் ஆறு நாட்கள் கந்தசஷ்டி விரதமிருக்கும் நம்மவர்கள் எத்தகைய நன்மைகளை அடைய முடியும் என்பதை எவரும் இதன் மூலம் இலகுவாக ஊகிக்கறிந்து கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகிய தீவகமே

திருமதி மேவிஸ் ஜீன்சியா யூட் அல்போன்சஸ்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்

வடக்குமா காணத்தில் மாண்புறு சிரசே
ஊர்காவற் றுறையென்று முழங்கிடு முரசே
பற்பல விருத்திகள் வழங்குது அரசே
நற்பெயர் அதிகரித்து கூடுதுந்தன் மவுசே.

மனமுருகி மன்றாட சின்னமடு தேவாலயமே
மாசற்ற கிறிஸ்தவர்கள் மன்றாடும் யாத்திரைஸ்தலமே
மெலிஞ்சி முனைதானே கண்ணகையம்மன் இருப்பிடமே
தீவக மக்களுக்கு எம்மதமும் சம்மதமே.

விளையாட்டும் விருதுகளும் வினைத்திறன் செயல்களும்
வீரமும் விவேகமும் விந்தையும்நற் சிந்தனையும்
இயற்கையிலே கொண்ட தெங்கள் தாயகம்
இயற்கையன்னை செல்வம் எங்கள் தீவகம்.

கரம்பன் கிழக்கேயுள்ள தொன்மை புறாக்கூடுகளும்
தென்னை பனையுடன் சிறுபற்றைக் காடுகளும்
போர்த்துக்கேயர் காலத்து ஹமன்ஹில் கோட்டையதும்
உந்தனின் உரிமையன்றோ உனக்கேதான் பெருமையன்றோ.

வரலாற்றுப் படிமங்களை அதிகமாய் கொண்டமைந்தாய்
வாணிபபரிமாற்றத்தின் மையமாய் நீ திகழ்ந்தாய்
எண்ணற்ற புராதன அம்சங்கள் சேர்ந்திருந்தாய்
எல்லோர்க்கும் வழிகாட்டும் வெளிச்ச வீடாய் உயர்ந்திருந்தாய்.

வாணிபம் செய்தவர்க்கு சிறந்ததோர் தங்குதளமே
வங்கக்கடல் முத்துக்கள் சங்குகளும் பொங்கும்வளமே
ஹமன்ஹில் கோட்டையின் மறுபுறம் படைத்தளமே
கடலன்னை தாலாட்டில் அசைகிறது மரக்கலமே.

யாகப்பர் தேவாலயம் மரபுரிமைச் சொத்து
யாவரும் தொழுவார்கள் மனமது ஒத்து
மறைக்காக மடிந்த கிறிஸ்தவ வித்து
போதித்து மறைந்தார் கட்டளை பத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லின மக்களும் பல் மதத் தவர்களும்
பாகுபா டின்றியே கூடியே வாழ்ந்ததீவு
பகுதிகள் பதினைந்து கொண்டதெங்கள் அழகுத்தீவு
கப்பல்களின் சுவர்க்கமென்று பெயரெடுத்த தங்கத்தீவு.

எழுத்தாளர் புலவர்கள் கல்வி மான்கள்
எங்களது தீவினை தாங்கிநிற்கும் தூண்கள்
ஒழுக்கமும் விழுமியமும் எங்களது கண்கள்
பெண்களுக்கும்சமவுரிமை கொடுப்பவர்கள் நாங்கள்.

பரிசுத்தவேதா கமத்தில் சாலமோன் காலத்திலே
காவற்றுறை தானே கேந்திர கனிதமே
கிரேக்கரும் உரோமரும் அரேபிய வணிகரும்
ஒன்றாகக் கூடியே செய்தனர் வணிகமே.

புறவிசைத் தாக்கத்தால் அகவிசை மாற்றத்தால்
மண்ணுடன் உயர்ந்தாய் நீருக்கு மேலானாய்
பார்ப்பதற் கழகானாய் பார்வைக்குத் தீவானாய்
வணிகர்க்கு தாயானாய் எல்லாமே நீயானாய்.

மூச்சிலும் பேச்சிலும்உப்பின் வாசமன்றோ
புராதனம் கொண்டமைந்த பூர்வீக தேசமன்றோ
பல்வேறு குலத்தவரும் பல்தேச இனத்தவரும்
பரவசத்துடனே வாழ்ந்த பழம்பெரும் தீவிதன்றோ.

இந்திய வம்சமோ திராவிட அம்சமோ
இயற்கைக்கு தெரியுமன்றோ அதற்கேதான் புரியுமன்றோ
கமண்டல குலத்தவரோ இயக்கர் நாகர் இனத் தவரோ
இப்புவியில் யாரறிவார் ஆய்விலே கண்டறிவார்.

பாரத தேசத்தின் தமிழ் நாட்டிலிருந்து
தீவகம் வந்தனரே வாணிபம் செய்தனரே
வசிப்பிடம் அமைத்தனரே வாழ்ந்திட நினைத்தனரே
வழிபாடு செய்தற்கு ஸ்தலங்களும் உருவாக்கினரே.

பல்லவர் பாண்டியர் சோழ தேச மன்னவரின்
ஆதிக்கப் படர்ச்சியால் ஆவேசக் கிளர்ச்சியால்
மாந்தர்கள் பயந்தனரே மாற்றிடம் விரைந்தனரே
மாவுரு இலங்கையதை போற்றியே வந்தனரே.

G. Soundararajan
PILLAIAR KOVILADY
ANALAITIVU



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழ்கடல் மூழ்கியே சங்குகள் எடுத்தனரே
மான் முயல் மாட்டுடன் ஆடுகளும் வளர்த்தனரே
திரைகடல் ஓடியோடி திரவியம் சேர்த்தனரே
கப்பலிலும் கரையினிலும் காவியம் படைத்தனரே.

உள்ளூரின் உற்பத்தி பனைமரத் தீராந்தி
புகையிலை சங்குகள் ஏற்றுமதி செய்தனரே
பித்தளைப் பாத்திரங்கள் வெண்ணிறக் காளைகள்
நெல்லுடன் ஓடுகள் இறக்குமதி செய்தனரே.

காக்கை நாடு தூத்துக்குடி கொஞ்சின் ரங்கூனுக்கும்
பாய்மரக் கப்பலினை பயமின்றி செலுத்தினரே
ஐரோப்பிய நாட்டவர்க்கும் ஆசிய நாட்டவர்க்கும்
பொருட்களை அளித்தனரே பொன்பொருள் சேர்த்தனரே.

அள்ளிடக் குறையாத மிளகாயும் நெல்லும்
அனலை தீவினது பெருமையினைச் சொல்லும்
கற்பகத் தருக்களும் தென்னை மரங்களும்
சீர்மிகு தீவகத்தின் தொன்மையினைச் சொல்லும்.

கைகூப்பித் தொழுதிட ஐயனார் கோயில்
அவர்கிணை யாகுமோ வேறுதெய்வம் புவியில்
தான் தோன்றி ஈசன் முத்துமாரி அம்மன்
வரங்களைத் தருவார்கள் அருளினைப் பொழிவார்கள்.

பச்சைப் பசேலென நென்மணிகள் பொன்வயலில்
பூத்துக் குலுங் கிடுதே மணிபோல் அசைந்திடுதே
நெடுங்கால வரட்சியும் பஞ்சமும் பசியும்
நலிவுற்று போயிடுதே நல்வாழ்வு கிடைத்திடுதே.

புரிந்துணர்வும் பாதுகாப்பும் விழிப்புணர்வும் கருத்தமர்வும்
வரட்சியை குறைத்திடுமே நல்வளர்ச்சி கொடுத்திடுமே
ஆங்காங்கே மரங்களினை ஆவலுடன் நட்டுவைத்தால்
பெரும் மழை பொழியுமே பயிர்வளம் செழிக்குமே.

எல்லா வசதிகளும் எக்குறையும் இன்றியே
எல்லோர்க்கும் வழங்கிடும் பிரதேச செயலகம்
பதினைந்து கிராமியப் பிரிவுகள் கொண்டேதான்
பணிகளை வழங்கிடும் பண்புள்ள பணியகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொற்கரத்தாள் திருமதி சதீசன் வருகையால்
தீவகம் பொலிந்திடுதே அழகுடன் மிளிர்ந்திடுதே
பிரதேச செயலரின் இடையறா முயற்சியால்
பிரதேசம் வளர்ந்திடுதே மனமது நிறைந்திடுதே.

கட்டடத் தொகுதிகள் காலக்குறிப்புக்கள்
தொல்லியல் ஆதாரம் தொகுத்த நல்நூல்கள்
கைலாய மாலையும் யாழ்வைபவ மாலையும்
வரலாற்றை சொல்கிறதே வழிகாட்டிச் செல்கிறதே.

எழுவைதீவுக் கிராமத்தின் வெண்நிறக் காற்றாடி
புளியங் கூடலின் காய்கறி புகையிலை
பருத்தியடைப்பு பகுதியின் பழம்பெரும் சுமைதாங்கி
அனலைதீவின் வெளிச்சவீடு அனைத்துமே பெருமையன்றோ.

நற்றமிழ் சொல்லெடுத்து முத்தமிழ் முத்தெடுத்து
செந்தமிழ் சரந்தொடுத்து பைந்தமிழ் பாவெடுத்து
அவையோரை வாழ்த்துகிறேன் இருகரம் கூப்பினேன்
இறையோனை வணங்கியே இக்கவி முடிக்கிறேன்.

(அனுபவப்பகிர்வின் அடிப்படையில் இந்த நெடுங்கவிதை எழுதப்பட்டுள்ளது.)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவளதிகாரம்!

சி
று
க
தை

செல்வி. மல்லிகா செல்வரத்தினம்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
ஊர்காவற்றுறை.

மார்கழி மாதத்து மேகம் கருக்கொண்டு கனத்திருந்தது. புயல் வருவதனை உணர்த்துவது போன்று வானத்தில் பறவைகள் தாழ்வாகப் பறந்துகொண்டிருந்தன. "ஊ ஊ" என்று வேகமாக வீசிக்கொண்டிருந்த குளிர்காற்று, நிலானியின் வீட்டுக் கூரையை முத்தமிட்டுக்கொண்டிருந்த வேப்பமரத்தை உலுப்பிச் சருகுகளை உலுத்திக் கொண்டு இருந்தது. வேப்பமரக் கொப்புகளில் அணில்கள் "கிரீச் கிரீச்" என்று கத்தியவாறு தாவிக் கொண்டிருந்தன. முற்றத்தில் குவிந்திருந்த வேப்பஞ்சருகுகளைக் கூட்டிக் குவித்துக் கொண்டிருந்த நிலானியின் கண்கள், சிவதாஸின் மோட்டார் சைக்கிளில் நிலைகுத்தி நின்றன. அந்த மோட்டார் சைக்கிளின் முகப்பில் "தமிழ்" என்று நீலவண்ணத்தில் அழகாக எழுதப்பட்டிருந்தது. அது நான்கு வருடங்களாக் காணப்பட்ட போதிலும், இன்று அதனைப் புதிதாகப் பார்ப்பது போன்று கண்ணிமைக்காது பார்த்துக்கொண்டிருந்தாள் நிலானி.

"என்னடி, மோட்டச்சைக்கிளை கண்வெட்டாமல் பாரக்கிறாய்? ஏதாவது வாகனங்கள் செய்யிற ஐடியாவோ?" என்று சிரிப்புடன் கேட்டவாறு அவளருகே வந்தான் சிவதாஸ். அவளது விழியோரம் கசிந்திருந்த கரிப்பு மணிகளை அவசரமாகத் துடைத்தவள், அவனது முகத்தை உற்றுப்பார்த்தாள். அந்தப் பார்வையில், பாசத்தின் ஏக்கம் தெரிந்தது. "என்ன? ஏன் ஒரு மாதிரி இருக்கிறாய்?" என்று அவனே கேட்க, "உங்களிடம் ஒன்று கேட்கணும் என்று நெடுநாளாய் நெஞ்சுக்குள்ள நினைச்சுக்கொண்டு இருந்தனான். இப்ப கேட்கிறன். உங்கள் முதல் மனைவிக்கும் உங்களுக்கும் பிறந்த பிள்ளையின் பெயரை நீங்கள் எழுதாத இடமே இல்லை. ஓடும் மோட்டார் சைக்கிள்ள கூட எழுதி வைச்சிருக்கிறிங்கள். ஏன், எனக்கும் உங்களுக்கும் பிறந்த மகனின் பெயரையும் எழுத மாட்டிங்களோ? உங்கட மகள் மேலதான் உங்களுக்குப் பாசம், என்னையும் என் பிள்ளையையும் அலட்சியப்படுத்துறிங்கள் என்ன?" என்று கேட்டுவிட்டுக் கேவிக் கேவி அழுதாள் நிலானி.

"இதோ பார், உன்னிடம் எனக்குப் பிடிக்காத குணங்களில் ஒன்று என் மகளைக் குத்திக் காட்டிப் பேசுவது. பாவம் அந்தப் பெட்டை, எங்கையோ தொலைவில் இருக்குது. அதைக் கரிச்சுக் கொட்டியபடி இருக்கிறாய். அந்தப் பிள்ளை உனக்கு என்ன செய்யுது? வர வர உன்னைச் சுத்தமாப் பிடிக்கல எனக்கு" என்று கோவமாகச் சொன்னான் அவன். "ஓஓஓஓ.... இனி என்னை ஏன் உங்களுக்குப் பிடிக்குது? உங்கள் ஆசை மனைவிக்கும் உங்களுக்கும் பிறந்த மகளுடன் பேசுங்கோ.... அந்த மகளின் பெயரை, ஓடும் வாகனம், போடும் உடுப்பு, வீடு எங்கிலும் எழுதுங்கோ.... உங்கட முதல் பிள்ளை தானே.... உடம்பு முழுக்கப் பச்சை குத்துங்கோ...." என்று கோபாவேசத்துடன் கத்தினாள் அவள். "என்னடி நாயே சொல்லுறாய்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்ரை அக்காவின்ர மகளை நீ கொஞ்சலாம், எனக்குப் பிறந்த மகளை நான் கொஞ்சக் கூடாதென்று சொல்லுறியோ.... போடி.... என் மூஞ்சையில இனிமேல் முழிக்காதே.... எங்காவது தொலைஞ்சு போ....." என்று அவன் கோபத்தின் உச்சத்தில் கத்தினான். கோபத்தில் அவனது தேகம் நடுங்கியது. விறுவிறுவென்று மோட்டார் சைக்கிளை இயக்கி வெளியே செல்ல அவன் எத்தனிக்கையில், "இப்பதான் எல்லாம் எனக்குப் புரியுது.... தினமும் மாலை வெளியே போகும் நீங்கள், உங்கட முதல் மனைவியோடயும் பிள்ளையோடயும்தான் கதைக்கிறிங்கள் என்று.... அவர்களுக்குத்தான் விதமாக செல்பி எடுத்துப் போடுறிங்கள் என்று.... அவர்களுக்குத்தான் உங்களை வீடியோ பிடித்தும் அனுப்புறிங்கள் என்று.... போய் அவர்களுடனே இருங்கோவன்.... சோறாக்கிப் போடவும், உங்கட எடபிடி வேலைகள் செய்யவுமோ என்னைக் கல்யாணம் செஞ்சனிங்கள்.....?" என்று அவள் பேசி முடிப்பதற்குள் மோட்டார் சைக்கிளில் இருந்து இறங்கி வந்தவன் அவளது கன்னங்களில் பளார் பளாரென்று அறைந்தான். கூட்டிக் கொண்டிருந்த விளக்குமாற்றைப் பறித்துச் சடார் சடாரென்று அடித்தான். தன் ஆத்திரம் தீரும்வரை அடித்தான். விளக்குமாறு சுக்குநூறானது. வெள்ளை வெளேரென்ற அவளது தேகம் அடி காயங்களால் செக்கச் செவேலென்று சிவந்து போனது. அதில் சிறு சிறு கீறல் காயங்கள் ஏற்பட்டுக் குருதி வழிந்தோடிக்கொண்டிருந்தது. இப்போது அவள் அழவே இல்லை....

நேரம் நண்பகலைத் தாண்டியது. மாண்டோஸ் புயல் வலுத்துக்கொண்டிருந்தது. குளிர் மனிதர்களை வாட்டி வதைத்துக்கொண்டிருந்தது. கணத்துக்குக் கணம் குளிர் அதிகரித்துக்கொண்டிருந்தது. எல்லோருமே வீடுகளுக்குள் முடங்கியிருந்த அந்த நேரத்தில், வீதியில் மோட்டார் சைக்கிளை ஓட்டிக்கொண்டிருந்தான் சிவதாஸ். அவனது மனது நிம்மதியற்று அலைந்துகொண்டிருந்தது. நிலானியின் எண்ணங்களால் நிரம்பிக்கொண்டி ருந்தது. 'நிலானி மேல நான் எவ்வளவு பாசம் வைச்சிருக்கிறன்.... என் பாசத்தைப் புரிஞ்சுகொள்ளாமல் அவள் ஏன் இப்படி இருக்கிறாள்? இரண்டு நாட்கள் சந்தோசமாக இருப்பாள், பின்னர் ஏதாவது ஒன்றை வம்புக்கிழுத்துச் சண்டை பிடிப்பாள்.... எந்த நேரமும் என்னிடம் கேள்வி மேல் கேள்வி கேட்டு என்னை அதிகாரம் செய்கிறாள்.... உயிரோடு இருப்பதை விடச் சாகலாம் போல கிடக்கு' என்று எண்ண அலைகளால் அலைக்கழிக்கப்பட் டவனாகப் பயணித்தான்.

சிவதாஸ் கடற்றொழில் செய்பவன். மாண்டோஸ் புயல் எச்சரிக்கை காரணமாக இன்று தொழிலுக்குச் செல்லவில்லை. தொழிலுக்குச் சென்று வீட்டுக்குத் திரும்பியவுடன், "இன்று எவ்வளவு காசு உழைச்சிங்கள்? என்ன செலவு செஞ்சிங்கள்?" என்று கேட்டவாறு அவள் வருவாள். "அடியேய்..... மனிசர் களைச்சுப்போய் வரேக்கை இப்படிக் கேட்டுப் பழகாதை. களைப்புத் தீரத் தேத்தண்ணியைக் கிண்ணியைத் தந்திட்டுப் பிறகு மிச்சத்தைக் கேளு" என்று அவன் எத்தனையோ தடவைகள் சொல்லியும் அவள் திருந்தவில்லை. நாளடைவில் அவனும் இதுகுறித்து அலட்டிக்கொள்ளாமல் விட்டுவிட்டான். சிலநேரங்களில் அவளது குறும்புகளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் இரசிப்பான்.... சிலநேரங்களில் அவற்றைக் கண்டு அனலாய்க் கொதிப்பான். வானிலையும் மனிதனின் மனநிலையும் ஒன்று. இரண்டும் எல்லா நேரங்களிலும் ஒரேமாதிரி இருப்பதில்லை. நிலானியை அடித்துத் துன்புறுத்திய காட்சி அவனது மனதுக்குள் அசைபோட்டுக் கொண்டிருந்தது. அவளுக்காக அவனது மனம் அழுதுகொண்டிருந்தது. துயர்தோய்ந்த மனநிலையுடன் வழமையாகச் செல்லும் தேநீர்க்கடைக்குள் நுழைந்தான் சிவதாஸ். "வாங்கோ சிவம் அண்ணை, என்ன வாடிப்போய் இருக்கிறீங்கள்?" என்று கேட்டார் தேநீர்க்கடை முதலாளி. "ஏதோ புயல் கியல் எண்டுறாங்கள். அதனால் தொழிலுக்குச் செல்ல முடியேல்ல. அதுதான்...." என்று சிரித்து மழுப்பியவாறு இருக்கையில் அமர்ந்தான். அவனது சக தொழிலாளர்களும் அங்கே தேநீர் குடித்துக்கொண்டிருந்தனர். தேநீருடன் பலதும் பத்தும் கதைத்துக்கொண்டிருந்தனர் அவர்கள். அந்த அரட்டை அரங்கில் இணைந்துகொண்ட சிவதாஸ், கொஞ்சம் கொஞ்சமாகத் தன் வீட்டுச்சூழலை மறந்துகொண்டிருந்தான். அவனது மனம் சற்று இலேசானது.

வீட்டில் சண்டை என்றால், எல்லா மனைவியரும் சமைக்காமல் படுத்திருப்பர். அப்படியே நிலானியும் படுத்திருந்தாள். அடிகாயங்களால் அவளது உடல் வலித்தது. அதைவிட மனம் வலித்தது. சிவதாஸின் முதல் மனைவி பற்றிய எண்ணங்கள் அவளது நிம்மதியைப் பறித்துக்கொண்டிருந்தன. இதே வீட்டில் தானே அவளுடன் குடித்தனம் செய்து தமிழரசியைப் பெற்றான் என் புருசன்? ஒருகாலத்தில் என்னையே சுற்றிச் சுற்றி வந்த என் காதலன் அவன். வீட்டாரின் எதிர்ப்பால் அவனைக் கல்யணாம் செய்ய நான் மறுத்தவேளை, "உன் உடலைத் தொட்ட கையால் எப்படியடி நான் இன்னொருத்தியின் உடலைத் தொடுவது? வாடி.... ரண்டு பேரும் போய்க் கோயில்ல மாலை மாத்துவம்.... நாங்கள் கலியாணம் செய்து ஒரு குழந்தை பிறந்தபின், உன் அம்மா அப்பா எங்களைச் சேர்ப்பினமடி.... வாடி...." என்று என்னிடம் கெஞ்சியவன், இரண்டு வருடங்களின் பின்னர் இன்னொரு பெண்ணைக் கல்யாணம் செய்து, ஒரே வருடத்தில் பிள்ளையும் பெற்றான். அவனது மனைவி இன்னொருத்தனுடன் ஓடிப்போனபின் எதற்காக அவன் மறுபடி என்னிடம் வந்தான்? ஏன் அவனை நான் கல்யாணம் செய்தேன்? அவனுக்கு என்னில பாசமே இல்லை..... மகள் தமிழ் மீதுதான் பாசம்.... என்று நினைவுகளில் நீந்திக்கொண்டிருந்தவளைக் கூப்பிட்டவாறு பக்கத்து வீட்டுப் பாட்டி வந்தாள். பாட்டியின் அழைப்பொலியில் நினைவறுந்து நிஜவுலகம் மீண்டவள், தன்னருகே உறங்கிய மகனின் தலையை வருடிவிட்டு மெதுவாக எழுந்து வெளியே வந்தாள். அவளது கோலத்தைக் கண்ட பாட்டி, "என்னடியம்மா கையெல்லாம் காயங்கள்? முகம் ஏன் அதைச்சிருக்கு? வீட்டில கசமுசா ஏற்பட்டுச் சிவத்தான் அடிச்சுப் போட்டானோ?" என்று அவளருகே சென்ற பாட்டி அவளது முகத்தைத் தடவினாள். அவளுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. பாட்டியின் மடியில் தலைசாய்த்து ஓசையற்று அழுதாள். "பாட்டி.... இப்பெல்லாம் அவர் ரொம்பவே மாறிட்டார்.... அவருக்கு முதல் மனைவியின்ர தொடர்பு இருக்கென்று என் உள்மனம் சொல்லுது.... தினமும் மாலையில் வெளியே செல்லும் அவர், மணிக்கணக்கில் போனில கதைக்கிறார்.... அவருக்கு நான் கோல் எடுத்தால், என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பரை ப்ளக் பண்டிட்டுக் கதைக்கிறார்.... யாரோட கதைக்கிறிங்கள் எண்டு கேட்டால், வெளிநாட்டில இருக்கிற தன்ர ப்ரண்ட்ஸ் எண்டு சொல்லுறார்..... எனக்குப் பொய் சொல்கிறார் பாட்டி.... அவர் முதல் மனைவியோடயும் பிள்ளையோடயும்தான் கதைக்கிறார் என்று எனக்குச் சந்தேகமாக் கிடக்குப் பாட்டி..... அவரது போன் முழுக்க விதம் விதமா செல்பி.... இதெல்லாம் அவர் யாருக்கு அனுப்புறார் பாட்டி? அவரின்ர முதல் மனைவிக்கும் பிள்ளைக்கும்தான் அனுப்புறார் போல பாட்டி....." அழுகையினூடே அவளது குரல் உடைந்து உடைந்து வார்த்தைகள் வெளிவந்தன.

"முதல் மனிசியின்ர, பிள்ளையின்ர பாசம் அவனுக்கு இருக்கத்தானே செய்யும்? உதுக்குத்தான் சொல்லுறது, செத்தவன் பெண்டிலைக் கட்டினாலும், விட்டவன் பெண்டிலைக் கட்டக்கூடாது என்றும் செத்தவள் புருசனைக் கட்டினாலும் விட்டவள் புருசனைக் கட்டக்கூடாது என்றும். உனக்கு என்ன குறைச்சல்? எடுபாட்டியத்தில அவனைக் கலியாணம் செய்திட்டுச் சண்டை பிடித்துப் பிடித்தே சாகிறாய்..... எல்லாம் உன்ர தலையெழுத்தடியம்மா....." என்று எரிந்துகொண்டிருந்த அவளது மனதில் எண்ணெயை ஊற்றினாள் பாட்டி. "கொஞ்சம் இஞ்சி தா புள்ளை.... சரியான குளிராய்க் கிடக்கு.... தேத்தண்ணி போட்டுக் குடிக்கப்போறன்" என்று கேட்ட பாட்டிக்கு இஞ்சி கொடுத்து அனுப்பிவிட்டு மீண்டும் படுக்கையில் சாய்ந்தாள் நிலானி. பொழுது இருட்டியும் சிவதாஸ் வீட்டிற்கு வரவில்லை. நெடுநேரம் கழித்து வந்தவன், அவளிடம் ஏதுமே பேசாமல் உறங்கிவிட்டான். உறக்கமற்று அவளது விழிகள் தவித்தன.... வெளியே பேரிரைச்சலுடன் மழை பொழிந்துகொண்டிருந்தது. புயல் மரங்களை முறித்தெறிந்து பேயாட்டம் ஆடிக்கொண்டிருந்தது.

இரவிரவாகக் கொட்டித் தீர்த்த மழையாய் எங்கும் ஒரே வெள்ளக்காடு. விடிந்தும் அழுதுவடிந்துகொண்டிருந்தது வானம். குளிரில் நடுங்கியபடி படுத்திருந்த நிலானியின் உடல், காய்ச்சலால் தகித்தது. அவளை ஏறெடுத்தும் பார்க்கவில்லை சிவதாஸ். படுக்கையால் எழுந்து அடுக்களைக்குள் சென்று தேநீர் போட்டுக் குடித்தவாறு தொலைக்காட்சிப் பெட்டியில் செய்தி பார்த்துக்கொண்டிருந்தான். நேரம் போனதே தெரியவில்லை. பசி அவனது வயிற்றைக் கிள்ள, மழை அங்கியை அணிந்து சாப்பாட்டுக் கடைக்குச் சென்றான். வயிறார உணவு உண்டபின் தன் மனைவிக்கும் உணவு வாங்கி வந்தான். அவள் உணவை முகர்ந்து கூடப் பார்க்கவில்லை. கணவன் மனைவி இருவரும் இருவேறு கிரகங்கள் வெவ்வேறு திசையைப் பார்த்தபடி இருப்பது போல இருந்தனர். தொலைக்காட்சி முன் அமர்ந்திருந்த சிவதாஸ், தாடியையும் மீசையையும் மாறி மாறிப் பிடுங்கி வாய்க்குள் போட்டுத் துப்பிக்கொண்டிருந்தான். அவன் உளரீதியில் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறான் என்பதனை அவனது அச்செய்கை உணர்த்தியது. மறுநாள் புயலும் மழையும் ஓய்ந்து வல்வெட்டித்துறைக் கிராமம் வெளுத்திருந்தது. கதிரவன் ஒளியைப் பாய்ச்சியவாறு கீழ்வானில் சிரித்துக்கொண்டிருந்தான். இன்றுடன் மூன்று நாட்களாக நிலானி எந்த உணவுமே உட்கொள்ளவில்லை. வெறும் தேநீருடன் இருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் சிங்கள பண்பாட்டிடைத் தொடர்புகளில் வாய்மொழிப் பாரம்பரியங்களின் செல்வாக்கு

திரு. I.L.அன்சிலின் பெகின் (M.A)
அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை

மனிதன் தனது வாழ்வியல் அனுபவங்களை கதைகளாக, கவிகளாக, பாடல்களாக, பழமொழிகளாக, விடுகதைகளாக தலைமுறைகளாக கையளித்து வந்துள்ளான். வாய்மொழிப் பாரம்பரியம் என்பது பண்பாட்டின் வெளிப்பாடாகும். இது ஒரு இனத்தின் குணஇயல்பு, வாழ்வியல் கூறுகள், நம்பிக்கைகள், தொழில் முறைகள் என்பவற்றைப் பதிவுசெய்துள்ளது. எனவே தான் மானிடவியலாளர்கள் ஒர் இனத்தின் பண்பாட்டை அறிய வேண்டும் என்றால் அவர்களின் வாய்மொழி பாரம்பரியங்களையும், கலைகளையும் முதலில் ஆய்வு செய்ய வேண்டும் என்கின்றனர். வாய்மொழிப் பாரம்பரியங்கள் என்பவை யாரால்? எக்காலப்பகுதியில்? எவ்விடத்தில்? தோற்றம் பெற்றது என்று அறுதியிட்டு கூறமுடியாதவை. செந்நெறியாக்கப்படாத வாய்மொழிப் பாரம்பரியமானது விளிம்பு நிலைமக்களின் குரலாகவும், அதிகாரம் அற்றவர்களது பண்பாடாகவும் மதிப்பற்ற, நாகரீகமற்ற கலைகளாகவும் பார்க்கப்படுகின்றது. ஆனால், இன்று 'பறை இசை' போன்றன ஒடுக்கப்பட்ட மக்களின் எழுச்சிக் குரலாக பொருளாதார நிலைகளில் ஒடுக்கப்படும் மக்களின் எதிர்ப்பு குரலாக, விடுதலையின் இசையாக மாறியுள்ளது.

இத்தகைய பின்னணியில் இலங்கையின் தமிழ், சிங்கள வாய்மொழிப் பாரம்பரியம் பற்றி பார்த்தோமாகில் நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டியது வாய்மொழிப் பாரம்பரியம் என்பது உலகப் பொதுமையானது. ஒரே மாதிரியான கதைகள் பல்வேறு நாடுகளில், அம்மொழிகளில் அவர்களின் சூழலுக்கும், நம்பிக்கைகளுக்கும், வாழ்வியல் நெறிகளுக்கும் ஏற்ப சில பல மாறுதல்களைக் கொண்டு வாய்மொழியாக உலாவி வருகின்றன. இலங்கையின் நாட்டாரியலை ஆய்வு செய்பவர்கள் இலங்கையில் வாழும் தமிழ், சிங்கள மக்களிடையே காணப்படும் கிராமிய பாடல்கள், நடனங்கள், பழமொழிகள், விடுகதைகள் போன்றவற்றிற்கு இடையில் ஒரு பொதுவான இயல்பு, வடிவங்கள் இருப்பது பற்றி உறுதிப்படுத்துகின்றனர்.

## 1. ஜன கதா - நாட்டுப்புற கதைகள்

சிங்கள மொழியில் ஜன என்பது மக்கள். கதா என்பது கதை. எனவே, ஜனகதா என்பது மக்களின் கதை என்றும் தமிழில் நாட்டுப்புறக் கதைகள் அல்லது நாட்டார்கதைகள் என்றும் அழைப்பர். சிங்கள மொழியில் அந்திரே கதைகள், மாதனமுத்தாவும் 5 சீடர்களும், அரச சபைக் கதைகள், கமராள கதைகள் என்றும். தமிழில் நீதிக்கதைகள், தெனாலிராமன் கதைகள், பரமானந்த குருவும் சீடர்களும் என்று உள்ளன.

நீதிக்கதைகள் மறைமுகமாக அரசனை விமர்சிப்பதாக இருக்கும். அரசியல் மீதான எதிர்ப்பு இலக்கியமாகவும், நகைச்சுவை உணர்வு மிக்கதாகவும் இவை வளர்ந்து வந்துள்ளன. தெனாலிராமன் பூனைக்கு பால் கொடுத்த கதை என்பது ஒவ்வொரு வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் கடமைகளை தகுதியுடன் நிறைவேற்ற வேண்டும் என்பதை கூறுகின்றது. சிறுவர் கதைகள், நீதிநெறிக் கதைகள் மட்டுமல்லாது, பெரும் கதை கூறும் புராணங்களும் உள்ளன. இராம கதை ஆசிய நாடுகள் முழுவதும் பல பரிமாணங்களில் தொன்மையாக பரவிக் கிடக்கின்றது.

ராணி விகார மகாதேவி, இலங்கையின் மக்கள் கொண்டாடுகின்ற கதை மட்டுமல்ல அவரது புதல்வன் துட்டகாமினியின் போர் வெற்றிப் பிரதாபங்கள் என்பவை சிங்கள மக்களிடையே பல நூற்றாண்டு கடந்தும் பெருங்கதைகளாகத் தாக்கஞ் செலுத்துகின்றன. தமிழ்ப் பெருங்கதைகளான மகாபாரதம், இராமாயணம், சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி என்ற காப்பியகங்களும் சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் வரலாறுகளுடனும் இலங்கை தமிழர்களது வரலாறும் இணைக்கப்பட்டு கதைகளாகவும், தெய்வங்களின் கதைகளாகவும், தலவரலாறுகளாகவும் நிலைத்துள்ளன. உதாரணமாக மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுடன் தொடர்புபட்ட மாருதபுரவல்லி என்ற தென் இந்திய அரசி குதிரை முகம் நீங்கிய கதை. மட்டக்களப்பு திரௌபதி அம்மனின் கதை என்பனவாகும். இதுபோன்ற 20 மரபு கதைகளை பொன் குலேந்திரன் அவர்கள் அண்மையில் தொகுத்து வெளியிட்டுள்ளார். கதைகளின் பட்டியலானது வேலணைப் பள்ளிவாசல், வீரமகா காளியம்மன், பூதத்தம்பி கதை, விகாரமகாதேவி, வற்றாப்பளை அம்மன், தலவில்லு தேவாலயம், கண்ணுசாமி கண்டி மன்னனான கதை, இலங்கை யும் இராவணனும், நாகதீபம், மாருதப்புர வீகவல்லி, செண்பகப்பெருமாள் என தொடர்கிறது.

## 2. ஜன கவி - நாட்டுப்புற பாடல்கள்

மக்கள் தமது வாழ்க்கை அனுபவங்களையும், இன்பதுன்பங்களை, தமக்கு ஏற்படும் உணர்ச்சிகளை தமக்கு இயற்கையாக அமைந்த திறமையால் தொழில் செய்யும் போது எளிய இசையமைப்புக்களுடன் பாடுவதாகும். இவை, தனிமனிதனதும் சமூகத்தினதும் அனுபவங்களை மட்டுமல்லாது அவர்கள் வாழும் இயற்கை சூழல், பிரதேசத்து வழக்காறுகளையும் வெளிப்படுத்துவனவாக் காணப்படும். கியூ நெவில் என்பவர் இலங்கையில் சிங்கள சமூகத்தில் இருந்த கவிதைகளை தொகுத்தவர். இன்றும் அவை பிரித்தானியாவின் அருங்காட்சியகத்தில் உள்ளது. நாட்டுப்புற பாடல்கள் நேரடியாக உணர்ச்சி வெளிப்பாடுகள் கொண்டது. இலங்கையில் உள்ள சிங்கள நாட்டுப்புறப் பாடல்கள் பின்வரும் வகைப்பாட்டில் உள்ளடக்கப்படுகின்றன.

1) பல் கவி (Pal Kavi) - சேனைப்பாடல்கள் :
2) நெலும் கவி (Nelum Kavi) - வயல் பாட்டு :
3) கொயம் கவி (Goyam Kavi) - அருவி வெட்டும் பாடல்கள் :
4) கரத்த கவி (Karattha Kavi) -மாட்டு வண்டி பாடல்கள்:
5) பதல் கவி (Patal Kavi) - சுரங்கப் பாடல்கள்
6) பாறு கவி (Paaru Kavi) - படகோட்டி பாடல்கள் :
7) பன் கவி (Pan Kavi) - பன்னை பாடல்கள் :
8) றபான் பாட (Raban pada) - றபான் பாடல்கள்

## 3. ஜன நட்டும -நாட்டார் நடனங்கள்

சிங்கள பாரம்பரிய நடனவகைகளில் 18 வகை நடனங்கள் உள்ளன அவை பறவைகள் மற்றும் விலங்குகளின் அசைவுகளை போலச் செய்து காட்டுவதாக அமைகின்றது. மயூரா - மயில் நடனம், ஹனுமா - குரங்கு நடனம், கஜகா - யானை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடனம், துரகா - குதிரை நடனம் என்பன வாகும். மேலும், கிராமிய மக்களின் வாழ்வியலை பிரதிபலிப்பனவாக வயல் விதைப்பு, அருவி வெட்டுதல், தண்ணீர் அள்ளிவருதல் எனப்பனவும். திருவிழாக்களுடன் தொடர் புடைய நடனங்களாக

i லீகெலி (குச்சி நடனம்)
ii கலகேடி (பானை நடனம்)
iii ரபன் (கை டிரம்)
iv போல்கட்டு (தேங்காய்)
v கலஹறி நட்டும - செம்பு நடனம்
vi குலு நட்டும - சுளகு நடனம்
vii லீகெலி நட்டும - கோலாட்டம்

என்பனவும் தற்போது நடைமுறையில் இருக்கும் நாட்டுப்புற நடனங்களாகும்.

தமிழ் நாட்டார் நடனங்களில் செம்பு நடனம், சுளகு நடனம், கோலாட்டம் என்பன ஆடப்படுகின்றன. பெண்கள் வட்டமாக கைகளை கொட்டி ஆடும் கும்மியாட்டம். கையில் துணியினை கட்டி அதை லாவகமாக சுழற்றி ஆண்கள் ஆடும் ஒயிலாட்டம், அலங்கரிக்கப்பட்ட குடத்தைத் தலையில் வைத்து நையாண்டி மேள இசைக்கு ஆடும் கரகாட்டம். மான் கொம்புகளை வைத்து சிலம்பு அடவுகளோடு ஆடுவது சிலா ஆட்டம். ஐந்தடி நீளமுள்ள தடியைக் கொண்டு சிலம்புக் கலையை அடிப்படையாக கொண்டு ஆடுவது சிலம்பாட்டம். இன்னும் மயிலாட்டம், புலியாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம் என்று பல ஆடல்கள் தமிழ் மரபில் விரிந்து கிடக்கின்றன.

### 4. முகமூடி நடனங்கள்

சிங்கள மொழியில் "வெஸ்" என்பது மாறுவேடம் என்று பொருள். "வெஸ் கன்னவா" ஆடை அணிவதைக் குறிக்கிறது, "வேஸ் நேதுமா" என்பது கண்டி நடனத்தின் ஒரு வடிவம். மற்றும் "வெஸ் முஹனா" என்பது ஒரு நடனக் கலைஞரின் அல்லது ஒரு நடிகரின் முகத்தில் அணிந்திருக்கும் முகமூடியை குறிக்கும். முகமூடி அணிவதில் உள்ள யோசனை உண்மையான அடையாளத்தை மறைப்பதாகும். முகமூடி அணிந்தவர் ஒரு குறிப்பிட்ட கதாபாத்திரமாக மாறுகிறார். சடங்கு அல்லது நடன நாடகத்தில் பயன்படுத்தப்படுகிறது. சடங்கு நிகழ்ச்சிகளில் முகமூடிகள் விரிவாகப் பயன்படுத்தப்படுகின்றன.

"தொவில்"(tovil) என்பது சிங்கள கிராமிய சடங்காற்றுகைகளுடன் தொடர்புடையது. நோய்களிலிருந்து நிவாரணம் பெற அல்லது தீய சக்திகளை விரட்டுவதற்காக நிகழ்த்தப்படும் ஆற்றுகையாகும். தனி நபரோ அல்லது குடும்பமோ கண்ணுக்கு புலப்படாத ஒரு அமானுஸ்ய சக்திகளால் துன்புறுத்தப்படுவதாக கிராம மக்கள் நம்பும் போது "தொவில்" விழாவானது அந்த குடும்பம் மற்றும் அவர்கள் வீட்டில் எளிய சடங்காக நிகழ்த்தப்படும்.

"கம்-மடுவ" (Gam-Maduva) அல்லது "டெவோல்-மடுவா" (Devol-Maduva) போன்றவை கிராமம் முழுவதையும் உள்ளடக்கியது. முகமூடி நடனக்கலைஞர்கள் "மஹா சோஹோன் சமயாமா" மற்றும் "காராயாகும" என்று குறிப்பிடப்படும் "தோவில்" விழாக்களில் குறைந்தது இரண்டு நபர்கள் பங்கேற்கிறார்கள். "மோரகா சோஹோனா" பற்றிய குறிப்பு அவர் மயானங்களின் அரக்கன் என்று நம்பப்படுவதால் மக்களை பயமுறுத்துகிறார். கரடி போல் வேடமிட்டு முகமூடி அணிந்துள்ளார். "தோவில்" நடனக் கலைஞர்கள் முகமூடி அணியும் "சன்னி" நடனங்களை ஒத்துள்ளனர்.

"சன்னி யக்கும" சிங்கள மக்களின் பாரம்பரிய குணப்படுத்தும் சடங்குகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சன்னி யக்குமவின் சடங்கு முக்கியமான தாகும். இந்த குணப்படுத்தும் வழி மனித னின் உடலின் சமநிலையுடன் தொடர்புடை யது. மனிதனுக்கு மனம் அல்லது உடல் சமநிலையின் குழப்பம் ஏற்பட்டால் உணவை ஜீரணிக்கும் செயல்முறை, அல்லது தவறான செயல்கள் அல்லது தவறான எண்ணங்கள் உண்டாகி மனிதன் உளவியல் ரீதியாக நோய்க்கு ஆளாகி றான். மக்கள் இந்த நோய்களை பேய்கள் வடிவில் வெளிப்படுத்தினர். சன்னி யக்குமவில் 18 பேய்கள் (சன்னி) அதாவது 18 வகை நோய்கள் உள்ளன. உதாரண மாக தேவா சன்னியா, வட்டா சன்னியா, பித் சன்னியா, அமுக்கு சன்னியா, நாக சன்னியா, கினிஜலா சன்னியா, செலஸ்மா சன்னியா, கபாலா சன்னியா, மரு சன்னியா, கடவத சன்னியா போன்ற சன்னிகள் காணப்படுகின்றன. தமிழர்க ளிடம் காணப்படும் சடங்காற்றுகைகளுடன் இது தொடர்புடையதாக இருக்கின்றது. சிங்களவர் பேய்களை அழைப்பது போல் தமிழர்கள் மரபில் அத்தகைய நோய் தீர்க்கும் தெய்வங்களை அழைப்பார்கள். உதாரணமாக சுடலை மாடன், ஊத்த வைரவர், முனி, ஊத்த காளி.

### 5. கோலம் நாட்ய (Kolam Natya) - முக மூடி நாடகங்கள்

இலங்கையின் மேற்கு மற்றும் தெற்கு கரையோரப் பகுதிகளில் காணப்படும் பாரம்பரிய நாட்டுப்புற நடன நாடகங்கள் "கோலம்" என்று அழைக்கப்படுகின்றன. இவை முகமூடி அணிந்து நடிக்கப்படு வதால் "முகமூடி நாடகங்கள்" என்றும் குறிப்பிடுகிறனர். நாட்டின் பல்வேறு பகுதிக ளில் தங்கள் சொந்தப் பாணியில் வளர்ந்த நடன-நாடகங்கள் சமுதாய சமகால பிரச்ச னைகளை நையாண்டித் தனங்களுடன் நடிக்கப்படுகின்றது. கடலோர நகரங்களான மிரிசா, அம்பலாங்கோடா மற்றும் பென்டாரா போன்ற இடங்களில் இவை நடிக்கப்படுகின்றது.

பேராசிரியர் சரச்சந்திரா, "நடிகர்கள் தெளிவாக செதுக்கப்பட்ட முகமூடிகளை அணிந்து கொள்வதால் பாத்திரங்களை வேறுபடுத்துகின்றது" என்கிறார். தனது "இலங்கை பற்றிய நாட்டுப்புற நாடகத்தில்" ஐம்பதுக்கும் மேற்பட்ட கதாபாத்திரங்களை உருவாக்கி உள்ளார். அவை அணியும் முகமூடிகளால் அவை அடையாளம் காணப்படுகின்றன. பேராசிரியர். எம். எச். குணதிலக முகமூடிகளைப் பற்றிய தனது ஆய்வில், கோலம் முகமூடிகள் குறிப்பிட்ட ஆளுமைகளை பிரதிநிதித்துவப்படுத்து வதாகக் கூறுகிறார். அவரைப் பொறுத்த வரை, முகமூடி அசையாத, முப்பரிமாண பிரதிநிதித்துவம் அல்ல மாறாக எப்போதும் இயக்கத்தில் உள்ளது.

சிங்கள பிரதேசங்களில் நடிக்கப் படும் முகமூடி நாடகங்களாக நொஞ்சி கோலம், சொகரி கோலம், பெலிஸ் கோலம், யசா லெஞ்சினா கோலம், சாந்தகிந்துரு கோலம், முதலி கோலம் போன்ற முகமூடி நாடகங்கள் சிங்கள கலைமரபில் காணப்படு கின்றன. தமிழ் மரபுகளில் இவ்விதம் கூத்துக்களில் வேடம் தரித்து ஆடப்பட்டா லும் முகத்தினை மூடிநடிப்பது காணப்பட வில்லை. பாவை கூத்துக்களில் முழு உடலுமே மரத்தினால் ஆக்கப்பட்டதாகவே தான் காணப்படும்.

### 6. தேரவிலி (Theeravili) விடுகதைகள்

ஒரு மொழியில் உள்ள விடுகதைகள் அம்மொழி பேசும் மக்களின் மதிநுட்பத்தை யும், புலமையையும், ஆற்றலையும் வெளிப்படுத்துவனவாக அமைகின்றது. விடுகதையானது அது என்ன?, அது யார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற கேள்விகளை கேட்பதாக அமையும். விடையை ஊகித்துத் தெரிந்துகொள்ள வேண்டும். அது நேரடியாக ஒரு பொருளை யும் மறைமுகமாக வேறுபொருளையும் உணர்த்தும். எளிமையான பாட்டாக அல்லது உரையாக இருக்கும். "ஊர் சுற்றக் கூட வருவான் ஆனால் வீட்டுக்குள்ளே வரமாட்டான் அவன் யார்?" என்ற எளிமை யான கேள்வியில் தொடங்கி கடினமான கேள்விகளாக வளர்ந்து செல்லும். இலங்கையில் உள்ள சிங்கள தமிழ் சமூகங்கள் இரண்டிலும் இத்தகைய விடுகதைகள் காணப்படுகின்றன.

இலங்கையின் தமிழ், சிங்கள மக்களின் வாய்மொழிப் பாரம்பரியங்களுக்கு இடையி லான பொதுவான விடயங்கள் அவர்களின் பண்பாட்டு இடைவினைகளுக்கு காரண மாக அமைகின்றன என்பதை மேலே பார்க்கப்பட்ட விடயங்கள் எமக்கு வெளிப்ப டையாக எடுத்துக் காட்டுகின்றன. தாலாட்டு தொடங்கி ஒப்பாரிப்பாடல் வரையுமான கிராமியப்பாடல்களும், செம்பு நடனம் தொடங்கி கோலாட்டம் வரையுமான கிராமிய நடனங்களும், விளையாட்டுப் பாடல், நையாண்டிப்பாடல், கதைப் பாடல், காதல், வீரம், சோகம், மகிழ்ச்சி உணர்வுகளுடனான பாடல் இப்படியாக பல பொது தன்மைகள் பாரம்பரிய கலை வடிவங்களில் காணப்படுகின்றன. யுனெஸ்கோ சாசனத்தின்படி ஏதேனும் மக்கள் சமூகத்தி னரிடையே தொடர்ந்து இடம்பெற்று வரும் கலைநுட்பங்கள் அவ்வினத்தினரின் தேசிய அருஞ்செல்வமாகக் கருதப்பட வேண்டும் என்று கூறுகின்றது.

**உசாத்துணை:**


1. விசாகரூபன்.கி,'ஈழத்துத்தமிழ் நாட்டுப்புறக் கதைகள்', மலர் பதிப்பகம், இலங்கை, 2009.
2. விசாகரூபன்.கி,'நாட்டார் வழக்காற்றியல்', மலர் பதிப்பகம், இலங்கை, 2013.
3. பொன் குலேந்திரன்,'20 மரபுக் கதைகள்', தமிழ்ஈ-புத்தகம் வெளியீடு, 2016.


வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டுமானால் - நல்ல நண்பர்கள் தேவை
வாழ்நாள் முழுவதும் வெற்றிபெற வேண்டுமானால் - ஒரு எதிரியாவது தேவை
- ஏ.பி.ஜே. அப்துல்கலாம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவலூர் அன்னையின் அழகு

**திரு. க. வசந்தகோகுலன்**
**முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்**
**பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை.**

கண்ணுக்கு மையழகு காவலூர் அன்னைக்கு கடலழகு
அவள் மழலைகள் அனலையும் எழுவையும் தனியழகு
மின்னிடும் இளநங்கை பருத்தியும் கூட ஓரழகு
அவள் கொண்டுள்ள காவலூர் கோட்டையும் பேரழகு

பொன்னைப் பெருக்கிட மண்வளமது கொண்டு
பெண்ணை விற்றிட நல் கடல்வளம் கொண்டு
தன்னழகிற்கொரு தனித்துறைமுகம் கொண்டு
அலைகடலதில் பாதைப் பயணமும் கொண்டு

சிகரம் தொட்டொரு காலம் மின்னிய அன்னை
கற்றவர் நிறைந்த சுற்றமும் நிறைவாய் கொண்டு
மாளிகை வாழ்வில் மகிழ்ந்த காலத்தைச் செப்பிட
பல வண்ண வண்ண மனைகளும் உண்டு

காலக் கொடுமையால் கோலமிழந்து
குன்றும் குழிச்சாலைகள் கொண்டவள்-இப்போ
குமரிப் பெண்ணாகி புத்தாடைகட்டி
புதுப் பொலிவு கொள்கிறாள்

மண்ணில் புதையல் நிறைந்தே உள்ளவள்
பூமாரி பொழிந்ததும் புரட்சி செய்கிறாள்
மக்கள் மனங்களை மகிழச் செய்கிறாள்
மனைகள் பலவற்றில் மாற்றங்கள் செய்கிறாள்

கிள்ளி எடுத்தாலும் அள்ளிக் கொடுப்பவள்
தூரத்துப் பிள்ளைகள் நம்மை தத்தெடுப்பவள்
துன்பத்தில் வந்தாலும் நிறை இன்பம் தருபவள்
விட்டுச் சென்றாலும் நல் நினைவைத் தருபவள்

கலைகள் வளர்த்து தனித்துவம் காத்திட
கலைஞர்களை ஈன்று புதுமை செய்பவள்
உலகில் பரந்த உறவுகள் கொண்டு
மண்வாசனை மறக்காத மக்களைப் பெற்று

காவல் செய்திட கடலில் அரண் அமைத்து
தன்னெழில் மாறாத இளமை பெற்ற காவலூர்
அன்னையின் அழகு என்றும் தனியழகு .................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மோடி நாட்டுக்கூத்து காலஞ்சென்ற மூத்த கலைஞர்களின் பெயர் விபரம்

**கிறிஸ்து அரசர் கலை மன்றம்**
மெலிஞ்சிமுனை

01. வயித்தியன் அந்தோனி (அண்ணாவி)
02. அந்தோனி சவிரிமுத்து (அண்ணாவி)
03. அவுறான் வயித்தியான்
04. வலோரியான் அந்தோனி
05. அந்தோனி சீமான்பிள்ளை
06. மனவல் அலைச்சாந்தர் (அண்ணாவி)
07. கிறிஸ்தோ இன்னாசி
08. மனவல் வயித்தியான்
09. அருளப்பு மடுத்தீஸ்
10. மடுத்தீஸ் அந்தோனிப்பிள்ளை
11. நீக்கிலாந் தானியே
12. சந்தியாகு சுபகீன்
13. சந்தியாகு குருசுமுத்து
14. சந்தியாகு இராயப்பு
15. சூசை ஆசீர்வாதம்
16. அருளப்பு பத்திநாதன்
17. பத்திநாதன் பாக்கியநாதன்
18. பத்திநாதன் சைமன்
19. சலமோன் சூசை
20. மனவலர் அந்தோனி
21. மனவல் கிறிஸ்தோ
22. மனவல் சூசைப்பிள்ளை
23. கிறிஸ்தோ செபமாலை
24. கிறிஸ்தோ பருனாந்து
25. சசிதோர் மத்தியாஸ்
26. மத்தியாஸ் விக்டர்
27. மத்தியாஸ் யேசுதாஸ்
28. மரியான் செபஸ்தியான்
29. செபஸ்தியான் செபமாலை
30. சுவாம் பிரநாசம்
31. அதிரியான் தீயோகு
32. தீயோகு பிரகாசம்
33. பிரகாசம் அகுஸ்தீன் (மனேச்சர்)
34. அடைக்கலம் டேவிற்
35. கிறிஸ்தோ யாக்கோப்பு (அண்ணாவியர்)
36. யாக்கோப்பு சுவானி
37. யாக்கோப்பு இம்மனுவல்
38. பிலிப்பன் சந்தியோகு
39. சந்தியோகு யோசை
40. சந்தியோகு மரியநாயகம்
41. இசிதோர் ஆசீர்வாதம்
42. இசிதோர் திருச்செல்வம்
43. கிறிஸ்தோ சேவியர்
44. ஆசீர்வாதம் தோமாஸ்
45. வயித்தியான் மரியநாயகம்
46. சந்தியாகு சூசைப்பிள்ளை
47. விசுவாசம் பிரான்சிஸ்
48. மோசேஸ் சூசை
49. சூசை இருதயநாதன்
50. பேதுறு செபமாலை
51. யாக்கோப்பு அந்தோனிப்பிள்ளை
52. சேவியர் அலைச்சாந்தர் (மனேச்சர்)
53. கிறிஸ்த்தோ சவரிமுத்து (மிருதங்க அண்ணாவி)
54. வயித்தியான் சலமோன்
55. சவரிமுத்து ஜெயராஜ்
56. பேதுறு சூசை
57. பிலிப்பன் பேதுறு
58. அந்தோனி லூக்கேஸி (மனேஸர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2022 இல் விருது பெற்றவர்கள் விபரம்

* **யாழ் மாவட்ட இளங்கலைஞர் விருது**

திருமதி இந்திரகுமார் சுரேக்கா - (நாட்டுக்கூத்து)

- தம்பாட்டி

* **யாழ் மாவட்ட "யாழ் முத்து" விருது**

திரு. மரியாம்பிள்ளை இராயப்பு (நாட்டுக்கூத்து)

- எழுவைதீவு

* **தேசிய இலக்கிய விருது**

திரு. இ. சிந்துஜன் (கவிதை எழுதுதல்)

- புளியங்கூடல்

2020ம் ஆண்டுக்கான விருது 2022 இல் வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொகுப்பாசிரியரின் நன்றிகளுடன்...

ஈழமணித் திருநாட்டின் வடபால் யாழ்ப்பாணத்தில் தீவுப்பகுதி என்னும் சிறப்புமிக்க சப்த தீவுக் கூட்டங்களில் ஒன்றான பண்டைய நகரான ஊர்காவற்றுறை பிரதேசமானது ஆதிமுதல் இன்று வரை வரலாற்றுப் புகழ்மிக்க ஒரு பிரதேசமாகப் பேசப்பட்டு வருகின்றமை பேருண்மையாகும். மருத நிலத்தையும் நெய்தல் நிலத்தையும் தன்னகத்தே தாங்கிய இப் பிரதேசத்தில் வாழும் மக்கள் விவசாயம் மீன்பிடித்தொழில் என தமது வாழ்வாதாரத்துடன் கலை வளத்தையும் கைவிடாது பொக்கிஷமாகக் காத்து வருவதுடன் அடுத்த தலைமுறைக்கும் கையளித்தும் வருகின்றனர். இவ் கலைப் பயணப்பாதையில் கலை மேம்பாட்டிற்கான ஆதாரமாகவும் தொன்மைகளின் ஆவணப்படுத்தலாகவும் அமைய அலைமொழி சஞ்சிகை களமமைத்து தடம் பதித்து வருகின்றமை சிறப்பான விடயமாகும்.

குறிப்பாக இவ் அலைமொழி 06 (2022) இதழானது பண்பாட்டம்சங்கள் கலைகள் வரலாற்று விடயங்கள், கல்வி, கவிதைகள் கட்டுரைகள், தொல்லியல்கள், ஆன்மிகம், பொருளாதார விடயங்கள், சிறுகதைகள், கட்டுரைகள் என பல ஆக்கங்களைத் தன்னகத்தே தாங்கி வெளிவருகின்றமை சாலப் பொருத்தமானதே. இந்தவகையில் இவ் அலைமொழியின் சிறப்பான பிரசவத்திற்காக ஆசிச் செய்திகளைத் தந்துதவிய மத குருமார்களுக்கும் வாழ்த்துச் செய்திகளை வழங்கிய பெரியோர்களுக்கும் ஆக்கங்களை தந்துதவிய கலைஞர்கள், கல்விமான்கள் அனைவருக்கும் மனப்பூர்வமான நன்றிகளை கூறிக் கொள்வதோடு அலை மொழியின் வெளியீட்டிற்கு ஆரம்ப அடித்தளமான நிதி உதவியினை வழங்கிய வடக்கு மாகாணப் பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்துக்கும் மற்றும் ஏனைய நல்லுள்ளங்களுக்கும் இதய பூர்வமான நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

மலர் வெளியீடு சார்ந்த ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கிய மதிப்புக்குரிய பிரதேச செயலாளர் அவர்களுக்கும் அவ்வப்போது அழைத்து அறிவுரைகளால் வழிகாட்டிய உதவிப் பிரதேச செயலாளர் அவர்களுக்கும் நிதி சார் ஆலோசனைகளை உரைத்து நிற்கும் கணக்காளர் மற்றும் நம்பிக்கைகளையும் வழிநடத்தல்களையும் வழங்கும் நிர்வாக உத்தியோகத்தர் அவர்களுக்கும் அன்பான அறிவுரைகளையும் பாராட்டுக்களையும் வழங்கும் உதவித் திட்டமிடற் பணிப்பாளர் அவர்களுக்கும் இவ்விடத்தில் என்றென்றும் நன்றி கூறி மகிழ்கின்றேன். அலைமொழி உரிய காலத்தில் உருவாவதற்கு உதவிய இணைத் தொகுப்பாசிரியராகச் செயற்பட்ட திரு. க. சௌந்தரராஜாசர்மா ஐயா அவர்களுக்கும், அலைமொழிக்கான புகைப்படங்களை வடிவமைத்து தந்த புகைப்பிடிப்பாளர் திரு. கே. இளம்மாறன் அவர்களுக்கும் மற்றும் அட்டைப் படத்தினை செவ்வனே சீரமைத்துள்ள க. மயூரன் அவர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகள் என்றென்றும். அத்தோடு இம் மலரினை அச்சிட்டு உதவிய குரு அச்சகத்தினருக்கும், எமது பிரதேச கிராம உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கலாசாரப் பேரவை உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது தனித்தனியான நன்றிகளையும் தெரிவித்து நிற்பதோடு அலைமொழி மலரானது மென்மேலும் தொடர்ந்து மலர்ந்து மணம்வீச எல்லாம்வல்ல இறைவனையும் இயற்கையையும் வேண்டி நிற்கிறேன்.

**திருமதி. தக்சாயினி செல்வகுமார்**
கலாசார உத்தியோகத்தர்
செயலாளர் - கலாசாரப் பேரவை, தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலுக்குரிய அட்டைப் பட விளக்கம்

கலைப் பொக்கிசங்கள் கொட்டிக்கிடக்கும் காவலூரின் கடைக் கோடியைத் தோண்டினால் கட்டக்கலைகள் வெளிப்படும் என்றவாறாக 1951ம் ஆண்டு காலப்பகுதியில் வீதி செப்பனிடும் பணிக்காக நாரந்தனைப்பகுதியில் கல் தோண்டப்பட்டதாகவும், அதனுள் இருந்தும் 6அங்குல அளவிலான பொன் விக்கிரகம் ஒன்றும் சோழர் கால நாணயங்களும் கிடைக்கப்பெற்றதாகவும் இவற்றை தொல் பொருள் திணைக்களம் பெற்றுக் கொண்ட போதும் பொன்விக்கிரகம் கிடைக்கப் பெற்ற இடத்தில் இன்று பிரம்மாண்டமான ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது அவ்வாலயம் தான்தோன்றி மனோன்மணி அம்பாள் ஆலயம் நாரந்தனை என வீற்றிருந்து அருள்பாலிக்கின்றாள் எது எவ்வாறாகிலும் வரலாற்றுக்கால ஆவணமாக இதைப்பதிவு செய்வதில் "அலைமொழி" பெருமைகொள்கின்றது.

*Kayts is a land of art, treasure, culture and history. Nobody can deney the fact that it has rich treasure of ancient sculptures and monuments. A perfect example is the ture story behind the temple Shri Manonmani Ambal temple in Naranthanai. In 1951 when people dug a piece of land to lay a road in Naranthanai, they found a 9-inch golden statue of a Goddess along with 9 coins of Chola Kingdom. Later a temple was built on the same spot and people are Worshipping Manonmani Ambal and celebrating festival in grand Manner even now 'Alaimohili' is proud to depict such great untold ancient stories of Kayts.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் - 2022

## கலைஞர் ஒன்றுகூடல் நிகழ்வு - 2022







## ஆடிப்பிறப்பு நிகழ்வு








கலை மன்ற அபிவிருத்திக் கொடுப்பனவு வழங்கல்

எழுத்தாளர் ஊக்குவிப்பு நிதி வழங்கல்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்குறள் போட்டி நிகழ்வு





## அலைமொழி -05 நூல் வெளியீட்டு விழா






## திருக்குறள் விழா - 2022







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS

அரச அங்கிகாரம் பெற்ற வட மாகாணத்தின் முதல் தர கனரக வாகன பயிற்சிப் பாடசாலை.

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- மும்மொழியிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- இரவிலும் வாகன பயிற்சிகள்.




### தலைமையகம்

இல.226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353, 0777 399 480

### கிளைகள்

| | | | |
|---|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | ஆவரங்கால் 021 222 6688 |
| சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | பூநகரி 021 320 1818 | முழங்காவில் 021 300 6544 |
| விஸ்வமடு 021 320 1515 | மன்னார் 023 225 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கட்டட வாயிற் பண்பாடு

Guru Printers - 021 222 8266

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org